# உள்ளடக்கம்

## 15-4-2008


பக்கங்கள்

**1. தகவல் கோரல்—**

தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகளின் தொலைபேசிகளைத் தமிழ்நாடு காவல் துறை புலனாய்வுப் பிரிவு ஒட்டுக் கேட்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி .. .. 357-373

திரு. ஓ. பன்னீர்செல்வம் .. .. 358

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. 358-359, 360, 361-363, 370-373

திரு. ஜி.கே. மணி .. .. 359-360, 363-364

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் .. 361

திரு. டி. சுதர்சனம் .. .. 364-365

திரு. வை. சிவபுண்ணியம் .. .. 365-366

திரு. மு. கண்ணப்பன் .. .. 366-367

திரு. சி. கோவிந்தசாமி .. .. 367

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் .. .. 368-369

திரு. சி. ஞானசேகரன் .. .. 369-370

**2. கவன ஈர்ப்பு—**

எடப்பாடி தொகுதி, சரபங்கா நதியில் தூர் வாருதல் .. .. 373-375

**3. அறிக்கைகள் அளித்தல்—**

பொது நிறுவனங்கள் குழு .. .. 376

பக்கங்கள்

**4. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி .. .. 376-520

(அ) கோரிக்கை எண் 24-சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை

(இ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(ஈ) கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

—தொடர்ச்சி 376-421

*மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன் .. 377-384

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி.. 377

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி .. 384-406, 416-418

(உ) கோரிக்கை எண் 34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஊ) கோரிக்கை எண் 42 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

422-520

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 423,442,459, 510

*திரு. என்.ஆர். ரங்கராஜன் .. .. 459-471

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் .. .. 471-482

திரு. சி. ஞானசேகரன் .. .. 483-490

*திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் .. .. 490-498

திரு. செ. புஷ்பராஜ் .. .. 499-503

திரு. சு. குணசேகரன் .. .. 503-507, 509, 510-511

திரு. சி. கோவிந்தசாமி .. .. 511-520





பக்கங்கள்

**5. அரசினர் தீர்மானம்**—

உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கிவைத்தல் .. .. 421-422

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** .. 521

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 3

## 2008 ஏப்ரல் 15, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
*அருவினையும் மாண்ட தமைச்சு"*

*உரிய கருவி, உற்ற காலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயல்படுபவனே சிறந்த அமைச்சன்.*

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்

### தமிழ்நாட்டில் சில அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகளின் தொலைபேசிகளைத் தமிழ்நாடு காவல் துறை புலனாய்வுப் பிரிவு ஒட்டுக் கேட்பதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

[2008 ஏப்ரல் 15

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆளுகின்ற அரசு அதில் பணியாற்றுகின்ற அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் பேசுகின்ற 'டெலிஃபோன்' பேச்சை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Telephonic conversation பற்றித்தானே சொல்கிறீர்கள்? இது விஷயமாக அரசின்மூலமாக விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அரசே அதற்கு விளக்கம் கொடுத்திருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அதுமட்டுமல்ல, நீங்கள் பொத்தாம் பொதுவாகக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்ததில் எந்தப் பத்திரிகை என்றுகூட கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எந்தப் பத்திரிகையில் வந்திருக்கிறது என்றுகூட கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) தெளிவில்லாமல் கொடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்ததை நான் பார்த்தேன். அதில் பொத்தாம் பொதுவாகக் கொடுத்திருக்கிறீர்களே தவிர, தெளிவாக இல்லை. அதனால் நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*(உறுப்பினர்கள் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. டி. ஜெயக்குமார் மற்றும் திரு. பி.கே. சேகர்பாபு ஆகியோர் Deccan Chronicle பத்திரிகையை உயர்த்திக் காண்பித்தனர்.)*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பதன் தலைப்பாக, 'தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயரதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்களைத் தமிழகப் புலனாய்வுத் துறை கண்காணித்து ஒட்டுக் கேட்பதாக வெளிவந்த தகவல் குறித்து' என்று பொதுவாகத்தான் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம் அவர்களும் மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்களும், அதுபோலவே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், பா.ம.க. சார்பிலும் கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி விளக்கம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஆனால், சர்ச்சை என்னவென்றால், ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் வந்த செய்தியினுடைய விரிவாக்கத்தின் காரணத்தால், இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது. இந்த அவைக்கும் தெரியும். இந்தக் குறிப்பைத் தந்த—இதுபற்றி விவரம் தேவை என்று கேட்ட—மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும். அப்படி ஒரு பத்[illegible] குறிப்பிட்டு, அதிலே வந்திருப்பது தவறு

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்



2008 ஏப்ரல் 15] [கலைஞர் மு. கருணாநிதி]

அல்லது சரி என்று வாதிப்பார்களேயானால், அதைப் பற்றி அரசு தன்னுடைய விளக்கத்தைத் தரக் கடமைப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொலைபேசி ஒட்டுக் கேட்பதைப் பற்றி இங்கே விளக்கம் அளித்திருக்கிறார்கள். இந்த அவையில் (மணியடிக்கப்பெற்றது) ஏற்கெனவே ஒரு முறை என்னால் இதுபற்றி கிளப்பப்பட்டபோது, முதலமைச்சர் அவர்கள் அப்படி இல்லை; தொலைபேசி ஒட்டுக் கேட்பது நடைபெறவில்லை; ஏதோ ஒரு ஆங்கில ஏட்டில் வந்த செய்தியை வைத்துக்கொண்டு நீங்கள் பேசக் கூடாது என்று மறுப்புத் தெரிவித்தார்கள்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நாங்களும் ஏற்றுக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் சொல்வதிலே நியாயம் இருக்கும் என்று அமைதி காத்தோம். (குறுக்கீடு) ஆனால், அதே பிரச்சினை மீண்டும் இப்போது கிளப்பப்பட்டிருக்கிறது. அரசியல் கட்சித் தலைவர்கள், எங்கள் மருத்துவர் அய்யா அவர்களுடைய தொலைபேசி, என்னுடைய தொலைபேசி, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களின் தொலைபேசி எல்லாம் ஒட்டுக் கேட்கப்படுவதாக வந்த செய்தி. ஆனால் இப்போது மீண்டும் அந்தச் செய்தியைக் கிளப்பியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு, நீங்கள் எழுந்திருப்பதற்கு 5 நிமிடங்கள் ஆகிவிட்டன. அதற்குள் அவர் எழுந்து நின்றார். அதனால் அவரைப் பேசச் சொன்னேன். இதில் என்ன இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 9-35

**திரு. ஜி.கே. மணி:** பத்திரிகையாளர்கள் (குறுக்கீடுகள்). . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுந்திருப்பதற்கு முன்னர் அவர் எழுந்திருந்து கேட்கிறார். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களைப் பற்றி மட்டுமல்ல, இந்த

[திரு. ஜி.கே. மணி] [2008 ஏப்ரல் 15

மாநிலத்தினுடைய தலைமைச் செயலாளரைப் பற்றிய தொலைபேசி ஒட்டுக் கேட்பு; இது மிக முக்கியமானது. (குறுக்கீடுகள்) இது வருத்தமளிக்கிற செய்தி. இப்போது அந்தப் பத்திரிகையாளர்கள் தங்களிடத்திலே ஆதாரம் இருக்கிறதென்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் பேசுகிறார்; எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) 'முதல்வர் பதில் சொல்கிறார், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வி.பி. கலைராஜன், உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கையை விட்டு நீங்கள் வந்ததே தவறு, முதலில் அங்கே போங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்? அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்று கூறினால் அதற்கு விளக்கமளிக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் ஆளுங்கட்சியிடமிருந்து—அரசாங்கத்திடமிருந்து பிரதான எதிர்க்கட்சியினர் என்ன விளக்கம் பெற விரும்புகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் அவர்கள் என்ன சொல்கிறார் என்று முதலில் கேட்டுவிட்டு, அதன்பிறகு எழுந்து நில்லுங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதல்வர் முதலில் என்ன சொல்கிறார் என்று கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எதிர்க்கட்சியினர் இதுகுறித்து என்ன விளக்கம் பெற விரும்புகிறார்கள்? (குறுக்கீடுகள்)



2008 ஏப்ரல் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட கேள்விக்கு முதல்வர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர் என்ன பதில் சொல்கிறார் என்பதைக் கேட்டுவிட்டு, அதன்பிறகு கேளுங்கள். உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டு தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எழுப்பிய பிரச்சினையை விளக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் தருகிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் பேசுகிறபோதே அனுமதிக்காமல், அவர்கள் எழுந்து நிற்பதாக இருந்தால், அதைவிட வெளிநடப்புச் செய்வதுதான் முறையான காரியமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள், அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்-குழப்பம்) அவைக் காவலர்கள், அவர்களை எல்லாம் வெளியேற்றுங்கள். (கூச்சல்-குழப்பம்) அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்-குழப்பம்) கொஞ்சம் பொறுங்கள், இங்கே வாருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே வாருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே வாருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் wait பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) Wait பண்ணுங்கள், (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்)

[2008 ஏப்ரல் 15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விளக்கம் பெற விரும்பும் அவர்கள் வெளியேறினால் என்ன அர்த்தம்? உங்களுக்கு விளக்கம் தேவையில்லையா? நீங்கள் கூறுவதற்கு உங்களுக்குப் பரிகாரம் தேவை இல்லையா? நான் கூற வேண்டாமா?

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)*

ஒரு பிரச்சினையை எழுப்பி, பன்னீர்செல்வம் பேசியிருக்கிறார். நான் எழுந்து அதற்கு விளக்கம் சொல்வதற்குள்ளாக, கூச்சல் போட்டுக்கொண்டு வெளியேறினால் அந்த விளக்கம் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை என்று அர்த்தமல்ல. அந்த விளக்கம் கிடைத்தால், உண்மைகள் வெளியாகும் என்ற காரணத்தினால் அவர்கள் கூச்சல் போட்டுக் கொண்டு வெளியேறியதாகத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இதைப்போல ஒரு செய்தி, இதே ஆங்கிலப் பத்திரிகையில்தான் முன்பொரு முறை வெளிவந்து, நண்பர் கோ.க. மணி அவர்கள் அதுகுறித்து பிரச்சினையெழுப்பி, இங்கே அதற்கு விளக்கமளிக்கப்பட்டது. மீண்டும் அதே பத்திரிகையில் இப்போது ஒரு செய்தி வந்திருக்கிறது. அப்படி வந்த செய்தி உண்மையா இல்லையா என்பதைவிட--வாதத்திற்காகச் சொல்கிறேன் — உண்மை என்றே வைத்துக்கொண்டாலும், தலைமைச் செயலாளர் இன்னொரு அதிகாரியுடன் ஒரு வழக்குக் குறித்துப் பேசிய உரையாடல், அந்தப் பத்திரிகையிலே வெளிவந்திருப்பது உண்மையென்று வைத்துக்கொண்டாலும், அதிலே என்ன தவறு பேசியதிலே, என்பதை நாம் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 9-40*

தேசிய நலனுக்கு விரோதமானதா? அல்லது சட்டப்படி குற்றமானதா? அல்லது வேண்டுமென்றே எதிர்க்கட்சிகளின் உரிமைகளை நசுக்குவதற்காகத் திட்டமிட்டு ஏதோ ஒரு வழக்குப் போடுவது சம்பந்தமாக இருவரும் பேசிக் கொண்டதா என்றால், அப்படியொன்றும் இல்லை. சட்ட விரோதமானதாக அல்லது நாம் போற்றிப் பாதுகாக்கின்ற நெறிமுறைகளுக்கு விரோதமானதாக, நீதிக்கு விரோதமானதாக எதுவும் அந்த உரையாடலிலே இல்லை. ஆனால், தலைமைச் செயலாளரின் ஃபோன் "டேப்" செய்யப்படுகிறது என்ற முறையிலே ஒரு செய்தியை வெளியிட அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தக் காலத்தில், விஞ்ஞானத்தின் வேகமான



வளர்ச்சியில், யார் வேண்டுமானாலும், எந்த ஃபோனில் வேண்டுமானாலும் "டேப்" செய்ய முடியுமென்கிற நிலை இருக்கிறது. செல்ஃபோனிலேகூட "டேப்" செய்கின்ற முறை வந்திருக்கின்றது.

இன்றைக்குக்கூட "டைம்ஸ் ஆஃப் இந்தியா" பத்திரிகையில், "டேப்" செய்வது எவ்வளவு சுலபம்; ஒரு தொலைபேசியை ஒட்டுக் கேட்பது எவ்வளவு எளிது என்பதைப் படங்கள் போட்டே விளக்கியிருக்கிறார்கள். நான் அதற்குள் அதிகம் போக விரும்பவில்லை. நான் அறிந்துகொள்ள விரும்புவதெல்லாம், ஒரு தலைமைச் செயலாளருக்கும், இன்னொருவருக்கும் இடையே நடந்ததாக வந்திருக்கின்ற உரையாடல், எப்படிப் பத்திரிகையிலே வந்தது, யார் தந்தது, எவ்வாறு அது வெளியிடப்பட்டது என்பதையெல்லாம் ஆராய்ந்து, உள்ளபடியே தலைமைச் செயலாளரும், அந்த அதிகாரியும் பேசியது இவைதான் என்றால், அதிலே குற்றம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், இதுபற்றி ஒரு நீதி விசாரணை நடத்த இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற ஒரு நீதிபதியைக்கொண்டு இதைப்பற்றி விசாரித்து, இந்த அவைக்கு அறிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தானே முன்வந்து ஒரு மிகப் பெரிய விளக்கத்தை அளித்தது மகிழ்ச்சியளிக்கிறது. எங்களைப் பொறுத்தவரையிலே, நம்முடைய மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களும், காவல் துறையினுடைய உயர் அதிகாரி அவர்களும் பேசினார்கள். அதிலே என்ன பேசினார்கள் என்பதற்குள் நாங்கள் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும்கூட, ஒரு பொறுப்புள்ள அதிகாரி, இந்த அரசாங்கத்தினுடைய முதன்மை அதிகாரியாக இருக்கிற தலைமைச் செயலாளர் பேசுவதை, ஒரு அதிகாரியிடத்திலே சொல்வதை, அதை ஒட்டுக் கேட்பதாகவே அந்தப் பத்திரிகை சொல்கிறது. நாங்கள்கூட அந்தப் பத்திரிகையாளரிடத்திலே கேட்டோம். எங்களிடத்தில் ஆதாரம் இருக்கிறது, நாங்கள் தருகிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். உங்களுடைய நீதி விசாரணையை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதே நேரத்தில், இப்படி ஒட்டுக் கேட்பதற்குக் காரணமாக ஒரு அதிகாரி பெயரைச் சொல்கிறார்கள்.

[திரு. ஜி.கே. மணி] [2008 ஏப்ரல் 15

அந்த அதிகாரி அந்த இடத்திலே இருந்தாலும்கூட, மாறுதல் செய்துவிடலாம். ஆகவே, தொடர்ந்து இந்தப் பிரச்சினை அரசுக்கும் அல்லது அரசியல் கட்சிகளுக்கும் சரியாக இருக்காது என்ற அடிப்படையிலே, அந்த அதிகாரியை மாறுதல் செய்வதற்குத் தாங்கள் முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிற அதேவேளையில், இப்படிப்பட்ட ஒட்டுக் கேட்கிற பிரச்சினை இனி நிகழாதவண்ணம், அதே நேரத்தில், இப்போது நடந்திருக்கிற பிரச்சினை உண்மைதானா என்பதைக் கண்டறிய, பணியிலே இருக்கிற ஒரு நீதிபதியைவிட மூன்று நீதிபதிகளைக் கொண்ட அமர்வு விசாரணை செய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து, இந்த ஒட்டுக் கேட்கிற பிரச்சினை இனி நடக்கக் கூடாது, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், அதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய மூன்று நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முன்வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஓர் ஆங்கிலப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தி உண்மையா, பொய்யா என்பது பற்றி நான் விவாதிக்க விரும்பவில்லை. இருந்தாலும், ஜனநாயகத்திலே இருக்கின்ற நான்கு தூண்களில் ஒன்றான பத்திரிகைத் துறையானது — ஓர் அரசாங்கத்தை நடத்துகின்றபோது உளவுத் துறை எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைப்பற்றி பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. அரசுக்குப் பல்வேறுவிதமான செய்திகள் தெரியவேண்டும். அதேபோன்று, உளவுத் துறையானது, சிறப்பாகச் செயல்படுகிறதா, இல்லையா என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டியது முதலமைச்சருடைய செயலாக இருக்கிறது. இருந்தாலும், இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம். மக்களுக்காக நடந்துகொண்டிருக்கிற இந்த அரசாங்கத்தில், தலைமைச் செயலாளருடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகிறது என்ற ஒரு தவறான செய்தியை ஒரு பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. ஆக, ஒட்டுக் கேட்பது என்பது உண்மையிலேயே அதனை 'டேப்' செய்தார்களா, இல்லையா என்பதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் விவரமாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் இங்கே



2008 ஏப்ரல் 15] [திரு. டி. சுதர்சனம்]

சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும், இதைப் போன்ற செய்திகளை வெளியிட்டு, மக்களை திசைத் திருப்புகின்ற ஒரு நிலையை உருவாக்கினால், இது எங்கே போய் முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

முற்பகல் *9-45*

இப்போது தீவிரவாதிகள் சில இடங்களில் இருந்துகொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் சில இடங்களிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் பல தீவிரவாத இயக்கங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த இயக்கங்களின் செய்திகளை எல்லாம் ஒட்டுக் கேட்கவில்லை என்று சொன்னால் ஏதோ ஒரு நிகழ்வு ஏற்படுமானால், என்ன சொல்கிறோம்? நாம் உடனடியாக யாரைக் குற்றம் சொல்கிறோம்? புலனாய்வுத் துறை இன்றைக்குச் சரியாகச் செயல்படவில்லை என்று சொல்கின்றோம். அது எதற்காக? அனைத்தையும் அறிந்துகொள்வதற்குப் புலனாய்வுத் துறை என்ன கடவுளா? இப்படிப் பல்வேறுபட்ட நிலைகளில் சில தொலைபேசிகளை ஒட்டுக் கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அது யாருடைய தொலைபேசி என்பது பற்றி நான் பேச விரும்பவில்லை. இருந்தாலும், அரசியல்வாதிகள், இதுபோன்ற உயர் அதிகாரிகளுடைய தொலைபேசிகள் எல்லாம் ஒட்டுக் கேட்கப்பட்டிருக்காது என்றுதான் நான் நம்புகிறேன். அப்படி ஒட்டுக் கேட்கப்பட்டிருந்தால், அது தவறான செயல். தலைமைச் செயலாளருடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படும் அளவிற்கு ஒரு காரியத்தை எந்த அரசாங்கமும் செய்யாது என்பதை நான் அறிகிறேன். அதனாலே, உளவுத் துறையினுடைய பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஒரு நபர் நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதைக் காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களுடைய உரையாடல் ஒட்டுக் கேட்கப்பட்டது குறித்து, இங்கே பிரச்சினை எழுப்பப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தை அளித்தார்கள். பிரதான எதிர்க்கட்சி விளக்கத்தை ஏற்றுக்கொள்ளவே தயாராக இல்லாமல் வெளியேறியிருப்பது என்பது, மிகப் பெரிய

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 ஏப்ரல் 15

வேதனைக்குரிய ஒன்றாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஒரு பிரச்சினையை எழுப்புகிறோம் என்று சொன்னாலே, அதற்குரிய பதிலைப் பெறுவதற்குத்தான் எழுப்பப்படுகிறது. விளக்கம் கோரப்படுகிறது. விளக்கம் கோருகிறவர்கள் விளக்கத்தைப் பெறுவதற்குத் தயாராக இல்லாமல் வெளியே செல்கிறார்கள் என்று சொன்னாலே, பிரச்சினையின்மீது அவர்கள் விளக்கம் கோரவில்லை. ஏதோ ஒரு காரணத்தினாலே அவர்கள் வெளியேற வேண்டுமென்று இன்றைக்கு எடுத்த முடிவை அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இன்னொன்று, அதையும் தாண்டி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு இருக்கிற அந்த அனுபவத்தை வெளிப்படுத்துகிறவகையிலே கோபப்படாமல், யாரும் எதிர்பாராதவகையிலே, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையிலே ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என்று சொல்லியிருப்பதன்மூலம் மிகப் பெரிய ஜனநாயகக் கடமையை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத ஒன்று. *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனக்கு ஒரு சந்தேகம் இன்றைக்கு இருக்கிறது. அதி.மு.க. வெளியே போய் இருப்பது, இதையே காரணமாக்கி உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே கலந்துகொள்ளாமல் போய்விட வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு போய் இருப்பார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒட்டுக் கேட்கின்ற பிரச்சினை, ஏற்கெனவே இந்தச் சபையிலே பேசப்பட்ட ஒரு பிரச்சினை. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும், நேற்றையதினம், ஆங்கிலப் பத்திரிகையிலே மட்டுமல்ல; இன்றையதினம் சில தொலைக்காட்சிகளிலேகூட, தலைமைச் செயலாளரும், இன்னொரு போலீஸ் உயர் அதிகாரியும் பேசிக்கொள்கின்ற பேச்சு அப்படியே ஒளிபரப்பப்பட்டது. அதை எங்களைப் போன்றவர்கள் நேரடியாகவே பார்த்தோம். அது எந்தவிதமான உரையாடல், நிர்வாகம் சம்பந்தப்பட்டதா அல்லது சிபாரிசு சம்பந்தப்பட்டதா, அல்லது நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினையா என்பதல்ல. இருந்தாலும்கூட, அவர்கள் பேசிக்கொண்டது, எப்படி



2008 ஏப்ரல் 15] [திரு. மு. கண்ணப்பன்]

அந்தத் தொலைக்காட்சிக்கோ, அல்லது பத்திரிகைக்கோ போனது என்பதுதான் மிக முக்கியமான கேள்வி. அப்படியென்றால் நிர்வாகத்திலே ஒரு கோளாறு இருக்கிறது. ஏற்கெனவே இந்தப் பிரச்சினை இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருந்தும்கூட அதற்குரிய நடவடிக்கையை எடுக்காமல் தொடர்ந்து இப்படிப்பட்ட ஒரு நிலை நீடித்துக்கொண்டிருப்பதைக் கண்டித்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் எங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்துக்கொள்கின்ற வகையில் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது.

*(மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கக்கூடிய சம்பவங்கள் நடந்துள்ளதாக வந்துள்ள செய்தியில் எந்த அளவு உண்மை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலே விசாரணைக் குழு அமைத்து, அதில் முழுமையான விவரங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. அதோடு, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாதவண்ணம், அந்த விசாரணையின்மூலம் இந்தச் சம்பவம் நடந்திருப்பது உண்மை என்றால் அதன்மீது உறுதியான நடவடிக்கை மேற்கொண்டு, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். நடந்த ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டி அதைச் சரி செய்வது என்பதுதான் ஓர் அரசியல் கட்சியினுடைய கடமையாக இருக்க முடியும். அதையே அரசியலாக்குவது என்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அந்தவகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வெளிவந்துள்ள செய்திகள் நம்மையெல்லாம் மிகவும் கவலையடையச் செய்திருக்கின்றன. அரசாங்கத்தினுடைய நிருவாகம் என்பது, பல பரிமாணங்களிலே நடத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. இரண்டு உயர் அதிகாரிகள் பேசிக்கொள்ளக்கூடிய ஒரு தகவலை அல்லது அப்படிப்பட்ட பேச்சை யாரோ ஒருவர், எங்கேயோ இருந்துகொண்டு, முழுமையாக அதைப் பதிவு செய்ய முடியும் என்று சொன்னால், அரசாங்கத்தினுடைய நிருவாகமே நாளைக்குக் கேள்விக்குறியாகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்போது தனிப்பட்ட சில private agencies, மிகப் பெரிய தொழில்நுட்பம் நிறைந்த கருவிகளை வைத்துக்கொண்டு பல்வேறு புலன் விசாரணையில் ஈடுபடுவதாகச் சொல்லிக்கொண்டு—பத்திரிகைகளில்கூட நாம் தினசரி பார்க்கிறோம்—குடும்பங்களில் உள்ள பிரச்சினைகள், தனியார் நிறுவனங்களிலே மேற்கொள்ளக்கூடிய மிகப் பெரிய நில ஒப்பந்தங்கள் பற்றிய தகவல்கள், இவற்றைப் பற்றி விசாரிப்பதற்காகப் பன்னாட்டு நிறுவனங்கள் நியமனம் செய்துகொண்டுள்ள சில குறிப்பிட்ட நிறுவனங்கள் மிகப் பெரிய தொழில்நுட்பக் கருவிகளை வைத்துக்கொண்டு, அதிலும் அரசாங்கத்திடம் இருக்கின்ற கருவிகளைவிட சக்திவாய்ந்த கருவிகளை வைத்துக்கொண்டு, எங்கேயும் ஊடுருவி, அந்த இரகசியங்களையெல்லாம் தெரிந்துகொள்ளக்கூடிய ஓர் இடத்திலே இருக்கிறார்கள் என்பதுதான் இந்தத் தகவல் நமக்குத் தந்திருக்கிற செய்தி. எனவே, இது நம்முடைய அரசாங்கத்தினுடைய நிருவாகத்திற்கே விடப்பட்ட ஒரு பெரிய சவாலாகவே நான் கருதுகிறேன்.

நம்முடைய தலைமைச் செயலாளர் என்பவர், அரசாங்கத்தினுடைய முதன்மை நிர்வாக அதிகாரி. இந்தச் சட்டமன்றம் எடுக்கின்ற முடிவுகளை, அமைச்சரவை எடுக்கின்ற முடிவுகளைப் பொறுப்பாக நிறைவேற்ற வேண்டிய, தலைமையிடத்திலே இருக்கிற ஒருவருடைய தொலைபேசியை யாரோ ஒருவரால் ஒட்டுக் கேட்க முடிகிறது என்று சொன்னால், இந்தத் தேசத்தினுடைய இறையாண்மைக்கும், அரசாங்கத்தினுடைய நிருவாக அதிகாரத்திற்குமே விடப்பட்ட சவாலாகத்தான் நாம் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு செய்தி உண்மையிலே நடந்திருக்கும் என்று சொன்னால், அப்படிப்பட்ட சக்திவாய்ந்தவர்கள், இந்த அரசாங்கத்தைவிட சக்திவாய்ந்தவர்கள் வெளியே எங்கே இருக்கிறார்கள்; அவர்களுடைய வலைகள்





எங்கெல்லாம் பின்னப்பட்டிருக்கின்றன; அந்தச் சதியினுடைய வேர்கள் எங்கெல்லாம் நுழைந்திருக்கின்றன என்பதை ஆராய்வதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனக்கே உரித்தான ஜனநாயக உணர்வோடு, ஒரு நீதிபதியை நியமனம் செய்கிறேன் என்று சொன்னார்கள். நீதிபதியினுடைய விசாரணை முடிவதற்கு 3 மாதங்கள், 6 மாதங்கள் ஆகலாம். ஆனால், அந்த நீதிபதி விசாரணை நடத்துகிற அதேநேரத்திலே, இன்னொரு, another agency மூலம் இதனுடைய ஆழம் என்ன, இதனுடைய வேர் எங்கே இருக்கிறது, இந்த வேரை உடனடியாக எடுக்கவில்லை என்று சொன்னால்—இது தமிழ்நாடு அரசாங்கத்தைப் பொறுத்த விஷயம் மட்டுமல்ல, மத்திய அரசைப் பொறுத்த விஷயமும்கூட; பல்வேறு அரசு அதிகாரிகள், பல்வேறு உயர் நீதிமன்ற நீதிபதிகள், முதலமைச்சர், ஆளுநர் போன்ற அரசாங்கத்தினுடைய மிகப் பெரிய தலைமைப் பீடங்களிலே பணியாற்றக்கூடியவர்கள் இருக்கக்கூடிய இந்த இடத்திலே தொலைபேசிகளை ஒட்டுக் கேட்கின்ற சக்தி யாரிடமாவது இருக்கிறது என்று சொன்னால்—அந்தச் சக்தியை உடனடியாக அடையாளம் கண்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணை என்கிற பெயரிலே அரசியல் கட்சிகளுக்கு வேண்டுமென்று சொன்னால், அதனுடைய பின்னுதாரணங்களை விளக்குவதற்குத் தோதாக இருக்கும், ஆனால், இதை நிருவாகத்திற்கு விடப்பட்ட சவாலாகப் பார்க்க வேண்டும். ஆகவே, இதை உடனடியாகக் களைவதற்கு அரசாங்கம் ஏதாவது சிறப்பு ஏற்பாடு செய்து, அதனுடைய வேர்களைத் தோண்டி எடுத்து, அந்த சதியினுடைய ஆழத்தை அறிந்து, அதை அடிமுனையிலேயே வெட்டி எறிய வேண்டுமென்று இந்த அவையின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

முற்பகல் *9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறுகின்றபோது, ஒரு தனியார் அந்த அளவிற்குச் சக்தி படைத்து,

அவர்கள் அதைப் பதிவு செய்திருக்கின்றார்கள் என்ற கருத்தை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தியையோ, அதேபோல மக்கள் தொலைக்காட்சியிலே வந்திருக்கின்ற செய்தியையோ நாம் பார்க்கின்றபோது, உளவுத் துறையே, Chief Secretary-க்கும், A.D.G.P. திரு. உபாத்யாயா அவர்களுக்கும் இடையே நடைபெற்ற ஓர் உரையாடலைப் பதிவு செய்து மிகத் தெளிவாக அதிலே காட்டியிருக்கின்றது. எனவே, இந்தச் சட்டமன்றத்திலே நாம் பேசுவதெல்லாம், இங்கே அரசாங்கம், அந்த உயர் அதிகாரியினுடைய பேச்சையோ, அல்லது ஓர் அரசியல்வாதியினுடைய பேச்சையோ, முக்கிய உறுப்பினர்களாக விளங்கக்கூடியவர்களின் பேச்சையோ ஒட்டுக் கேட்பது, ஜனநாயக முறைக்கு நேர் விரோதமானது; அப்படி செய்யக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தையே கொண்டு வந்தோமே ஒழிய, தனிப்பட்ட ஒரு சக்தி அப்படி இருக்கின்றது என்று சொன்னால், அவர்களுக்கு நிச்சயமாக சாவு மணி அடித்து, அவர்களைத் துரத்துவதற்கு அரசாங்கம் இன்றேகூட நடவடிக்கை எடுக்க முடியும். அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் இங்கே சொல்லப்படக்கூடிய, வலியுறுத்தப்பட வேண்டிய ஒரே ஒரு கருத்து என்னவென்று சொன்னால், உளவுத் துறையே இதைப் பதிவு செய்யலாமா என்பதுதான் கேள்வி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக இதுகுறித்து நடவடிக்கை எடுத்து, உளவுத் துறை முக்கிய அரசியல்வாதியினுடைய தொலைபேசியையோ, அல்லது உயர் அதிகாரிகளினுடைய பேச்சையோ ஒட்டுக் கேட்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுக் கேட்கவில்லை என்றுதான் சொல்லிவிட்டார்களே! திரும்பத் திரும்ப ஒட்டுக் கேட்பது, ஒட்டுக் கேட்பது என்று சொல்லிக்கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) பதில் சொல்லிவிட்டார்கள் இல்லையா? உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, உளவுத் துறையின்மூலமாகப் பெற்றிருக்கின்ற செய்தியென்று யாரோ ஒருவர், தான் செய்த உபாயத்தின் காரணமாக, அதை ஒலிபரப்பி, பத்திரிகையிலும் வெளியிட்டு மகிழ்ந்திருக்கின்றார்கள் என்பதை நாம் மிகுந்த எச்சரிக்கையோடு கண்காணித்து மேல்நடவடிக்கை எடுக்கவேண்டும்; இனி இத்தகைய





நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற அரசுக்குத் தேவையான அறிவுரைகளைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சுதர்சனம் அவர்களும், பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், மணி அவர்களும், மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் கோவிந்தசாமி, சிவபுண்ணியம் ஆகியோரும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். ஞானசேகரன் பழைய பாணியிலேயே தன்னுடைய கருத்தை இங்கே வெளியிட்டிருக்கின்றார். ஏதோ அரசாங்கமே தூண்டி, இந்த ஒட்டுக் கேட்பதைச் செய்திருக்கின்றது என்பதைப் போலப் பேசியிருக்கின்றார், அது அவருடைய பாணி. நான் அதற்காகக் கவலைப்படவில்லை. அப்படி ஒரு குற்றச்சாட்டு இருந்தாலும், அதை விளக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்காகத்தான் மொத்த எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் ஒருவழியாக நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்படும் என்று நான் இங்கே உறுதியளித்திருக்கின்றேன்.

இன்னொன்று; பீட்டர் அல்போன்ஸ் எடுத்துக்காட்டியதைப் போலவும், நம்முடைய மணி அவர்கள் சொல்லிக்காட்டியதைப் போலவும், வளர்ந்து வருகின்ற விஞ்ஞானம் இன்றையதினம் மலிவானதாக மாத்திரமல்ல; எளிமையானதாகவும் ஆகி இருக்கின்றது. உங்களுக்கு உதாரணம் சொல்லவேண்டுமேயானால், என்னுடைய வீட்டிலேயே என்னால் கையாள முடியாத டி.வி-யை, என்னால் இயக்க முடியாத டி.வி.-யை, பழுதாகிவிட்டால் என்னால் சரிசெய்ய முடியாத டி.வி இயந்திரத்தை என்னுடைய 10 வயதுக்கும் குறைந்த வயதுடைய பேரன், ஒரு நிமிடத்தில் சரிசெய்துவிடுகின்றான். அந்த அளவிற்கு விஞ்ஞானம் எளிமையாக இன்றைக்கு ஆகியிருக்கின்றது. அப்படி இருக்கும்போது, இதையெல்லாம் படித்துவிட்டு, அதிலே பெரிய தேர்வு பெற்று, அதற்குப் பிறகுதான் இந்த ஒட்டுக் கேட்கின்ற பணியைச் செய்திருக்க வேண்டும் என்று அல்ல; ஒரு பைத்தியக்காரன்கூட இதைச் செய்ய முடியும் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அதிலே ஒன்றுதான், நேற்றையதினம் வெளிவந்த அந்தச் செய்தியும், இன்றைக்கும் நாம் பேசிக்கொண்டிருக்கின்ற இந்தச் செய்தியும் ஆகும். இதைப்பற்றிப் பிரச்சினை எழுப்பப்படுகின்றபோது, விளக்குவதற்குத் தயாராகத்தான் நான் வந்திருந்தேன். வந்தவுடனே பேரவைத் தலைவர் அறைக்குச் சென்று, இங்கே வருவதற்கு முன்பே அங்கே சென்று, இன்று ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன வந்திருக்கின்றது என்பதைக் கேட்டறிந்து, அ.தி.மு.க. சார்பில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இத்தனை பேர் கொடுத்திருக்கின்றார்கள்; மற்றக் கட்சிகளின் சார்பில்

யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் அறிந்து--அவைத் தலைவர்கூட சொன்னார்; பொதுவாக இது கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்—இருந்தாலும் இதனை எடுத்துக்கொள்ளலாம் என்ற என்னுடைய கருத்தை அவரிடம் வலியுறுத்தி விட்டுத்தான் இங்கே வந்தேன். நான் எப்படி இதனை விளக்க வேண்டுமென்று எண்ணியபோது, அதற்கு எதிர்க்கட்சித் தரப்பிலே யாரும் இணங்கவில்லை. நீ என்ன விளக்குவது, நாங்கள் என்ன கேட்பது என்கின்ற முறையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் நடந்துகொண்டதை நீங்களும் பார்த்தீர்கள்; பத்திரிகை நண்பர்களும் பார்த்தார்கள்; நாடும் பார்த்துக்கொண்டிருக்கிறது. நான் இங்கே சொல்ல விரும்புவது, ஏதோ தலைமைச் செயலாளர் பேசக்கூடாத ஒன்றைப் பேசிவிட்டார்; சொல்லக்கூடாத ஒன்றைத் தன்னுடைய கீழ்மட்ட அதிகாரிகளிடம் சொன்னார்; அது வெளிவந்துவிட்டது என்றால், அது பெரிய தவறு. அது உள்ளபடியே நாம் தலைகுனிய வேண்டிய ஒன்று. அப்படி ஒன்றும் நடக்கவில்லை. நடந்தது, ஒரு நிருவாகப் பணிபற்றிய உரையாடல். இந்த நிருவாகப் பணியை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்று தன்னுடைய சக அதிகாரிக்கு அல்லது துணை அதிகாரிக்கு ஒருவர் யோசனையாகச் சொன்னதை "டேப்" செய்து, அதைப் பத்திரிகையிலே வெளியிடுவதென்பது, அவர்களுடைய வியாபாரத்திற்கு நல்லதே தவிர, ஏதோ ஒரு பெரிய இரகசியத்தை வெளியிட்டுவிட்டார்கள் என்பது அல்ல.

*முற்பகல் 10—00*

இங்கே நண்பர் மு. கண்ணப்பன் பேசும்போது, அதிலே தேச துரோகமான விஷயம் இல்லாமல் இருந்திருக்கலாம்; நாட்டிற்கு விரோதமான விஷயம் இல்லாமல் இருந்திருக்கலாம் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படியெல்லாம் இருந்தால், அந்த 'டேப்' எடுத்தவர்களும் தண்டிக்கப்படுவார்கள்; அதற்குக் காரணமாக இருந்து குரல் கொடுத்தவர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்பது இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் தெரியும். ஆனாலும், அந்தத் தண்டனை—அந்தத் தீர்ப்பு—அவசரப்பட்டுக் கொடுக்கக்கூடியதாகும். இதை யார் 'டேப்' செய்தது; யார் பேசியது என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாது. அதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் நீதி விசாரணை வேண்டும்; அதை அமைப்போம் என்று நான் சொல்லியிருக்கிறேன். அந்த நீதி விசாரணை நடக்கும்போது, இன்றையதினம் நமக்கு ஏற்பட்டிருக்கும்



குழப்பமெல்லாம் நிச்சயமாகத் தீரும். தலைமைச் செயலாளரைப் பற்றி நாம் கொண்டிருக்கின்ற எண்ணமும் நிலைபெறும். தலைமைச் செயலாளர் தமிழகத்தைக் காட்டிக்கொடுக்கவோ, தமிழக அரசுக்கு விரோதமாக நடக்கவோ இன்னொரு அதிகாரியிடம் பேசவில்லை. அவரோடு மறுமுனையில் பேசிய அதிகாரியும், அத்தகைய எண்ணத்தோடு பேசியவரல்லர். அந்தப் பேச்சினுடைய ஆழமான உட்கருத்தை நாம் படித்துப் பார்க்கும்போது அவர்களை அப்படி சந்தேகப்படுவதற்குக் கிஞ்சித்தும் இடமில்லை என்ற காரணத்தால், இந்தப் பிரச்சினையை இதோடு இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் விட்டுவிட வேண்டும், இதனை நீதி விசாரணைக்கு உட்படுத்துவோம் என்ற உறுதியோடு என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 2. கவன ஈர்ப்பு

### எடப்பாடி தொகுதி, சரபங்கா நதியில் தூர் வாருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சரபங்கா நதியில் தூர் வார வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

## அறிக்கை

காவேரி வடிநிலம் நவீனப்படுத்தும் திட்டத்தில் சரபங்கா நதி முழுவதும் தூர் வார, அணைக்கட்டுகள் மற்றும் குளங்களை மேம்படுத்த ரூ. 33.80 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி சின்னப்பம்பட்டியிலிருந்து தேவூர் வரை தூர் வாரும் திட்டம் இதில் அடங்கும். இத்திட்டம் குறித்த மதிப்பீடுகள் பரிசீலனையில் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், சரபங்கா நதியில் தூர் வாருவதற்காகவும், அணைக்கட்டுகள் மற்றும் குளங்களை மேம்படுத்துவதற்காகவும் 33.80 கோடி ரூபாயில் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அதற்காக நிதியொதுக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்காக, முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சரபங்கா நதிக்கு ஏற்காடு மலையிலிருந்து மழைக் காலங்களில் நீர் வருகின்றது. அந்த நீரானது ஓமலூர், சக்கரசெட்டிப்பட்டி வழியாக, எடப்பாடி தொகுதியிலே சின்னப்பம்பட்டிக்கு அருகில் வெள்ளாளபுரம் ஊராட்சி மற்றும் தாதாபுரம், வேம்பனேரி ஊராட்சி வழியாக, எடப்பாடி நகரத்தில் உள்ள பாலத்தின் வழியாக, தேவூர் பேரூராட்சியின் வழியாக வந்து காணியாளம்பட்டி அருகில் உள்ள அன்னம்மார்கோயில் அருகில் காவிரி ஆற்றிலே கலக்கின்றது. இந்த நதியானது மிகவும் தூர்ந்துவிட்டது. அதேநேரத்தில், சில இடங்களில் ஆகாயத் தாமரைகள் படர்ந்து நீர் செல்ல முடியாத வகையில் தடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளன. அதேநேரத்தில், 2, 3 இடங்களிலே மக்கள் நதியைக் கடந்து செல்ல முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சரபங்கா நதியைத் தூர் வார வேண்டுமென்றும், அதேநேரத்தில் எடப்பாடியில் கவுண்டம்பட்டிக்கும், வெள்ளாண்டிவலசுக்கும் இடையிலே ஒரு பாலமும், வெள்ளாளபுரம்



2008 ஏப்ரல் 15] [திரு. வை. காவேரி]

ஊராட்சியில் நத்தகாடு என்ற பகுதியிலே ஒரு பாலமும், வெள்ளாளபுரம் ஊராட்சியிலே செங்காடு என்ற பகுதியிலே ஒரு பாலமும் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே நான் ஓமலூர் சக்கரசெட்டிப்பட்டியில் அணை கட்ட வேண்டும் என்று பேசியுள்ளேன் . . .

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காவேரி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. வை. காவேரி:** அதையும் செய்து கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஒரே ஒரு திருத்தம். அவர் அந்த நதியினுடைய பூர்வாங்கத்தைப்பற்றிச் சொல்லி இருக்கிறார். நிதி ஒதுக்கி இருக்கிறோம் என்று சொன்னார். இல்லை; 33.80 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மற்றபடி அவர் சொன்ன குறைபாடுகள் எல்லாம் தூர் வாருகிற காலம் வந்தால் தானாகவே நிவர்த்தி ஆகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு 'சரி' என்று சொல்லிவிட்டார்கள் இல்லையா? உட்காருங்கள். திரு. காவேரி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை வைத்து நான் நிதி ஒதுக்கிவிட்டார்கள் என்று சொல்லிவிட்டேன். இருப்பினும், நிதி ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமாறு அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2007-2008* ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து நான்கு முதல் எண்பத்தேழு வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பில் இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 24 – சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை**

**(இ) கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**(ஈ) கோரிக்கை எண் 26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

— தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008-2009* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். *11-4-2008* ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் *24* - சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மானியக் கோரிக்கை எண் *41* - வருவாய்த் துறை. மானியக் கோரிக்கை



எண் *51* - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. மானியக் கோரிக்கை எண் *26* - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.

மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக்கு இலக்காகின்ற இராமநாதபுரம் மாவட்டத்தில் மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட சின்னஞ்சிறு சிற்றூரில் பிறந்து இளமைக் காலத்தில் அரசியலில் ஈடுபட்டு வட்டச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் சென்னைக்கு அழைத்து *1962* ஆம் ஆண்டு தொகுதிப் பங்கீடுகளைச் செய்து முடிப்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்முடைய அன்புக்குரிய தலைவர் அவர்களை நியமித்திருந்தபோது, அன்றைய தினம் சுதந்திரா கட்சித் தலைவர் திரு. எஸ்.எஸ். மாரிசாமி அவர்களும் நம்முடைய இயக்கத்தைச் சார்ந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதையெல்லாம் சொல்லலாம்; நான் கோபித்துக்கொள்ள மாட்டேன். அதையெல்லாம் சொல்லாவிட்டாலும் கோபித்துக்கொள்ள மாட்டேன். சொல்லாமலேயே பேசவும். (குறுக்கீடு) நேரம் இல்லை, நேரம் இல்லை.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** எங்களை ஆளாக்கிய (குறுக்கீடு) ஒரே ஒரு வரி. எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

*2000* ஆண்டுகளுக்கு முன்பு, சங்க காலப் புலவர் "மோசி கீரனார்" அவர்கள்,

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்று குறிப்பிட்டார்கள்.

ஒரு நாட்டில் நீர் வளம் மட்டும் அல்ல; நில வளம் மட்டுமல்ல; சிறந்த ஆட்சி செய்கின்ற மன்னன்தான் அந்த நாட்டுக்கு உயிர் என்று சொன்னார்கள். நம்முடைய அன்பிற்குரிய தலைவர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியத் திருநாட்டிற்கே, 21 அம்ச கோரிக்கையினை உருவாக்கிக் கொடுத்து, இந்தியத் திருநாட்டில் எல்லா மாநிலங்களுடைய ஆட்சிக் கட்டிலில் இருப்பவர்களுக்கும் வழிகாட்டுகின்ற வகையில் அற்புதமான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய, அந்தத் தலைவர் அவர்கள் இருக்கக்கூடிய, புறநானூற்று வைர வரிகளுக்கெல்லாம் இன்றைக்குப் பட்டைத் தீட்டிக்கொண்டிருக்கக்கூடிய, நம்முடைய அன்பிற்குரிய தலைவர் அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, என்னுடைய பதிலுரையை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

முற்பகல் 10-10

1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் துவக்கி வைத்தார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். ஒரு பாடலாசிரியர், "மாபெரும் கோபுரத்திற்கு அருகே, மாட மாளிகையைக் கட்டி, அதன் ஓரத்திலே ஓர் ஓலைக் குடிசை இருந்தால், அதைப் பொன்னான நாடு என்று சொன்னால், இந்த நாடு சிரிக்கும்; ஊரும் சிரிக்கும்" என்று சொன்னார். கோபுரத்திலே இருந்து பார்க்காமல், குடிசையிலிருந்து கோபுரத்தை பார்க்கின்ற தலைவர் அவர்கள் குடிசையில் இருப்பவனை கோபுரத்தில் வைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கினார்கள். அதோடுமட்டுமல்லாமல், பல்வேறு வாரியங்களைத் தமிழ்நாட்டிலே அற்புதமாக உருவாக்கி சாலை ஓரத்திலே "பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய்", "கையது கொண்டு மெய்யது பொத்தி" சின்னஞ்சிறு குடிசைகளில் படுத்திருந்தவர்களை, சுகாதாரக் கேடு நிறைந்த பகுதிகளில் இருந்தவர்களை, சாலையின் ஓரத்திலே போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த குடிசைகளை எல்லாம் அப்புறப்படுத்தி, 1970 ஆம் ஆண்டு 663 வீடுகளை முதன்முதலாகக் கட்டி, நம்முடைய ராஜா அண்ணாமலைபுரம் பகுதியில் அவர்களே அதைத் திறந்து வைத்தார்கள்.

அதோடு 1971 ஆம் ஆண்டு 2,842 வீடுகளைக் கட்டி, இந்தியத் திருநாட்டின் சர்வோதயத் தலைவரான ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களை அழைத்து வந்து, அவருடைய திருக்கரங்களாலே திறந்து வைப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதிலிருந்து இந்தத் துறை



1,20,000 வீடுகளைக் கட்டி முடித்து இருக்கிறது. அதிலே VAMBAY Scheme, மற்றும் ஓடுகள் வேயப்பட்ட வீடுகளைாக மாற்றுவது போன்ற திட்டங்கள் நீங்கலாக, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட 16 ஆண்டுகளில் அடுக்கு மாடிக் குடியிருப்புகளாக 52,140 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. 20 ஆண்டுக் கால அ.தி.மு.க ஆட்சியில் கட்டப்பட்ட குடியிருப்புகள் 38,364. இப்போது இரண்டு ஆண்டுகள் நிறைவடையாத காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 12,877. இந்த 12,877 வீடுகள் நீங்கலாக 2009 நிதியாண்டில், ஏறத்தாழ மேலும் 25,495 வீடுகள் கட்டப்பட இருக்கின்றன. ஆக, இந்த மூன்றாண்டுகளில் 38,372 வீடுகள் கட்டி முடிக்கப்படும். இவற்றின் நிலை என்ன என்பது எங்களால் சொல்ல முடியும். இருப்பினும், காலத்தின் அருமை கருதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கை தாக்கல் செய்ய வேண்டிய காரணத்தினால், எங்களாலே வழங்கப்பட்டிருக்கக்கூடிய புத்தகத்தில் உள்ள சிலவற்றைச் சொல்கிறேன். 12,877 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, எல்லோருக்கும் ஒதுக்கீடு செய்யக்கூடிய தயார் நிலையில் 9,154 வீடுகள் உள்ளன. பல்வேறு கட்டங்களில் முன்னேற்றத்தில் இருக்கக்கூடிய வீடுகள் 3,723. ஆக மொத்தம் 12,877. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கக்கூடிய வீடுகளின் எண்ணிக்கை 7,072. மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் துறையில் இருந்து, சிறு, சிறு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு, அதெல்லாம் rectify செய்து, திருத்தம் செய்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அனுமதி கிடைத்தவுடன் 17,751 வீடுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், எந்தெந்த ஊரில், எந்தெந்த நகரத்தில் எவ்வளவு வீடுகள் கட்டப்படவிருக்கின்றன என்பதும் புத்தகத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய தேர்தல் அறிக்கையில் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டப்பட்ட, பழுதடைந்த வீடுகள் மீண்டும் கட்டித் தரப்படும் என்று சொன்னார்கள். சொன்னதோடு நின்றுவிடவில்லை. அதற்கான கூட்டத்தையெல்லாம் கூட்டி, மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை நியமித்தார்கள். அந்த வல்லுநர் குழு தமிழ்நாட்டில் எங்கெல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் பழுதடைந்த குடியிருப்புகள் உள்ளனவோ, அங்கெல்லாம் ஆய்வு செய்து,

அவற்றையெல்லாம் இடித்துவிட்டுக் கட்டப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்ற வீடுகள் 9,692 ஆகும். இந்த 9,692 வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு 263 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே பல்வேறு சிரமங்கள் உள்ளன. இந்த வீடுகளை இடிப்பதற்கு வாரியம் நடவடிக்கை எடுக்கும்போது குடியிருப்பவர்கள் காலி செய்வதற்கு மறுக்கிறார்கள். இந்தச் செய்தியை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுபோனபோது நம்முடைய கருணை உள்ளம்கொண்ட முதலமைச்சர் அவர்கள், அவர்கள் காலி செய்து இடைப்பட்ட காலத்தில் மாற்று குடியிருப்புகளை எடுத்துக் கொண்டு, அவர்கள் அமர்வதற்கு தலா 8,000 ரூபாய் வழங்கப்படும் என்று அந்தக் கூட்டத்திலே முடிவெடுத்து அறிவித்தார்கள். அறிவித்ததோடு மட்டுமல்லாமல் அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இன்றைக்கு முதல்கட்டமாக வியாசர்பாடியில் 270 வீடுகளும், குப்பைமேட்டில் 16 வீடுகளும் ஆக 286 வீடுகள் இடிக்கும் பணி துவங்கப்பட்டுவிட்டது. மதுரை எல்லீஸ் நகரில் 564 வீடுகளும், அருப்புக்கோட்டை சாலையில் 444 வீடுகளும், ஆக, 1,008 வீடுகளை அவர்கள் காலி செய்து கொடுத்து, இடிப்பதற்கு டெண்டர் விடப்பட்டுள்ளது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டப்பட விருக்கக்கூடிய வீடுகளினுடைய பட்டியலும் பக்கம் 6, 7 -ல், அந்தப் புத்தகத்திலே தரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம்பற்றி மாண்புமிகு முன்னாள் அமைச்சர் கேட்டார். இன்று அவர் அவையில் இல்லை. நொச்சிக்குப்பம், சீனிவாசபுரத்திலே 2,862 வீடுகளை இடித்துவிட்டு 7,320 வீடுகளைக் கட்டித் தருவதாகச் சொன்னீர்களே என்ன ஆயிற்று என்று அவர் கேட்டார். எங்களுடைய துறையினுடைய அலுவலகத்திற்குப் பல்வேறு முறை அங்கே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியும் அங்கே குடியிருப்பவர்கள் அந்த வீடுகளைக் காலி செய்வதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் வீடுகள் வேண்டாம்; எங்களுக்கு நிலப் பட்டா கொடுத்தால் போதுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் நானும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், சென்னை மாவட்ட ஆட்சியர், எங்களுடைய துறை அதிகாரிகளெல்லாம், அவர்களுக்கு முன்கூட்டியே நாங்கள் வருவதைப் பற்றித் தெரிவித்துவிட்டு, காலை 8 மணிக்கு எல்லாம்



சீனிவாசபுரத்திற்குச் சென்று அவர்களோடு 3½ மணி நேரம் பேசி முதலில் கணக்கெடுப்பதற்கு எங்களுக்கு வழிவிடுங்கள், இந்தக் குடியிருப்பில் எவ்வளவு பேருக்கு வீடு தேவையிருக்கும் என்பதைக் கணக்கெடுக்க வேண்டுமென்று சொல்லி, உலக வங்கி அதிகாரிகளாலும், எங்கள் துறை அதிகாரிகளாலும் 3-1/2 மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு நானும் மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களும், அவர்களுடைய அனுமதியைப் பெற்று சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை எதுவும் நடந்துவிடாத அளவுக்குக் கணக்கெடுக்கப்பட்டது. எனவே, இதில் காலந்தாழ்த்திவிட்டதாக யாரும் கருதத் தேவையில்லை. ஏனென்றால் அந்தப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் யாரெல்லாம் குடியிருந்ததாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே உதவிகள் செய்யப்பட்டதோ, அதிலே உள்ளவர்களில் விருப்பம் தெரிவித்த 4,000 பேர்களுக்கு செம்மஞ்சேரியில் தயார் நிலையில் இருந்த வீடுகள் ஒதுக்கப்பட்டு, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அழைத்து ஒரு விழா நடத்தி அதன்மூலமாக அவர்களுக்கெல்லாம் வீடுகள் கொடுக்கப்பட்டுக் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மேலும், 2,500 வீடுகளை நாங்கள் தயார் நிலையில் ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகரில் வைத்திருக்கிறோம். அந்த 2,500 வீடுகளுக்குரிய தொகையை உலக வங்கி எங்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறது. அந்த வகையில் 32 கோடியே 50 இலட்சம் ரூபாயை எங்களுக்கு உலக வங்கி தர இருக்கிறது. அந்தத் தொகைக்கான செயற்குறிப்பை, கோரிக்கையை நாங்கள் அனுப்பி வைத்திருக்கிறோம். விரைவில் எங்களுடைய துறைக்கு உலக வங்கியிலிருந்து 32 கோடியே 50 இலட்சம் ரூபாய் கிடைத்தவுடன், சென்னை மாவட்ட ஆட்சியரிடத்திலே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுடைய பட்டியலைக் கேட்டுப் பெற்று இந்த 2,500 வீடுகளில் அவர்கள் எல்லாம் குடியமர்த்தப்படுவார்கள். இதற்கு இடையில் 2,159 தற்காலிகக் குடியிருப்புகளை அமைப்பதற்கு 7 கோடியே 70 இலட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கிறது. அந்தத் தற்காலிக வீடுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அவர்களை அப்புறப்படுத்தி, மறு குடியமர்வு செய்துவிட்டு, அந்த வீடுகளையெல்லாம் இடித்துவிட்டு, அங்கே புதியதாக 7,320 வீடுகள் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-20

அதுமட்டுமல்ல; வல்லுநர் குழு 9,692 வீடுகளை இடித்துக் கட்ட வேண்டுமென்றும், அதே நேரத்திலே ஏறத்தாழ 30,000 வீடுகளில் பழுதுநீக்கம் செய்ய வேண்டுமென்றும், repair செய்ய வேண்டுமென்றும் எங்களுக்குத் தெரிவித்தது. அதற்கான விவரங்கள் எந்தெந்த நகரத்தில், எவ்வளவு வீடுகள் என்ற எண்ணிக்கையும் நாங்கள் தந்திருக்கின்ற புத்தகத்தின் 8-வது பக்கத்தில் அச்சடிக்கப்பட்டு விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் அதைப் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஆக மொத்தம், ஏறத்தாழ 30,000 வீடுகள், 47 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படவிருக்கின்றன. தமிழ்நாட்டில் பாதுகாப்பான இடங்களிலே கட்டப்படவுள்ள வீடுகளின் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு ஏற்கெனவே அந்த வீடுகளிலே குடியிருந்தவர்கள் குடியமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, நகரப் பகுதி, மாநகர மன்றங்கள் தவிர, நகராட்சி மன்றங்கள் அல்லது பேரூராட்சிகளிலே, குடிசைகள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளில், சுகாதாரக் கேடுகள் நிறைந்த பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கிக் கொடுக்க உத்தரவிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்தார்கள். அதனைக் கொண்டு அங்கே இப்போது தார்ச் சாலைகள், சிமென்ட் சாலைகள், கழிவுநீர் செல்கின்ற, கழிவுநீரகற்றுகின்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல, தெரு விளக்குகள், குடிநீர்க் குழாய்கள் எல்லாம் அமைக்கப்பட்டு அந்தப் பகுதிகளிலே நல்ல அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிதியாண்டிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேலும் பல ஊர்களுக்குச் செய்து கொடுக்குமாறு உத்தரவிட்டு, மேலும் 20,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய நிதி உதவியின் பேரில் சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 2 கோடியே 50 இலட்சம்



ரூபாய் செலவில் சுய உதவிக் குழுக்களுக்கு, 618 மகளிர் குழுக்கள் மற்றும் ஆண்கள் சுய உதவிக் குழுக்களுக்குத் தலா 30,000 ரூபாய் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துறை மூலமாக 3 சக்கர சுமையேற்றும் வாகனம் 132 மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளன. மஹிந்திரா டூரிஸ்ட் வாகனம் ரூபாய் 4 இலட்சம் செலவில், ஒரு வேன் 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 12 மகளிருக்கு 'மஹிந்திரா டூரிஸ்ட்' வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 659 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 1,229 நபர்களுக்கு 49.5 இலட்சம் ரூபாய் செலவில் தையல் இயந்திரங்கள், ஈர மாவு அரைக்கும் இயந்திரங்கள், நடமாடும் பங்குகள், 3 சக்கர சைக்கிள் வாகனங்கள், மீன்பாடி வண்டிகள், அழகுசாதனப் பெட்டிகள், பெண்கள் வீடுகளுக்கே சென்று—பியூட்டி பார்லருக்குச் செல்லாமல், வீடுகளுக்கு இவர்களே சென்று—தொழில் செய்து வருவாயை ஈட்டுகின்ற வகையில் அழகு சாதனப் பெட்டிகளெல்லாம் வழங்கப்பட்டு அவர்களுக்கு வாழ்வாதாரங்கள் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், பதவி உயர்வு. நீண்டகாலமாக, ஏறத்தாழ 10 ஆண்டு காலமாகப் பதவி உயர்வு இல்லாமல் அல்லது வழங்கப்படாமல் இருந்த இத்துறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்பேரில் 182 பேர்களுக்கு, இந்த வாரியத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும், அங்கே பல்வேறு காலகட்டங்களில், கடந்த 10 ஆண்டுகளில் உயிரிழந்த, அந்தத் துறையிலே பணியாற்றிய அலுவலர்கள் 49 பேர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனவே, இன்னும் தொடர்ந்து வீட்டு வசதி மற்றும் கூட்டுறவு வீடு கட்டும் இணையம் ஆகியவை சம்பந்தமாக, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, தகவல்களைத் தெரிவிக்கவிருக்கிறார்கள். அப்போது இந்தத் துறையினுடைய அறிக்கையையும் அவர் சேர்த்தே படிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையின் சார்பில் 22 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்றார்கள். அந்தத் தீர்மானங்களையெல்லாம் படித்துப் பார்த்து, ஆய்வு செய்து நாங்கள் எதிர்காலத்திலே திட்டமிடுவதற்கு வாய்ப்பாக அவையெல்லாம் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும், ஓரேயொரு செய்தியைச் சொல்லி உரையை முடிக்கின்றேன்.

முற்பகல் 10-25

"ஏற்றுக்கொண்ட பொறுப்பை இனிது நிறைவேற்றுவதிலும், கடமையாற்றுவதிலும், கண்ணுங்கருத்துமாக இருப்பதிலும், சிந்தனை, செயல் அனைத்தும் இந்த நாடு செழிப்பதற்காகவே செலவிடுவதிலும், எந்த அளவிற்கு இணையற்று விளங்குகிறது நம்முடைய கழக அரசு என்பதைச் சாதனைகளை விளக்கும் சரித்திரச் சான்றுகளாக இந்தக் கடிதம் அமையும்" என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 22-12-2006 ஆம் நாளன்று 'முரசொலி'—யில் தமிழக அரசு சாதனை குறித்த கடிதத் தொடரினை நிறைவு செய்யும்போது குறிப்பிட்டுள்ளார்கள்.

அந்தச் சொற்களில் உள்ள பொலிவும், உணர்வும் எள்ளளவும் குறையாது, தமிழகத்திற்குத் தொண்டாற்றுவதே இந்தத் துறையினுடைய கடமை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, என்னுடைய பதிலுரையை ஏற்றுக்கொண்டு, இங்கே மொழிந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற்று, நாங்கள் கோரியிருக்கிற தொகையைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, வீட்டு வசதித் துறை, சிறைத் துறை மற்றும் இயற்கைப் பேரிடர் துயர் துடைப்பு ஆகிய துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்திலே பதில் அளிக்கின்ற வாய்ப்பினைத் தந்த தமிழகத்தினுடைய, தமிழ் மக்களுடைய பொக்கிஷமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, எங்களுடைய உயிரினும் மேலான தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திக்கு நோக்கி வணங்கி, என்னுடைய உரையை நான் தொடங்குகின்றேன்.

இப்போது நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபின், வருவாய்த் துறையானது பல திட்டங்களைத் தமிழகத்திற்கு வழங்கி இருக்கின்றது. பேரறிஞர் அண்ணாவினுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த



வேளையிலே, 27 சதவிகித இட ஒதுக்கீட்டை பெற்றுத் தந்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எங்களுடைய இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், எங்களுடைய கழகத்தினுடைய எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் அண்ணன் தளபதி அவர்களுக்கும், அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்த அளவில், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்கின்ற காலத்தில் எல்லாம், தமிழகத்திலே மாவட்ட நிருவாகங்கள், கோட்ட நிருவாகங்கள், வட்ட நிருவாகங்கள், அனைத்தையும் செம்மைப்படுத்தி, ஏழையெளிய மக்களுக்குச் சமூக நலத் திட்டங்கள் சென்றடைவதற்குரிய நடவடிக்கைகளிலே அவர்கள் காட்டிய அக்கறை, இன்னும் சொல்ல வேண்டுமானால், அவர்கள் ஒவ்வொரு முறையும் ஆட்சிப் பொறுப்பேற்கின்ற காலத்தில் எல்லாம், இந்தத் துறையிலே அவர்கள் பதித்திருக்கின்ற முத்திரைகளை இதுவரை வரலாற்றிலே யாரும் பதித்ததில்லை என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், மிகச் சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந் தலைவராக, அவரின் கடைக்கண் பார்வைபட்ட ஒரே காரணத்தினால், ஒரு சாதாரண குடியிலே பிறந்தவன், இந்த அளவிற்கு இந்த அவையிலே நின்று உரையாற்றுகின்ற வாய்ப்பை அவர்கள் தந்திருக்கின்றார்கள். வருவாய்த் துறையைப் பொறுத்த அளவில், தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வருகின்றபோது, புதிய மாவட்டங்களைத் தோற்றுவிப்பது, மாவட்ட நிருவாகத்திற்கு ஏற்ற, தமிழகத்திலே பெரும்பான்மையான மாவட்ட அலுவலகங்களைக் கட்டித் தருவது, புதிய கோட்ட அலுவலகங்களை உருவாக்குவது, புதிய வட்டங்களை உருவாக்குவது, அவற்றிற்குப் புதிய கட்டடங்களைக் கட்டித் தருவது என்ற வகையிலே, ஆட்சிப் பொறுப்பிலே அவர்கள் அமர்ந்தவுடனே கடந்த முறை நிதியை ஏராளமாக அள்ளித் தந்து, ஏறத்தாழ 60 கோடி ரூபாயை வருவாய்த் துறைக்கும் ஒதுக்கித் தந்து, கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-30

குறிப்பாக, தலைவர் கலைஞர் அவர்கள், பத்து ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகின்ற ஏழைகளுக்கெல்லாம் பட்டா கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை 2000 ஆம் ஆண்டு கொண்டுவந்தார்கள். அவ்வாறு கொண்டுவந்த திட்டம், பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்களுக்கு அந்த ஆண்டு பயனைப் பெற்றுத் தந்தது. பின்னர், 2001-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், அந்த ஐந்து ஆண்டுக் காலம், குடியிருப்பவர்களுக்குக் குடியுரிமைப் பட்டா வழங்குவதை நிறுத்திவிட்டார்கள். மீண்டும் 2006-ல் தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தவுடனேயே அந்தத் திட்டத்தை மீண்டும் துவக்கி, அந்தத் திட்டம் இன்றைக்குத் தமிழகத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. முதன்முதலாகக் குடியுரிமைப் பட்டா ஏழைகளுக்கு மட்டும்தான் வழங்கப்பட்டது. கிராமப்புறங்களிலே ரூ.16,000/- வருமானமும், நகர்ப்புறங்களிலே ரூ.24,000/- வருமானமும் உள்ளவர்களுக்குத்தான் இலவசமாகக் குடியுரிமைப் பட்டா வழங்கப்பட்டு வந்தது. குடியுரிமைப் பட்டா வழங்குவது நிறுத்தப்பட்டாலும், மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடனேயே தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் வழங்க அறிவித்தார்கள். அதனுடைய பலன் முழுமையாக ஏழையெளிய மக்களுக்குச் சேரவில்லை என்றும், வருமான வரம்பை உயர்த்தவேண்டும் என்றும், இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனே ஏற்றுக்கொண்டு, கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்களுக்கு ரூ. 30,000 வருமான வரம்பு என்றும், நகராட்சிப் பகுதிகளிலே இருக்கின்றவர்களுக்கு ரூ. 50,000 என்றும் உயர்த்தி ஆணையிட்டார்கள். அதனுடைய பலன், பெரும்பாலான ஏழையெளிய மக்களுக்குக் கிராமங்களிலேயும், நகரங்களிலேயும் வாழ்கின்ற மக்களுக்குக் கிடைப்பதற்கு ஏதுவாக இருந்தது. அவ்வாறு இருக்கின்ற காலகட்டத்திலே, அதுவும் போதாது; வருமான வரம்பையே நீக்கவேண்டும் என்று இதே அவையிலே பல்வேறு உறுப்பினர்களும், நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் பேசுகின்றபோது, ஏற்கெனவே வசூல் செய்த தொகையையும் திரும்பக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் உடன் வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்து, அந்த வருமான வரம்பை உடனே நீக்கி, நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்குப் பத்து ஆண்டு என்பதை ஐந்து



ஆண்டாகக் குறைத்தது மட்டுமல்லாமல், வருமான வரம்பையே அடியோடு நீக்கியது மட்டுமல்லாமல், ஒரு சென்ட் கூடுதலாக, கேட்காததையும் கொடுத்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவுசெய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவ்வாறு அறிவித்த காரணத்தால், இப்போது தமிழகத்திலே இந்தத் திட்டம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. ஏழையெளிய மக்களுக்காகத் தலைவர் கலைஞர் அவர்கள், இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலே ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். ஆகஸ்ட் மாதம் நடந்த மாநாட்டிலே, 2007-லே மூன்று இலட்சம் பட்டாக்களை வழங்கவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதுவும் மார்ச் 31 ஆம் தேதிக்குள் வழங்கவேண்டும் என்று ஆணையிட்டார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள், 'நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்' என்பதைத் தெளிவாக ஒரு வரியில் சுட்டிக்காட்டுவார்கள். அவருடைய பொன்மொழிகளிலே இதுவும் ஒன்று. அந்த அடிப்படையிலே இந்தத் துறை அவருடைய ஆணையை ஏற்று, ஒரு நிமிடம்கூட ஓய்வில்லாமல் பணியாற்றிய காரணத்தால், அவர் அறிவித்த காலகட்டத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே, டிசம்பர் 31 ஆம் தேதிக்குள்ளாக மூன்று இலட்சம் பட்டாக்களை வழங்கிய அரசு, தலைவர் கலைஞர் அவர்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மார்ச் திங்கள் 31 ஆம் தேதிக்குள்ளாக, இன்றுவரை தமிழகத்திலே இந்தத் திட்டத்தின்மூலமாக ஏறத்தாழ 4¼ இலட்சம் பேருக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பதிவுசெய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, இந்தத் திட்டத்திலே, தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி, ஏழைகளுடைய பொற்கால ஆட்சி என்று சொன்னால், அது மிகையாகாது. குறிப்பாக, நீலகிரி மாவட்டத்திலே குடியிருந்து வருகின்ற மலைவாழ் மக்களுக்காக—இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள்; நீலகிரி மாவட்டத்தில்—ஒரு பட்டாகூட வழங்கப்படவில்லை என்று நம்முடைய இடதுசாரி, வலதுசாரி கட்சியைச் சேர்ந்த திரு. சிவபுண்ணியம் அவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே

எடுத்த நடவடிக்கையின் காரணமாக நீலகிரி மாவட்டத்திலே மட்டும் இதுவரை 10 ஆயிரம் குடியுரிமைப் பட்டாக்களுக்குமேல் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் வைத்த வேண்டுகோளை இந்தத் துறை விரைந்து நிறைவேற்றி முடிவுக்குக் கொண்டு வந்திருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்ன அடிப்படையிலே, அரசாங்கம் பட்டாவையும் இலவசமாகக் கொடுத்து, ஏற்கெனவே கட்டப்பட்ட 7 கோடி ரூபாய் பணத்தையும் திரும்பக் கொடுத்திருக்கின்றது கலைஞர் அரசு என்பதை நான் பதிவுசெய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-35

குறிப்பாக, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1970 ஆம் ஆண்டு நாட்டினுடைய முதலமைச்சராக முதன்முறையாகப் பொறுப்பேற்ற காலகட்டத்திலே நில உச்சவரம்புச் சட்டத்திலே, 30 Standard acre என்று இருந்ததை, தர ஏக்கர் என்று இருந்ததை, 15 ஆகக் குறைத்து, மிகப் பெரிய புரட்சிக்கு வித்திட்டார்கள். மிகப் பெரிய நிலச்சுவான்தாரர்களிடத்திலே வேளாண் நிலங்கள் குவிந்து இருந்ததை, அவர்களிடமிருந்து பெற்று ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, 15 தர ஏக்கர் என்ற சட்டத்தைக் கொண்டுவந்து புரட்சி செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதன்மூலமாக அப்போது கிடைத்த உபரி நிலமான 2 இலட்சம் ஏக்கர் நிலத்தைத் தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு இலவசமாகப் பிரித்துக் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, தனியார் நிலச்சுவான்தாரர்களிடத்திலே குடியிருந்துவந்த ஏழையெளிய மக்களுக்குக் குடியுரிமைப் பட்டாக்களை அப்போது வழங்கி, எல்லோருடைய பாராட்டைப் பெற்ற, இன்னும் சொல்லவேண்டுமென்றால், ஒரு துளி மையிலே பல இலட்சம் ஏழைகளுக்கு, தனியார் நிலத்தில் குடியிருந்த ஏழைகளுக்கு 1970 ஆம் ஆண்டே குடியுரிமைப் பட்டாவையும் வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய தாக்கம்தான், என்றென்றைக்கும் அவருடைய இலட்சியப் பாதையிலே, அவருடைய இலட்சிய வேட்கையிலே, ஏழையெளிய மக்களுக்கான பொதுவுடைமைத் தத்துவத்திலே, இன்றும் அவருடைய செயல்



திட்டங்களும், சிந்தனையும், செயலும் இருக்கின்றன என்று சொல்வதைப்போல, அவருடைய சிந்தனையும், செயலும் இன்னும் ஏழையெளிய மக்களுக்கு மிகுந்த பயனை தந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த 2000ஆம் ஆண்டு இந்தியாவிலே மிகச் சிறப்பான திட்டமான விவசாயத் தொழிலாளர்களுக்கான விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். விவசாயத் தொழிலாளர்களும், சிறு, குறு விவசாயிகளும் பயன்பெறுகின்ற வகையிலே அந்தத் திட்டம் அன்றைக்குத் துவக்கப்பட்டது. இடையிலே 4 ஆண்டுக் காலம் அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதையும் இங்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். மீண்டும் ஐந்தாவது முறையாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே, இதே அவையிலே, 2000-இலே கொண்டுவரப்பட்ட இந்த விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டமானது, இனி எதிர்காலத்திலே எந்தச் சூழ்நிலையிலும் முடக்கப்பட்டுவிடக் கூடாது; இதற்குச் சட்ட வடிவம் தரவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு சட்ட வடிவம் தந்து, இதற்காகப் பல விதிமுறைகளை உருவாக்கி, அதற்கான அட்டைகளை அச்சடிக்கின்ற பணிகள் எல்லாம் 2006-இலே பொறுப்பேற்றவுடன், டிசம்பர் மாதம் வரை தொடர்ந்தன. தொடர்ந்து 2007 பிப்ரவரி மாதத்திலேதான் இந்தத் திட்டத்தின்கீழ் தலைவர் கலைஞர் அவர்களால், முழுமையாகத் தமிழகத்திலே இருக்கின்ற ஏறத்தாழ ஒரு இலட்சத்து 70 ஆயிரம் குடும்பங்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சையிலே துவக்கி வைத்தார்கள். இந்தத் திட்டம் 2007, பிப்ரவரியிலே மிக வேகமாகத் துவக்கப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தவுடனே அவர்கள் எங்களுக்கு வழங்கிய அறிவுரை, தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, மாவட்ட ரீதியாக, மண்டலங்கள் ரீதியாக இந்தத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்று எங்களுக்கு அவர்கள் ஆணை வழங்கினார்கள். அவர்களுடைய ஆணையை ஏற்றுக்கொண்ட இந்தத் துறை, தமிழகம் முழுவதும் மதுரை, நெல்லை, திருச்சி, ஈரோடு மற்றும் எல்லா இடங்களிலுமே மண்டலக் கூட்டங்களை மாவட்ட வாரியாக நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, பல திருத்தங்களைக் கொண்டுவந்தோம்.

முற்பகல் 10-40

விபத்து மரணம், இயற்கை மரணம், கல்வி, இவற்றிலே ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த விதிமுறைகளை மாற்றி, அதிலே திருத்தங்கள் கொண்டு வந்து, இந்தப் பணிகளை மிகச் சிறப்பாக இந்தத் துறை நிறைவேற்றி வருகின்றது. இந்த ஓராண்டுக் காலத்திலே மட்டும் விவசாயத் தொழிலாளர்கள், விவசாய சமூகப் பாதுகாப்புத் திட்டத்திலே, 1 கோடியே 66 இலட்சம் பேர்களுக்கு மேலாக உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்ட இந்தத் திட்டத்திலே, இதுவரை 2 இலட்சத்து 45 ஆயிரம் நபர்களுக்கு மேலாக 130 கோடி ரூபாய் அளவிற்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்தத் துறையின்மூலமாக இலவச வேட்டி, சேலை வழங்கப்படுகிறது. வருவாய்த் துறை எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு—இதற்கு முன்னால் ஒவ்வோர் ஆண்டையும் கணக்கிட்டுப் பார்த்தால், 1 கோடி வேட்டி, 1 கோடி சேலைதான் வழங்கப்பட்டிருக்கிறது—தலைவர் கலைஞர் அவர்கள் பொங்கல் திருநாளுக்கு முன்பாக வழங்க வேண்டுமென்று நம்முடைய கைத்தறித் துறைக்கும் வருவாய்த் துறைக்கும் ஆணையிட்டு, கைத்தறித் துறையும் எங்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்னாலே முழுமையாகத் தயார் செய்து கொடுத்த காரணத்தால், பொங்கலுக்கு முன்னால், 2 கோடி என்று இருந்ததை ஏறத்தாழ 3 கோடிக்கு மேல், 1½ கோடி வேட்டி, 1½ கோடி சேலைக்குமேல் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்துணை மக்களுக்குமே, குறிப்பாக ஏழையெளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலே வரலாற்றிலே இல்லாத அளவிற்கு இந்தத் திட்டம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இப்பொழுது வருவாய்த் துறைமூலம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை உள்ளாட்சித் துறையின்மூலமாக வருவாய்த் துறை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றது. ஏறத்தாழ 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு, கிராமங்களிலே இப்பொழுது மிகச் சிறப்பாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்தத் துறையைப் பொறுத்த அளவில் இவ்வளவு செம்மையாகச் செயல்படுவதற்குக் காரணம், கலைஞர் அவர்கள்



ஆட்சிக்கு வந்தவுடனே, எல்லாத் துறைகளிலுமே இருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு, ஏற்கெனவே கடந்தகால ஆட்சியிலே மறுத்துவரப்பட்ட உரிமைகள் அத்துணையும், அவர்களுடைய சம்பளமாக இருந்தாலும், சலுகைகளாக இருந்தாலும், பதவி உயர்வாக இருந்தாலும், அத்துணையும் வழங்கிய அரசு, தலைவர் கலைஞர் அரசு என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாகத்தான் இன்றைக்கு வருவாய்த் துறை ஊழியர்கள் மட்டுமல்லாமல், அத்துணைத் துறை ஊழியர்களும் மிகச் சிறப்பாக, வேகமாகச் செயல்படுகிறார்கள். இந்தத் துறையினுடைய சீரிய நடவடிக்கையால் இப்பொழுது 2,500 கிராம நிருவாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கிராம நிருவாக உதவியாளர்கள் ஏறத்தாழ 2,000 பேருக்குமேல் இதுவரை இந்தத் துறையின்மூலமாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 500, 600-க்கு மேற்பட்ட துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்களாகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து இந்தத் துறை மிகச் சிறப்பாக, செவ்வனே தன்னுடைய பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

தமிழகத்திலே 2007 ஆம் ஆண்டு வெள்ளம் வந்தபோது, பல்வேறு நிலைகளிலே வெள்ள நிவாரணப் பணிகளை வருவாய்த் துறை மிகச் சிறப்பாக நிறைவேற்றி இருக்கின்றது. 2007 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழையாலும், இப்பொழுது எதிர்பாராமல் கோடை காலத்தில் பெய்த மழையாலும், 3 மாதக் காலத்திற்குள்ளே இரண்டு முறை, தமிழகம், மழை வெள்ளத்தைச் சந்தித்து இருக்கிறது. முதல் முறை வடகிழக்குப் பருவ மழையால் தமிழகம் பாதிக்கப்பட்டபொழுது, தலைவர் கலைஞர் அவர்கள் உடனடியாக 200 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மற்றவர்களுக்கும் அனைத்து வெள்ள நிவாரணப் பணிகளையும், நலத் திட்ட உதவிகளையும் வழங்க ஆணையிட்டு, இந்த அரசு முழுமையாக, உடனடியாக வழங்க வேண்டிய நிவாரண உதவிகளை வழங்கியிருக்கின்றது. இப்பொழுது 175 கோடி ரூபாய் ஒதுக்கி நிவாரண உதவிகளை வழங்குவதற்கு வருவாய்த் துறை ஆணையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் அதிலே முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு இருக்கின்றார்கள்.

குறிப்பாக, வெள்ள நிவாரணத்திலேகூட, ஏற்கெனவே ஹெக்டேருக்கு நிவாரணத் தொகை ரூ.4,000 என்று இருந்ததை

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ரூ. 7,500/-ஆக உயர்த்தி இதே அவையிலே அறிவித்திருக்கிறார்கள். அதைவிட மிக முக்கியமான ஒன்று, இதுவரை இருந்த வெள்ள நிவாரண சட்ட விதிமுறைகளை, மத்திய அரசினுடைய இயற்கைப் பேரிடர் துயர் துடைப்பு விதிகளையே மாற்றி, ஒரு விவசாயி எத்தனை ஏக்கர் வைத்திருந்தாலும், வெள்ளத்தால் எத்தனை ஏக்கர் பாதிக்கப்பட்டிருந்தாலும்—ஏற்கெனவே maximum 2 எக்டேர் என்றுதான் இருந்தது; அதேமாதிரி கால்நடைக்குக்கூட ஒரு limit தான் இருந்தது—ஆனால், அந்த உச்ச வரம்பை நீக்கிய அரசு, தலைவர் கலைஞர் அரசு என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் விவசாயிகள் முழுமையான நிவாரணம் பெறுவதற்கு—வெள்ள நிவாரணம் கிடைக்கவில்லை என்று, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டு சொன்னார்களே, அவ்வாறில்லாமல், எவ்வளவுக் கால்நடைகள் இறந்தாலும், எவ்வளவுப் பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும், அத்துணைக்கும் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு—அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

முற்பகல் *10—45*

சுனாமியைப் பொறுத்த அளவில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, நிரந்தரமானத் திட்டங்களுக்கு, மறுவாழ்வுப் பணிகளை முடுக்கிவிட வேண்டும் என்பதற்காக, கட்டமைப்புப் பணிகளை உறுதி செய்வதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்துக் கடலோர 13 மாவட்டங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து இந்தப் பணிகள் உடனடியாக நடக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே உடனடி நிவாரணம்தான் தரப்பட்டதே தவிர, நிரந்தரமான நிவாரணப் பணிகளுக்கான பணிகள் முடுக்கிவிடப்படவில்லை. தமிழகத்திலே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கடந்த ஆட்சிக் காலத்திலே 8,000 வீடுகள்தான் கட்டப்பட்டிருந்தன. அந்த 8,000 வீடுகளுக்குப் பின்னர், இப்போது தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்று இதுவரை 35,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் காரணம் என்னவென்றால், நம்முடைய மாண்புமிகு நிதித் துறை அமைச்சருடைய தலைமையிலே, நம்முடைய



மாண்புமிகு உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள், சுனாமி மறுவாழ்வு மற்றும் நிரந்தரக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காகப் பல்வேறு கூட்டங்களை நடத்த அவர்கள் காட்டிய ஆர்வமும், இந்தப் பணிகளை முடிப்பதற்காக அவர்கள் எடுத்த முடிவுகளாலும்தான் இந்தப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே அவையிலே குறுக்கிட்டுப் பதில் சொல்கின்றபோது, இந்த நிரந்தரக் கட்டமைப்புப் பணிகளுக்காக, இதுவரை 1,709 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது; கடலோர மாவட்டங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு, சுய உதவிக் குழுக்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்களை நம்முடைய உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் நிறைவேற்றியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்தேன்.

மீன் வளத் துறையின்மூலமாக, ஏறத்தாழ 100 சதவீதப் பணிகள்மூலம் அத்துணை நலத் திட்ட உதவிகளையும் மீனவர்களுக்குத் தலைவர் கலைஞர் அரசு வழங்கியிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். சுனாமி நிவாரணப் பணிகளிலே, எந்தத் துறையாக இருந்தாலும், அத்துணைத் துறைகளுமே தங்களுடைய பணிகளை முழுமையாக முடித்திருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறையின்மூலம், உயர்மட்ட பாலங்கள் கட்டுவதிலும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எதிர்பாராத அளவிற்குப் பணிகளிலே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. குறிப்பாக, சுனாமி நிவாரணப் பணிகளிலே ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடலோரத்திலே கட்டடங்கள் கட்டுவதற்கு இருக்கின்ற தடைகளை நீக்கி, மத்திய அரசிடமிருந்து விரைவாக அனுமதி பெற்று, 200 மீட்டருக்குள் நம்முடைய ராஜீவ் காந்தி மறுவாழ்வு சீரமைப்புத் திட்டத்தின்மூலமாக ஏறத்தாழ 22,000 வீடுகளுக்குமேல் கட்டுவதற்கு இப்போது ஆணைகள் வழங்கியிருக்கிற அரசு, தலைவர் கலைஞர் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், 200 மீட்டர் வரை இருக்கின்ற வீடுகள் மட்டுமல்லாமல், ஆயிரம் மீட்டர் வரை இருக்கின்ற வீடுகளையும், அங்கு இருக்கின்ற குடிசைகளையும் மாற்றி நிரந்தரமாக, அவர்களுடைய வீடுகள் எதிர்காலத்திலே பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, 'Prevention is better than cure' என்று

சொல்வார்கள்; அதைப்போல எதிர்காலத்திலே வருகின்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்காக, ஆயிரம் மீட்டர் வரை இருக்கின்ற அந்தக் குடிசைகளை அகற்றிவிட்டு, உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, ஏறத்தாழ 30,000 வீடுகள் கட்டுவதற்கு அதனை நிறைவேற்றித் தருவதற்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆணைகள் வழங்கி, அந்தப் பணியும் தொடங்குகின்ற நிலையிலே இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றுக்கான நிலங்கள் எல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. விதிமுறைகளின்படி அனுமதியும் பெறப்பட்டுவிட்டன. வீடு கட்டுகின்ற பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன. எனவே, விரைவிலே அந்த 55,000 வீடுகளும் நிச்சயமாகக் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும், நம்முடைய வருவாய்த் துறையின்மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகின்ற அனைத்து சமூக நலத் திட்டங்களையும் முடுக்கிவிட்டு, இப்போது பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், தமிழகத்திலே செய்திருக்கின்ற தொழிற் புரட்சியைப்பற்றி நான் விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்திருக்கின்றார்கள். குறிப்பாக, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், இங்கே குடிசை மாற்று வாரியத்தைப்பற்றி நம்முடைய அமைச்சர் அண்ணன் அவர்கள் விரிவாக விளக்கியிருக்கிறார்கள், இந்த அரசு பொறுப்பேற்றபோது, இந்த வாரியம் கடன் சுமையில் இருந்தது. கடன் சுமையிலிருந்த இந்த வாரியம், கடந்த இரண்டு ஆண்டுகளில் தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்று, ஏறத்தாழ 2006-2007, 2007-2008-லே மட்டும் ஈட்டிய தொகை ரூ.778 கோடி என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

இந்த வீட்டு வசதி வாரியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு காலத்திலே, 1961 ஆம் ஆண்டுக்கு முன்னால், சாதாரண, நடுத்தர மக்கள், ஏழையெளிய மக்கள், இவர்களுக்குக் குறைந்த விலையிலே வீடுகளை அரசே கட்டிக் கொடுப்பதற்காக City Improvement Trust என்று ஆரம்பிக்கப்பட்டது.



முதலில் இதை வீட்டு வசதிச் சங்கங்கள் செய்து வந்தன. பின்னர், சாதாரண மக்கள், பொருளாதாரத்திலே நலிவுற்ற மக்கள், நடுத்தர மக்கள், உயர் வருவாய்ப் பிரிவினர், இவர்களுக்குக் குறைந்த விலையிலே வீடுகள் கட்டித் தரும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதுதான் நம்முடைய வீட்டு வசதி வாரியம். ஆனால், கடந்த முறை, 2001-2006-இல் ஆட்சியிலே இருந்தவர்கள், ஒரு வீடுகூட கட்டவில்லை. அதுவும் கொள்கை விளக்கக் குறிப்பிலே, "வீடுகளே கட்டுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறது" என்று இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்து, வரலாறு படைத்ததும் அந்த ஆட்சியாளர்கள்தான். எந்த நோக்கத்திற்காக வீட்டு வசதி வாரியம் உருவாக்கப்பட்டதோ, அதை 5 வருடங்கள் முடக்கிவிட்டார்கள். இங்கே பேசியபோது அவர்கள் சொன்னார்கள்; "நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, 900 கோடி ரூபாய் நஷ்டத்திலே இருந்தது; நாங்கள் வீடு கட்டுவதை நிறுத்திவிட்டு, அதை அறிவித்துவிட்டு, விற்பனையை நாங்கள் முழுக் கொள்கையாகக் கொண்டு விற்று, அதிலே 700 கோடி ரூபாய் கடனை அடைத்தோம்; 200 கோடி ரூபாய் மிச்சம் இருந்தது" என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் அதுபோல அல்ல; இப்போது தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்றவுடனே, எங்கள் தலைவரைப் பொறுத்தவரையில், அரசுக்கு எவ்வளவு சுமைகள் வந்தாலும், அந்தச் சுமைகளையெல்லாம் ஏதோ ஒருவழியிலே தாங்கிக்கொண்டு, ஏழையெளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற உயர்ந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற ஆட்சிதான், தலைவர் கலைஞருடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தவகையிலேதான், 2006-2007 ஆம் ஆண்டிலே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, கடன் 230 கோடி ரூபாய் இருந்தாலும் கவலைப்படவில்லை. அந்தக் கடனுக்குக் காரணம் என்ன என்பதை நான் ஏற்கெனவே இந்த அவையிலே சுட்டிக்காட்டியிருக்கின்றேன். விற்பனையாகாத இடத்திலெல்லாம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட காரணத்தால்தான், அந்த வீடுகள் விற்பனையாகவில்லை என்று சொன்னபோது, "பட்டியல் கொடுங்கள்" என்று சொன்னார்கள். இப்போது அவர்கள் அவையில் இல்லை; இருந்திருந்தால், பட்டியலைத் தெரிவித்திருக்கலாம். பட்டியலில் வேறொன்றுமில்லை; திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செங்கத்திலே கட்டடம் கட்டினார்கள்; அந்த இடம் கட்டடம் கட்டக்கூடாத இடம். அதேபோன்று பார்த்தீர்களென்றால், கோவை, உடுமலைப்பேட்டையிலே எங்கேயோ போய்க் கட்டி வைத்துவிட்டார்கள்; இன்னும் ஒரு வீடுகூட விற்பனையாகவில்லை.

இன்னும் பார்த்தீர்களென்றால், மதுரையிலே கூடல்புதூர், ஆனைபுதூர் இப்படிப் பல இடங்களில் அப்படியிருக்கின்றன. குறிப்பாகப் பார்த்தீர்களென்றால், ஏற்காட்டிலே உள்ள 'பகோடா பாயிண்ட்' என்று எங்கேயோ ஒரு இடத்தில் கட்டி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்; அவையும் விற்பனையாகவில்லை. (குறுக்கீடு) அமைச்சர்கூட சிரிக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்லப்போனால், இதுபோன்று பல இடங்களிலே வீடுகளைக் கட்டிவிட்டார்கள். நம்முடைய தருமபுரியிலே விருப்பாச்சிபுரம் என்ற இடத்தில் கட்டினார்கள்; இப்படி தமிழகத்திலே பல இடங்களிலே வீடுகளைக் கட்டி வைத்த காரணத்தால், அவை விற்பனையாகவில்லை. அப்படி விற்பனையாகவில்லையென்றாலும், நம்முடைய மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்தினுடைய அமைச்சர் அவர்கள் ஆங்காங்கே முகாமிட்டு, கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, தமிழகத்திலே, குறிப்பாக இந்தத் துறையின்மூலமாக விற்கப்பட்டு, அதன்மூலம் வந்த வருவாய் மட்டும் ஏறத்தாழ 778 கோடி ரூபாய் என்று சொன்னேன். 230 கோடி ரூபாய் அளவிற்குக் கடனையும் அடைத்து, இப்போது வருவாய் 778 கோடி ரூபாய் ஈட்டியதில், இந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய ஏறத்தாழ 2,400 ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டத்திற்காக, 230 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்ற ஆட்சி தலைவர் கலைஞருடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஊழியர்களுக்கு ஒதுக்குகிறோம்; எவ்வளவுப் பெருந்தன்மை பாருங்கள். ஓய்வூதியத்திற்காக 230 கோடி ரூபாயை இப்போது தலைவர் கலைஞர் ஆட்சி ஒதுக்கியிருக்கின்றது. அதையும் ஒதுக்கி, இப்போது ரூ.150 கோடிக்கு வைப்பு நிதியை வைத்திருக்கின்ற ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, வீட்டுமனைப் பத்திரங்கள் எல்லாம் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். 2006-2007 ஆம் ஆண்டிலே மட்டும், ஏறத்தாழ 43,000 பேர்களுக்குப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இருந்த ஆட்சிக் காலத்திலே விற்கப்படாமல் இருந்த மனைகள், அடுக்குமாடிக் கட்டடங்கள், தனி வீடுகள், இப்படி ஏறத்தாழ 26,000 எண்ணிக்கை அளவிற்கு இருந்தன. நம்முடைய ஆட்சி வந்தவுடனே, 2006-2007, 2007-2008 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட விரைவான நடவடிக்கையின் காரணமாக, இதுவரை 16,000 அடுக்குமாடி வீடுகள், மனைகள், தனி வீடுகள் விற்கப்பட்டு,



இன்னும் விற்பனையாகாமல் 11,000 வீடுகள்தான் இருக்கின்றன. இன்னும் 6 மாதங்களில் இந்தத் துறை கண்டிப்பாக அவற்றை விற்றுவிடும். ஆக, unsold stocks இவ்வளவு தூரம் விற்றதற்குக் காரணம், உங்களுக்கே தெரியும்; வீட்டு வசதி வாரியத்திலே விற்காமல் வீடுகள் இருந்ததென்றால், திரும்பவும் குலுக்கல் முறையிலேதான் போடவேண்டும். ஆனால், நம்முடைய தலைவர் கலைஞர் அரசு என்ன சொன்னதென்றால், யார் முன்வந்தாலும், first come, first served basis-ல், யார் முன்வந்தாலும் அவர்களுக்கு உடனே வீட்டை வழங்குவதற்குரிய ஆணையை தலைவர் கலைஞர் அரசு வழங்கியதுதான் இப்போது இவ்வளவு பெரிய புரட்சி ஏற்பட்டதற்கு ஒரே காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 778 கோடி ரூபாய் வருவாய் வந்ததற்குக் காரணமே, first come, first served basis என்று செய்ததனால்தான். இப்போது யார் முன்வந்தாலும் உடனே அவர்களுக்கு விற்பனை செய்து, அவர்களுக்குப் பத்திரம் வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம்முடைய துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கு ஆணையிட்ட காரணத்தால்தான் இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற முடிந்திருக்கிறது.

முற்பகல் 10-55

குறிப்பாக, இந்த வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவில், தக்கைக் கல் தொழிற்சாலையைப் போன வருடம் அறிவித்தீர்களே, கூட்டு முயற்சித் திட்டத்திலே துவக்கப்போகிறோம் என்று சொன்னீர்களே என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட மிகச் சிறந்த தொழிற்சாலை தக்கைக் கல் தொழிற்சாலை. உங்களுக்குத் தெரியும், சிமெண்ட்மூலமாக செங்கல் தயாரிப்பது. கடந்த ஆட்சிக் காலத்திலே, 2005 ஆம் ஆண்டு இதை விற்பதற்கு அந்த அரசு முடிவு செய்துவிட்டது. தனியாருக்கு விற்பனை செய்வதற்காக, அரசால் துவக்கப்பட்ட நிறுவனத்தை விற்பதற்கு அவர்கள் முடிவு செய்தார்கள். மீண்டும் தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடனே, அது சிறந்த தொழிற்சாலை; மீண்டும் கூட்டு முயற்சித் திட்டத்தின்மூலமாக துவக்கப்படும் எனச் சொன்னதற்கிணங்க இந்த ஆண்டு கண்டிப்பாக அதை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, இந்தத் துறையைப் பொறுத்த அளவில், இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையைப்பற்றி இங்கே சொன்னார்கள். அ.தி.மு.க.வினுடைய மாண்புமிகு உறுப்பினர், அவர் இந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சர், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதெல்லாம் காகித அளவிலே இருக்கின்றன; ஒன்றுமே நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார். ஏறத்தாழ 57 அறிவிப்புகள் அறிவித்திருக்கிறார்கள். அதில் 23 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. 23 அறிவிப்புகள் முழுவதுமாக, 100 சதவிகிதம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஒன்றுமே நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். ஓசூரிலே இரண்டு திட்டங்களில் கட்டடங்கள் கட்டுகின்ற பணிகள் பாதி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 34 பணிகள் துவங்குகின்ற நிலையிலே இருக்கின்றன. அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவாகச் சுட்டிக்காட்டிட விரும்புகின்றேன்.

குறிப்பாக, இந்தத் துறையைப் பொறுத்த அளவில், விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படவேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை. 50,000 வரைவு விற்பனைப் பத்திரங்கள் அறிவிக்கப்பட்டு, அவற்றை வழங்குவதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக, இந்த ஆண்டு நம்முடைய வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவில் அதனுடைய சுயநிதியிலிருந்து, 22,000 வீடுகள் சுமார் 2,000 கோடி ரூபாய் செலவிலே இந்த ஆண்டு கட்டுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டுமென்றால், வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவில் நம்முடைய கண்ணுக்குத் தெரிவதெல்லாம் பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் குடியிருப்பு. பட்டினப்பாக்கம் அரசுக் குடியிருப்பை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டுவதற்குரிய நடவடிக்கையை எடுப்போம் என்று கடந்த முறை அறிவிப்பில் கூறியிருக்கின்றீர்களே, அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள் என்று கேட்டார்கள். இந்தத் துறை எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்பது பட்டினப்பாக்கத்திலே குடியிருக்கின்றவர்களுக்கு மாற்று இடம் கொடுத்துவிட்டு, அந்த வீடுகளை முழுவதுமாக இடித்துவிட்டு 25 ஏக்கர் கொண்ட



பட்டினப்பாக்கத்தில் புதிய நகரியம் ஒன்றை உருவாக்குவதற்கு வீட்டு வசதி வாரியம் முடிவு செய்திருக்கிறது. அந்த அடிப்படையிலே, பட்டினப்பாக்கத்திலே குடியிருந்து வருகின்றவர்கள் வேறு இடத்திலே குடியேறுவதற்குரிய உதவிகளை வீட்டு ்சதி வாரியத்தின்மூலமாகவே அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து, அந்தப் பணிகளை முடிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

குறிப்பாக வீட்டு வசதிச் சங்கம். வீட்டு வசதிச் சங்கம் குறித்து ஏற்கெனவே நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே தலைவர் கலைஞர் அவர்கள் மிகப் பெரிய ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். முன்பெல்லாம் கூட்டு வட்டி இருந்தது. அதாவது அசல் எப்போதுமே தள்ளுபடி செய்யப்பட்டதில்லை. கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களானாலும் சரி, பிரதம கூட்டுறவுக் கடன் சங்கங்களானாலும் சரி, அவை கிராமங்களிலும், நகரங்களிலும் 1,000 சங்கங்களுக்கு மேல் இருக்கின்றன. அந்த 1,000 வீட்டு வசதிச் சங்கங்களிலே வாங்கிய கடனுக்காக, அதற்கான அபராத வட்டி, அதிகபட்சம் வட்டித் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள், எப்பொழுதும் இல்லாத அளவுக்குப் பொருளாதாரத்திலே நலிவுற்றிருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, குக்கிராமங்களிலே வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு, அவர்கள் வாங்கிய கடன் தொகை 25,000 ரூபாயையும் அதனோடுகூடிய வட்டி, அபராத வட்டி, அனைத்தையும் தள்ளுபடி செய்திருக்கின்ற ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலமாக ரூ.25,000-லிருந்து ரூ.1,00,000 வரை அவர்களுக்கு அபராத வட்டி முழுமையாகத் தள்ளுபடியும், வட்டியிலே 50 சதவிகிதம் தள்ளுபடியும், ஒரு இலட்ச ரூபாயிலிருந்து இரண்டு இலட்ச ரூபாய் வரை அபராத வட்டி முழுமையாகத் தள்ளுபடியும், வட்டியிலே 25 சதவிகிதம் தள்ளுபடியும்; இரண்டு இலட்ச ரூபாயிலிருந்து ஏழு இலட்ச ரூபாய் வரை அபராத வட்டி முழுமையாகத் தள்ளுபடியும், வட்டியிலே 10 சதவிகித தள்ளுபடியுமாக தலைவர் கலைஞர் அரசு அறிவித்திருக்கிறது. இதனால் பயனடையக்கூடியவர்கள் ஏறத்தாழ ஐந்தே முக்கால் இலட்சம் பேர் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிப்பதிலே மிகவும் பெருமைப்படுகின்றேன்.

முற்பகல் 11-00

ஆக, இந்தத் துறைபற்றி இங்கே பல்வேறு கருத்துகளை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நம்முடைய வீட்டு வசதிக் கடன் சங்கங்களிலே கடனை முழுமையாகச் செலுத்தியும் இன்னும் பத்திரம் கிடைக்கவில்லை என்றும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது உண்மைதான். பல உறுப்பினர்களுக்கு, முழுமையாகக் கடனைக் கட்டியவர்களுக்கு, அவர்களுக்குரிய பத்திரம் வழங்கப்படவில்லை என்பது உண்மைதான். அதற்கு இந்த அரசு, தலைவர் கலைஞர் அரசு இனிமேல் வீட்டு வசதி இணையத்திலே ஒவ்வொருவருக்கும் தனிக் கணக்கு ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையை வருகின்ற காலங்களிலே இந்த அரசு நிறைவேற்றும். அதேசமயத்திலே, ஏற்கெனவே கட்டியிருக்கின்ற, பணம் முழுமையும் கட்டியிருக்கின்ற உறுப்பினர்களுக்குப் பத்திரம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

குறிப்பாக, நம்முடைய வீட்டு வசதிச் சங்கங்களில் பல ஆண்டுக்காலமாக கடனைத் திரும்பக் கட்டுவதன்மூலம்தான் பணிபுரிகின்றவர்கள், சம்பளத்தை எடுத்துக்கொண்டார்கள். உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) கடனைத் திரும்ப வாங்கி சம்பளத்தை எடுத்துக்கொண்டார்கள். ஒரு சதவிகிதம் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அவர்கள் 10 சதவிகிதத்திற்கு வாங்கி 11 சதவிகிதத்திற்குக் கொடுக்கிறார்கள். அந்த ஒரு விழுக்காட்டிலே சம்பளம் எடுத்துக்கொள்ள வேண்டும்; நிருவாகம் பண்ண வேண்டும். இதில் கூட்டுறவுத் துறைக்கும் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்குமே வேறுபாடு இருக்கிறது. இரண்டையும் நான் விசாரித்துப் பார்த்ததிலே கூட்டுறவுச் சங்கங்களிலே 3 சதவிகிதம் வரைக்கும் வருகிறது. இங்கே வருகின்ற ஒரு சதவிகிதத்திலே சம்பளம், அதனுடைய நிருவாகம் இதையெல்லாம் அவர்கள் மேற்கொள்வது என்பது இயலாத நிலை என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. இனி வருகின்ற காலங்களிலே இந்த வீட்டு வசதிச் சங்கங்கள் புதுப் பொலிவுடன் திகழ்வதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்தச் சலுகைகள், சங்கங்கள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, அதில் இருக்கின்ற குறைகளை எல்லாம் களைந்து எதிர்காலத்திலே வீட்டு



வசதிச் சங்கங்களும் மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்கு அரசு உதவியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

குறிப்பாக, நம்முடைய சிறைத் துறையைப் பொறுத்த அளவில், இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். சிறைத் துறையிலே இருக்கின்ற கோரிக்கைகள்பற்றி, ஏற்கெனவே நான் இந்த அவையிலே பதிலுரைத்திருக்கின்றேன். 79 கோரிக்கைகள் வந்திருக்கின்றன. உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு வழக்கறிஞர் சிறைச்சாலைகளுக்குச் சென்று அவற்றை நிறைவேற்ற வேண்டும். அதிலே 55 நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மற்றவற்றை நிறைவேற்ற தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக, முழுமையாக நடவடிக்கை எடுத்து வருகிற தலைவர் கலைஞர் அவர்கள், கடந்த இரண்டாண்டுக் காலத்திலே சிறைத் துறை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, காலையிலே சிறையில் உள்ள 18,000 கைதிகளுக்குத் தேநீர் வழங்கிய ஆட்சி கலைஞர் ஆட்சி என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். கோழிக் கறி வழங்கிய ஆட்சியும் கலைஞர் ஆட்சிதான். சிறையிலே இருக்கின்ற சிறைக் கைதிகளுக்கு எல்லாம் மின் விசிறி வசதி செய்து கொடுத்த ஆட்சியும் கலைஞர் ஆட்சிதான். ஒன்றே ஒன்றை இப்போது நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே 2006-லே தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே சிறையிலே வாடுகின்ற ஆயுள் தண்டனைக் கைதிகள், அண்ணா பிறந்த தினத்தை முன்னிட்டு, 10 ஆண்டுகள் சிறையிலே இருந்த 422 பேரையும், அதற்கு அடுத்த 2007-2008 ஆம் ஆண்டிலே, 10 ஆண்டுகள் சிறையிலே இருந்த ஏறத்தாழ 190 பேரையும் விடுதலை செய்ததோடு, அதேபோல சிறைச்சாலையில் இருந்து விடுமுறையிலே சென்றவர்கள், விடுமுறை வாங்கிச் சென்றவர்கள், ஒரு நாளோ, அரை நாளோ வராமல் இருந்துவிட்டாலோ over stay ஆகிவிட்டால், சிறைக்குத் திரும்பாமல் இருந்துவிட்டால், ஏதோ ஒரு காரணத்தினால் வர முடியாமல் போய்விட்டது என்றால், இந்திய குற்றப் பிரிவுச் சட்டம் 224-ன்படி அவர்களுக்கு இரண்டாண்டுகள் தண்டனை விதிக்க வேண்டும்; அந்த இரண்டாண்டுகள் தண்டனையை விதிக்காமல் பெருமனதோடு 27 கைதிகளை விடுவித்த ஆட்சி தலைவர் கலைஞர் ஆட்சி என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, இங்கே அனைவரும் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே, அருகில் இருக்கின்ற ஆந்திராவிலும் சரி, உத்தரப் பிரதேச மாநிலத்திலும் சரி, ஏதோ

ஓராண்டு, ஏழாண்டில் ஏற்கெனவே தண்டனை பெற்றிருக்கிற ஆயுள் தண்டனைக் கைதிகள் pre-mature release-ஆக விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு, அதனைக் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்வேன் என்ற உறுதியை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் *11-05*

சிறைச்சாலைகளிலே பணியாற்றுகின்ற சிறைக் காவலர்களுக்கு, காவல் துறையிலே பணியாற்றுகின்ற காவலர்களுக்கு இணையான சம்பளமும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் கொடுத்தார்கள். *30* ரூபாய் என்றிருந்ததை *100* ரூபாயாக சலவைப்படியையும் உயர்த்திக் கொடுத்தார்கள். கடந்த *2007-2008* ஆம் ஆண்டு, overtime work பண்ணியதற்கும் படி கொடுத்த ஆட்சி, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிதான் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சம்பள வித்தியாசத்தை நிறைவேற்றித் தருவதற்கு, சிறைக் காவலர்களுடைய நிலையையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த வேறுபாடுகளைக் களைவதற்குரிய நடவடிக்கைகளையும் நான் மேற்கொள்வேன் என்ற உறுதியினை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், மதுரையில் உள்ள எல்லீஸ் நகர் குடியிருப்பு ஒன்று. இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகன் அவர்களும் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே இதற்கு முன்பிருந்த அரசு ரூ.3½ இலட்சத்திற்குக் கொடுக்கலாம் என்று முடிவு செய்தது. அப்படி முடிவு செய்தபோது, *2004* ஆம் ஆண்டிலேயிருந்து வட்டி வேண்டுமென்று வாரியம் கேட்டது. இவர்கள் இரண்டு வருடங்கள் குறைத்துக் கொடுக்கிறோம் என்று கேட்டார்கள். ஒரு வருடம், இரண்டு வருடங்களுக்குக் குறைத்துக் கொடுக்கிறோம் என்று கேட்டார்கள். எனவே, எல்லீஸ் நகரைப் பொறுத்தவரையில், வட்டி விகிதத்தை நிர்ணயம் செய்வதிலேதான் பிரச்சினையிருக்கிறது. ஆகவே,



வாரியம் நிச்சயமாக இந்தப் பிரச்சினையைக் குறித்து நேரடியாகப் பேசித் தீர்த்துத் தரும் என்பதை நான் இந்த நேரத்திலே உறுதிபடத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, திண்டுக்கல் ஆர்.எம். காலனியிலே இருக்கின்ற பிரச்சினை. அது வேறுபட்ட பிரச்சினை. அந்தப் பிரச்சினை குறித்தும் விரிவாகப் பேசியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவருடைய கோரிக்கை குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்து பேசி முடிவெடுக்கப்படும். ஒவ்வொரு பிரச்சினையும் இடத்திற்குத் தகுந்தாற்போல் தனித்தனியாக இருக்கிறது. திண்டுக்கல்லிலே உள்ள ஆர்.எம். காலனி பிரச்சினை குறித்து, நம்முடைய தோழர் பாலபாரதி அவர்களுடைய கோரிக்கையை விரைந்து பேசி, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள், குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்கள் பேசுகின்றபோது, சில கருத்துகளைச் சொன்னார்கள். வீரகேரளம்புதூரிலே, முழுவதும் தென்னந்தோப்பாக இருக்கின்றது; கட்டடங்களாக இருக்கின்றன; அவற்றிற்கு 4(i) Notification கொடுத்துவிட்டு, இந்தத் துறை அங்கேயிருக்கின்ற பதிவாளர் அலுவலகத்திற்கே தெரிவிக்கவில்லை என்றும், துறையின்மூலமாக எடுக்கப்பட்ட acquisition proceedings, நிலம் ஆர்ஜிதம் செய்த நடவடிக்கைகளைப் பதிவுத் துறைக்கே தெரிவிக்கவில்லை; கையகப்படுத்தியதைத் தெரிவிக்கவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அதை முழுமையாக விசாரித்துக்கொண்டிருக்கின்றேன். அதை முழுமையாக விசாரித்துவிட்டு, நேரடியாக அந்த இடத்தையும் பார்வையிட்ட பின்பு, என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசிய பின்பு, இந்த அரசு முடிவு செய்யும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, பட்டா கொடுப்பதைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். பல ஆண்டுக் காலமாகக் குடியிருந்து வருகிறார்கள்; அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று, மருதமலை உள்ளிட்ட பல இடங்களைச் சொல்லியிருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, பட்டா கொடுப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, U.L.C.—நில உச்சவரம்புச் சட்டம்—பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். Urban Land Ceiling-லே, நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்திலே எடுக்கப்பட்ட நிலங்களுக்கு ஏற்கெனவே நீக்கறவுச் சட்டம் 1999 ஆம் ஆண்டிலே வந்துவிட்டது. கடந்த ஆட்சிக் காலத்திலே அதை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டார்கள். இப்பொழுது கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்த பின்புதான் நீக்கறவுச் சட்டத்தை ஏறத்தாழ பாதி நிறைவேற்றியிருக்கிறோம். பாதி நிறைவேற்றியிருக்கிறோம் என்றால், ஏற்கெனவே நீதிமன்றங்களுக்குச் சென்று, தீர்ப்பு பெற்றவர்களுக்கெல்லாம் முழுமையாக அதிலிருந்து விடுவிப்பு கொடுத்தாகிவிட்டது. ஆனால் அதேசமயத்திலே, இது நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்திலே வந்தது என்று தெரியாமல், சாதாரண அப்பாவி மக்கள், நடுத்தர மக்கள் வாங்கி, வீடுகளைக் கட்டி, 25 வருடங்கள், 30 வருடங்கள் ஆகிவிட்டன. அதைப்பற்றித்தான் அவர்கள் சொன்னார்கள். அதில் 1½ கிரவுண்டிலேயிருந்து இந்தத் துறை விலை நிர்ணயம் செய்திருக்கிறது. ஒரு அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். நான் அதை நேற்று படித்துப் பார்த்தேன். 1½ கிரவுண்டிற்கு மேலே இருப்பதற்குதான் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால், தமிழகம் முழுவதிலுமிருந்து 6 ஆயிரம் மனுக்கள் வந்திருக்கின்றன. இதிலே 1½ கிரவுண்டிற்கு மேலேயிருக்கக்கூடிய நிலங்களுக்கும், குறைவாக இருக்கின்ற நிலங்களுக்கும், 1½ கிரவுண்டிற்கு எவ்வளவு பணம் நிர்ணயம் செய்திருக்கிறதோ, அதை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ½ கிரவுண்டு இருந்தாலும், ¾ கிரவுண்டு இருந்தாலும், ஒரு கிரவுண்டு இருந்தாலும், 1½ கிரவுண்டிற்கு அரசு எவ்வளவு நிர்ணயம் செய்திருக்கிறதோ, அந்த விலையையே கொடுக்க வேண்டுமென்று விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள், கோவையிலே உள்ள சிங்காநல்லூரிலும், திருப்பூரிலும் இதுபோன்ற நிலை இருக்கிறது என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே வருகிறார்கள். ஆனால், குறிப்பாக எவ்வளவு நிலம் இருக்கிறதோ, proportionate-ஆக, அந்த நிலத்தினுடைய அளவிற்குத் தகுந்தாற்போல, ½ கிரவுண்டு இருந்தாலும், ¾ கிரவுண்டு இருந்தாலும், ஒரு கிரவுண்டு இருந்தாலும், அதற்குத் தகுந்தாற்போல், இந்த நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்திலே எடுக்கப்பட்ட அந்தப் பணியையும் நாங்கள் நிறைவேற்றித் தருவோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடித்துவிட்டேன்.



நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். சிறைச்சாலை வேண்டுமென்றுகூட நம்முடைய உறுப்பினர் திரு. செல்வப் பெருந்தகை அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அதை அறிவிக்க முடியாது. ஏனென்றால், தூரமாக இருக்கிறதென்று நீங்கள் சொல்கிறீர்கள். அதுபற்றி பின்னர் பேசி, தேவைப்பட்டால், அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

ஏற்கெனவே விரிவாக பதில் சொல்லியிருக்கிறேன். சிறைச்சாலைகளில் 20,000 பேருக்கு இடம் இருக்கிறது. 18,000 பேர்தான் இருக்கிறார்கள் என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், புதிய சிறைச்சாலை கட்ட வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதனால், அதுபற்றி, அரசு முடிவெடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, அறிவிப்புக்கு முன்னால் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். வாழ்க்கை வளமாவதும், களமாவதும் அவரவர் கைகளில்தான் இருக்கின்றது என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். முதல்வர் அவர்களே, நீங்கள் கண்ட பதித்த சுவடுகளைப் பார்க்கிறபோது வளங்களைவிட, நீங்கள் கண்ட களங்களே அதிகம். களங்களும், கடுங்காவல் சிறைகளும், உங்கள் உழைப்பும், சிந்தனைச் சுடர்களும்தான் தமிழகத்தைப் பசுமை கொழிக்கும் பூமியாக மாற்றியிருக்கிறது. மெழுகுத் திரியாய் உங்களை உருக்கிக்கொண்டு ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணுகின்ற தலைவர் நீங்கள்.

குறிப்பாக, ஒன்றைச் சொல்லி விடைபெற எண்ணுகின்றேன். இக்பால் அவர்கள் கவிஞர் "நீ யாருடைய கடவுள்?" என்று கேட்பார்கள்; "ஆமாம்! நீ யாருடைய தலைவர்?" என்று கேட்பார்கள். பல்லக்குச் சுமந்த வர்க்கத்திற்குப் பரிவட்டம் கட்டிய தலைவன் நீ. விரல் உதிர்ந்த தொழுநோயாளிகளின் விரல்கள் ஆனவன். விழியிழந்த ஏழைகளின் வெளிச்சமானவன். ஊனமுற்றோர் மறுவாழ்வே, உன் வாழ்வு. கருணை இல்லம், திறந்த உள்ளம். உன் புன்னகையின் பொருள் அதிகாரம்தான் என்னவென்று கேட்டால், ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பதுதானே என்று நீ சொல்வாய்.

நேற்றுகூட உச்ச நீதிமன்றம் உன்னை வழிமொழிந்திருக்கிறது. வருணமா, மரணமா எனக் கேட்ட உன் போர்க்குரலே இன்றுவரை தமிழகத்தின் உயிர்த் துடிப்பாய் இருக்கிறது. உன் தினங்கள் தியாகமாய் விடிகின்றன. உன் பாதைகள் தொண்டாய் விரிகின்றன" என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே இன்னும் சில உறுப்பினர்கள் நில உச்சவரம்புச் சட்டத்திலே 37 (b)-ஐப்பற்றிக் கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள். அதுசம்பந்தமாக வெகு விரைவிலே சட்டத் திருத்தம் இந்த அவையிலே வரவிருக்கின்றது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, வருவாய்த் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் சிறைத் துறை தொடர்பான அறிவிப்புகளுக்கு நேரம் இல்லாத காரணத்தால் அறிவிப்புகளைப் படித்ததாகக் கருதி@ சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்யுமாறு நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் நான் முழுமையாகப் படித்துப் பார்த்திருக்கிறேன். 1,100 வெட்டுத் தீர்மானங்கள் - வருவாய்த் துறையிலே 618, சிறைத் துறையிலே 279, வீட்டு வசதித் துறையிலே 203. ஆக, 1,100 வெட்டுத் தீர்மானங்கள் தரப்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் நான் ஏற்கெனவே படித்து கவனத்திலே கொண்டிருக்கின்றேன். நீங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாக எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பதிலளித்து அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@523 முதல் 533 வரையிலான பக்கங்களில் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.



எங்கள் மாவட்டத்திலே பெருத்த வெள்ளம் ஏற்பட்டு நிறைய வீடுகள் விழுந்துவிட்டன. வீடுகள் விழுந்தபோது, அதற்கு ஈட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று வருவாய்த் துறையிடம் கேட்டபோது, முதலில் கூரை வீடுகளுக்கு மட்டும்தான் என்று சொன்னார்கள். பிறகு, ஓட்டு வீடாக இருந்தால் அது ஒரு பத்தி வீடுதான், அதாவது ஒரே enclosure; அதிலே குறுக்காக சமையல் அறைக்காக ஒரு மண் சுவர் வைத்திருந்தால்கூட அதை எங்கள் பகுதியிலே இரண்டு பத்தி வீடு என்று சொல்வார்கள். ஒரு ஓட்டுக் கூரைக்குள்ளே, குறுக்கே ஒரு சுவர் வைத்திருந்தால்கூட அதை இரண்டு பத்தி வீடாகக் கருதி, அதற்கு ஈட்டுத் தொகை இல்லையென்று சொல்கிறார்கள். கிராமங்களிலே 50 வருடம், 60 வருடங்களுக்கு முன்னால் மண் ஓடு போட்டு அதை எங்கள் பகுதியிலே நாழி ஓடு என்று சொல்வார்கள், அப்படிப்பட்ட வீடுகளில் வாழ்கின்றவர்கள் இன்று வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழே வாழ்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் ஏதோ ஓட்டு வீட்டிலே வாழ்கிறார்கள் என்று கருதிக் கொண்டு, வெள்ளம், மழையினால் அந்த வீடுகள் விழுகின்றபோது, அவர்களுக்கு அரசாங்கம் தருகின்ற கருணைத் தொகை மறுக்கப்படுகிறது. எனவே, அப்படிப்பட்ட வீடுகளுக்கும், ஓட்டு வீடுகளாக இருந்தால், குறுக்கே ஒரு சுவர் இருந்தால்கூட அவர்களுக்குக் கருணைத் தொகை வழங்கப்படும் என்கிற அந்த அறிவிப்பையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதேநேரத்திலே, கோவை சிறைச்சாலையிலே நம்முடைய அண்ணா பிறந்த நாள் மற்றும் அரசாங்கம் சொல்கின்ற முக்கியமான நாட்களிலே, ஏற்கெனவே சிறைச்சாலைகளிலே இருக்கின்ற கைதிகளுக்கு, கருணையோடு அவர்களுடைய தண்டனைக் காலத்தைக் குறைத்து, நன்னடத்தைக்காக வெளியே விடுகின்ற அந்தப் பாங்கை நம்முடைய அரசு பின்பற்றி வருகிறது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, கோவை மத்திய சிறைச்சாலையிலே இருக்கின்ற, அதிலும் குறிப்பாக, சிறுபான்மை இஸ்லாமியக் கைதிகளுக்கு தகுதியிருந்தும்கூட, அத்தகைய கருணை வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை எனக்குப் புகாராக தந்திருக்கிறார்கள். அது உண்மையாக இருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுகுறித்துப் பரிசீலிக்க முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) ஒட்டுமொத்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிவிடட்டுமா? (குறுக்கீடு) சரி, அப்படியானால், திரு. தி. வேல்முருகன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் மழை வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்டபோதும், தற்போது மழை வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்ட போதும், என்னுடைய பண்ருட்டி தொகுதியில் நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள் எந்தவிதக் கணக்கு விவரங்களையும் எடுத்து, ஒரே ஒரு செண்ட்டுக்குக்கூட நிவாரணம் வழங்குவதற்கு முன்வரவில்லை. குறிப்பாக, பண்ருட்டி தொகுதியில் முந்திரி விவசாயத்தையே முழுவதுமாக நம்பி வாழுகின்ற விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் சொன்னேன்; மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொன்னேன்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொன்னேன்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொன்னேன். நிச்சயமாக நாங்கள் இதுகுறித்துக் கலந்துபேசி நிவாரணம் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையில் அந்த நிதி அங்கே வழங்கப்படவில்லை.

மற்றொன்று, மாண்புமிகு சிறைத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஓர் வேண்டுகோள். கேரளா, கர்நாடகா, மற்றும் ஆந்திரா போன்ற பல்வேறு மாநிலங்களின் சிறையில் வாடுகின்ற கைதிகளை, மாண்புமிகு அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதுபோன்று சீக்கிரமே அவர்களை விடுதலை செய்கின்றார்கள். 7 ஆண்டுகளில் எல்லாம் விடுதலை செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன், சிறைத் துறை அமைச்சர் அவர்கள் கலந்து பேசி 7 ஆண்டுகளில், அல்லது 8 ஆண்டுகளில் நன்னடத்தையின் அடிப்படையில் அவர்களை விடுதலை செய்வதற்கு இந்த அரசு முன்வருமா? அதுவும் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த காலகட்டத்தில், ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, தமிழகம் முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் 7 ஆண்டுகள் தண்டனை அனுபவித்திருந்தால், நன்னடத்தை அடிப்படையில், அந்தக் கைதிகளை விடுதலை செய்வதற்கு, அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்வதுடன், முந்திரிக்கு நிவாரணத்தை



மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை இந்தச் சபையிலே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். 11 ஆம் தேதியன்று, வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கையின்மீது, விவாதம் தொடங்குகின்ற நேரத்திலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர், அருமை நண்பர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் சார்பிலே உரையாற்றிய திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களும், பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு வேண்டுமென்றும், காலனி வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தார்கள்.

அப்படிக் கோரிக்கை வைப்பதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால், அவர்கள் கோரிக்கை வைக்கிறபோது, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் என்று அவர்கள் சொன்ன காரணத்தினால், எங்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் எழுந்து அதற்கு விளக்கம் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நம்முடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், நான் பெரிதும் மதிப்பவர். இந்த நேரத்திலே, அவர் பேசிய வார்த்தை, மிகவும் வருத்தத்தை அளிக்கக்கூடிய வார்த்தை.

கம்யூனிஸ்டுகள் ** என்ற ஒரு கருத்தை, இந்தச் சபையிலே அவர் பதிவு செய்தார். அதற்கு அவர் சொன்ன காரணம், இங்கே அருகிலே அமர்ந்திருக்கின்ற அருமை சட்டமன்ற உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் சைக்கிளில் செல்கிறார் என்ற ஒரு கருத்தைச் சொன்னதற்காக, இல்லை அவர்கள் எல்லாம் காரிலே செல்கிறார்கள். இங்கே ** பேசுகின்றார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார். நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். உங்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரையைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களைக் கேளுங்கள். திரு. நன்மாறன் எதிலே சென்று கொண்டிருக்கிறார் என்பதை அவர்களிடம் கேட்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே, எல்லோரும் சைக்கிளில்தான் போகவேண்டுமென்று நாங்கள் ஒன்றும் வாதிடவில்லை. சைக்கிளில் போகிறவர்களும் உண்டு. டவுன் பஸ்சில் போகிறவர்களும் உண்டு. மோட்டார்சைக்கிளில் போகிறவர்களும் உண்டு. காரிலே போகிறவர்களும் உண்டு. ஆகவே, நான் எதற்கு இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இருக்கிற நிலைமைகளை அவர்கள் எடுத்துச் சொன்னபோது, அதை ** என்று இந்தச் சபையிலே சொல்லி, அது பத்திரிகைகளில் எல்லாம் இன்றைக்குச் செய்தியாக வெளிவந்திருக்கிறது. அவர்களுடைய அந்த உரை, மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. ஆகவே, அதை அவ்வராகவே திரும்பப் பெறவேண்டுமென்றும், அல்லது நீங்கள் சபைக் குறிப்பிலேயிருந்து அவற்றை நீக்க வேண்டுமென்று பணிவோடு, இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் கோரிக்கையை ஒன்றும் தப்பு என்று சொல்லவில்லை. எல்லோருக்கும் சேர்ந்து என்று சொன்னபோது, மறுப்பு சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை என்ற முறையில் நாங்கள் எழுந்து எங்களுடைய கருத்தைச் சொன்னோம். அவர் கோரிக்கை வைத்ததை நான் ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை. ஏனென்றால், எங்களுடைய கட்சியினுடைய நடைமுறை வேறு, உங்கள் முறை வேறு. அதற்காக நீங்கள் எல்லாம் என்ன வைத்திருக்கிறீர்கள் என்று நான் கேட்க விரும்பவில்லை. அதுவெல்லாம் அவரவருடைய விருப்பம். எங்கள் கட்சியிலே கார் வாங்கியிருந்தால், அது கட்சிதான் வாங்கியிருக்கிறது. நான் சொல்ல விரும்புவது, இந்த செல்ஃபோன் கட்சியினுடைய செல்ஃபோன். இதனுடைய bill-ஐக் கட்சிதான் கட்டுகிறது. அதனாலே எங்கள் முறை என்பது வேறு, உங்கள் முறை என்பது வேறு. அதற்காக நீங்கள் எல்லாம் எங்கள் மாதிரி இருக்க வேண்டுமென்று நான் கேட்கவரவில்லை. எங்கள் உரிமையைச் சொல்வதற்கு, எங்களுடைய நிலைகளைச் சொல்வதற்கு உரிமை உண்டு.

அதை ** என்றும் சொல்வது உண்மையிலேயே நிரம்ப வேதனை ம், வருத்தத்தையும் அளிக்கிறது; நான் கடுமையாக ஆட்சேபி ஆகவே, அவரே பெருந்தன்மையோடு அதைத் திரும்பப் பெற வேண்டும்; அல்லது நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று நான் கோரிக்கை வைத்தபோது, ஐதராபாத்திலும், பெங்களூருவிலும் இருப்பதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள் காலனி அமைக்க வேண்டுமென்று கேட்டேன். அதேபோல, ஆர்.எம். பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது, அதே கருத்தை வலியுறுத்தினார்கள். ஆனால், செல்வி பாலபாரதி அவர்கள் எழுந்து, பொதுமக்களுக்காக நாம் கேட்க வேண்டும். அவர்களுக்காகப் பட்டா கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 3 இலட்சம் பேருக்கு இலவசப் பட்டாவைக் கொடுத்துவிட்டார்கள். இன்னும் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள்; அந்தப் பணி நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் பணியைச் செய்கிறபோது அந்த அம்மையார்—ஏற்கெனவே ** நன்மாறனைப் பற்றிய பேச்சே எழவில்லை. நன்மாறன் அவர்கள் சைக்கிளில் போகவில்லை, அவர் எம் 80-ல் போய்க்கொண்டிருக்கிறார். எம் 80-ல்தான் போய்க்கொண்டிருக்கிறார். அது அவருடைய விருப்பம், அதை நான் சொல்லவில்லை. சொல்லாத ஒன்றைச் சொன்னதாகச் சொல்லி, கோவிந்தசாமி இங்கே பேசுவது அவைக்கு அழகல்ல. ஆகவே, இரண்டு வேடம் போட வேண்டாம். ஏற்கெனவே ** என்று சொல்லிவிட்டு, ** என்று எழுதிக் கொடுத்துவிட்டார்களா? ஆகவே, நாங்கள் எங்களுடைய கோரிக்கையை வலியுறுத்துகிறோம். உங்களுடைய கொள்கையை நீங்கள் சொல்லுங்கள். எங்களுடைய கொள்கையை நாங்கள் சொல்கிறோம். நாங்கள் சொல்வதற்கு நீங்கள் தடையாக இருக்க வேண்டாம் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன வார்த்தை, அவைக் குறிப்பில் இல்லை என்று சொல்கிறீர்கள், அவ்வளவுதானே? (குறுக்கீடு) அப்படிச் சொல்லவில்லை; அந்த வார்த்தையைச் சொல்லவில்லை என்று சொல்கிறீர்கள்! (குறுக்கீடு)

**திரு. சி. கோவிந்தசாமி:** அவர்கள் கோரிக்கை வைப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்பதை நான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மீண்டும் தெளிவுபடுத்துகிறேன். அரசு அதன்மீது முடிவு எடுக்கிறபோது எங்கள் கருத்து என்ன என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம், அது வேறு. ஆனால், அவர் சொல்கிறபோது அவரும் சரி, நண்பர் ஆர்.எம். பழனிசாமி அவர்களும் சரி, அனைத்து உறுப்பினர்களின் சார்பாக இந்தக் கோரிக்கையை வைக்கிறோம் என்று அவர் வெட்டுத் தீர்மானம் மொழிந்தபோதும் சொன்னார்கள். அப்போது நாங்கள் அமைதியாக இருந்தால், நாங்களும் அதை ஏற்றுக்கொண்டதாக வரும் என்பதற்காகத்தான் அந்த விளக்கத்தை அவர் இங்கே அளித்தாரேயொழிய, உங்கள் கோரிக்கையை நீங்கள் வைக்க வேண்டாம் என்று நாங்கள் கோரவில்லை. அவர் பேசிய அந்த வார்த்தை பத்திரிகையில் வந்திருக்கிறது. நான் ஒன்றும் வேண்டும் என்றே பேசவில்லை, சபைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது. ஆகவே, அதை தயவுசெய்து நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் பார்க்க வேண்டும். அதுபோன்ற ஒரு வார்த்தை— பல கருத்துகளை விவாதிக்கிறோம், பல்வேறு கருத்து மாறுபாடுகள் வருகின்றன. ஆனால், இதுபோன்ற ** வார்த்தையை ** சொல்வதெல்லாம் எந்தவகையிலும் ஏற்புடையதல்ல என்பதைத்தான் நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். மற்ற விஷயங்கள் அவர் சொன்னதைப்பற்றி விவாதிக்க வேண்டுமானால் நிறைய விவாதிக்க நானும் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, சொல்லுங்கள்.

***திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு என்ன விஷயத்தை நான் சொன்னேன் என்று சொன்னால், (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இதை மட்டும் சொல்லிவிடுகிறேன். வேறு ஒன்றும் இல்லை. சலுகை விலையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு மனை அளிக்க வேண்டும் என்று கேட்டோம். இலவச வீட்டு மனை வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை, இலவசமாகத் தரவேண்டுமென்றும் கேட்கவில்லை. அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு, தவறான தகவலை இந்தச் சபைக்குக் கொடுத்தபோது, நான் வேண்டாம் என்று சொன்னேன். நீங்கள் பேசுகிறபோது, தயவுகூர்ந்து உங்கள் கருத்துகளைப் பதிவு செய்யுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டேன். நாங்கள் சொல்கிறபோது, அந்தக் கருத்துகளை மறுத்தோ அல்லது point of order என்றால்மட்டும் நீங்கள் சொல்லுங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்றுதான் நான் கூறினேன். அதேபோல, திரு. ஞானசேகரன் அவர்கள் சொல்கின்றபோதும் யாரையும் பழித்துச் சொல்லவில்லை. நாங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. பழனிசாமி. (குறுக்கீடு) அந்தமாதிரி இருக்கிறதா என்று record-ஐப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடு) பார்த்துவிட்டுச் சொல்கிறேன். திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) Record-ஐப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையை அடுத்து, வேறு சில விஷயங்களும் நேற்றைய விவாதத்தின்மூலமாக வந்த கருத்துகளும் இப்போது இங்கே பரிமாறப்படுகின்றன. இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புவது, தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் வைக்கிறார்கள், அது அவருடைய உரிமை. அதிலே நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதன்மீது கட்சிக் கொள்கை நிலை என்ன என்ற அடிப்படையிலே கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துகளைச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அந்த subject-ஐ விட்டுவிட்டு மற்ற subject-க்குப் போங்கள். நான் அவைக் குறிப்பைப் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டேன் அல்லவா? (குறுக்கீடு) அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு அடுத்து என்ன செய்யலாம் என்பதைப்பற்றிச் சொல்கிறேன். மற்ற subject அல்லது மானியக் கோரிக்கைகளின்மீது ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பைப் பார்த்து அதை நீக்க வேண்டுமென்ற கோரிக்கைதானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அதைப் பரிசீலித்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரேயொரு விஷயம் என்னவென்றால், வருவாய்த் துறையின்மூலமாக நிருவகிக்கப்படுகிற இந்த அமைப்புச் சாராத் தொழிலாளர்களைப்பற்றி, நான் அன்றைக்குப் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னேன். நீதிமன்றத்திலே, ஒரு வழக்கிலே அதற்குத் தீர்வு சொல்லப்பட்டிருக்கிறது; அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

அரசின் சார்பில் ஒரு முயற்சி எடுக்கப்படுகிறது. வெளியிலே இரண்டு விதமான குழப்ப நிலை நீடிக்கிறது. அது தொழிலாளர் நலத் துறைமூலம்தான் செயல்பட வேண்டுமென்று அனைவருமே விரும்புகிறார்கள். இப்போது சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்வதாகத் தகவல் வருகிறது. அப்படி வருகிறபோது, அது மேலும் சிக்கலை ஏற்படுத்தும் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, அதைத் தொழிலாளர் நலத் துறையின்மூலமாகச் செயல்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று பெரும்பாலான சங்கங்கள் விரும்புகின்றன. அதை நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் *11-25*

அதேபோல, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீட்டுமனை பெற்றவர்களுக்கு, *15* ஆண்டுகளுக்குப் பின்னாலே மறு மதிப்பீடு செய்து, அதற்கு வட்டி, அபராத வட்டி போடப்படுகின்றது. அதைப்பற்றிப் பரிசீலிப்பதற்குக் குழு அமைக்கப்பட்டது. அதனுடைய தீர்ப்பு என்னவாக இருக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கையகப்படுத்தப்பட்ட விவசாய நிலங்களை, விவசாயிகள் திரும்பக் கேட்கின்றார்கள் என்பதற்காக, வீட்டு வசதி வாரியம், செம்மஞ்சேரி, திருமழிசை போன்ற பகுதிகளில் நிலங்களைத் திருப்பிக் கொடுத்தது. ஆனால், அவற்றை விவசாயிகள், நாங்கள் விவசாயம் செய்கின்றோம் என்று வாங்கிக்கொண்டு, மனை போட்டு, அங்கு real estate தொழில் நடத்தி வருகின்றார்கள். தொடர்ந்து வீட்டு வசதி வாரியம் இவ்வாறு கையகப்படுத்திய நிலங்களைத் திருப்பி ஒப்படைப்பதும், அவர்கள் வீட்டு மனை போட்டு விற்பதும் வாடிக்கையாக இருக்கின்றது. இனி வருங்காலங்களில் ஒரு கொள்கை முடிவு எடுத்து, வீட்டு வசதி வாரியமே ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு வீட்டு மனைகளாகப் பிரித்துக் கொடுப்பதற்கு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.



**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நல்ல அறிவிப்புகளை வெளியிட்டிருக்கின்றார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அவற்றை வரவேற்கின்றேன். துப்புரவுத் தொழிலாளர்களுடைய குடியிருப்பு வீடுகளுக்குப் பட்டா வழங்குவதற்கு விதிகளில் தளர்வு செய்யலாம்; அவர்களை அரசு ஊழியர்களுக்கு இணையாகக் கருதக்கூடாது என்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, அதற்கான விதிகளைத் தளர்த்தி, அவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகின்றேன்.

இரண்டாவது, *24* ஆண்டுகளாக, வீட்டு வசதி வாரியத்தில் பணம் கட்டியவர்களுக்கு வீடு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் பத்திரம் இன்னும் வழங்கப்படவில்லை. தினசரி வட்டி என்பது கூடுதலாகிக் கொண்டேயிருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு இறுதியான தீர்வை நமது அரசு காணவேண்டும். ஆகவே, அது குறித்த விரைவான நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, என்ன? இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. (குறுக்கிடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளில் மனைப் பட்டா இல்லாமல் ஏழை எளிய, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஏராளமானோர் இருக்கின்றார்கள். ஆகவே பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் தீர்மானங்களைப் பெற்று அவர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பும் அதேவேளையில், தொழிலாளர் நல வாரியத்தில் இருக்கின்ற அமைப்புச் சாராத் தொழிலாளர் நல வாரியம், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உட்பட *14* நல வாரியங்களும், மீண்டும் தொழிலாளர் நலத் துறையிலேயே இயங்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கின்றது. இதனால் எல்லா மட்டங்களிலும் போராட்டங்கள். அரசுத் தரப்பிலே, அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே குறைபாடுகள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. அவ்வாறு குறைபாடுகள் இருந்தால், யாரெல்லாம் பயனடைந்திருக்கிறார்களோ, அவர்கள் இந்தச் சலுகையைப் பெற்றிருக்கின்றார்கள் என்று

அவர்களுக்கு ஒரு முத்திரையைக் குத்திவிட்டால் சரியாகப் போய்விடும். அந்த அடிப்படையில் தொடர்ந்து தொழிலாளர் நலத் துறையிலேயே அந்த நல வாரியங்கள் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லியிருக்கின்ற வெள்ள நிவாரணம் குறித்த கருத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி அதுபற்றி முடிவு செய்யப்படும். கோவை மத்திய சிறைச்சாலையில் இருக்கின்ற இஸ்லாமியர்களுக்கு, மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற சலுகையைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னால், அதுசம்பந்தமாக அரசு முடிவு செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் தெரிவித்திருப்பது குறித்து, ஏற்கெனவே நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் எல்லாம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பட்டா கொடுத்திருக்கின்றோம். அரசாங்கத்தின்மூலமாகத் தனியாக list எடுத்து, பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் பட்டா கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். இதுசம்பந்தமாகவும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் சில கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார். முந்திரி விவசாயிகளுக்கும் சலுகை அளிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். இதுசம்பந்தமாகவும் கணக்கெடுப்புப் பணி நடந்துகொண்டிருக்கின்றது. இதில் 17.5 என்று இலக்கு எதுவும் இல்லை. எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் எல்லாவற்றுக்கும் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றோம். இதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. போதுமான பணம் இருக்கின்றது. கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஏற்கெனவே கொடுக்கவில்லை என்று சொல்கின்றீர்கள், எங்கேயாவது விடுபட்டிருந்தால் பட்டியல் கொடுங்கள். அது உண்மையாக இருந்தால் கலெக்டர் அவர்களிடம்



தெரிவித்து, அதைக் கொடுக்கச் சொல்கின்றோம். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. நன்னடத்தை அடிப்படையில் 7 ஆண்டுகளான கைதிகளை விடுதலை செய்யலாம் என்பதைப் பொறுத்தளவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி கொள்கை முடிவு எடுக்கவேண்டும். அதுகுறித்து, கண்டிப்பாக அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் தெரிவித்திருப்பது Scavenger's Colony பற்றியது. அதுவும் கொள்கை முடிவு எடுக்கவேண்டிய ஒன்றுதான். உங்களுக்குத் தெரியாத விஷயம் அல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, கொள்கை முடிவு எடுத்து, விரைவில் Scavenger's Colony-யில் உள்ளவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்ற பிறகு முடிவு எடுக்கலாம்.

*முற்பகல் 11-30*

அடுத்து, விவசாயத் தொழிலாளர் நல வாரியம், விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு வாரியம், அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியம் ஆகியவை வருவாய்த் துறையில் சேர்ந்து இருப்பது குறித்து நீதிமன்றத்தால் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் சொன்னார்கள். அப்படியெல்லாம் இல்லை. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை முன்பாகவே நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கிறது என்றால், அவர்கள் இருக்கக்கூடிய தொழிலாளர் நலத் துறையிலிருந்து ஒரு நோட்டீஸ் கொடுத்துவிட்டு, வருவாய்த் துறை ஆய்வு செய்தபின் அந்த உதவித் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அவர்களுக்கு முன்பே தகவல் சொல்லவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். இதில் சட்டத் திருத்தமெல்லாம் கொண்டு வரவேண்டுமென்ற அவசியமில்லை. எந்தச் சட்டத் திருத்தத்திற்கும் வேலையில்லை. Act Amendment-உம் தேவையில்லை. ஏனென்று சொன்னால், தொழிலாளர் நல வாரிய Act-லே, amendment கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. விதிகளைத் திருத்த வேண்டிய அவசியமுமில்லை. ஒரு அறிவிப்பு செய்தாலே போதும். இதிலே, எந்தக் குழப்பமும் இல்லை. நீதிமன்றமும் தெளிவாக இருக்கிறது. வருவாய்த் துறையிலே சேர்ப்பதிலே எந்தக் குழப்பமும் இல்லை. நீங்கள் தயவுசெய்து வருத்தப்பட்டுக்கொள்ளக்கூடாது. காரணம் என்னவென்றால், இப்போது விவசாயத் தொழிலாளர் நல

வாரியத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சம் பேர் இருக்கிறார்கள். கட்டடத் தொழிலாளர் நல வாரியம், அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியத்தில் இப்போது மொத்தம் 35 இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஒரு கோடியே அறுபத்தாறு இலட்சம் பேர்களுக்கு உதவித் தொகை வழங்கக்கூடிய வருவாய்த் துறை 35 இலட்சம் பேர்களுக்குக் கூடுதலாக வழங்குவதற்கும் வாய்ப்பிருக்கிறது. காரணம் என்னவென்றால், இப்போது நிறைய பேர் உறுப்பினர்களாகச் சேர வாய்ப்பிருக்கிறது. கிராமத்தில் இருக்கின்றவர்கள், அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியத்தில் சேர முடியாமல் இருக்கின்றவர்கள்கூட சேருவதற்கு வாய்ப்பிருக்கிறது. நிதியுதவி வழங்குகின்ற பொறுப்பை நிறைவேற்றுவதற்கும் வருவாய்த் துறைக்கு வாய்ப்பிருக்கிறது. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலும் எந்தக் குழப்பமும் இல்லை, சரியாகத்தான் இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## (அ) கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கை எண் 24-சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) குறித்து 11-4-2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.10,39,02,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"



என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை குறித்து 11-4-2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,494,87,14,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.71,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (இ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு குறித்து 11-4-2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.437,61,02,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

## (ஈ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை குறித்து 11-4-2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.307,22,17,000/-, மூலதனக் கணக்கில் ரூ.695,46,67,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.108,50,00,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

# 5. அரசினர் தீர்மானம்

## உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோரைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தங்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்துக்கொண்டிருக்கும்போது, அவரது பேச்சைத் தடுக்க திரு. வி.பி. கலைராஜன் அவர்கள் தன்னுடைய இருக்கையிலிருந்து ஓடிவந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிரில் அவரது பேச்சினைத் தடுக்க முனைந்ததாலும், திரு. கோ. அரி அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசவேண்டும், முதலமைச்சர் பேசக் கூடாது என்று கூச்சலிட்டு, பேரவையின் அலுவல்களுக்கு இடையூறு செய்து, பேரவை விதிகளுக்கு மாறாக நடந்ததாலும், சட்டமன்றப் பேரவை

[பேராசிரியர் க. அன்பழகன்] [2008 ஏப்ரல் 15

விதி 121 (2)-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருந்த திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகிய இருவரையும் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளாதவாறு பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்தும், அவையின் கண்ணியத்தையும், மரபையும் மீறி, அவைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. கோ. அரி, திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரையில் எஞ்சிய நாட்களுக்கு அவையைவிட்டு நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (உ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### (ஊ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் 11-4-2008 அன்று பேசிய உரையில், ** என்று கூறப்பட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஏப்ரல் 15]

### (உ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.219,80,56,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 34, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 246, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 954, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2736, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2913, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4462, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4693, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 274, திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 363, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 513, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 739, திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1054, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2067, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3348, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4590, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6096, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7099, திரு. கே.வீ. இராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 943, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1175, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1458, திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1766, திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1774, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2155, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2806, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5223, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7310, திரு. சி.வி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3090, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6676, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 96, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 121, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 137, திரு. கு. சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 776, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி நகராட்சி சுகாதாரத் தொழிலாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 794, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியிலுள்ள நன்னிலம், பேரளம், திட்டச்சேரி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 856, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், உழக்கோல்பட்டு கிராமத்தில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க உழக்கோல்பட்டு மேட்டுத் தெருவில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டார் அமைத்து குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 965, திரு. ந. சுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1296, திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1360, திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1365, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

முற்பகல் 11-40

வெட்டுத் தீர்மானம் எண் 1383, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1393, திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாநகரில் 2-வது கூட்டுக் குடிநீர்த் திட்ட நடவடிக்கைகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1436, திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1489, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், கன்னியாகுறிச்சி ஊராட்சி, கழிச்சான்கோட்டை பகுதியில் குடிதண்ணீர்த் தொட்டி கட்டும் பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1597, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1663, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1779, திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1802, திரு. மு. பரஞ்ஜோதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1832, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1916, திருமதி ஆர். பிரேமா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1931, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, திருவட்டாறு பேருந்து நிலையத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2106, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2328, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் நகராட்சியில், நகராட்சி ஆணையாளர் பணியிடத்தை நிரந்தரமாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2534, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2644, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் தொகுதியில் பல கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்தும் சாத்தான்குளம் தொகுதியில் பெரியதாழையைச் சுற்றிய இடங்களில் கொசு நிறைந்த குடிநீரால் சிறுநீரகக் கோளாறுகள் வருவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2688, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3036, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3158, திரு. ல. ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3174, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3236, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3496, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலைத் தொகுதியில் உள்ள பாண்டமங்கலம் பேரூராட்சிக்குப் புதிய கூடுதல் குடிநீர்த் திட்டம் அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3564, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3940, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4021, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூர் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, செய்யாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4110, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர், சத்துவாச்சாரி நகராட்சிகளில் பிலிப்ஸ் போன்ற தரமான கம்பெனி பல்புகளை விலைக்கு வாங்கி, பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4176, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 4453, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வத்திராயிருப்பு ஒன்றியத்திற்கு குடிநீர் வழங்க, பிளவக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4512, திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4792, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4944, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4966, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் நகருக்கு வைகைப் பேரணையிலிருந்து நேரடிக் குழாய் பதித்து, குடிநீர் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5025, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5248, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக்குடி வட்டம், ஆவட்டி, கல்லூர், ஆலம்பாடி, அதர்நத்தம், மேலாதனூர், கீழாதனூர், ஐவனூர், புலிகரம்பனூர், ம. பொடையூர் ஆகிய கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5519, திரு. இரா. குமரகுரு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5933, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, குழித்துறை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6028, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகராட்சி நிருவாகத்தின்கீழ் இயங்கும் பள்ளிகளில் உள்ள அனைத்துப் பணியிடங்களையும் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6588, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6650, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட தேசூர் பேரூராட்சியில் போதுமான குடிநீர் வழங்க, ஏரிக் கரையில் வெட்டப்பட்டுள்ள பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வழங்க புதியதாக ஒரு இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6681, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6785, திரு. ரெ. நெடுஞ்செழியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7022, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் மாநகராட்சியில் அங்கீகாரம் அளிக்காத மனைப் பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7149, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதியில் பாப்பாக்குடி, ஐந்தாங்கட்டளை, வெங்கடாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் தண்ணீர் போதுமானதாக இல்லாததால், அதற்குக் கூடுதல் தண்ணீர் வசதி (Additional Water Source) உருவாக்கி, அனைத்து இல்லங்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7281, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புளியங்குடி நகராட்சிப் பகுதியில் உள்ள தி.நா. புதுக்குடி சிதம்பரப்பேரி ஓடையின் குறுக்கே நெடுஞ்சாலையையும் தெருவையும் (26-வது வார்டில்) இணைக்க ஒரு பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7296, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் நகராட்சியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் உள்ளதால் மக்களின் நன்மைக்காகப் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7328, திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7406, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7517, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7519, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் வழங்கப்படவில்லை. ஆகவே, நீர்த் தொட்டிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7544, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பூர் இரயில்வே மேம்பாலம் கட்ட கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7691, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு அளிக்கும் ஊக்குவிப்பு போல அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளுக்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7753, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் உள்ள



குண்டுரசம்பாளையத்தில் நீர் உந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7874, திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8047, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி நகராட்சி, M.G.R. நகர், 13-வது வார்டில் பல ஆண்டுகளாகப் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8131, திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8171, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8236, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதியில் உள்ள பொன்னமராவதி ஒன்றியத்தில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் அனைத்து ஊராட்சிகளுக்கும் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,206,45,21,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.876,47,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.219,80,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8327, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8422, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8672, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8737, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

### (ஊ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,047,18,90,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 42, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 254, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 950, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2893, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4663, திரு ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 284, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 491, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 615, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 637, திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1073, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2042, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3358, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4568, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6024, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6125*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7096*, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *944*, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1402*, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1454*, திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1749*, திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1775*, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1842*, திரு ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2167*, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3380*, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *5196*, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் *7311*, திரு. சி.வி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3034*, திரு ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7549*, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6678*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *111*, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, தொட்டமஞ்சு ஊராட்சி, தொட்டமஞ்சு கிராமத்திற்குத் தார்ச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய *42* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*3,551,62,22,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,047,18,90,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *774*, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய *42* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*3,551,62,22,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,047,18,90,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *793*, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய *42* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*3,551,62,22,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,047,18,90,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *846*, திருமதி பெ. கமலாம்பாள்.



**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், புத்தேரி கிராமத்தில் மேட்டு நகர் புத்தேரி சாலையைப் புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய *42* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*3,551,62,22,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,047,18,90,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

முற்பகல் *11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *966*, திரு. ந. சுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1310*, திரு. ஓகே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1386*, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1392*, திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாநகரில் மதுரை தத்தனேரி மின் மயானத்தில் இரண்டாவது மின் மயானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய *42* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*3,551,62,22,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,047,18,90,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1412*, திரு. செ. சின்னச்சாமி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1437*, திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1585, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1786, திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1834, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1933, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராம ஊராட்சிகளில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மின் மோட்டார்களை இயக்குபவர்களின் தொகுப்பூதியத்தை மாற்றி, பணி வரன்முறை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2338, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதியில் உள்ள அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளிலும் சுடுகாடு வசதி, சுடுகாட்டிற்குப் பாதை வசதி, எரிமேடை அமைத்தல், சுற்றுச் சுவர் அமைத்தல், தண்ணீர் வசதி செய்தல், மின் விளக்கு அமைத்தல் போன்ற பணிகளைச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2494, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 2647, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் தொகுதியில் ஏழைகளுக்கான தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்து, உடன் புதிய தொகுப்பு வீடுகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2691, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2752, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குஜிலியம்பாறை ஒன்றியம், டி. கூடலூர் ஊராட்சியில் எஸ். புதுக்கோட்டை, ஆனைக்கல் மேட்டிலிருந்து குள்ளம்பட்டியார் களம் வழியாக திருமக்கம்பட்டி வரை உள்ள இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2772, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3027, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்ளாட்சி அமைப்புகளைத் தேவைக்கேற்றவாறு பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3263, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3448, திருமதி ஆர். பிரேமா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3507, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ஊராட்சிகளில் உள்ள பொது மயானத்தைச் (அனைத்து தரப்பினருக்கும் பொதுவான) சீர்செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3576, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3779, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3968, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 4104, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம் ஆலங்குளம் பிளாக், வெள்ளக்குட்டையில் சமுதாயக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4180, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4454, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்போது உள்ள வறுமைக்கோட்டுப் பட்டியலை முற்றிலும் நீக்கி, புதிதாகக் கணக்கெடுத்துப் பட்டியல் வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4459, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4519, திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் பகுதியில் உள்ள மலைக் கிராமங்களுக்குச் சாலை வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4790, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4940, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4961, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சட்டக் கூலி ரூ.80/- தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5017, திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5935, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்ட ஊராட்சிகளில் குடிநீர் விநியோகப் பணியாளர்களுக்கு மூன்று வகையாக வழங்கப்படும் ஊதியத்தை மாற்றி ஒரே வகையான ஊதியத்துடன் அவர்களை முழுநேரப் பணியாளர்களாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6059, திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6540, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6659, திரு. கோ. எதிரொலி மணியன்.



**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து ஊராட்சிகளுக்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற திட்டம் ஒன்றைத் தீட்டி நிதி ஒதுக்கி கிராம ஊராட்சியின் சார்பாகவே கிராமங்களைப் பசுமை நிறைந்த கிராமங்களாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6770, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6788, திரு. ரெ. நெடுஞ்செழியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6989, திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7148, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ரூ.20 இலட்சம் வழங்குவதால் விலைவாசி ஏற்றம் காரணமாக அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க முடியாத நிலை உள்ளது. எனவே, கிராமங்களின் ஜனத்தொகை, குக்கிராமங்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, கூடுதல் நிதி ஒதுக்கி அடிப்படை வசதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7191, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7295, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பெரும்பாலான கிராமங்களில் பொதுக் கழிப்பிடம், பொதுக் குளியலறை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7396, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7437, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7501, திரு. இரா. துரைக்கண்ணு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7695, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகளில் காலியாகவுள்ள பணி இடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7723, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, கோரணம்பட்டி ஊராட்சி, ஆசாரிகாட்டுப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8001, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த 10 ஆண்டுகளாக ஊராட்சிகளில் OHT மின் மோட்டார் ஆப்பரேட்டர்கள், துப்பரவுப் பணியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அப்பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8136, திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8180, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8208, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதியில் உள்ள பாறைமேடு, மோட்டூர் மற்றும் பிற பகுதிகளில் நிலவிவரும் கடுமையான குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8240, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடமான திருமயம் பேருந்து நிலையத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8250, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மங்களூர் தொகுதியில் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8298, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8418, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8499, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதியிலுள்ள பரமக்குடி, போகலூர் மற்றும் நயினார்கோயில் ஆகிய ஒன்றியங்களிலுள்ள குடிநீர் ஊருணிகளைக் குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மூலமாக ஆழப்படுத்தி ஊருணியைச் சுற்றி முள்வேலி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,551,62,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,047,18,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8654, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8747, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன், இருக்கையில் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன். உங்களுக்கு ஒதுக்கியுள்ள நேரம் 15 நிமிடங்கள்.

***திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல ஆட்சியினுடைய அடித்தளமாக, ஆணிவேராக விளங்கக்கூடிய உள்ளாட்சித் துறையிலே நடக்கக்கூடிய விவாதத்திலே

@ 535 முதல் 780 வரையிலான பக்கங்களில் இணைப்பு-IV மற்றும் V-ஆக அச்சிடப்பட்டுள்ளன.

பேச அனுமதியளித்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே நமது மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் நேரடியாக அதற்குரிய செலவினங்களாக சுமார் 10 ஆயிரத்து 165 கோடியை, அதாவது, கொடுக்கப்பட்ட நிதியிலே சுமார் 31 சதவீதத்தை உள்ளாட்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்தமைக்காக என்னுடைய வாழ்த்துக்களையும், வரவேற்பையும் நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-50*

அதேபோன்று, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையிலே அடித்தள மக்கள், ஏழையெளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் உட்பட பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் உதவக்கூடிய வகையிலே பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக இந்தத் துறை நிறைவேற்றி வருகின்றது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழகத்திலே ஒரு நல்ல ஆட்சி நடப்பதைக் காட்டக்கூடிய முகக் கண்ணாடியாக இந்தத் துறை விளங்குகிறது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இந்தத் துறை எந்த அளவுக்கு வேகமாகச் செயல்படுகிறது என்பதற்கு ஒரு சில உதாரணங்களை நான் சொல்லிக்காட்ட விரும்புகின்றேன். குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகளைச் சாதாரணமாக ஓராண்டுக் காலத்திற்குத் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருப்பார்கள். நாங்களும் கடிதங்களைக் கொடுத்துக் கொண்டிருப்போம். ஆனால், இந்த இரண்டு ஆண்டுக் காலங்களிலே நாங்கள் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்பாகவே, இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்பாகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் எங்களை அணுகி, உங்களுடைய பணிகளைத் தயவுசெய்து நீங்கள் பரிந்துரைத்துக் கொடுங்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகப் பணிகளை எல்லாம் தொடங்க வேண்டுமென்பதற்காக மதிப்பீடு செய்யச் சொல்லியிருக்கின்றார்கள், உடனடியாக இந்தப் பணிகளையெல்லாம் தொடங்குவதற்கு நீங்கள் எங்களுக்குக் கடிதம் கொடுங்கள் என்று எங்களையெல்லாம் வற்புறுத்தி, கிட்டத்தட்ட 50



சதவீத நிதியை ஒதுக்குவதற்காக எங்களிடம் கடிதங்களைப் பெற்றிருக்கின்றார்கள். இவையெல்லாம் வரவேற்கக்கூடிய அம்சங்களாக இருக்கின்றன என்பதற்காக இதை நான் இன்றைக்குச் சொல்கின்றேன்.

அதேபோன்று, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மேயராக இருந்த காலங்களிலே பல்வேறு பாலங்களையெல்லாம் மிகச்சிறப்பாக அமைத்து, அன்றைக்கு அவற்றினுடைய முக்கியத்துவம் குறைவாகத் தெரிந்தாலும்கூட, காலப் போக்கில் இன்றைக்கும், நாளைக்கும் மிகப் பெரிய முக்கியத்துவம் இருக்கக்கூடியவையாக அவை திகழும். தற்போது இருக்கக்கூடிய அதிகமான போக்குவரத்து நெரிசல்களைப் பார்க்கும்போது, அந்தப் பாலங்களுடைய அவசியமும், அவற்றினுடைய தேவைகளும் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை நிரூபிக்கக்கூடியவகையிலே இன்றைக்கு அந்தப் பாலங்கள் இருக்கின்றன.

அதேபோன்று, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகும் பல்வேறு இடங்களிலே பாலங்கள் கட்டப்பட்டன. குறிப்பாக, கடந்த மாதத்திலேகூட கத்திப்பாராவிலே நமது மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் ஒரு பாலத்தைத் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசல்கள் நிறைய குறைந்திருப்பதை நாங்கள் கண்கூடாகப் பார்த்தோம். எனவே, இந்தப் பணிகள், இதுபோன்று பல்வேறு பாலங்களை அமைக்கக்கூடிய பணிகள், சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பதற்கான பணிகள், மென்மேலும் தொடர வேண்டுமென்ற என்னுடைய ஆசையை நான் இந்த நேரத்திலே உங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகச் செம்மையாகச் செயல்படும் இந்தத் துறையைப்பற்றி என்னுடைய ஒன்றிரண்டு கருத்துகளை நான் மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், இப்போது மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. அதிலே ஒரு யூனியனிலே குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் ஒரு வருடத்திற்கு ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் நல்லபடியாக மக்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்திச் செய்யக்கூடிய

வகையிலே முன்னுரிமைப் பணிகளாகப் பிரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பல்வேறு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய வேளையிலே, நூலகங்கள் கட்டுவதற்கென்று ஒரு நிதியை ஒதுக்கீடு செய்கிறார்கள். அந்த நூலக நிதியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே நூலகங்கள் இருக்கக்கூடிய கிராமங்களிலே வேறு பகுதிகளிலே மேற்கொண்டும் நூலகத்தை அமைக்கக்கூடிய பணி நடைபெற்று வருகின்றது. அது தேவையில்லை என்பது என் கருத்து. இருக்கக்கூடிய நூலகங்களையே மேம்படுத்திட வேண்டும். நூலகத் துறையால் நடத்தப்படக்கூடிய நூலகங்கள் ஒன்றிரண்டு கிராமங்களிலேதான் இருக்கின்றன. நான் சொல்வது எல்லா கிராமங்களிலும் இல்லை. ஒன்றிரண்டு கிராமங்களிலே மட்டும் இருக்கின்றன. இரண்டாவது நூலகம் அந்த இடத்திற்குத் தேவையில்லை, அங்கே இருக்கக்கூடிய நூலகங்களையே மேம்படுத்திவிட்டு அந்த நிதியை வேறு, மாற்றுப் பணிகளுக்குக் கொடுக்கலாம் என்பது எங்களுடைய கருத்து என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோன்று, மீன் வளர்ப்பைப் பொறுத்தவரையிலே சிறு குட்டைகள் அமைத்து மீன் வளர்ப்பதற்கு நிதி ஒதுக்கப்படுகின்றது. எங்களுடைய பட்டுக்கோட்டை, பேராவூரணி போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய, கடற்கரையிலே இருக்கக்கூடிய கிராமங்களில் உள்ள மக்கள் மீன் வளர்ப்பிலே மிகப் பெரிய ஆர்வத்தைக் காட்டுவது கிடையாது. ஏனென்று சொன்னால், மீன் அதிகமாகக் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே இருக்கக்கூடிய காரணத்தினாலே அவர்கள் அதிகமாக மீன் வளர்ப்பிலே ஆர்வம் காட்டவில்லை. எனவே, அப்படிப்பட்ட பகுதிகளை ஆராய்ந்து, அந்தக் கிராமங்களுக்கு மாற்றுப் பணிகளைப் பரிந்துரைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, ஒரு கோடி ரூபாய்க்குமேலே திட்டப் பணிகள் நடக்கக்கூடிய இடமாக ஒவ்வொரு யூனியனும் இருக்கக்கூடிய காரணத்தினாலே, ஏற்கெனவே ஒன்றியத்திலே இருக்கக்கூடிய பொறியாளர்களே இதற்கும் பயன்படுத்தப்படுகின்றார்கள். எனவே, இந்தப் பணிகளினுடைய தரத்தை உயர்த்தக்கூடியவகையிலே ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு பொறியாளரை இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காகத் தனியாக நியமித்து, அதன்மூலம் இந்தப் பணிகள் மென்மேலும் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.



அதேபோன்று, தனியார் குடிநீர் இணைப்புகள். கிராமங்களிலே இருக்கக்கூடிய குடிநீர் இணைப்புக் கொடுப்பதற்கு ஒரு டெப்பாசிட் தொகையை வாங்கிக் கொண்டு கொடுக்கின்றார்கள். ஆனால், கிராமங்களிலே சென்று பார்த்தோம் என்று சொன்னால்—நானே கண்கூடாகப் பல இடங்களிலே பார்த்துவிட்டு அவர்களிடம் சத்தம் போடுவது உண்டு—அந்த பைப்புகளைப் பயன்படுத்தி வாழைக் கொல்லைக்குத் தண்ணீர் பாய்ச்சுவது, தென்னம்பிள்ளைக்குத் தண்ணீர் பாய்ச்சுவது போன்ற பணிகளையெல்லாம்கூட சில கிராமங்களில் செய்துவிடுகின்றார்கள். எனவே, தனியார்களுக்குக் கொடுக்கின்ற குடிநீர்ப் பைப்புகளைப் பொறுத்தவரையிலே கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்து சட்ட திட்டங்களை மிகக் கடுமையாக ஆக்கவேண்டும். ஏனென்று சொன்னால், வலுவுள்ளவர்கள் தண்ணீரை எடுத்துக்கொள்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலையை நான் கண்கூடாகப் பார்த்த காரணத்தால், இதைச் சொல்கிறேன். எனவே, பைப்புகளை எல்லாம் அவர்கள் தவறாக உபயோகப்படுத்தினால், அவர்களுக்கு விதிக்கக்கூடிய தண்டனை என்பது அதிகபட்சமாக இருந்தால்தான் இதுபோன்ற தவறுகள் ஏற்படாமல் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-55

அதேபோன்று, இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஒன்றிய அலுவலர்களுக்கான குடியிருப்புகள் எல்லாம் பட்டுக்கோட்டையிலே இருக்கின்றன; தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் சொல்லக்கூடிய குறைபாடுகள் என்னவென்று சொன்னால், ஒன்றியங்கள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே கட்டப்பட்ட இந்தக் குடியிருப்புகள் பழுதுநீக்கம் செய்யப்படாமல் இருக்கின்ற காரணத்தினாலே அவைகளில் குடியிருப்பதற்குரிய தகுதி குறைந்துகொண்டே வருகிறது என்று சொல்கிறார்கள். எனவே, தனி ஒரு நிதியை இதற்கு ஒதுக்கீடு செய்து அந்தக் குடியிருப்புகளையெல்லாம் பழுதுநீக்கம் செய்து கொடுப்பதற்கு தாங்கள் ஆவன செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, நகராட்சியைப் பொறுத்தவரையிலே வரி உயர்வினை நமது அரசு இன்றைக்கு அறிவித்திருக்கிறது. ஆனால், மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறும்போது, நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை என்றும், அந்தந்த நகராட்சிகள் தேவைப்பட்டால் வரியை உயர்த்திக்கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். அப்படி இருந்தாலும்கூட, இந்த 150 சதவீதம் வரி உயர்வு என்பது வணிகர்களை பயமுறுத்தும் விதமாக இருக்கிறது என்றும், எந்த நேரத்திலும் நகராட்சிகள் எங்கள்மேல் இந்த வரி உயர்வை சுமத்தும் என்ற அச்சமும் அவர்களிடையே இருக்கின்ற காரணத்தினாலே, மரியாதைக்குரிய நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையினை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால், அரசைப் பொறுத்தவரையில் 1996-1997 ஆம் வருடத்தில் ஒரு முறை சொத்து வரியை ஏற்றியிருக்கின்றது. எனவே, மீண்டும் இந்த வரியை விதிக்கும்போது, 150 சதவீதம் வரியை வணிக வளாகங்கள் கொடுக்க வேண்டும் என்பது மிக அதிகமானதாகும் சில நகராட்சிகள் செய்யவில்லை என்றாலும்கூட, செய்துவிடுவார்கள் என்ற அச்சம், வணிகர்களிடையே இருக்கின்ற காரணத்தினாலே அதனை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, ஒன்றியங்களாக இருக்கட்டும், நகராட்சிகளாக இருக்கட்டும், அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கெல்லாம் ஜனநாயக உரிமை அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினாலே ஒன்று சேர்ந்துகொண்டு அந்த நகராட்சிகளையோ, ஒன்றியங்களையோ கவிழ்க்கக்கூடிய சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக ஒரு சட்டத்தை நீங்கள் அறிவித்தீர்கள். அதன்பின்பு கட்டுப்பட்டு இப்போது அவை சரியாக நடந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, தனிப்பட்ட விரோதங்களின் காரணமாகவும் தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாகவும் ஒன்று சேர்ந்துகொண்டு நாங்கள் தீர்மானத்தைத் தோற்கடிப்போம் என்றும், என்னுடைய பகுதிக்கு நிதியை ஒதுக்க வேண்டும், அந்தப் பகுதிக்கு இந்த நிதியை ஒதுக்க வேண்டும். இதை இப்படிச் செய்யவேண்டும் என்றெல்லாம் சொல்லி நகரமன்றத் தலைவர்கள், ஒன்றியக் குழுத் தலைவர்கள்



மிரட்டக்கூடிய ஒரு நிலையும் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இதற்கு ஒரு நல்ல சட்ட திட்டத்தைக் கொண்டுவந்து, கட்சியினுடைய கட்டுப்பாட்டில் ஒன்றிய கவுன்சிலர்களோ, நகர்மன்ற உறுப்பினர்களோ இயங்கவேண்டும் என்பதுபோன்று நன்றாக ஆய்வு செய்து, சிறந்த கட்டுப்பாட்டை நீங்கள் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையிலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் எந்தெந்தப் பகுதிகளிலே என்னென்ன பணிகள் சிறப்பாக நடைபெறும், எங்கெங்கு என்னென்ன தேவை என்பதெல்லாம் நன்றாகத் தெரியும். எனவே, இங்கு இருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கிட்டத்தட்ட ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் பணம் கொடுக்கின்றீர்கள். அதில் 50 சதவீதம் முன்னுரிமைப் பணிகளுக்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதை நல்லமுறையிலே சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றோம். எனவே, எங்களுடைய தேவைகள், மக்களிடையே எதிர்பார்ப்பு அதிகமாக இருப்பதைக் கருத்தில்கொண்டு இந்த வருடமும் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்திக் கொடுக்க வேண்டும். இரண்டு கோடியாக கேட்கவேண்டும் என்றுகூட எனக்கு ஆசை இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும், பொன்னை வைக்கின்ற இடத்தில் பூவை வைப்பதுபோல், குறைந்தபட்சம் ஒன்றே முக்கால் கோடியை நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கிக்கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, சுய உதவி குழுக்களைப் பொறுத்தவரையிலே அவை சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பல்வேறு நலத் திட்ட உதவிகளையெல்லாம் நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள். ஆனால், மானியம் மற்றும் கடன் விடுவிக்கும்போது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகத்தான் அது செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவேண்டும். ஏனென்றால், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் யாரோ வருகிறார்கள். அவர்கள் எடுத்துச்சென்று வங்கியிலே கொடுத்து மானியத்தை விடுவிக்கின்றார்கள். யார் என்ன செய்கின்றார்கள் என்பது சுய உதவிக் குழுவிலுள்ளவர்களுக்கும்,

அந்த உதவி செய்வது அந்த ஒன்றியத்தில் இருப்பவர்களுக்கும் சரியான முறையில் தெரியவில்லை. எங்களைப்போன்ற மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெரியவில்லை. எனவே, இந்த உதவிகள் செய்வதை முழுவதுமாக ஒன்றியத்தின்மூலமாகத்தான் செயல்படுத்த வேண்டும் என்பதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** அதேபோன்று, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தின் மூலமாக சாலைகளை எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு சாலைகளை எடுக்கும்போது சிறு சிறு பாலங்கள் குறுக்கிடுகின்றன. சின்ன சின்ன பாலங்கள் இருக்கின்றன. தடுப்புச் சுவர்கள் இருக்கின்றன. அந்தப் பாலங்களைக் கட்டுவதற்கு, மதிப்பீடு செய்வதற்கு இதிலே வழிவகைகள் இல்லை. எனவே, சாலைகளை எடுக்கும்போது சிறு பாலங்களை கட்டுவதற்கும் மதிப்பீடு செய்து, அவற்றைக் கட்டுவதற்கான திட்டத்தைச் சேர்த்தால், அந்தச் சாலைகள் முழுவதுமாகப் பயன்பாட்டுக்குவரும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, அதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நண்பகல் *12-00*

அதேபோன்று, உள்ளாட்சித் துறையிலே நான் பலமுறை வலியுறுத்தி இருக்கக்கூடிய ஒரு திட்டத்தைப் பொறுத்தவரையிலே, ஒன்றிய மருந்தகம் (Union Dispensary) என்று ஒன்று இருக்கிறது. அந்த ஒன்றிய மருந்தகம் என்பது ஒன்றியத்தின்மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனுடைய பணிகள் என்னவென்று சொன்னால் கிராமங்களிலே குறைந்தபட்சம் முதலுதவி அளிக்கக்கூடிய அளவுக்கு மருத்துவர்களை நியமித்து, அந்த காலத்தில் இருந்து, District Board-மூலம் நடத்திக் கொண்டு இருந்தார்கள். இப்போது பட்டுக்கோட்டையில் மட்டும் 3 இடங்களிலே வெண்டாகோட்டை, காசரன்காடு, தம்பிக்கோட்டை வடகாடு ஆகிய மூன்று கிராமங்களிலும் இந்த ஒன்றிய மருந்தகங்கள் இருக்கின்றன. இந்த மருந்தகங்களிலே நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டடங்கள் எல்லாம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். ஆனால் மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. இது நீண்டகாலமாக இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய நமது மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இந்த நிதி ஆண்டிலே அவற்றுக்கு முழுவதுமாக மருத்துவர்களை நியமித்து, செவிலியர்களை நியமித்து, மருந்தாளுநர்களை நியமித்து, அவை மக்களுக்கு நல்லமுறையிலே பணியாற்றுவதற்கு ஆவன செய்யவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அதை மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் ஒப்படைத்தாவது அவர்கள்மூலமாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமிப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தம்பிக்கோட்டை வடகாடு என்ற கிராமத்திற்கும், வெண்டாகோட்டை என்ற கிராமத்திற்கும் சேர்த்து ஒரு மருத்துவரைப் போட்டிருக்கிறார்கள். அவரைக் கேட்டால் நான் காலையிலே இங்கு இருக்கின்றேன், மதியம் அங்கு செல்கிறேன் என்று சொல்கின்றார்கள். அவரால் அங்கு எல்லோரையும் கவனிக்க முடியவில்லை. கேட்டால் அங்கு சென்றுவிட்டேன் என்று இங்கு சொல்கிறார். இங்கு வந்துவிட்டேன் என்று அங்கு சொல்கிறார். எனவே, தாங்கள் இந்த மருந்தகத்தைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல கொள்கை முடிவு எடுத்து, செயல்படுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.



அதேபோன்று, கூட்டுக் குடிநீர்த் திட்டம். கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு கிராமங்களிலே electric charge-ஐ அவர்கள் பகுதியாகப் பிரித்து, ஈவுத் தொகையைப்போல் வசூல் செய்கின்றார்கள். அதனால் கிராமங்களினுடைய நிதிச் சுமை மேலும் அதிகரிக்கிறது என்று ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் கூறக்கூடிய காரணத்தினாலே அவற்றினுடைய முழுமையான பராமரிப்புச் செலவையும் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய பொறுப்பையும் குடிநீர் வடிகால் வாரியமே (TWARD Board) ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, ஆதி திராவிடர் மக்களின் வீடுகளைப் பழுதுநீக்கம் செய்வதற்கு 10 ஆயிரம் ரூபாய் வரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொடுக்கலாம் என்றும் தாங்கள் ஆணையிட்டிருக்கின்றீர்கள். நாங்கள் எல்லாம் அதை நல்லமுறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால்,

கிராமங்களைப் பொறுத்தவரையிலே, அந்த ஏழையெளிய மக்களில் சில பேர் அந்த வீடுகளை எங்களால் கட்ட இயலவில்லை; 3 ஆயிரம் ரூபாய்க்கு மரம் வாங்குவதற்குக்கூட எங்களுக்கு வசதி கிடையாது; அந்தத் தொகையை எங்களிடம் ஏன் கொடுக்கிறீர்கள் என்று சொல்லி, இந்த வருடம் மட்டும் கிட்டத்தட்ட 10, 15 வீடுகளுக்குமேல் அவர்கள் வேண்டாம் என்று மறுத்த காரணத்தினாலே இந்த நிதி திரும்பி வந்துவிட்டது. எனவே, இதற்கு ஒரு நல்ல கொள்கை முடிவு எடுத்து அந்த ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கக்கூடிய tender cost என்பது நிறைய இருப்பதனால், யாரும் வரமாட்டேன் என்கிறார்கள். அதையெல்லாம் குறைத்து ஆதி திராவிடர் மக்களுக்காக, ஒரு சிறப்புத் திட்டமாக அந்த வீடுகளை டெண்டர்மூலமாக விட்டு அவற்றைக் கட்டிக் கொடுப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க முடியுமா என்று யோசித்து அதைச் செயல்படுத்த வேண்டும் என்று இந்தநேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் நீங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள். அதற்காக மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய நண்பர் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள கருங்கல் தேர்வுநிலைப் பேரூராட்சி மாடல் நகரத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு அதற்கான ஒப்புதல் வேண்டி அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது. அதற்கு விரைவிலே நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை என்னிடம் கொடுத்திருக்கின்றார், அதையும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, கிராமப் பகுதிகளுக்குச் செல்லும்போது குடிநீர் ஊருணிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தரவேண்டும் என்று கேட்கின்றார்கள். ஏதாவது ஒரு திட்டத்தில் ஊருணிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்ட சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பேரூராட்சிகளிலே இருக்கக்கூடிய குளங்களைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு அவையெல்லாம் பராமரிக்க முடியாமல் இருக்கின்றன. அந்தக் குளங்கள்மூலமாக நிறைய மழை நீர் சேகரிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு எந்த சிறப்பு நிதியும் கிடையாது. பேரூராட்சிகளில் இருக்கக்கூடிய குளங்களைப் பராமரிப்பதற்காகச் சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்து, எவ்வாறு நீங்கள் கிராமங்களுக்குச் செய்து கொடுக்கின்றீர்களோ, அதேபோன்று பேரூராட்சிகளிலே இருக்கக்கூடிய குளங்களையும் பராமரிப்பதற்குச் சிறப்பு நிதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



பேரூராட்சிகளைப் பொறுத்தவரையிலே, அங்குள்ள நடுநிலைப் பள்ளிகள், ஒன்றியங்களினுடைய control-ல் இருக்கின்றன. அவர்களுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றன. அதனால் கட்டடங்கள் கட்டும்பொழுதோ, சுற்றுச் சுவர் கட்டும்பொழுதோ, பழுதுநீக்கம் செய்யும்பொழுதோ, ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள், பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கிறார்கள். எனவே, பேரூராட்சிகளில் இருக்கக்கூடிய அரசுப் பள்ளிகளை எல்லாம் பேரூராட்சிகளினுடைய கட்டுப்பாட்டின்கீழே கொண்டு வந்துவிட்டால், அவர்களுடைய பள்ளிகளை அவர்களே பராமரித்துக் கொள்வதற்கான நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு இடங்களில் நான் கேட்டவற்றைச் சொல்கின்றேன். எனவே, தாங்கள் அதை ஆலோசிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலே, பள்ளிகளுக்குக் குடிநீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் கட்டணம் வசூலிக்கப்படுவதாகக் கூறுகின்றார்கள். அவ்வாறு கட்டணம் வசூலிக்கப்படுவதை நிறுத்தி, பள்ளிகளுக்கு இலவசமாகக் குடிநீர் கொடுப்பதற்கு தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம், நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 12-05

தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகள் சார்பாக இந்த அரசுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மிகப் பெரிய ஒரு சாதனையை, இதுவரையில் யாரும் செய்யாத ஒரு சாதனையை, 'நிறை குடம் தளும்பாது' என்பதற்கிணங்க, நமது முதல்வர் அவர்கள் செய்திருக்கின்றார்கள். அதை அவர்கள் வெளியில் சொல்லிக்கொள்ளவில்லை. கிட்டத்தட்ட 70 ஆண்டுக் காலமாக புனரமைப்புச் செய்யப்படாத கல்லணைக் கால்வாயைப் பழுதுநீக்கம் செய்வதற்கு, நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்

150 கோடி ரூபாய் இப்பொழுது நிதியொதுக்கீடு செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை 70 ஆண்டுக் காலத்திலே கடைமடைப் பகுதி விவசாயிகளாகிய நாங்களெல்லாம், தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள், குறிப்பாக, பட்டுக்கோட்டை, பேராவூரணியைச் சார்ந்தவர்களெல்லாம் பல்வேறு பிரச்சினைகளை, பல கஷ்டங்களை அனுபவித்தவர்கள். இந்தத் திட்டத்தின்மூலமாக அந்தப் பகுதி மக்களுடைய, விவசாயிகளினுடைய பிரச்சினைகள் முழுவதுமாக தீரப்போகின்றன. எனவே, அப்படிப்பட்ட ஒரு சாதனையை, மிகப் பெரிய சாதனையைச் செய்த நமது மரியாதைக்குரிய முதல்வர் அவர்களுக்குத் தஞ்சை மாவட்ட விவசாயிகளினுடைய சார்பாகவும், தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய எங்களுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும், என்னுடைய மனமார்ந்த நன்றியினையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்தான் உள்ளன, வேறொன்றுமில்லை. இரண்டு, மூன்று கோரிக்கைகள் மட்டும் பட்டுக்கோட்டைக்காக வைக்க விரும்புகிறேன். அதைமட்டும் நான் தெரிவித்துவிட்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை பகுதி, மதுக்கூரில் இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டுமென்று மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பித்திருக்கின்றேன். எங்களுடைய மாவட்டத்தினுடைய மூத்த அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் அதற்குப் பரிந்துரையெல்லாம் கொடுத்திருக்கின்றார்கள். மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கை. எனவே, அதைத் தவிர்த்துவிடாமல், அதை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றிக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மதிப்புமிக்க நமது மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பட்டுக்கோட்டையிலே ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதையும் நிச்சயமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு, ஆனால் உங்களுடைய சிறப்பான பணி என்பது இந்தத் தமிழகத்திற்கு சற்றுக் காலதாமதமாகக் கிடைத்திருக்கிறது என்பதுதான் எனக்கு வருத்தமே தவிர, நல்ல முறையில் உங்கள் செயல்பாடுகள் அமைய வேண்டுமென்றும், அதற்கு என்றும் எங்கள் ஒத்துழைப்பு இருக்கும் என்றும் கூறி, வாழ்த்தி, வணங்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில் ஓர் இனத்தின் உயர்வுக்காக, ஒரு மொழியின் வளர்ச்சிக்காக, செழுமைக்காக 70 ஆண்டுகளுக்கும் மேலாக தொய்வின்றி தன் வாழ்க்கையையே அர்ப்பணித்துப் பணியாற்றி வரும், ஈடு இணையற்ற தலைவர், 'இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டும் முதல்வர்' என்று அன்னை சோனியா காந்தி அவர்களால் பாராட்டப்பெற்ற பாரத நாட்டின் முதுபெரும் தலைவர், ஆட்சிப் பொறுப்புக்கு வரும்பொழுதெல்லாம் வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்தி வரும் வாழும் வள்ளுவர், எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற, தமிழகத்தை ஐந்தாம் முறை ஆளும் பொற்கால முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) வரிச் சுமை இல்லாத நிதிநிலை அறிக்கை தந்து, தலைவர் கலைஞருடைய ஆலோசனையின்பேரிலே வரலாற்றுச் சாதனைகள் பலவற்றை நிதிநிலை அறிக்கையிலே தந்து, நம் நெஞ்சத்திலே நிறைந்திருக்கிற மாண்புமிகு நிதி அமைச்சர், அவை முன்னவர் எங்கள் இனமானப் பேராசிரியப் பெருந்தகை அவர்களே, (மேசையைத்தட்டும் ஒலி) எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் உதவி செய்கிற எங்கள் குடும்பத்தின் ஆபத்பாந்தவராகத் திகழ்கிற மின்சாரத் துறை அமைச்சர் அருளாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களே, அறிவாலயம் அடையாளங்காட்டிய ஆயிரம் விளக்கு, ஆயிரம் விளக்கு இந்த தமிழ்நாட்டிற்குத் தந்த கலங்கரை விளக்கு, ஒரு கோடி கழகத் தொண்டர்களுக்குக் குல விளக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் போன்றோருக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய், சுதந்திரத்திற்குப் பிறகு தமிழக அரசில் உள்ளாட்சித் துறையில் இரு

ஆண்டுகளில் யாரும் நிகழ்த்த முடியாத வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கிற எங்கள் பொது வாழ்வின் வழிகாட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) தியாகத்தில் பூத்த குறிஞ்சி மலர், எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற எங்கள் வழிகாட்டி, எங்கள் இனிய தளபதி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் பெருமக்களே, அனைவருக்கும் வணக்கம்.

இப்போது இருக்கிற பிரதான எதிர்க்கட்சியினருக்கும் மனச்சாட்சி இருக்கிறது என்பதை அடையாளங்காட்டுகிற வகையில் இந்த அவையிலே அமர்ந்திருந்தால் இந்தத் துறையின்மீதான வாதத்திலே எந்தக் குறையும் சொல்ல முடியாது என்கிற காரணத்தினால், குறை இல்லாமல் ஒரு துறை நிறைவு பெற்று நடக்கிறது என்கிற காரணத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) அவையிலே இருப்பதற்கு மனம் இல்லாமல் வெளியேறி இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிவோம்.

> “இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
> ததனை அவன்கண் விடல்”

என்கிற வள்ளுவன் குறளுக்கேற்ப, ஓர் அரசுக்கு எத்தனையோ துறைகள் இருந்தாலும் இந்த மாநிலத்திலே வாழ்கிற அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளை, அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுகிற ஒரு முதுகெலும்பான துறை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை என்று சொன்னால் அது நிச்சயமாக மிகையாகாது.

பிற்பகல் 12-10

இந்த மாநிலத்தின் தலைநகரமான சென்னையிலே ஐந்தாண்டுக் காலம் மேயராகப் பொறுப்பேற்று, 10 பாலங்களை அறிவித்து, அதிலே 9 பாலங்களைக் கட்டி முடித்து, ஒரு காலத்திலே சீரழிந்து இருந்த சென்னையைச் சிங்காரச் சென்னையாக மாற்றிய பெருமை, நம்முடைய தளபதி அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் மேயராக இருந்து பணியாற்றிய அந்தப் பணிக் காலம்தான் இப்போது அனைத்திந்திய அளவிலே இருக்கிற மக்கள் வாழ்வதற்கான சிறந்த நகரம் சென்னை என்று சொல்கிற அளவிற்கு நமது சென்னை சிறப்புப் பெற்றிருக்கின்றது என்பதை நான் முதலிலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி இந்தத் துறையிலே பல பயிற்சிகளைப் பெற்று, பரிணாம வளர்ச்சி பெற்றிருக்கிற



நம்முடைய தளபதி தலைமையிலே இயங்குகிற இந்தத் துறை, இரண்டாண்டுகளில் நாம் மகிழத்தக்க வகையில், வியக்கத்தக்க வகையில், பல சாதனைகளை, சரித்திர சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதிலே குறிப்பாக, கடந்த 10 ஆண்டுகளில் உள்ளாட்சி மன்றங்களிலே இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டு, உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றபோது, தென் பாண்டி மண்டலத்தில் உள்ள கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல் போன்ற தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்காக ஒதுக்கப்பட்ட பஞ்சாயத்துகளில் தேர்தல், ஒரு ஆட்சியாலேயே நடைமுறைப்படுத்தப்பட முடியாமல், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்தப் பணியிலே தொடர முடியாத ஒரு அவல நிலை இருந்ததை இந்த நாடு அறியும். நம்முடைய தளபதி இந்தத் துறைக்குப் பொறுப்பேற்ற பிறகு, 10 ஆண்டுகள் சுழற்சி முறையிலே அது பொதுத் தொகுதியாக மாற வேண்டிய நிலையிலே இருந்தபோதுகூட அதை ஒரு சூளுரையாக ஏற்று, நம்முடைய தலைவர் முதல்வர் கலைஞருடைய மேலான அனுமதியைப் பெற்று, சுழற்சி முறையிலிருந்து இந்த மூன்று ஊராட்சிகளுக்கும் விதிவிலக்கை தன் துறைமூலம் பெற்று, எல்லாச் சமுதாய மக்களும் ஏற்று வாக்களித்து, அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த சகோதரர்கள் இப்போது ஊராட்சி மன்றத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சாதனையை இந்தத் துறை நிகழ்த்தியிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் பிரதிநிதிகளுக்கு உடன்பாடாக இருந்த, ஒரு காலத்திலே அவர்களை எதிர்த்துக்கொண்டிருந்த எல்லாப் பிரிவு மக்களையும் சென்னைக்கு அழைத்து வந்து, முதல்வர் அவர்களைப் பாராட்ட வழிவகை செய்து, தன் துறையின்மூலம் சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்து, ஒரு காலத்திலே கலவரம் நிறைந்து, அமைதியிழந்த பகுதியாக இருந்த தென் பகுதியை, 1996-லே ஆட்சிக்கு வந்த நம்முடைய கலைஞர் அவர்கள் சமத்துவபுரங்களை உருவாக்கி சமூக நல்லிணக்கத்திற்கு எப்படி விதை ஊன்றினாரோ அதைப்போல, நம்முடைய தளபதி அவர்கள் இந்தக் கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல் தேர்தலை நடத்தி, சமூக நல்லிணக்கத்தை ஒரு மரமாக வளர்த்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய தளபதியினுடைய இந்தத் துறை, இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் போர்க்கால வேகத்திலே செயல்பட்டு வருகிறது என்று சொன்னால் எதிரிகள்கூட அதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அவருடைய துறையிலே நூற்றுக்கணக்கான சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பிட்ட, ஒருசிலவற்றை மட்டும் நேரத்தின் அருமை கருதி நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழகத்தின் தென் பகுதியிலே பல காலக்கட்டங்களில் மழை மறைவுப் பிரதேசமாக இருக்கிற பகுதிகளான, குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடான, வறண்ட மாவட்டங்களான இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்ட மக்களின் தாகம் தீர்ப்பதற்காக, 616 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே குடிநீர்த் திட்டம் வகுத்து காவிரித் தண்ணீரை அங்கே கொண்டு செல்வதற்கான திட்டத்தை வகுத்த நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களை அழைத்து, பரமக்குடியிலே துவக்க விழா நடத்தி, இரண்டாண்டுகளில் அந்தத் திட்டத்தை முடிப்பதாக உறுதி கூறி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, உறுப்பினர்கள் please அமைதி காக்க வேண்டும்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** இருபதே மாதங்களில் அதை நடத்தி முடித்த சாதனை, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய புகழ் மகுடத்திலே தளபதியாலே பொருத்தப்பட்டிருக்கிற வைரக் கல் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

1994 ஆம் ஆண்டில் சிறிய அளவில் திட்டமிடப்பட்டு, பிறகு நடைமுறைப்படுத்த முடியாமல், கடந்த ஆட்சியாளர்களால் கைவிடப்பட்ட திட்டத்தை, நம்முடைய தளபதி பொறுப்பேற்ற இந்த இரண்டே ஆண்டுகளில், தலைவருடைய வழிகாட்டுதலில், அவருடைய துணையோடு இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்தி, தன் துறையைச் சார்ந்த சிறப்புமிக்க, ஆற்றல்மிக்க அதிகாரிகளையும் உடன் அழைத்துக்கொண்டு ஜப்பானுக்குச் சென்று, ஐந்தே நாட்களில், 1,334 கோடி ரூபாயை நீண்டகாலக் கடனாகப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்ட மக்களின் நீண்டகாலக் கனவை, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தந்து நனவாக்கியிருக்கிற நம்பிக்கை நட்சத்திரம், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர்



எங்கள் தளபதி அவர்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த கால ஆட்சியில், மத்திய அரசில் உள்ள நம் மாநிலத்தின் மண்ணின் மைந்தர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்காக 1,000 கோடி ரூபாயை அக்கறையோடு அறிவித்தார்கள். எல்லாத் திட்டங்களிலேயும் கும்பகருணத் தூக்கம் போட்ட கடந்த கால ஆட்சி, இதையும் கிடப்பிலே போட்டது. இப்போது பொறுப்பேற்றிருக்கிற நம்முடைய தளபதி அவர்கள், தலைநகர் புதுடெல்லிக்குச் சென்று, மத்திய நிதியமைச்சரைச் சந்தித்து, அந்த 1,000 கோடி ரூபாய் நிதியைப் பெற்று, முதற்கட்டமாக இந்த ஆண்டு அந்தப் பணியினைத் தொடங்க, நிதிநிலை அறிக்கையிலே 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டக்கூடிய ஒரு விஷயம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைநகரமான சென்னை, இப்போது நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். தலைவர் கலைஞருடைய இந்த ஆட்சியிலே, பன்னாட்டு, இன்னாட்டுக் கம்பெனிகளோடு அவர் போடுகிற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக கையெழுத்தாக, நான்கு திசைகளிலும் சென்னை இப்போது விரிவடைந்து வருகிறது. அதைக் கருத்திலேகொண்டு, தொலைநோக்குப் பார்வையோடு நம்முடைய தளபதி அவர்கள், சென்னை மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில், மீஞ்சூர் பகுதியிலே கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை அறிவித்துத் தொடங்கி வைத்ததுடன், அடிக்கடி ஆய்வு மேற்கொண்டதன் காரணமாக, போர்க்கால வேகத்தில் இன்றைக்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும், அடுத்த ஆண்டு முதல் இந்தத் திட்டத்தினால் சென்னை நகர மக்களுக்குக் கூடுதல் குடிதண்ணீர் கிடைக்க வழிவகை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதைப்போல, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் குடிதண்ணீர்ப் பிரச்சினை எதிர்காலத்தில் இல்லையென்கிற அளவில், குடிநீர் வழங்கல் துறையில் இப்போது புயல் வேகத்தில், நம்முடைய தளபதி அவர்களுடைய வழிகாட்டுதலிலே பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற நெல்லை மாவட்டத்தில், அதிலும் குறிப்பாக

என்னைத் தேர்ந்தெடுத்த தென்காசி தொகுதியிலே, கடந்த ஐந்தாண்டுக் கால கலைஞருடைய ஆட்சியிலே, 1996-லிருந்து 2001 வரை, கிட்டத்தட்ட 70% பகுதிகளுக்குத் தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் வழங்கப்பட்டது. எஞ்சியிருக்கிற 30% பகுதிகளுக்கு இந்த இரண்டு ஆண்டுகளில், நம்முடைய அன்புத் தளபதி அவர்கள் என் தொகுதியிலே மட்டும், 110 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தந்ததன்மூலம் இங்கேயிருக்கிற நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா, எங்கள் அன்புச் சகோதரர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய தொகுதியிலும் இப்போது ஆற்றுத் தண்ணீர் இல்லாத கிராமமே இல்லை என்ற நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட கடையநல்லூர், தென்காசி தொகுதிகள் தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் பெறுவதில், தளபதியினுடைய கருணையால் தன்னிறைவுபெற்றத் தொகுதிகளாக உருவாகியிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் நன்றியோடு இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

கிராமத்திலேயிருக்கிற அடித்தள மக்களுக்காக, அண்ணல் காந்தியடிகள் இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தபோது சொன்ன பொன்மொழிகள் இப்போது நினைவுக்கு வருகிறது. “என்றைக்குக் கிராமங்கள் தன்னுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றனவோ, அன்றைக்குத்தான் நாம் சுயராஜ்யம் பெற்றதற்கு உண்மையான பொருள்” என்று குறிப்பிட்டார்கள். காந்தி கண்ட அந்தக் கனவை இப்போது முழுமையாக நனவாக்குகிற பணியில், நம்முடைய தளபதி அவர்களுடைய தலைமையிலே இப்போது இயங்கிக் கொண்டிருக்கிற இந்த ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அசுர வேகத்திலே பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-20*

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தியத் திருநாட்டிற்கே மாநில சுயாட்சிக்கு வழிகாட்டிய தலைவர், அதற்கு வித்திட்ட தலைவர், அவருடைய கனவிலேதான் இப்போது கூட்டாட்சித் தத்துவம் இந்தியாவிலே வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, தமிழகத்திலே இருக்கிற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கிட வேண்டி, நம்முடைய தளபதி அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றபோது, அவர்களது தலைமையிலே உயர்நிலைக் குழு ஒன்றினை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்



அறிவித்தார்கள். அதற்காக நம்முடைய தளபதி தலைநகரத்திலே, குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறைக்குள்ளே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வைத்து ஆராய்ச்சி செய்து அறிக்கையைத் தாக்கல் செய்யவில்லை. தமிழ்நாடு முழுவதும் 29 மாவட்டங்களுக்கும் பயணம் செய்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், மாநகராட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்தினுடைய குழுத் தலைவர்கள், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், அந்தந்த மாவட்டங்களிலே இருக்கிற, மாவட்ட ஆட்சியர்கள், தலைமைப் பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள், அந்தந்தத் துறையிலே இருக்கிற உயர் அதிகாரிகள், இவ்வளவுப் பேரையும் அழைத்து வந்து, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் அனைவருடைய குறைகளையும் கேட்டறிந்து, ஆங்காங்கு பல நீண்டகாலத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன. உள்ளாட்சி மன்றங்களினுடைய தேவை, மக்களுக்கு இன்னும் ஆற்ற வேண்டிய பணிகளுக்காகக் கொடுக்கப்பட வேண்டிய அதிகாரங்களைப்பற்றிக் கேட்டறிந்தார்கள். அதோடு நிற்காமல், தமிழகத்தை 4 மண்டலங்களாகப் பிரித்து, ஈரோடு, திருச்சி, திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய நகரங்களில் 12,618 ஊராட்சித் தலைவர்களையும் சந்தித்து, கருத்துக் கேட்டவர்தான் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்புத் தளபதி என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதோடு, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சித் தலைவர்களை வைத்து சென்னையிலே ஒரு கருத்தரங்கு நடத்தி, அவர்களின் கருத்தும் அறியப்பட்டது. இப்படி எல்லாத் தரப்பினருடைய கருத்துகளையும் அறிந்து, புரிந்து, விவாதித்து, அனைத்துப் பிரிவினருடைய கருத்துகளையும் ஆய்வு செய்து, 10-12-2007 அன்று உயர்நிலைக் குழுவினுடைய அறிக்கை நம்முடைய நெஞ்சம் நிறைந்த முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே அளிக்கப்பட்டது. அதிலே, 39 பொருள்களில் அளித்துள்ள 99 பரிந்துரைகளிலே, நாங்கள் அறிய வருவது, இப்போது 28 பரிந்துரைகள்மீது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதர பரிந்துரைகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்பற்றிய அறிக்கை விரைவிலே வெளியிடப்படும் என்கிற நம்பிக்கை நம் அனைவருக்கும் இருக்கிறது. 12,618 கிராமங்களும் பயன்பெறும் வகையில்—இது கலைஞருடைய தேர்தல் அறிக்கையிலே இடம் பெறாத அம்சம்—அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்து, இதற்காக

ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு கிராமப் பஞ்சாயத்திற்கு 20 இலட்சம் ரூபாய் இனாமாகத் தந்து, இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் 5,046 ஊராட்சிப் பகுதிகள், ஓராண்டுக்கு 2,523 ஊராட்சிகள் வீதம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** உண்மையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தி எல்லா மாநிலங்களுக்கும் இப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஒரு வழிகாட்டியாகப் பணியாற்றியிருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தொடர்ந்து தமிழகத்திலே உள்ள 561 பேரூராட்சிகளையும் 4 ஆண்டுகளுக்குப் பிரித்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய் இனாமாக, இரண்டு ஆண்டுகளிலே 280 பேரூராட்சிகளுக்கு 140 கோடி ரூபாய் வழங்கப்பட்டதோடு, எங்கள் மாவட்டத்திலே உள்ள 36 பேரூராட்சிகளில், 18 பேரூராட்சிகளிலே 9 கோடி ரூபாயில், இந்த இரண்டு ஆண்டுகளிலே தொடங்கப்பட்ட பணிகள் நிறைவடையும் நிலையிலே இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நகராட்சிகள், மாநகராட்சிகளில் வாழும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மனிதாபிமானத்தோடு, தாயுள்ளத்தோடு தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகள், தமிழக அரசிடம் பெற்று, நிலுவையில் இருந்த கடன் மற்றும் வட்டித் தொகை மொத்தம் 760 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்த, தாயுள்ளம் கொண்ட ஓர் அமைச்சராக தளபதி அவர்கள் இன்றைக்குச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** இதன் அடிப்படையில், திருநெல்வேலி மாவட்டத்திற்கு வட்டித் தொகையாக மட்டும் 30 கோடியே 34 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. தளபதி அவர்களுடைய கருணையால் திருநெல்வேலி மாநகராட்சிக்கு மட்டும் 17 கோடியே 23 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக எங்கள் மாவட்டத் தலைநகரங்களிலே வாழ்கிற மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இதோடல்லாமல், அவரது துறையிலே இந்த இரண்டு ஆண்டுகளில் வேலூர், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய இந்த 3 நகராட்சிகள், மாநகராட்சிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஈரோடு மாநகராட்சியாக உயர்த்தப்பட்டிருப்பது, 90 ஆண்டுகளுக்கு முன்பு தந்தை பெரியார் கண்ட கனவு இப்போது தளபதி அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆசீர்வாதத்தோடு நனவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தளபதி அவர்களுடைய கருணையோடு, தென் பகுதியில் துறைமுக நகராக உயர்ந்து வருகிற, தலைவர் கலைஞருடைய உழைப்பால், ராஜ தந்திரத்தால்—இப்போது சிலர் சில துரோகச் செயல்களிலே ஈடுபட்டதன் காரணமாக தடை செய்யப்பட்டிருக்கிற சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், தூத்துக்குடி தென் பகுதியிலே ஒரு மிகப் பெரிய நகரம் என்ற அடிப்படையிலே, தூத்துக்குடியும் நாகர்கோயிலும் மாநகராட்சிகளாக நம்முடைய தளபதி காலத்திலே உயர்வுபெறும் என்று நாங்கள் மனதார நம்புகிறோம். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். தொகுதிப் பிரச்சினை...

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒரே ஒரு நிமிடம் தருகிறேன். தொகுதி குறித்த பிரச்சினையை முன்பே பேசியிருக்க வேண்டும். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** 'தொட்டதெல்லாம் பொன்னாகும்' என்ற ராசி எங்கள் தளபதிக்கு உரித்தானது. அந்த வகையிலே தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், நம்முடைய தளபதி அவர்களுடைய முழு ஈடுபாட்டால் அகில இந்திய அளவில் தமிழகத்திற்குச் சிறப்பான பெயரைப் பெற்றுத் தந்துள்ளது. இந்தத் திட்டத்தால் இதுவரையில் 10 மாவட்டங்களில் 600 கோடி ரூபாய் இந்த இரண்டாண்டுகளிலே செலவழிக்கப்பட்டிருப்பது ஒரு மகத்தான சாதனையாகும். இதேபோல, மத்திய அரசின் மற்றொரு திட்டமான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக 4,500 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு, மத்திய அரசின் அனுமதியோடு இப்போது சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை தமிழக வரலாற்றில் மத்திய அரசிடமிருந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இவ்வளவு பெரிய தொகையை எந்த அமைச்சரும் பெற்றதாக வரலாறு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இன்னும்

இந்தத் துறையினுடைய சாதனைக்கு ஒரேயொரு சான்று, கடந்த ஆட்சிக் காலத்திலே ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டத்தின்வாயிலாக செலவழிக்கப்பட்ட தொகை 3 கோடி ரூபாய். நம்முடைய தளபதி பொறுப்பேற்றதற்குப் பிறகு, 2007 ஆம் ஆண்டிலே அது 111 கோடி ரூபாயாக உயர்ந்து, தற்போது 616 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஊரக வேலை உறுதித் திட்டத்திலே பயன்பெறுவோரில் 85 சதவிகிதம் பெண்கள் என்பதையும், அதிலே 59 சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் குடும்பங்களைச் சார்ந்த பயனாளிகள் ஆவார்கள் என்பதையும், முன்பு இருந்த ஆட்சியிலே 40 ரூபாய் இந்தத் திட்டத்திலே ஊதியம் பெற்றவர்கள் இன்றைக்குத் தளபதியுடைய கருணையால் 80 ரூபாய் ஊதியம் பெறுகிறார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதைப்போல பல காரியங்கள். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். தொகுதிப் பிரச்சினை குறித்துப் பேச வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களா? முன்பே சொல்லியிருக்க வேண்டுமல்லவா?

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** தென்காசி நகரத்திற்கு ஒரு புறவழிச் சாலை வேண்டும். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும் தெரியும், அவர் பேசும்போதும் வலியுறுத்துவார். எங்கள் மாவட்டத்திலே ஆறு மாதங்களுக்கு தென்னிந்தியாவே வந்து போகிற ஒரு திருத்தலம் தென்காசியும், குற்றாலமும் ஆகும். எனவே, ஒரு புறவழிச் சாலைக்கு நகராட்சி தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. தளபதியினுடைய காலத்திலே அந்தப் புறவழிச் சாலை வரும், இந்த ஆட்சியிலே வரவில்லை என்றால், வேறு எந்த ஆட்சியிலும் வராது என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அதைப்போல, தலைநகரமான நெல்லை, பாளையங்கோட்டை நெல்லை High Road ஒன்றையே நம்பி இருக்கிறது. தலைவருடைய ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்பட்ட திட்டங்களால் இப்போது திருநெல்வேலி இரண்டு மடங்கு வளர்ந்து இருக்கிறது. எனவே, நெல்லை—பாளையங்கோட்டையை இணைக்கின்ற வகையிலே ஒரு Bye-pass சாலை வேண்டும்.



தென்காசியிலே பல இடங்களிலே நீதிமன்ற வளாகங்கள் இருப்பதால், பொதுமக்கள் அலைக்கழிக்கப்பட்டு வருகிறார்கள்; வழக்கறிஞர்களுக்கும் சங்கடம் இருக்கிறது; எனவே, தென்காசியிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வர வேண்டும். என் தொகுதியில் உள்ள பாவூர்சத்திரம், திருநெல்வேலி—கொல்லம் மெயின் சாலையில் இருக்கிறது. அதிலே இருக்கிற இரயில்வே கடவில் மேம்பாலம் ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பாவூர்சத்திரத்திலே வற்றல், காய்கறி, உணவு தானியங்கள் பாதிக்கப்படாமல் இருக்க ஒரு குளிரூட்டும் நிலையம் தேவை. குற்றாலம் பேரூராட்சிகளுக்குப் பாத்தியப்பட்ட அருவிகளுக்கு—நம்முடைய துணைச் சபாநாயகர் அவர்களும் வந்த பகுதி, இந்த ஆண்டும் அவர் வரவிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படியெல்லாம் சொல்லி time extension கேட்பது நியாயமா?

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** நிறைய அருவிகளுக்கான அணுகுச் சாலைகள், வனத் துறையின் கைவசம் இருக்கின்றன. அதனாலே துறைகளுக்குள்ளே பல நேரங்களிலே, season நேரத்திலே மோதல் வருகிறது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆட்சியினுடைய இதயமாக இருக்கிற அவர்கள், நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை அழைத்துப் பேசி இந்த அருவிச் சாலைகளையெல்லாம் உள்ளாட்சி நிருவாகத்திற்கு மாற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றாலத்திலே ஒரு சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் வரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) தமிழ்மொழிக்காக வாழ்ந்த ரசிகமணி T.K.C. கடைசி காலத்திலே வாழ்ந்த இடம் என் தொகுதிக்குட்பட்ட குற்றாலம். அவர் வாழ்ந்த இல்லம், தலைவருடைய ஆட்சியிலே இப்போது நூலகமாக, பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் நூல்நிலையமாக இருக்கிறது. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் தமிழுக்காக உழைத்த பெருமக்களுக்குப் பல சிறப்புகளைச் செய்திருக்கிறார்கள். ரசிகமணி T.K.C. அவர்களுக்கும் மத்திய அரசிடத்திலே சொல்லி, அவருடைய அஞ்சல் தபால்தலையை உருவாக்கித் தர வேண்டும்.

தென்காசி நகரத்தின் எல்லையிலே இருக்கிற ஆசாத் நகர் பாலம் குறித்து, வருகிற 28 ஆம் தேதி நல்ல அறிவிப்பை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தர இருக்கிறார்கள் என்று நான் அறிய வருகிறேன். அதற்காக அவருக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். எத்தனையோ பிரச்சினைகளைச் சொல்ல இருந்தாலும், கால அளவைக் குறைத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறீர்கள். தென்பாண்டி மண்டலத்தில் தலைவர் கலைஞருடைய புகழ் வளர்க்க அவருடைய மறுபதிப்பாக இருக்கிற தளபதியுடைய தலைமையிலே நாங்கள் பணிகள் ஆற்றுவோம்.

தலைவர் கலைஞர் அவர்களுக்கு இருக்கிற பகையை எதிர்காலத்தில் முடிப்போம் என்பதை நிறைவாகச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர், எங்கள் அன்புச் சகோதரர், குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், எனது உரையில் இந்தக் கோரிக்கையையும் சேர்க்கச் சொல்லியிருக்கிறார்கள். குன்னூர் நகராட்சிப் பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்யப்பட வேண்டுமென்பதையும் தளபதி அவர்களுடைய மேலான கவனத்திற்கு, அவருடைய சார்பிலே சொல்லிக்கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில், இந்த இரண்டு ஆண்டுகளில், குறிப்பாக எங்கள் தளபதியினுடைய கருணையால், 50 ஆண்டுக்கால, நூறாண்டுக்காலத் தேவைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதற்காக அவர் இடுகின்ற பணிகளுக்கு, என்ன விலையையும் கொடுப்பதற்குத் தயார் என்கிற உறுதியோடு நாங்கள் பணியாற்றுவோம் என்பதை உறுதிபடச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு நேரம் பேச அனுமதி தந்த சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, நிறைவு செய்கிறேன், வணக்கம்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசுகின்றபோது, தென் மாவட்டங்களில் கலைஞர் அவர்களுக்கு இருக்கின்ற 'எதிர்ப்பை'



என்று சொல்லி, அதை முடிப்போம் என்று சொன்னார்கள். அது அரசியல் எதிர்ப்பே தவிர, வேறல்ல. தென் மாவட்டங்களில் இருக்கின்ற மக்களுடைய கனிவான அன்பும், ஆதரவும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எப்பொழுதும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுகின்ற நல்வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய வரலாற்றில் நகராட்சி நிருவாகம், உள்ளாட்சித் துறை போன்றவற்றிற்கு இதுவரையில்லாத ஒரு முக்கியத்துவம், கடந்த இரண்டாண்டுகளாகக் கிடைத்து, இத்துறை தமிழகத்தினுடைய முதல்வர் கையில் இருக்கக்கூடிய துறையோ என்று சொல்லக்கூடிய அளவிற்கு நல்ல முக்கியத்துவத்தைப் பெற்று, பல முன்னேற்றங்களைக் கண்டிருக்கிற இந்தத் துறைக்கு என்னுடைய வாழ்த்துக்களை முதலிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய அமைச்சர், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நன்றியையும் நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, ஆண்டாண்டுக் காலமாக இருக்கும் எங்கள் வேலூர் பகுதியினுடைய கோரிக்கையை, அதை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வென்றெடுப்பதற்கு அடித்தளம் அமைத்து, அதை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், ஒரு கோரிக்கை. ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நீங்கள் இப்பொழுது தருமபுரி, கிருஷ்ணகிரி வரை கொண்டுவந்திருக்கிறீர்கள். ஃபுளோரைடு தண்ணீரை அவர்கள் மட்டும் குடிக்கவில்லை. எங்களுடைய மாவட்ட மக்களும்

ஃபுளோரைடு கலந்த தண்ணீரைக் குடித்துக்கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், தோல் பதனிடும் தொழிற்சாலைகளுடைய கழிவுநீரையும் சேர்த்துக் குடிப்பதற்கு இலாயக்கற்ற தண்ணீரைப் பல இடங்களிலே குடித்துக் கொண்டிருக்கிற, எங்களுடைய வேலூர் மாவட்டத்து மக்களுடைய தாகத்தைத் தணிக்கின்ற வகையில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஜப்பானுக்கே சென்று, நிதியுதவியைப் பெற்று, ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இப்பொழுது நல்லதொரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். 1,500 கோடி ரூபாய் என்பதை, நபார்டு வங்கியையோ அல்லது உலக வங்கியையோ அணுகினால் இப்பொழுதே நிறைவேற்றினால், 1,000 கோடி ரூபாயிலே முடித்துவிடலாம். இதிலே 500 கோடி ரூபாயை மிச்சப்படுத்தலாம். ஆகவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வேலூருக்கு நீட்டிப்பதற்கு இப்பொழுதே நீங்கள் நடவடிக்கையை எடுத்து, செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்பொழுது நம்முடைய நகராட்சி நிருவாகம், ஒரு அரசாணையைப் பிறப்பித்து, உள்ளாட்சித் துறை, ஆங்காங்கே இருக்கக்கூடிய நகராட்சிகள், தேவைப்பட்டால் வரியை உயர்த்திக்கொள்ளலாம்; ரெசிடென்ஷியலுக்கு 25 சதவிகிதம், அதேபோல, 100 சதவிகிதம் இண்டஸ்ட்ரியலுக்கு, அதேபோல, கமர்ஷியலுக்கு 150 சதவிகிதம் என்று நீங்கள் அறிவித்துவிட்டீர்கள். ஆனால், இங்கே மேல்மாடத்தில் அமர்ந்துகொண்டிருக்கக்கூடிய, சென்னை மாநகராட்சியினுடைய மேயர் அவர்கள், இந்த ஆண்டு சென்னைக்கு வரியை உயர்த்த மாட்டோம் என்று ஒரு நல்ல அறிவிப்பைச் செய்து நல்ல பெயரைத் தட்டிச் சென்றிருக்கிறார்கள். அதேபோல, எல்லா நகராட்சிகளும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இப்பொழுது இலவச டி.வி., அதேபோல, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்றெல்லாம் பல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கின்ற இந்த வேளையில் நீங்கள், ரெசிடென்ஷியலுக்கு 25 சதவிகிதம், இன்டஸ்டிரியலுக்கு 100 சதவிகிதம், கமர்ஷியலுக்கு 150 சதவிகிதம் என்று பெரிய பூதத்தைக் கிளப்பிவிட்டு, வரியை உயர்த்த முற்பட்டால், நிச்சயமாக மக்கள் அதைத் தாங்கிக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. ஏற்கெனவே, அருமை அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள் இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தபோதே, வரியை நிறைய உயர்த்திவிட்டார்கள். அதையே கட்ட முடியாமல், பல நகராட்சிகளில் இன்னும் 50, 60 சதவீதம் வரி வசூலாகாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதை ஒழுங்காக வசூல் செய்தாலே, அவர்களுடைய இலக்கை எட்டிவிட முடியும்.



பிற்பகல் 12-35

அதைவிட, நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நிதி ஆதாரத்தை மிக எளிதில் பெற்றுவிடலாம். நகராட்சிகளில், கிட்டத்தட்ட 40 சதவீதம் வீடுகள் புறம்போக்குகளில் கட்டப்பட்டு வரி விதிப்பே இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த வீடுகளைப்பற்றி யாருமே சிந்திக்காமல் இருக்கிறார்கள். நான் நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், வரி விதிப்பு செய்யாமல் நகராட்சி எல்லைக்குள் இருக்கக்கூடிய, பேரூராட்சி எல்லைக்குள் இருக்கக்கூடிய அத்தனை வீடுகளுக்கும் அவர்கள் வரி கட்டத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், நீங்கள் புறம்போக்கில் கட்டியிருக்கிறீர்கள்; ஆகவே, நாங்கள் வரி வசூலிக்க மாட்டோம்; assess செய்ய மாட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற காரணத்தினாலேயே இப்பொழுது பெரிய வரி இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, வரியை உயர்த்துவதைவிட, அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, புதிதாகப் புறம்போக்கில் வீடு கட்டியிருக்கிற அத்தனை பேருக்கும் வரி விதிப்பைச் செய்தாலேயே, போதிய அளவிற்கு உங்களாலே நிதி ஆதாரத்தைப் பெற முடியும் என்கிற கருத்தை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, regularisation ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து பல பேர் அதனாலே பயன் பெற்றார்கள். இருந்தாலும்கூட, சென்னையைப் பொறுத்தளவில் ஏற்கெனவே அதற்காக 4 சட்டங்கள் இயற்றப்பட்டு, regularisation of building-லே இப்பொழுது உயர் நீதிமன்றம் தலையிட்டு, உச்ச நீதிமன்றமும் தலையிட்டு இருக்கின்றது. பொதுவாகச் சட்டத்தை இயற்றக்கூடிய அதிகாரம் படைத்தவர்கள் நாம். ஒரு சட்டமன்றம். சட்டமன்றம் இயற்றிய அந்தச் சட்டத்திற்குத் தகுந்தாற்போல்தான் நீதிபதிகள் உத்தரவிட வேண்டுமேயொழிய, நீதிபதிகள் தீர்ப்பு வழங்க வேண்டுமேயொழிய, அவர்களே Judicial Activism என்று அதிகாரத்தைத் தங்களுடைய கையில் எடுத்துக்கொண்டு, இந்தக் கட்டடத்தை இடிக்க வேண்டும்; அதை

இடிக்க வேண்டுமென்றெல்லாம் உத்தரவிடுகிறார்கள். இப்பொழுது சிமென்ட் விற்கிற விலையில், மணல் விற்கிற விலையில், கம்பி விற்கிற விலையில், அதை எவ்வளவுக் கஷ்டப்பட்டு அவர்கள் கட்டியிருப்பார்கள்? எல்லாவற்றையும் நீங்கள் ஒரு நொடிப்பொழுதில் இடித்துத் தள்ளி, அவர்களுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்வதைவிட, அதை நீங்கள் regularise செய்து, உரிய வருவாயைப் பெற்றுவிட்டீர்களேயானால் இனிமேல் மேலும் அப்படிப்பட்ட unauthorised buildings வராமல் இருப்பதற்கான நடவடிக்கையை இப்பொழுதே எடுத்துத் தடுத்துவிட வேண்டும். ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டவற்றை நீங்கள் regularise செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விளம்பரப் பலகைகளைப் பொறுத் அளவில், பல ஆண்டுகளுக்கு முன்னாலே இயற்றப்பட்ட சட்டத்திற்கு இப்பொழுது உச்ச நீதிமன்றம் ஒரு நல்ல தீர்ப்பை அளித்திருக்கிறது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் நீங்கள் விளம்பர போர்டுகளை எல்லாம் அகற்றிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், பல நகராட்சிகளில், பேரூராட்சிகளில் அந்தப் பணி இன்னும் நடக்கவே இல்லை. அவற்றை அகற்றுவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி கொடுப்பதா அல்லது நகராட்சி நிருவாகத்திற்கு அனுமதி கொடுப்பதா என்று இவர்களே ஒருவர்மேல் ஒருவர் பழியைப் போட்டு, காலம் கடத்திக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, யாரிடமும் பணம் செலுத்தாமல், மிக எளிதில் எல்லா இடங்களிலும் பெரிய, பெரிய போர்டுகளை வைத்துக்கொண்டு, Vinyl Board-கள் வந்தபிறகு பார்த்தோமானால், எல்லா மாநகராட்சிகளிலும் இந்த Vinyl Board-கள்தான் எல்லா இடங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, காவல் துறை உதவியோடு, அனுமதியில்லாமல் வைக்கப்பட்டிருக்கிற போர்டுகளையெல்லாம் தயவுசெய்து உடனே அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, அரசியல் கட்சிகளும் நிறைய போர்டுகளை வருடக் கணக்கில் வைத்திருக்கிறார்கள். அதுவும் தேவையில்லாத ஒன்று. அதற்கான நெறிமுறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ஒரு அறிவிப்புமூலமாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புக்கு நீங்கள் செயல்வடிவம் கொடுத்து ஊரையே அந்த



போர்டுகள் மறைத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, village-களிலே கோடி கோடியாகப் பணத்தைச் செலவு செய்து நீங்கள் உள்ளாட்சித் துறையின்மூலம் இப்பொழுது பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், அங்கே Panchayat Assistant தான் இருக்கிறார். அவருக்கு எந்தச் சட்ட திட்டங்களும் சரியாகத் தெரிவதில்லை. எப்பொழுதோ ஒருமுறைதான் auditing-க்கு ஆட்கள் போகிறார்கள். ஆகவே, பொதுவாக ஒவ்வொரு கிராமத்திலும் Village Administrative Officer என்று போட்டிருப்பதைப்போலவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், Panchayat Administrative Officer என்று ஒரு அலுவலரைப் போடவேண்டும். அதாவது பணத்தைச் செலவிடுகிறபோது பொறுப்பான அதிகாரிகள் அங்கே இருக்க வேண்டும். ஏனென்றால், approval பார்த்தீர்களானால், ஒவ்வொரு கிராமத்திலும் இன்றைக்கு layout approval-லே அங்கு இருக்கிற Panchayat Board President சீல் அடித்து, கையெழுத்துப் போட்டு கொடுத்துவிடுகிறார். அவருக்கு District Municipalities Act பிரகாரமும், Town and Country Planning Act பிரகாரமும், Panchayat தலைவருக்கு plan approval செய்யக்கூடிய அதிகாரமே கிடையாது. ஆனால், தமிழ்நாடு முழுவதும் இப்போது பார்த்தீர்களானால், பஞ்சாயத்துத் தலைவர்கள்தான் இந்த சீல் அடித்து plan approval செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சட்டப்படி செல்லவே செல்லாது.

இரண்டாவது, எது எதுக்கு எவ்வளவு இடம் விட வேண்டும்; ரோடுக்கு எவ்வளவு இடம் விட வேண்டும்; பூங்காவிற்கு எவ்வளவு இடம் விட வேண்டும், school-க்கு எவ்வளவு இடம் விடவேண்டும் என்ற விஷயமே தெரியாத அந்தத் தலைவர்கள் சீல் அடித்துக் கொடுத்துவிடுவது என்பது, எதிர்காலத்தில் அந்தக் கிராமம் ஒரு நகரமாக, பேரூராட்சியாக வளர்வதற்குத் தடையாக இருக்கும். ஆகவே, Panchayat Administrative Officer என்ற ஒரு concept-ஐ நீங்கள் உருவாக்கி, நல்ல சம்பளத்தை அவர்களுக்குக் கொடுத்து, பொதுவாக building plan-ஐப்பற்றி விதிமுறைகள் நன்கு தெரிந்தவர்களையெல்லாம் அந்த இடத்தில் அமர வைத்தால்தான், அந்தக் கிராமமே எதிர்காலத்தில் நல்ல நிலைப்பாட்டைப் பெற முடியும் என்பதற்காக நான் இந்தக் கருத்தை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, M.L.A. நிதி பற்றி ஏற்கெனவே சொன்னார்கள். இப்பொழுது 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் கொடுக்கிறீர்கள். அதில்கூட, ஒரு நிபந்தனை உள்ளது. 60 இலட்சம் ரூபாய்தான் அந்த எம்.எல்.ஏ. விருப்பப்பட்டு கொடுக்கலாம். மீதியை நீங்கள் விதிக்கிற நிபந்தனைகளுக்குத் தகுந்த மாதிரி கொடுக்க வேண்டும். நீங்கள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் கொடுக்கின்றீர்கள். அது போதாது. அதை 2 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் கேட்கவில்லை. என்னுடைய கருத்தை ஒத்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் நான் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு கோடி ரூபாயை, தயவுசெய்து நீங்கள் எல்லாத் தொகுதிகளுக்கும் அந்த எம்.எல்.ஏ. வளர்ச்சி நிதியைக் கொடுப்பதோடு (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்காதீர்கள். அவர்கள் விரும்பியவற்றிற்குக் கொடுக்கலாம் என்கின்ற நிலைபாட்டை நீங்கள் உருவாக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் இதற்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, எங்களால் செய்ய முடியாமல் போய்விடுகிறது.

பிற்பகல் 12-40

அதேபோல, உள்ளாட்சித் துறையில் இருந்து கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர்களை ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் தயவுசெய்து கொடுப்பதற்கு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, encroachment-ஐப் பொறுத்தவரையில், நகராட்சிகள் முழுவதும், இப்பொழுது சென்னையை எடுத்துக்கொண்டால்கூட ரோடு இருக்கிறது என்றால், அந்த ரோட்டிலே பாதி encroachment-ஆகத்தான் இருக்கிறது. எல்லோரும் கடையை நீட்டித்துக்கொண்டே இருக்கிறார்கள். இப்படி எல்லா நகராட்சிகளிலும், சென்னை மற்றும் எல்லா மாநகராட்சிகளிலும் இருக்கக்கூடிய encroachment-ஐ நீங்கள் எடுத்துவிடுவதுதான் எதிர்காலத்தில் நன்றாக இருக்கும். இல்லையென்றால் traffic jam-ஏற்பட்டுவிடும். இருக்கின்ற வண்டிகளையே நம்மால் regulate செய்ய முடியவில்லை. வண்டிகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. ஆகவே, இந்த encroachment-ஐ உடனடியாக எடுப்பதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, தண்ணீர்க் கட்டணம். எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுக்கின்றீர்கள். கலர் டி.வி.யிலிருந்து இலவசமாகக் கொடுக்கின்றீர்கள். தண்ணீர் கட்டணத்தைப் பொறுத்தவரையில், குடிநீர் வடிகால் வாரியமானாலும் சரி, அல்லது மெட்ரோ வாட்டராக இருந்தாலும் சரி, நீங்கள் தண்ணீர்க் கட்டணத்தை அதிகரித்துக்கொண்டே போவது அவ்வளவு சரியல்ல. ஏனென்றால், கொடுக்கின்ற தண்ணீரை இலவசமாகத் தர முடியாவிட்டாலும், ஓரளவிற்குக் குறைந்த கட்டணத்தில், குடிநீரைக் கொடுப்பதற்கு, அது சென்னை மாநகராட்சியாக இருந்தாலும் சரி, அதேபோல நகராட்சிப் பகுதிகளாக இருந்தாலும் சரி, நீங்கள் தண்ணீரைக் குறைந்த கட்டணத்தில் கொடுக்க வேண்டும். கட்டணத்தை ஏற்றாமல் இருந்தால்கூட போதும். அதை ஏற்றாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, புதிதாக 49 third grade municipality-களை ஆரம்பித்தோம். இந்த third grade municipality-க்கு ஒரு T.P.O. கிடையாது; Municipal Engineer கிடையாது. அதேபோல, Health Officer கிடையாது. இந்தக் கட்டமைப்புகள் இல்லாமல், நீங்கள் நகராட்சிகள் என்று உயர்த்திவிட்டிருப்பது அவ்வளவுப் பொருத்தமான ஒன்றாக இல்லை. அவை பேருக்குத்தான் நகராட்சிகளாக இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, அவற்றிற்குரிய கட்டமைப்புகளை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சிகளில் பார்த்தீர்கள் என்றால், 60 ஆயிரம் பேர் குடியிருக்கிறார்கள். ஆனால் 6 sweepers-தான் இருக்கிறார்கள். அந்த 6 sweepers-ஐ வைத்துக்கொண்டு பேரூராட்சிகளைச் சுத்தப்படுத்த முடியாத ஒரு நிலை இப்போது இருந்துகொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) எனவே, உடனடியாக துப்புரவுப் பணியாளர்களை அதிகரிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரைப் பொறுத்தவரையில் ஒரேயொரு கோரிக்கை. பொதுவாக, நாய்களுக்குக் கருத்தடை செய்வதற்காக நிதியைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், எங்களுடைய வேலூர் நகராட்சியினைப் பொறுத்தவரையில் நாய்களை இன்னும் சரியாகப் பிடிக்கவில்லை. ஊர் பூராவும் அதிகமான நாய்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. நாய்களைப் பிடித்து கருத்தடை செய்ததாகச் சொல்லி, 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு முறைகேடு

செய்திருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு வழிவகை காணவேண்டும். ஏனென்றால் நாய்களைப் பிடிக்காமலேயே கருத்தடை செய்ததாகச் சொன்னால், அது சரியாக வராது. வேண்டுமென்றால் அவற்றை ஒழித்தேவிடலாம். நாயைக் கொல்வதற்குத்தான் தடை இருக்கும். ஒழிப்பதற்குத் தடை இல்லை. அதை ஒழிப்பது எப்படி என்பதற்கான வழிமுறையை நீங்கள் கண்டெடுத்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன். *(குறுக்கீடு)* இப்போது நேரம் *12-42* மணி.

***திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற நல்வாய்ப்பை எனக்குப் பெற்றுத் தந்த எங்களுடைய நிறுவனத் தலைவர் தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலேயும், உள்ளாட்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையிலேயும், ஊராட்சிகளுக்குரிய முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக நிதியையும் ஒதுக்கி உள்ளாட்சி மன்றங்களை உயிர் பெற்ற மன்றங்களாக ஆக்கி இருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நம்முடைய நாடு சுதந்தரம் அடைந்ததற்குப் பின்னால், நம்முடைய தேசத் தந்தை அண்ணல் காந்தியடிகள் அவர்கள் சொன்னார்கள், 'இந்தியாவினுடைய முன்னேற்றம் என்பது, அதனுடைய முதுகெலும்பாக இருக்கின்ற ஏழு இலட்சம் கிராமங்களிலே இருக்கிறது' என்று சொன்னார்கள். அதே கருத்தை உள்ளடக்கி, இன்றைக்குத் தமிழகத்தில் பல்வேறு திட்டப் பணிகளுக்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கி வருகிற எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்களும், அதேநிலையில்தான் இந்த உள்ளாட்சி மன்றங்கள் செயல்பட வேண்டுமென்று அறிவுறுத்தி வருவதை நான் இந்த நேரத்தில் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



தமிழகத்திலே இன்றும் *60* விழுக்காடு மக்கள் கிராமப்புறங்களில் வாழ்வதால், கிராமங்கள் வளர்ச்சி பெற்றால்தான், தமிழகம் ஒட்டுமொத்தமான வளர்ச்சியைப் பெற முடியும். எனவே, கிராம ஊராட்சிகளின் வளர்ச்சிக்கு அரசு முன்னுரிமை தரவேண்டும். கிராமங்களின் முன்னேற்றத்திற்கு இரண்டு நிலைகளைப் பின்பற்ற வேண்டும். தனி மனித வளர்ச்சிக்குத் திறன் வாய்ந்த விருப்பம் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பையும், வருமானத்தையும் ஏற்படுத்தும்போதுதான் தனி மனிதனின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும். இரண்டாவதாக, பொதுவாக கிராம மக்களுக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள் உருவாக்கித் தரப்பட வேண்டும்.

பிற்பகல் *12-45*

ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர், தெரு விளக்கு, சாலை வசதி, மின் இணைப்பு, கல்வி, துப்புரவு, நல்வாழ்வு, போக்குவரத்து, தொலைத் தொடர்பு போன்ற அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ஒவ்வொரு ஊராட்சிக்கும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் நீங்கள் ஆண்டு ஒன்றுக்கு *20* இலட்சம் ரூபாயை வழங்குகிறீர்கள். ஆனால், இப்போது ஏறியிருக்கிற விலைவாசி உயர்வைப் பார்க்கிறபோது, *20* இலட்சம் ரூபாய் என்பது கிராம ஊராட்சிகளுக்குப் போதுமானதாக இல்லை என்பது, அங்கே இருக்கிற ஊராட்சி மன்றப் பிரதிநிதிகள் எங்களிடத்திலே தெரிவித்து வருகிற ஒரு செய்தி. எனவே, அதை உயர்த்துகிறவிதத்தில் இந்த ஆண்டிலே *20* இலட்சம் ரூபாய் என்றிருப்பதை *30* இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்த வேண்டும். அதேபோன்று, பேரூராட்சிகளுக்கு நீங்கள் *50* இலட்சம் ரூபாயை வழங்குகிறீர்கள். அதை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குகின்ற நிதி என்பது இன்றைக்குப் போதுமானதாக இல்லை. எனவே, அதற்கும் நீங்கள் *2* கோடி ரூபாய் அளவிற்கு நிதியை ஒதுக்க வேண்டும். இப்போது தமிழகத்தில் இருக்கிற ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு வாகனங்களை வழங்குகிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகங்கள் இருக்கின்றன. ஆனால் வாகனம் தரப்படவில்லை. எனவே, அரசின் சார்பிலே நீங்கள் வாகனத்தைத் தருவதோடு, கணினி இயக்குபவர் ஒருவரையும் நியமிக்க நீங்கள் உத்தரவு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மூன்று அடுக்கு முறை கொண்ட இந்தியத் திருநாட்டில் மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அடுத்தபடியாக உள்ளாட்சி அமைப்புகளும் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய, மாநில அரசுகளுக்கு நிகராக அதிகாரம் வழங்கினால்தான் கிராமப்புறங்களில் உள்ள பிரச்சினைகளை அவை தீர்க்கும். குறிப்பாக, கிராமப்புறங்களில் நிலவும் வறுமை, வேலையின்மை, சுகாதாரமின்மை, அறியாமை போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க, உள்ளாட்சி அமைப்புகள்தான் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதை இந்த அரசு உணர வேண்டும். எனவேதான் மத்தியில் இருக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகப் பெரிய முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தை ஏற்படுத்தி, பஞ்சாயத்துக்களைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதோடு, அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் புரிதல் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய பணிகள், அதற்குரிய பணியாளர்கள், அதற்குரிய நிதி ஆகியவற்றைப் பிரித்து வழங்குவதில் சிறப்பான பணியை ஆற்றி வருவதால், நான் இந்த நேரத்தில் மத்திய அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் தமிழக அரசு, இதுவரை இந்த புரிதல் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் வழங்காமல் இருப்பது வருத்தத்திற்குரிய செய்தி என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மத்திய அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியை, 12-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பிரித்து வழங்குகிறது. அரசியல் அமைப்பில் சொல்லக்கூடிய பஞ்சாயத்துக்கான 29 பணிகளையும், நகராட்சிகளுக்கான 18 பணிகளையும் பிரித்துத் தர வேண்டுமென்று மத்திய அரசு விரும்புவதை, மாநில அரசு நிறைவேற்ற வேண்டும். நமது அரசு பல பணிகளை மாற்றித் தரவில்லை. இப்பணியில் எவ்வளவு பிரித்துத் தர முடியுமோ, அவற்றைத் தந்துவிட்டு, மத்திய அரசுப் பட்டியல், மாநில அரசுப் பட்டியல் என்று உள்ளதைப்போன்று, உள்ளாட்சி அமைப்புப் பணிகள் பட்டியல் ஒன்றைத் தமிழக அரசு உருவாக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வழங்குவதற்கு ஆய்வு செய்வதற்காக நியமித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் எந்த நிலையில் உள்ளன



என்பதையும், அவற்றை இந்த ஆண்டே நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சாயத்து அமைப்புகளின் அடித்தளமாக இருக்கக்கூடிய கிராம சபைகளுக்கு அங்கீகாரம் அளித்து, அவை நன்றாகச் செயல்பட ஊக்குவிப்பதோடு, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கிராம சபைகள் கூட்டப்படுவதோடு, அவை கிராமப் பிரச்சினைகளைப்பற்றி நன்கு பரிசீலித்து அவற்றைத் தீர்ப்பதற்கான தீர்வுகளைக் கொடுக்கும் ஒரு கருவியாக மாற்றப்பட வேண்டும்.

தற்போது மாநில அரசின் வரி வருவாயில் இருந்து பகிர்ந்தளிக்கும் நிதிப் பங்கீடு, நேரடியாக மாற்றப்படும் வருவாய் மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி உதவி என மூன்று இனங்களின்கீழ் மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கக்கூடிய நிதி உதவி, 30 விழுக்காடு என்பதாக இருக்கிறது. இருந்தபோதிலும், மாநில அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதி பங்கீட்டுத் தொகை, 10 விழுக்காடு மட்டுமே இருக்கிறது. அவற்றை 15 விழுக்காடாக உயர்த்தித் தர வேண்டும். மத்திய அரசின் நிதி உதவிகள் அனைத்தும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடியாக வழங்கப்பெற வேண்டும்.

மாநில அரசு உள்ளாட்சிகளுக்கு நிதி வழங்கும்போது சமூகநீதியிலான ஒரு கோட்பாட்டினைப் பின்பற்ற வேண்டும். இந்த நிதிப் பகிர்வு ஊரக, நகர்ப்புற, உள்ளாட்சி அமைப்புகளிடையே 65:35 என்ற விகிதாச்சாரத்தில் பிரித்து வழங்க வேண்டும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் மொத்தப் பகிர்வு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிக்கு முறையே 25:30:45 என்ற விகிதாச்சாரத்தில் வழங்குவதோடு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு இடையே முறையே 60:35:5 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புக்கும் அரசு அளிக்கக்கூடிய நிதியின் அளவை, உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருக்கக்கூடிய மக்கள் தொகை 40 விழுக்காடு, அங்கு நிலவக்கூடிய தனி நபர் வருமானம் 20 விழுக்காடு, உள்ளாட்சி அமைப்புகள் வருவாயைப் பெருக்குவதில் எடுக்கும் முயற்சிகள் 20 விழுக்காடு, உள்ளாட்சி செயல்படுத்தும் திட்டங்களின் தாக்கத்தின் அடிப்படையில் 10 விழுக்காடு, உள்ளாட்சி

சென்னை மாநகரில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத நிலையே தமிழகத்தில் எங்கும் இல்லை என்ற நிலையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எய்தவேண்டும். தவித்த வாய்க்குத் தண்ணீர் வழங்கும் துறையாக குடிநீர் வழங்கல் துறை இருக்கின்றது என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்டகால கனவுத் திட்டமாக இருந்த அந்தத் திட்டத்திற்கு இன்றைக்கு நீங்கள் நிதியுதவி பெற்று சிறப்புச் சேர்த்திருக்கின்றீர்கள். அந்தத் திட்டம் காலதாமதம் இல்லாமல் நிறைவேற, தாங்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

சமீபத்திலே நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்த உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு சட்டத்தை உச்ச நீதிமன்றம் உறுதி செய்திருக்கின்ற அதேவேளையில், பொருளாதார அளவுகோல் என்னும் கிரீமி லேயர் அதிலே திணிக்கப்பட்டுள்ளது. அதை நீக்கிட நம்முடைய சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, சமூக நீதி காக்கின்ற முதல் மாநிலம் என்கின்ற பெயர் பெற்ற நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, பேரூராட்சி அலுவலகங்களில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள், Record Clerk போன்றவர்களுக்குப் பதவி உயர்வு இதுவரையில் வழங்கப்படாமல் உள்ளது. அவற்றை வழங்க உரிய முயற்சியை மேற்கொள்ளவேண்டும். அடுத்து தமிழகத்திலே மக்கள் நலப் பணியாளர்கள் குறைந்த சம்பளத்திலே பணியாற்றுகின்றார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவேண்டும். அதேபோல, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் (Pump Operators), துப்புரவுப் பணியாளர்கள், ஊராட்சிப் பணியாளர்களுக்குக் கூடுதல் சம்பளம் வழங்க நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உரிய முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

பிற்பகல் 12-55

தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் பணிபுரியக்கூடிய ஊராட்சி உதவியாளர்கள் நிலை 1-க்கு ரூபாய் 1,300-ம், நிலை 2-க்கு ரூபாய் 625-ம் பெற்று, குறைந்த சம்பளத்திலே



பணியாற்றுகின்றவர்களுக்குக் காலமுறை ஊதியத்தை வழங்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களின் பணி, நிரந்தரம் செய்யப்படவேண்டும். ஊராட்சி ஒன்றிய இரவுக் காவலர்கள், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றுகின்ற 218 பேர்களுக்கு, பணி வரன்முறையோடு ஊதியத்தை வழங்கிட அரசு முன்வரவேண்டும்.

அடுத்து, எங்களுடைய மாவட்டம் சம்பந்தப்பட்ட சில செய்திகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) விழுப்புரம் மாவட்டம், தமிழகத்திலேயே மிகப் பெரிய மாவட்டம், 22 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டிருக்கின்ற அந்த மாவட்டத்தை, இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு, கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், திருக்கோயிலூர், உளுந்தூர்பேட்டை ஆகிய வருவாய் வட்டங்களை உள்ளடக்கிய ஒரு மாவட்டத்தை இந்த அரசு உடனடியாக இந்த ஆண்டிலேயே உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விழுப்புரம் மாவட்டத்திற்கு இந்த ஆண்டிலே இரண்டு பொறியியல் கல்லூரிகள் தந்திருக்கிறீர்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிக்கின்ற அதேவேளையில், மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற மேல்மலையனூர் தொகுதிக்கு, எங்களுடைய அமைச்சரிடத்திலும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் தொடர்ந்து கல்லூரி கேட்டு வருகிறேன்; அதை வருகின்ற காலங்களிலாவது நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு சோக நிகழ்ச்சி. கடந்த ஓராண்டிற்கு முன்னதாக திண்டிவனத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற செண்டூர் என்கிற கிராமத்தில் வெடி விபத்தால் 18 பேர்கள் உயிரிழந்து, 23 பேர்கள் கை கால்கள் இழந்து, இப்போது அந்தக் குடும்பத்தினர், அரசு கொடுத்த அந்தச் சிறிய உதவிகளைப் பெற்று வாழ முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றனர். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அந்த ஊரைத் தத்தெடுத்து, விபத்தில் உயிரிழந்தவர் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி, அங்கே தொகுப்பு வீடுகளைக் கட்டி,

அனைவரையும் வாழவைப்போம் என்று சொன்னது அப்படியே நிலுவையில் இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான மேல்மலையனூர் மிகவும் பின்தங்கிய தொகுதி. மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயில் இருக்கின்ற பகுதிக்கு தினந்தோறும் பல ஆயிரக்கணக்கான மக்கள் வருவதோடு அமாவாசைதோறும் இலட்சக்கணக்கான மக்கள் வருகின்றார்கள். நம்முடைய போக்குவரத்துத் துறைக்கு அதிக வருவாயை ஈட்டித் தருகின்ற ஓர் ஊராக அது மாறியிருக்கிறது. நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பணிமனையையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அங்கே ஒரு பேருந்து நிலையத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாகக் கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதை நிறைவேற்றுவதோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே ஒரு காவல் நிலையத்தையும் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதோடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ். (குறுக்கீடுகள்) திரு. செ. புஷ்பராஜ். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சேலத்தில் திருமணிமுத்தாறு சீரமைக்கின்ற பணியைச் செய்கின்றபோது, அந்த ஆற்றிலே ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருந்தவர்களை காலி செய்கின்றபோது, அவர்களுக்கெல்லாம் வீட்டு மனை/இடவசதி செய்து கொடுக்கப்படாமல் காலி செய்துவிட்டார்கள் என்று இங்கே சொன்னார்கள். இந்த அரசு என்றைக்குமே அப்படிச் செய்யாது. 1996-1997-லே 16 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்து, முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் அளவிலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது குடியிருந்த 1,500 பேர்களுக்கு உடனடியாக சேலத்தாம்பட்டி என்கின்ற ஊரின் பக்கத்திலே குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டப்பட்டு ஒவ்வொருவருக்கும் வீடு கொடுக்கப்பட்டது. அதைப்போல, இப்போதும் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. இப்போது 240-க்கும்



மேற்பட்டவர்களைக் கணக்கெடுத்து வைத்திருக்கிறோம். அவர்களைக் காலி செய்ய இருக்கிறோம். அவர்களுக்காக, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் இப்போது 960 வீடுகள் கட்ட இருக்கின்றோம். அதிலே அவர்களுக்கு இடம் கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. குடியிருந்தவர்களைக் காலி செய்தால் அவர்களுக்கு உடனடியாக வீட்டுமனையோ அல்லது குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீட்டையோ நாங்கள் ஒதுக்கிக் கொடுப்போமே தவிர, அவர்களை அநாதையாக தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே விட்டுவிட மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ். (குறுக்கீடுகள்) No, no. திரு. செந்தமிழ்ச்செல்வன். உங்களுக்குக் கொடுத்த நேரத்தைவிட அதிகமாகப் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள்.

பிற்பகல் 1-00

**திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்து கொண்டு பேச வாய்ப்பினை வழங்கிய ஆதி திராவிட மக்களின் பாதுகாவலரும், உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவரும், இந்தியத் துணைக் கண்டத்தில் 20 ஆண்டுகால அரசியல் சூழ்நிலையிலும் தளகர்த்தராகத் திகழ்ந்து கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கடைக்கோடியில் இருக்கின்ற இளைஞர்களையெல்லாம் அடையாளம் கண்டு, எரிகின்ற விளக்குகளுக்குத் தூண்டுகோல் அவசியம் எனக் கருதி, தமிழகத்திலுள்ள இளைஞர்களையெல்லாம் பாராட்டி, சீராட்டி குன்றின்மேல் உள்ள விளக்காகப் பதவியில் அமர்த்தி, அழகு பார்க்கின்ற எங்களின் ஆயிரம் விளக்கின் அற்புத விளக்கு, எங்கள் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கின்ற ஓய்வறியா இளஞ்சூரியன், நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், விழுப்புரத்தின் விடிவெள்ளி, என் வாழ்விலே வசந்த காலத்தை உருவாக்கிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தையும், நன்றியினையும் உரித்தாக்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

“சாதிகள் இல்லையடி பாப்பா” என்ற பாரதியின் பாட்டிற்கிணங்க, 29 மாவட்டங்களில் 75 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி மீண்டும்

29 சமத்துவபுரங்களைக் கொண்டு வந்த தமிழக சமத்துவபுர நாயகருக்கும் எங்களின் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை அவர்களின் பொற் பாதங்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

எங்களுடைய மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞரின் சுழலும் சொல்லாட்சி, அருமைத் தலைவரின் படைமாட்சி, இவையெல்லாம் ஒன்றிணைந்ததுதான் மாண்புமிகு தளபதியின் உள்ளாட்சி. அவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் rest என்பது இல்லை, dust என்பது இல்லை. ஆனால் best மட்டுமேதான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக உள்ளாட்சி அமைச்சர் அவர்கள், கிராம மக்களின் உள்ளாட்சி அமைச்சர் ஆவார். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டது. அன்று 234 சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் முடக்கப்பட்ட இந்தத் திட்டம் இன்று 12 ஆயிரத்து 634 கிராம ஊராட்சிகளில் அமல்படுத்தப்படுகிறது. 'தோல்வி ஒரு கதவை மூடும், வெற்றி ஆயிரம் ஜன்னல்களைத் திறக்கும்' என்பது பழமொழி. ஆனால் ஆயிரம் விளக்குதான் 12 ஆயிரத்து 634 கிராம ஊராட்சிகளுக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அளித்திருக்கிறது.

தாகத்திற்குத் தண்ணீர், பயணத்திற்குப் பாதை, பாதைக்கு வெளிச்சம், குடியிருக்க வீடு, என்று அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை கிராமங்களோடு இணைத்தீர்கள். பாதைகளோடு சிமென்டை இணைத்தீர்கள். இரவுகளோடு வெளிச்சத்தை இணைத்தீர்கள். வளர்ச்சியை சுய உதவிக் குழுக்களோடு இணைத்தீர்கள். ஆதி திராவிடர்களோடு, பிற்படுத்தப்பட்டவர்களோடு, இந்திரா காந்தி நினைவுக் குடியிருப்புத் திட்டத்தை இணைத்தீர்கள். மொத்தத்தில் மக்களின் வாழ்க்கையோடு நல்ல திட்டங்களை இணைத்துள்ளீர்கள்.

தந்தை பெரியாரின் தளபதியாம் அண்ணா, அந்த அண்ணாவின் தம்பியாம் தலைவர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் பெயரால் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஏற்படுத்தி சிறப்பாகச்



செயல்படுத்தி வருகிறார், நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். இக்காலக்கட்டத்தில் இரண்டரை இலட்ச ரூபாய் செலவில் எழிலார்ந்த சுடுகாடுகள், கடைசியாக விடைபெறும் மனிதர்கள் துயிலும் இடம்கூட, கண்ணியமாக, கம்பீரமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அழகைக் குழைத்து அரண்மனையைப்போல் சுடுகாடுகள் இந்த ஆட்சியில் கட்டப்பட்டிருக்கின்றன. என்னுடைய கோரிக்கையாக அந்தச் சுடுகாடுகளுக்கான பாதைகள் நன்றாக இருந்தாலும், சுடுகாடுகள் நன்றாக இருந்தாலும், அந்தச் சுடுகாட்டிற்கு ஒரு வண்டியை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக வழங்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அலங்கார பொம்மைகள் அல்ல பெண்கள்; ஆட்சி அதிகாரத்தின் மையங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்பதை நிரூபித்திருக்கிறீர்கள். கந்து வட்டிக்காரர்களிடம் சிக்கிக் கந்தலாகி, கசங்கிக் கிடந்த பெண்களின் பொருளாதார வாழ்க்கையில் பூந்தென்றலாகப் புகுந்து வந்ததுதான் மகளிர் சுய உதவிக் குழுக்கள். மூன்றரை இலட்சம் சுய உதவிக் குழுக்கள் தமிழகத்தில் இருக்கின்றன. அதில் ஒன்றரை இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு 'Revolving Fund' என்ற சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. அதனால் ஊதுகுடிலைப் பிடிக்கும் பெண்கள் செங்கோலை ஏந்தும் நிலைக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறார்கள். வட்டி அட்டைகளிடமிருந்து அந்தக் குடும்ப மலர்களைக் குறிஞ்சி மலராம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 2 இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கும் விரைவில் சுழல் நிதி வழங்கப்படும் என அறிவித்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

Mulkraj Anand என்ற மிகப் பெரிய நாவலாசிரியர், 'Untouchable' என்ற நாவலை எழுதினார்: "We make you touchable; That is why we are untouchable" "நாங்கள் உங்களைத் தீண்டுபவர்களாக வைத்திருக்கிறோம்; ஆதலால் நாங்கள் தீண்டத்தகாதவர்களாக இருக்கிறோம்."

தமிழகத்தில் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான தகழி சிவசங்கரம் பிள்ளை அவர்கள், 'தோட்டியின் மகன்' என்ற நாவலை எழுதினார்கள். அந்த நாவலில் துப்புரவுப் பணியாளர்கள்பற்றியும், பிணம் எரிப்பவர்கள்பற்றியும், மிக உருக்கமாக எழுதியிருக்கிறார்கள். பிணம் எரிப்பவர்கள், இறந்து போனவர்களுக்கு மட்டுமே வெளிச்சம்



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228409
சென்னை-600 008

கொடுத்தார்கள். அது நேற்றுவரை வலிவுள்ள வரலாறு. ஆனால், வாழ்கின்ற ஒருவர், பிணம் எரிப்பவர்களுக்கும் வெளிச்சம் கொடுத்திருப்பவர் யார் என்றால் அது நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பிணம் கொளுத்தும் ஒரே ஒரு பிதாமகன்தான் சினிமா திரையில் ஜெயித்தான். அதுவும் பாலாவின் இயக்கத்தில். ஆனால், பிணம் கொளுத்தும் ஏராளமான பிதாமகன்கள் நம் தமிழகத்தில் ஜெயித்திருக்கிறார்கள். அதுவும் நம்முடைய தளபதியின் உத்தரவினால்தான் பலபேர் ஜெயித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-05*

விழுப்புரம் நகரில் 10 கோடி ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டம் தொடங்கப்பட்டு, அந்தத் திட்டம் இப்போது நிறைவுபெறும் நிலையில் உள்ளது. சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இதுவரை 17 இலட்சம் லிட்டர் தண்ணீர்தான் மக்களுக்குக் கொடுத்து வந்தார்கள். ஆனால், தற்போது நடைபெறும் திட்டத்தின்மூலம், கூடுதலாக 19 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட உள்ளது. இது எதைக் காட்டுகிறது என்றால், இன்னும் 50 ஆண்டுகளுக்கு, அதாவது ஒரு தலைமுறைக்கு வேண்டிய குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய உள்ளது என்பதையே இந்தத் திட்டம் காட்டுகிறது.

கடல்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம் என்றாலும், ஒகேனக்கல் திட்டம் என்றாலும், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்றாலும், மாண்புமிகு தமிழக முதல்வரைப் பொறுத்தவரை, சதுரங்க விளையாட்டில் ராணி பின்வாங்கும்; ராஜா பின்வாங்குவார்; மந்திரிகள் பின்வாங்குவார்கள், ஆனால் சிப்பாய்கள் மட்டும் பின்வாங்க மாட்டார்கள். ஒன்று வெட்டுவார்கள் அல்லது வீழ்வார்கள். அப்படித்தான் அரசியல் சதுரங்கத்தில் தந்தை பெரியாரின், அறிஞர் அண்ணாவின், தலைமை சிப்பாய் மாண்புமிகு முதல்வர் தலைவர் எந்தக் காலத்திலும் பின்வாங்கியதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோலத் தான், ஒகேனக்கல் திட்டத்திலும் தலைவர் கலைஞர் பின்வாங்க மாட்டார் என்பதை எதிர்க்கட்சி நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 2007-2008 ஆம் ஆண்டு சராசரியாக 10 கோடி முதல் 15 கோடி ரூபாய் வரை (மணியடிக்கப்பெற்றது) பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இப்பணிகள் NREGA, NABARD, 12th Finance, AGAMT, MP's & MLA's, SFC மற்றும் பொது நிதி ஆகியவற்றின்மூலம் பணிகளை உடனுக்குடன் செய்து முடிக்க, தற்போது ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டு பொறியாளர்கள் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மூன்று பொறியாளர்கள்வீதம் நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புஷ்பராஜ், உரையை முடியுங்கள். கடைசி பாயின்ட்டுக்கு வாருங்கள்.

**திரு. செ. புஷ்பராஜ்:** என்னுடைய தொகுதியைச் சேர்ந்த முட்டத்தூர், நேமூர், எசாலம், எண்ணாயிரம், பிரம்மதேசம் ஆகிய பகுதிகளில் உள்ள ஏரிகள்மூலம் பாசனம் பெற, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நந்தன் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கண்டமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஒன்று அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். சங்கராபுரம் ஆற்றின் குறுக்கே கொடுக்கூர் முதல் திருவக்கரை வரை உயர்மட்ட மேம்பாலம் ஒன்று அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தாமிரபரணியில் அன்று எதிர்பார்த்தோம். தமிழ்த் தரணி இன்று எதிர்பார்க்கிறது. 'நீர் உயர நெல் உயரும்', இது பழம்பாட்டு; 'தளபதி உயர தமிழினம் உயரும்', இது புதுப்பாட்டு என்று சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேச அனுமதித்ததற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக சிறப்பான முறையில் உள்ளாட்சித் துறையை மக்களின் உள்ளத்தைத் தொடும் துறையாக, மக்களின் உள்ளத்தை ஆட்சி செய்யும் துறையாகச் செயல்பட வைத்திருக்கும் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மானியக் கோரிக்கை அறிக்கையை வரவேற்கிறேன்.

தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் வாழும் இடமாக இருப்பது கிராமங்களே. அந்தக் கிராமங்களில் வாழும் மக்களின் அடிப்படை வசதிகளான கிராமச் சாலைகள், குடிநீர், சுகாதாரம், தெரு விளக்குகள் மற்றும் இதர பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் செய்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் வாழும் மக்கள், ஜனநாயக செயல்பாடுகளோடு, சிந்தனைகளோடு தங்கள் வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொள்ள உருவாக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில், ஏற்கெனவே இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் இன்னும் வழங்கப்படாமல் இருப்பது கவலை அளிக்கிறது. கூடுதல் அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகள் ஊழல் இல்லாமல், பாரபட்சம் இல்லாமல் செயல்பட, கிராம சபைகளை நடத்தி முடிவெடுக்க வேண்டுமென வழிகாட்டப்பட்டும், கிராம சபை என்பது வெறும் சடங்காக, மக்கள் பங்கெடுக்காத நிகழ்ச்சியாக பெரும் பகுதி இடங்களில் நடைபெறுகின்றன. எனவே, கிராம சபைகளைக் குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தவும், வழிகாட்டவும் ஒரு நிருவாக அமைப்பை உருவாக்க வேண்டும். நாடு முழுவதும் விடுமுறை நாட்களில் ஏக காலத்தில் கிராம சபைகளை நடத்துவதைவிட, அந்தந்த ஊராட்சி மக்களின் வசதிக்கேற்ப நாட்களை முடிவு செய்து அறிவிக்க வேண்டும். மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடி வாக்கெடுப்புமூலம் தேர்வு செய்யும் முறையைக் கொண்டுவர வேண்டும். அதுதான் நிருவாக செயல்பாடுகளைச் சிறப்பாகச் செய்திட வாய்ப்பளிக்கும்.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் போதுமான, நிரந்தரமான வருவாயை உருவாக்குவதற்குத் திட்டமிட வேண்டும். அதற்கான புதிய யுக்திகளை உருவாக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கிற நிதியை முறையாகச் செலவிடுவதற்கு மக்கள் பங்களிப்புள்ள கண்காணிப்புக் குழுக்களை உருவாக்க வேண்டும். தமிழகத்தில் வரும் ஆண்டுகளில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம், எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளது. அத்திட்டம் ஊழல் இல்லாமல் முழு வெற்றி அடைய மக்களுக்குத் தொடர் பயிற்சிகளும், சர்வ கட்சிக் கண்காணிப்புக்



குழுக்களும் நியமிக்கப்பட வேண்டும். 80 ரூபாய் சம்பளம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். மேலும், அத்திட்டம் செயல்படுத்தப்படுவதால், முன்பு இருந்த S.G.R.Y. திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. அதனால் மாவட்ட ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் நடைபெற்று வந்த பணிகள் தொடர முடியாத நிலை உள்ளதால், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசோடு பேசி S.G.R.Y. திட்டம் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட...

பிற்பகல் 1-10

(உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, மேசைக்கு எதிர்ப்புறம் இருந்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் பேசிக்கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கரி. இராமசாமி, அந்தப் பக்கமாக வந்து பேசுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** வறுமைக்கோட்டின் பட்டியல் முறையற்றது என்பதால், நிபந்தனைகளைத் தளர்த்தி புதிய வறுமைக் கோட்டுப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை குறித்த காலத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் சுகாதாரம், குடிநீர் மற்றும் தெரு விளக்குகள் பராமரிப்பதைத் தனியாரிடம் ஒப்படைப்பதைக் கைவிட வேண்டும். சுகாதாரம் மற்றும் குடிநீர் என்பது அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமையாகக் கொண்டு அவற்றை அரசே நேரடியாக நிருவகிக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. தமிழகத்தில் தனியாரிடம் விடப்பட்ட இடங்களில் முறையான செயல்பாடுகள் இல்லாததால், கூடுதல் செலவுகள் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரரிடம் பணியாற்றுகிற தொழிலாளர்கள் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் பரிதவிக்கிறார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்கள் சட்டம் அமல்படுத்தப்பட வேண்டும். தமிழகத்தில் உள்ள 12,618 ஊராட்சிகளில் முழுமையாகப் பொறுப்பேற்றுச் செயல்படும் ஊராட்சி எழுத்தர்களுக்கு நிலை 1 அடிப்படையில் ஊதியம் ரூபாய் 1300-ம், நிலை 2-க்கு ரூபாய் 600-ம் வழங்கப்படுவதை மாற்றி கூடுதலாக்குவதோடு, அரசுப் பணியாளர்களுக்கு உள்ள மற்றச் சலுகைகளையும் அவர்களுக்கு வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் இயக்குநர்கள் மாதம் 600/- ரூபாய் சம்பளத்திற்குப்

பணியாற்றுகிறார்கள். அவர்களை நிரந்தரமாக்குவதோடு, ஊதிய உயர்வு அளிக்க வேண்டுகிறேன். அவர்கள் பணிக் காலத்தில் இறக்கிற நேரத்தில் 1½ இலட்சம் ரூபாய் தருகிறார்கள். ஆனால், அதேநேரத்தில் அவர்கள் பணியிலே இருந்து ஓய்வு பெறுகிற நேரத்தில், எந்தப் பணிப் பயனும் இல்லாமல் வேலையை விட்டுச் செல்கின்ற ஒரு நிலை தொடர்கிறது. சுகாதாரப் பணியாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சலுகைகளை வழங்கவும், காலி இடங்களைப் பூர்த்தி செய்யவும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் நலப் பணியாளர்கள், ஆட்சி மாறுகிறபோதெல்லாம் பந்தாடப்படுகிறார்கள். அவர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும். *1-4-1981*-க்குப் பிறகு பணியமர்த்தப்பட்ட இரவுக் காவலர்களை *10* ஆண்டுகள் பணி முடிந்த நாளில் பணி வரன்முறை செய்திடவும், அரசின் பின்னேற்பு வழங்கவும் தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட வேண்டுகிறேன். அப்போதுதான் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கும்.

மதுரை மாநகராட்சியில் குப்பை வண்டி ஒப்பந்ததாரர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். நகராட்சி, பேரூராட்சிகளில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு, அரசுப் பொறுப்பில் உள்ள அடுக்குமாடி வீடுகளை, கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு இலவசமாகத் தொகுப்பு வீடுகளை வழங்குவதைப்போல வழங்கவேண்டும்.

தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளுக்கு விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு *55,000* ரூபாய் வழங்கியதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தொகை ஒரு இலட்சமாக உயர்த்தப்பட வேண்டும். கடந்த ஆண்டிலிருந்து இத்திட்டப் பயனாளிகளுக்கு வங்கிகளில் கடன் தொகையாக ரூபாய் *25,000* வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் தொகையை இரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் குடிசை வீடுகளில் வாழ்கின்ற மக்களுக்குப் பாதுகாப்பான வீடுகளை உருவாக்கித்தர சிறப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, சிவகங்கை நகரில் புதிய பஸ் நிலையத்தை இந்த நிதியாண்டிலேயே உருவாக்கித் தர, மாண்புமிகு உள்ளாட்சித் துறை



அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிவகங்கை தனி நகர் என்ற அடிப்படையில் சிவகங்கை நகராட்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். காளையார்கோவில் ஒன்றிய அலுவலகத்திற்கும் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்ட மக்களின் நலன் கருதி, காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துகிறார்கள். இதில் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியத்தில் குடிநீர்த் திட்டக் குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தும் வழியில் உள்ள கிராமங்களுக்கு, குறிப்பாக, மறவமங்கலம், கொல்லங்குடி, பள்ளித்தம்மம் போன்ற பெரிய கிராமங்களுக்குக்கூட குடிநீர் இணைப்பு இல்லாமல் விடுபட்டுள்ளது. இதை மறுபரிசீலனை செய்து, விடுபட்ட கிராமங்களையும் இத்திட்டத்தில் இணைக்க வேண்டுகிறேன். சிவகங்கை ஒன்றியத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் பெரியாறு அணையிலிருந்து குழாய்மூலம் தண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தை நிறைவேற்றக் கேட்டுக்கொள்கிறேன். குடிநீரில் *700* முதல் *800* T.D.S. வரை உப்புத் தன்மை இருந்தால் நல்ல தண்ணீர் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் குறிப்பாக சிவகங்கையில் *2,000* T.D.S. உப்புத் தன்மைகொண்ட தண்ணீர் ஆழ்குழாய்க் கிணற்றில் கிடைக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் *1,100* T.D.S. வரை நல்ல தண்ணீர் என்று தவறான நிலைபாட்டைக் கொண்டுள்ளது. இதை மாற்றி அனைத்து மக்களுக்கும் நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு ஒவ்வொரு நீர்நிலைத் தொட்டியிலும் சுத்திகரிப்புக் கருவிகளைப் பொருத்த வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் கல்லல் நகரில் இருக்கக்கூடிய ஒன்றிய மருத்துவமனையை ...

பிற்பகல் *1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு *8* நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை, தலைவர் அவர்களே, இந்த மாதிரி பண்ணிக் கொண்டிருந்தீர்கள் என்றால் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், திரு. சிவபுண்ணியம் உட்காருங்கள். (குறுக்கீடு) *8* நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் குறுக்கிட்டால், மேலும் ஒரு நிமிடம் ஆகிவிடும்.

[2008 ஏப்ரல் 15

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. தினமும் தேவையில்லாத விஷயங்களும், தேவையில்லாத பதிவுகளும், பத்திரிகைச் செய்திகளும் போய்க்கொண்டேயிருக்கின்றன. நானும் கேட்கிறேன், நீங்களும் பதில் சொல்கிறீர்கள். ஆனால் முடியமாட்டேன் என்கிறது. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே ஒரு கருத்தைப் பேசுகிறோம். எல்லோருக்கும் நேரம் கொடுக்கிறீர்கள். இப்போது 7 நிமிடங்களில் பேசவேண்டுமென்று சொல்கிறீர்கள். பிறகு தேவையில்லாமல் பின்னால் மாற்றுகிறீர்கள். முதலில் வரிசைப்படி பெரிய கட்சிகள்தான் பேச வேண்டுமென்று சொன்னீர்கள். அதன் பிறகு மாற்றுகிறீர்கள். என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலேகூட கட்சித் தலைவர்கள் பேசுவதற்கு 10 நிமிடங்கள்; மற்ற உறுப்பினர்கள் பேசினால், சி.பி.ஐ., ம.தி.மு.க. போன்ற கட்சிகளுக்கு 7 நிமிடங்கள் என்றுதான் முடிவு செய்தோம். (குறுக்கீடுகள்) அப்படித்தான் முடிவு செய்தோம். எல்லோரும் இருக்கிறார்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. அப்படி முடிவு செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் அந்தக் கருத்து சொல்லப்பட்டு அன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இருந்திருக்கிறார்கள். அப்போது முடிவு செய்யாத விஷயத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், நீங்கள் என் அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம். பிறகு அறைக்கு வாருங்கள், பேசி முடித்துக்கொள்ளலாம்.



2008 ஏப்ரல் 15]

**திரு. வை. சிவபுண்ணியம்:** எனக்கு இதில் உடன்பாடு இல்லை என்பதை நான் பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** இரண்டே இரண்டு விஷயத்தோடு உரையை முடித்துக்கொள்கிறேன். சிவகங்கை மாவட்டத்தில் கல்லல் நகரம் ஒன்றியத் தலைநகரமாக உள்ளது. இங்குள்ள சுமார் 10,000 மக்களுக்கும், சுற்றுவட்டாரத்திலுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கும் அது மையமான ஊர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** உரையை முடித்துவிடுகிறேன். அங்குள்ள மருத்துவமனை, ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்பட்டு கடந்த காலத்திலிருந்து மருத்துவர்கள் இல்லாததால் செயல்படவில்லை. இதை உடனடியாக சுகாதாரத் துறையிலே ஒப்படைத்து முழுநேர மருத்துவமனையாக உருவாக்கித் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு)

**திரு. சு. குணசேகரன்:** தலைவர் அவர்களே, ஒரே ஒரு பாயின்ட். காளையார்கோவில் ஒன்றியப் பகுதியிலே சுமார் 50 கிராமங்களுக்குச் சாலை வசதியே இல்லாமல் உள்ளது. குறிப்பாக, புலவன் மருதங்குடி, கள்ளிவயல், மணியங்குடி, பால்குளம், பாச்செட்டி என்று சுமார் 50 கிராமங்களில் 100 முதல் 250 வரை மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சாலை வசதி இல்லாத நிலையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சாலை வசதித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அவர் 10 நிமிடங்கள் பேசியிருக்கிறார். திரு. சி. கோவிந்தசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டும் இல்லையா? மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** நீங்கள் 10 நிமிடமே கொடுக்கவில்லை. நான் இந்த விஷயத்தை ஒத்துக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நேரத்தைப் பாருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம். திரு. சிவபுண்ணியம், 10 நிமிடம் கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள். 1-07 மணிக்கு ஆரம்பித்துள்ளார். 1-17 மணிக்கு உரையை முடிக்கச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், இல்லாத controversy-யை ஏன் ஏற்படுத்துகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், நீங்கள் என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசலாம். திரு. கோவிந்தசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் பேசுகிற நேரத்தில் மக்கள் நலப் பணியாளர்களைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது ஆட்சி மாறுகிறபோதெல்லாம் அவர்கள் பந்தாடப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அது தவறு. அ.தி.மு.க. ஆட்சியிலே அவர்கள் அத்தனை பேரும் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அவர்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு) திரு. குணசேகரன், என்ன சொல்லுங்கள்?

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. நானும் அந்த அர்த்தத்தில்தான் பேசினேன். நேரம் இல்லாத காரணத்தினால் அந்த வார்த்தைகளைச் சுருக்கிச் சொன்னேனே தவிர, உண்மையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிற நேரத்தில்தான் இளைஞர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது. அண்ணா தி.மு.க. ஆட்சி வருகிற நேரங்களில் எல்லாம் அவர்கள் பந்தாடப்படுகிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட நிலை. எதிர்காலத்தில் அநேகமாக அந்த ஆட்சி



இனி வருவதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலும், ஒரு பாதுகாப்பை அவர்களுக்கு உருவாக்கித் தரவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதையும் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இரண்டேயிரண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி, பேசுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பைத் தந்தமைக்காகத் தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் உள்ளாட்சித் துறை வேறு துறைகளுக்கிடையிலே ஒளிந்துகொண்டிருந்த நிலையை மாற்றி அதை வெளியே கொண்டுவந்து, அதற்கென்று ஒரு தனி அமைச்சர் நியமிக்கப்பட்டு, சிறந்த செயலாற்றல் மிக்க அமைச்சரை அதற்குப் பொறுப்பாக்கி, தமிழகத்திலே இப்போது மற்றத் துறைகளைப்போல, இதுவும் ஒரு முக்கியத் துறை என்று அறிமுகப்படுத்தி, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற இந்தத் துறைக்கும், துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

இன்றைக்கு இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மூலமாக சில கருத்துகளை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். முதலிலே நேரத்தைக் கணக்கிலேகொண்டு, தொகுதி சம்பந்தமாக இரண்டு விஷயங்களை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய நாளைய அறிவிப்புக்காக என்னுடைய இன்றைய வேண்டுகோளாக முன்வைத்து என்னுடைய உரையைத் துவக்க விரும்புகிறேன்.

திருப்பூர் பகுதிக்குப் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த மக்கள் தொடர்ந்து வந்து குவிந்தவண்ணம் இருக்கிறார்கள். ஆகவே, எத்தனைக் குடிநீர்த் திட்டங்கள் வந்தாலும் குடிநீர்ப் பற்றாக்குறை என்ற நிலைதான் தொடர்ந்து நிலவிவருகிறது. பத்து நாட்கள், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்குகின்ற நிலைதான் அங்கே தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது. திருப்பூர் பகுதி மக்களின்மீதும், என்மீதும் மிகுந்த அக்கறைகொண்ட நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய

கவனத்திற்கு ஏற்கெனவே இதுகுறித்துக் கொண்டு சென்றிருக்கிறேன். நாளைய தினம் அவருடைய பதிலுரையிலே திருப்பூருக்கு ஒரு புதிய குடிநீர்த் திட்டத்திற்கான அறிவிப்பை, பவானிசாகர் ஆற்றிலிருந்து திருப்பூருக்குக் குடிநீர் கொண்டுவருவதற்கான அந்த நல்ல திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் தொகுதி மக்களின் சார்பாக இந்த நேரத்திலே முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோல், நம்முடைய திருப்பூருக்காக நான் ஏற்கெனவே கேள்வி நேரத்திலே இங்கே கவனப்படுத்தியது, திருப்பூரிலே ஏராளமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை. இதையெல்லாம் அமைச்சர்கள் கையாள்வது எனக்காகவோ, திருப்பூர் மக்களுக்காகவோ அல்ல; தமிழ்நாட்டு மக்களுக்காக. ஆகவே, அவர் திருப்பூர்மீது அன்பு வைத்து இருக்கிறார் என்றால், தமிழ்நாடுமீது அன்பு வைத்திருக்கிறார் என்பதுதான் அதன் பொருள். ஆகவே, அந்தவகையிலே திருப்பூரிலே ஒரு புதிய பேருந்து நிலையம் நகரத்தினுடைய தெற்குப் பகுதியிலே கட்டாயமாகத் தேவைப்படுகிறது. ஆகவே, அதற்கான நல்ல அறிவிப்பும் நாளைய தினம் தங்களுடைய பதிலுரையிலே இடம்பெறும் என்ற பெருத்த நம்பிக்கையோடு இந்த வேண்டுகோளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து என்னுடைய மற்ற விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, இன்றைக்குப் பஞ்சாயத்து ராஜ், நகர்ப்புற உள்ளாட்சிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு சற்றேறக்குறைய 18 ஆண்டுகள் கடந்துவிட்டன. கடந்த காலங்களைவிட இந்தக் காலத்தின் செயல்பாட்டிலே ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனாலும்கூட, அந்தப் புதிய சட்டத்தின் முழுமையான நோக்கம் இன்னும் தமிழகத்தில் நிறைவேறிவிட்டதாகச் சொல்லமுடியாது. ஆகவே, அதை முழுமையாக நிறைவேற்றுவதற்கான பணிகள் மேலும் தொடரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரமும், நிதியும் கோருகிற நிலையில், மாநில அரசின்மூலமாகக் கூடுதலான அதிகாரமும், நிதியும் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படவேண்டியது மிக முக்கியமான தேவையாக இருக்கிறது. சமீபத்திலே நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, அதற்கான அதிக அதிகாரங்கள்பற்றி விவாதிப்பதற்கு ஓர் உயர்மட்டக் குழு அறிவிக்கப்பட்டு, அந்தக் குழுவும் தன்னுடைய அறிக்கையை இறுதிசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருப்பது நல்ல நிகழ்வு. ஆகவே, அந்த அறிக்கையை இந்த அவையிலே வைத்து, சட்டமன்ற உறுப்பினர்களும் அதன்மீது கருத்துகளைச் சொல்வதற்கு, ஒரு விவாதத்திற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட திட்டக் குழுத் தலைவராகவும் இருக்க வேண்டும் என்பது, ஏற்கெனவே எடுக்கப்பட்ட இந்த அரசினுடைய முடிவு. ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அந்தத் திட்டக் குழு என்பது, ஓர் அதிகாரமற்ற குழுவாக, கூடிக் கலையும் ஒரு அமைப்பாகத்தான் இப்போது இருந்துகொண்டிருக்கிறது. திட்டமிடுவதற்கான உரிய அதிகாரம் அதற்கு வழங்கப்படவில்லை. அதற்கான முயற்சியை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு, தனது வரி வருவாயிலே 30.5 சதவீதத்தை மாநிலங்களுக்கு நிதியாக ஒதுக்கீடு செய்வதுபோல், மாநில அரசும் தனது வரி வருவாயில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 30 சதவீதம் நிதியை ஒதுக்கவேண்டும். ஏற்கெனவே, 9 சதவீத நிதி வழங்கப்பட்டு வருகிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது, கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் ஊழியர்களுக்கான ஊதியம் உட்பட 31 சதவீதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, நேரடியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அந்த 30 சதவீத நிதி வழங்குவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஊராட்சி அமைப்புகளுக்கு மின்சாரக் கட்டணம் என்பது, ஒரு ரூபாய் 60 காசாக இருந்து, கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்திலே மூன்று ரூபாய் 60 காசாக உயர்த்தப்பட்டது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் மானியக் கோரிக்கையிலே, அதை 60 காசு குறைத்து மூன்று ரூபாயாக அறிவித்திருப்பது நல்லது. ஆனால், அதேநேரத்தில், ஊராட்சிக்கு வருகிற மூன்றில் இரண்டு பகுதி வருவாய், மின் கட்டணத்திற்காகவே செலவிடுகின்ற நிலை இன்றைக்கும் தொடர்கிறது. ஆகவே, அந்தக் கட்டணத்தை மேலும் குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

அதேபோல, தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற ஊராட்சிகளிலே தேர்தல் நடத்தப்பட்டு, அந்தத்

தலைவர்கள் சிறப்பாகச் செயலாற்றி வருவது, பாராட்டுக்குரிய ஒரு நல்ல நிகழ்வு. அதேநேரத்தில், இன்றைக்குத் தமிழ்நாட்டில் இன்னும் சில இடங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் ஊராட்சி மன்றத் தலைவர்கள் சுயமாகச் செயல்பட முடியாத நிலைமை என்பது இருக்கிறது, அரசு அதிலே தலையிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழ்பாதி ஊராட்சி, அதேபோல, காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்டிருக்கிற திம்மாபுரம் ஊராட்சி, காஞ்சிபுரம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய அதே ஒன்றியத்திற்கு உட்பட்ட திப்புக்குழி என்கிற ஊராட்சி, பேரம்பாக்கம் என்கிற ஊராட்சி ஆகியவற்றில் இப்போதும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தலித் தலைவர்கள் செயல்பட முடியாத நிலைமை இருப்பதாகத் தெரிகிறது, அரசு அதிலே தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்படுகிற மாதாந்திரப் படி என்பது, வெறும் 330 ரூபாய். அநேகமாக, அவர்கள் இப்போது முழு நேர ஊழியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும். உறுப்பினர்களுக்கான sitting fees-ஐ உயர்த்துவது நல்லது என்ற முறையிலே வலியுறுத்த விரும்புகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், அல்லது ஊராட்சிகள் இவற்றுக்கிடையிலே ஓர் ஒருங்கிணைப்பு இல்லாத நிலைமை நீடிக்கிறது. ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியக் குழுக் கூட்டத்திலும், ஒன்றியக் குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் கூட்டத்திலும் கலந்துகொள்ள வேண்டும். வாக்குரிமை இல்லாதவர்களாகக்கூட, அவர்களைக் கலந்துகொள்ள வைக்கலாம். இந்த அமைப்புகளுக்கிடையிலே ஓர் இணைப்பு ஏற்படுத்துவதற்கு இது பயன்படும். அதற்குரிய சட்டத் திருத்தம் கொண்டுவந்து, அதை அமலாக்கலாம் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். மூன்றடுக்கு முறைக்கு ஓர் இணைப்பு ஏற்படுத்துவதற்கு இது அவசியம் என்று கருதுகிறேன். அதைப்போல, நகராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு, அரசு ஆணை எண் 600-ன்மூலமாக அறிவித்தார்கள்.



ஆனால், அதற்குப் பின்னாலே அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, 2005 ஆம் ஆண்டு, அரசு ஆணை எண் 71-ன்படி, அவர்கள் அரசு ஊழியர்கள் என்று ஏற்கெனவே போட்ட அரசு ஆணை இரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற இந்தச் சூழலில், நகராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். கருவூலத் துறையின் மூலமாக அவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்; அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அரசு ஊழியர்களைப்போல, நகராட்சிகளிலே பணியாற்றுகிற ஊழியர்கள், கடைநிலையில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள், 20 ஆண்டு, 30 ஆண்டுக்காலம் பணியாற்றியும்கூட அவர்களுக்கு எந்தப் பதவி உயர்வும் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, அரசு அதைப் பரிசீலித்து, வாய்ப்பு உள்ளவர்களுக்கு உரிய பதவி உயர்வு வழங்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பணியில் இருக்கிறபோது இறந்துபோனவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுக்கக்கூடிய நடைமுறை உள்ளாட்சி அமைப்புகளிலே பின்பற்றப்பட்டு வருவது நல்லது. ஆனால், துப்புரவுப் பணியிலே ஈடுபடக்கூடிய ஊழியர்கள் இறந்துவிட்டால், அந்தத் துப்புரவுப் பணியாளர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த படித்த, தகுதியானவர்களுக்குக்கூட நகராட்சித் துறையினுடைய இதரப் பணிகள், தகுதி அடிப்படையில் வழங்கப்படுவதில்லை. அவர்களை அந்தத் துப்புரவுப் பணிக்காக மட்டுமேதான் நியமிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மற்ற ஊழியர்களைப் போல இவர்களுக்கும் தகுதி அடிப்படையிலே வாரிசுகளுக்கான வேலைகள் கொடுக்க முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, பேரூராட்சிகளாக இருந்து மூன்றாம் நிலை நகராட்சிகள் அல்லது அதைத் தொடர்ந்து இரண்டாம் நிலை நகராட்சிகள் என்று தர உயர்வு வருகிறபோது, அதற்கான அதிகாரிகள், ஊழியர்கள் போன்ற புதிய பணியிடங்களை உருவாக்கி, உரிய பணியாளர்களை நியமனம் செய்வதன்மூலம்தான், தரம் உயர்த்தப்பட்ட நிலையில் இருந்து மக்களுக்குச் சேவை செய்வதற்கு வாய்ப்பாக அமையும். E.O. தான் இன்றைக்கும் அங்கே அதிகாரியாக இருந்து சகல வேலைகளையும், பேரூராட்சிகளில் என்ன செய்தாரோ அதைத்தான் செய்கிறார். ஆகவே, அதைப் பரிசீலித்து அதற்குரிய

புதிய அதிகாரிகளை நியமனம் செய்யவும், பணியிடங்களைத் தீர்மானிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி உதவியாளர்கள் என்று சற்றேறக்குறைய 12,618 பேர் தமிழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த மானியக் கோரிக்கையிலே அவர்களுக்கெல்லாம் நீங்கள் ஊதிய உயர்வு வழங்கி, அவர்களைக் காலமுறை ஊதியத்திற்கு மாற்றிக் கொடுத்தீர்கள். அது வரவேற்புக்குரியது. ஆனால், அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்கிறபோது அவர்களுக்கு ஓய்வூதியம் எதுவும் இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. அவர்கள் பணிக் காலம் முடிந்து, வயதான காலத்தில் ஓய்வு பெறுகிறபோது, எந்த வாய்ப்பும் இல்லாமல் வெறும் கையோடு செல்கிற நிலைமை இருக்கிறது. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதவியாளர்கள் பதவி உயர்வு என்ற முறையிலே, ஊராட்சிகளிலே செயலர் என்கிற ஒரு பதவி உருவாக்கப்பட்டு, தகுதியானவர்களுக்கு உரிய பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, ஊரக வளர்ச்சித் துறையில் இருக்கிற பல்வேறு பணியிடங்களை நிரப்பி வருகிறீர்கள், இன்னும் பல பணியிடங்கள் காலியாக இருக்கின்றன; உரிய காலத்தில் அவற்றை நிரப்ப வேண்டும். உதாரணமாக, சுய உதவிக் குழுக்கள் உள்ளாட்சி அமைப்பின்மூலமாக இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதைக் கவனிப்பதற்காக . . .

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, அந்தப் பணிகளைக் கவனிப்பதற்காக வட்டார அளவிலே, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற வகையிலே ஒரு தனி வட்டார வளர்ச்சி அலுவலரை அந்த சுய உதவிக் குழுக்களைக் கவனிப்பதற்காக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்கக்கூடியவர்கள் சுமார் 52,472 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது வெறும் 600 ரூபாய் மட்டும்தான் ஊராட்சியின்மூலம்



வழங்கப்படுகிறது. ஊராட்சித் தலைவர்களிடத்திலேதான் அதைப் பெற வேண்டும். அதுகூட உரிய காலத்திலே அவர்களுக்குக் கிடைப்பதில்லை. சுமார் 8 மணி நேரம் வரையிலே அவர்கள் பணியாற்றுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அதைப் பரிசீலித்து, ஊதியத்தை உயர்த்த வேண்டும். பணிப் பாதுகாப்பை அளிப்பதோடு, ஊராட்சி ஒன்றியத்தின்மூலமாக ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார்கள். இதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதனுடைய செயல்பாட்டிற்காகப் பல்வேறு award-களையெல்லாம் பெற்றுள்ளது பாராட்டுக்கும், வரவேற்புக்கும் உரியது. இப்பொழுது அந்தத் துறையின்மூலமாக பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுவது, தனியார்மூலம் ஒப்பந்த அடிப்படையிலே நடைபெறுகிறது. அதிலே சுமார் 4,370 பேர் ஒப்பந்தப் பணியாளர்களாகப் பணியாற்றுகிறார்கள்; மிகக் குறைந்த கூலி கொடுத்து அந்த வேலை வாங்கப்படுகிறது. ஆகவே, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியமே, நல்ல, திறமைமிக்க இந்த ஊழியர்களை வேலைக்கு எடுத்து, பணி நிரந்தரம் செய்து, அவர்களை இந்தப் பணிகளில் ஈடுபடுத்தினால் இன்னும் அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட வழிவகுக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, அலுவலகத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள், வயதின் காரணமாக இந்தக் காலத்திலே சற்றேறக்குறைய 50 சதவிகிதம் பேர்கள் பணி ஓய்வு பெற்றுச் சென்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அந்த இடங்கள் நிரப்பப்படாத காரணத்தினாலே சில பணிகளை இப்பொழுது உரிய காலத்திலே நிறைவேற்ற முடியாமல் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த 50 சதவிகிதம் ஓய்வு பெற்றவர்களுக்குப் பதிலாக புதிய ஊழியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாரியத்தில் பணியாற்றி மரணமடைந்தவர்களுடைய வாரிசுகளுக்கு, கடந்த ஆட்சிக் காலத்திலே எந்த நியமனமும் இல்லை. நீங்கள் பொறுப்பேற்ற பிறகு அறிவித்து, வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்கிற பணியைத் தொடங்கியிருக்கிறீர்கள். 'சி' பிரிவிலே பணியாற்றியவர்களின் 33 குடும்பங்களுக்கு வேலை கொடுத்து

வாழ்வளித்திருக்கிறீர்கள். மேலும் 330 பேர் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களுக்கும் அந்த வாய்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஏற்கெனவே கடந்த காலத்திலே வாரியத்தின்மூலம் தினக் கூலிகளாக வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள், இடையில் எந்தக் காரணமும் இல்லாமல் வேலையில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தங்களுக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்ற பிறகு, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அந்தத் தீர்ப்பை எதிர்த்து நீதிமன்றத்திற்கு அப்பீலுக்குச் சென்றிருக்கிறார்கள். 6 ஆண்டுக் காலமாக இன்னும் அந்த வழக்கு கிடப்பில் இருக்கிறது. தொழிலாளர்களுக்குச் சாதகமாக நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறபோது, அதை எதிர்த்து அப்பீலுக்குச் செல்லக்கூடாது என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த காலத்தில் முடிவுகளை எடுத்து அறிவித்து, தொழிலாளர்களுக்குச் சாதகமான சில முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். அதுபோல, இந்த வாரியத்தில் இருக்கிற தினக் கூலித் தொழிலாளர் பிரச்சினையிலும் ஏற்கெனவே கடந்த ஆட்சியிலே அப்பீல் செய்யப்பட்டிருக்கிற அந்த வழக்கைத் திரும்பப் பெற்று அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, ஒன்றிரண்டு செய்திகள் என்ற முறையிலே குறிப்பிட விரும்புவது, இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம், மத்திய அரசின்மூலமாக நம்முடைய தமிழகத்திலும் நிறைவேற்றப்பட்டு வருகிற அந்தப் பணிக்கு 80 ரூபாய் குறைந்தபட்சக் கூலி என்பதை எல்லா இடங்களிலும் நடைமுறையில் அமலாக்குவதற்கு— நேரமின்மையின் காரணமாக அதனுடைய விளக்கத்திற்குள் நான் இப்போது செல்ல விரும்பவில்லை—ஆகவே, எல்லா இடங்களிலும் அதை நடைமுறைப்படுத்துவதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் துறையின்மூலம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, கோவில்பட்டி குடிநீர்த் திட்டம். ஏற்கெனவே செயல்பட்டு வருகிற அந்தத் திட்டத்திற்குத் தொடர்ந்து மின்சாரம் கிடைக்காத காரணத்தினால், சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றி, குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. தனி feeder line அமைப்பதற்கான ஏற்பாடெல்லாம் அறிவிக்கப்பட்டது. அது மிகவும் காலதாமதமாக நடைபெறுகிறது.



அங்கே 2 வாரங்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் விநியோகம் என்ற நிலை இருக்கிறது. நீங்கள் நேரிலே தலையிட்டு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (மணியடிக்கப்பெற்றது) ரூ.36.33 கோடியில் ஒரு புதிய திட்ட மதிப்பீடு தயாரித்திருப்பதாக அறிகின்றேன். அந்தத் திட்டத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்குத் தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, திருப்பூர் பேருந்து நிலையம் போல தேனியிலே ஒரு பேருந்து நிலையம் வேண்டும் என்கிற கோரிக்கை நீண்டகாலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திலே இருக்கிறது. அதற்கான இடம்கூட தேர்வு செய்யப்பட்டு, நகராட்சியில் தீர்மானங்களை யெல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

கோவை மாநகராட்சியிலே பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன. அந்தத் திட்டங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டமும் ஒன்று. அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான டெண்டர் விடுகிறபோது, பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை என்கிற செய்திகள் இருக்கின்றன. ஒரே ஒரு கம்பெனி மட்டுமே தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு மட்டுமே அந்த வேலை கொடுக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. ஆகவே, அது பல்வேறு பிரச்சினைகளை அங்கே உருவாக்குகிற காரணத்தால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே தலையிட்டு மறு டெண்டருக்கான அறிவிப்பை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல மக்கள் நலப் பணியாளர்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது, உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஒரே ஒரு நிமிடம். மக்கள் நலப் பணியாளர்கள்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 18 வருடங்களாகப் பணியாற்றி இருக்கக்கூடியவர்கள் மிகக் குறைந்த, 33 ரூபாய் ஊதியத்திலே பணியாற்றி இருக்கிறார்கள். அதைக்கூடப்

பொறுத்துக் கொள்ளாமல், கடந்த கால ஆட்சி அவர்களை வீட்டுக்கு அனுப்பியது. நீங்கள் வந்த பிறகு வேலைவாய்ப்பு அளித்திருக்கிறீர்கள். அரசு மீண்டும் பரிசீலித்து, அவர்களின் பணிப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும்; சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

அதேபோல, ஒன்றே ஒன்றைச் சொல்லி முடிக்கின்றேன். நீலகிரி மாவட்டம், அதிகரட்டி பேரூராட்சி என்கிற பேரூராட்சியில், ஏற்கெனவே பேரூராட்சி அலுவலகத்திற்கான இடம் போதவில்லை என்று சொல்லி, புதிய கட்டடம் (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு நண்பர் 20 சென்ட் இடத்தைத் தானமாக அந்த ஊராட்சிக்கு வழங்கியிருக்கிறார். அந்தப் பேரூராட்சியிலும் தலைவர் உட்பட எல்லோரும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால், அங்குள்ள நிர்வாக அதிகாரி (E.O.), அவருடைய விருப்பப்படி குறுகிய அந்தப் பழைய இடத்திலேயே கட்ட வேண்டுமென்று பிடிவாதமாக இருந்து, பணிகளையும் அந்தப் பேரூராட்சிக்கே தெரியாமல் தொடங்கியிருக்கிறார் என்ற தகவல் வருகிறது. சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர் அவர்களுடைய கவனத்திற்குக்கூட நான் ஏற்கெனவே இதைக் கொண்டு சென்றிருக்கிறேன். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்தி, அந்தப் பேரூராட்சியினுடைய தீர்மானத்தின்படி, விரிவான இடத்திலே அதைக் கட்டுவதற்குத் தாங்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, (மணியடிக்கப்பெற்றது) இந்த நல்ல வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று பேரவையில் எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நாளையும் தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள், இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது



# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

41. 2006-2007 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

64. மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

65. மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய செயல்திறன் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

66. மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

67. மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

68. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறித்த சிறு நூல். (தமிழ்)

69. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் குறித்த சிறு நூல். (தமிழ்)

70. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து நான்காவது அறிக்கை. (2007-2008)

71. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தைந்தாவது அறிக்கை. (2007-2008)

72. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தாறாவது அறிக்கை. (2007-2008)

73. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தேழாவது அறிக்கை. (2007-2008).

# இணைப்பு—I

*(406ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 41—வருவாய்த் துறை

### அறிவிப்புகள்

1. பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசு நிலங்களில் ஆக்கிரமணம் செய்து வீடுகள் கட்டிக் குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்த இந்த அரசு ஒரு சிறப்புத் திட்டத்தினை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டம் 2007 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டு, பின்னர் 31-03-2008 வரை நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 31-03-2008 வரை 4,16,423 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அதிக அளவில் மக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக இத்திட்டத்தினை 30-9-2008 வரை இறுதி நீட்டிப்பு செய்திட அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்த அரசு பொறுப்பேற்ற பின், தனி அரியலூர் மாவட்டம் அமைக்க ஆணையிடப்பட்டு, தற்போது செயல்படத் தொடங்கியுள்ளது. ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டு, 29-12-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தவாறு திருப்பூரைத் தலைநகராகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்று அமைக்கப்படும். புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று கறம்பக்குடியையும் பொன்னமராவதியையும் தலைமையிடமாகக் கொண்டு இரு புதிய வருவாய் வட்டங்கள் அமைக்கப்படும். மேலும், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரத்திற்கு அருகில் உள்ள, திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டத்தைச் சேர்ந்த 12 வருவாய்க் கிராமங்கள் கோவில்பட்டி வட்டத்துடன் இணைக்கப்படும்.

3. வரும் மூன்று ஆண்டுகளில், ஆண்டுதோறும் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர், வருவாய் வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டப்படும். அரியலூர் மாவட்டத்திற்குப் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடமும் கட்டப்படும்.

4. தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 2.45 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

[2008 ஏப்ரல் 15

5. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 87.40 லட்சம் செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டித்தரப்படும்.

6. புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள தண்டராம்பட்டு மற்றும் ஆத்தூர் வருவாய் வட்டங்களுக்கு ரூ.3.08 கோடி செலவில் அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

7. மிகப் பழமையான மற்றும் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கிவரும் தரங்கம்பாடி, சங்கரன்கோயில், உசிலம்பட்டி, திட்டக்குடி, சிவகங்கை மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, கடலூர், திருத்தணி மற்றும் வேலூர் ஆகிய பத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ரூபாய் 15.97 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

8. புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அரூர் வருவாய்க் கோட்டத்திற்கு ரூபாய் 85.25 லட்சம் செலவில் அலுவலகக் கட்டடம் கட்டித்தரப்படும்.

9. மிகப் பழமையான மற்றும் பழுதடைந்த கட்டடத்தில் இயங்கிவரும் நாமக்கல் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 85.25 லட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

10. பொன்னேரி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 23.75 லட்சம் செலவில் முதல் தளம் கட்டித் தரப்படும்.

11. திருச்செந்தூர் வருவாய்க் கோட்ட அலுவலகத்திற்குக் கூட்ட அரங்கு ரூபாய் 12.50 லட்சம் செலவில் கட்டித் தரப்படும்.

12. நிருவாகத்தை மேம்படுத்தி வலுப்படுத்தும் நோக்குடன், நாகப்பட்டினம் மற்றும் அரியலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் ரூபாய் 1.70 கோடி செலவில் கட்டித் தரப்படும்.

13. அரியலூர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு ரூபாய் 38.50 இலட்சம் செலவில் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டித் தரப்படும்.

14. தற்போது குடியிருப்புக் கட்டடங்கள் இல்லாமல் இருக்கும் கோயம்புத்தூர் (வடக்கு) மற்றும் கோயம்புத்தூர் (தெற்கு), தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பாப்பிரெட்டிப்பட்டி, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி மற்றும் ஒட்டன்சத்திரம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றம் மற்றும் தாம்பரம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளி, நாகப்பட்டினம் மாவட்டத்தில்



2008 ஏப்ரல் 15]

உள்ள கீழ்வேளூர் மற்றும் திருக்குவளை, நீலகிரி மாவட்டத்தில் உள்ள குந்தா மற்றும் பந்தலூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இலுப்பூர் மற்றும் மணமேல்குடி, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலாடி, சேலம் மாவட்டத்தில் உள்ள வாழப்பாடி, கங்கவல்லி மற்றும் இடப்பாடி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம், மணச்சநல்லூர் மற்றும் தொட்டியம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வீரகேரளம்புதூர் மற்றும் ஆலங்குளம், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம், வேலூர் மாவட்டத்தில் உள்ள காட்பாடி, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி மற்றும் காரியாப்பட்டி, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தண்டராம்பட்டு மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் ஆகிய 29 வட்டாட்சியர்களுக்குக் குடியிருப்புக் கட்டடங்கள் ரூ.4.47 கோடி செலவில் கட்டித் தரப்படும்.

15. தமிழகத்தில் உள்ள 1,120 வருவாய் ஆய்வாளர்களில் 1,084 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தெற்குப் பொய்கை நல்லூர், திருக்குவளை மற்றும் நீர்மூளை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அனுப்பர்பாளையம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இல்லத்தூர் ஓதுமலை, கீழப்பாவூர், நெட்டூர், புதுப்பட்டி மற்றும் வேங்கடம்பட்டி, கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார் கோயில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள நெடுக்குலா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பெரியமுத்தூர், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோட்டைப்பட்டினம் மற்றும் சிங்கவனம், மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டி, சென்னை மாவட்டத்தில் உள்ள கோட்டை-தண்டையார்பேட்டை வட்டத்திலுள்ள வருவாய் ஆய்வாளர் 1, 2, 3 மற்றும் 4, புரசைவாக்கம்-பெரம்பூர் வட்டத்திலுள்ள உள்ள வருவாய் ஆய்வாளர் 1, 2, 3 மற்றும் 4, எழும்பூர்-நுங்கம்பாக்கம் வட்டத்திலுள்ள வருவாய் ஆய்வாளர் 1, 2, 3 மற்றும் 4, மைலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டத்திலுள்ள வருவாய் ஆய்வாளர் 1,2,3 மற்றும் 4, மற்றும் மாம்பலம்-கிண்டி வட்டத்திலுள்ள வருவாய் ஆய்வாளர் 1, 2, 3 மற்றும் 4, ஆகிய 36 வருவாய் ஆய்வாளர்களுக்கு ரூ.3.17 கோடி செலவில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

16. ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கான தற்போதைய முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் மிகவும் குறுகிய இடத்தில் அமைந்திருப்பதால் நிருவாகத்தில் ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும்முகமாக, ரூ.84.26 லட்சம் செலவில் புதிய முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

17. தலைமைச் செயலக வருவாய்த் துறைக்கு மொத்தம் ரூ.36.54 இலட்சத்தில் 20 கணினிகள் மற்றும் துணைப் பொருட்கள் 10 டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள், 2 லேசர் பிரிண்டர்கள் மற்றும் ஒரு லைன் பிரிண்டர், நவீன மரத் தளவாடங்கள் மற்றும் 20 நெடு விசிறிகள் வழங்கப்படும்.

18. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு, நிர்வாகத்தைக் கணினிமயமாக்க வேண்டியதன் அவசியம் கருதி, முதல் கட்டமாக 34 கணினிகள், 20 பிரிண்டர்கள் மற்றும் 2 கலர் லேசர் பிரிண்டர்கள் ஆகியவை ரூபாய் 11.72 இலட்சம் செலவிலும், ரூபாய் 1.30 இலட்சம் செலவில் இரண்டு டிஜிட்டல் போட்டோ காப்பியர்களும், அவசர காலங்களில் உடனடி தகவல் பரிமாற்றத்திற்கு உதவும் வகையில் ரூபாய் 41,000/- செலவில் 6 நிகரி இயந்திரங்களும், ஆவணங்களைப் பாதுகாக்க, ரூபாய் 1.96 இலட்சம் செலவில் 30 இரும்பு பீரோக்களும், கணினி முதலான நவீனக் கருவிகளைத் திறம்படப் பயன்படுத்துவதற்கு வசதி செய்து தரும் வகையில் ரூபாய் 9.60 இலட்சம் செலவில் நாற்காலிகள் மற்றும் மேசைகள் ஆகியன அளிக்கப்படும். மேலும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தின் அலுவலர்கள், அலுவலக நிமித்தம் பயணம் செய்வதற்கென ஒரு பொலிரோ ஈப்பு ரூபாய் 4.46 லட்சம் செலவிலும் வழங்கப்படும்.

19. நில நிருவாக ஆணையர் அலுவலகத்திற்கு மொத்தம் ரூபாய் 13.50 இலட்சம் செலவில் எல்.சி.டி. புரொஜக்டர், திரை மற்றும் உபகரணங்கள், இரண்டு சீர்வளி சாதனங்கள், ஒரு பல்வகை நிகரி, கணினி அறைகலன்கள், நான்கு டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள், 8 லேசர் பிரிண்டர்கள், 20 புதிய தொலைபேசி இயந்திரங்கள் மற்றும் இரண்டு அம்பாசிடர் சீருந்துகள் ஆகியன வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

20. ரூபாய் 125.72 இலட்சம் செலவில் நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையில் உள்ள மத்திய நில அளவை அலுவலகத்தைக் கணினிமயமாக்கவும், அவ்வலுவலகத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், பழைய 10 வாகனங்களுக்குப் பதிலாக 10 புதிய வாகனங்கள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

21. ரூபாய் 42.95 இலட்சம் செலவில் நிலச் சீர்திருத்தத் துறைக்கு 9 கணினிகள் வழங்கவும், அத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 18 சார்நிலை அலுவலர்களுக்கு 18 கணினிகள் வழங்கவும், 3 ஜெராக்ஸ் இயந்திரங்கள், ஒரு பல்நோக்கு நிகரியும், பழைய ஈப்புகளுக்குப் பதிலாக 6 புதிய ஈப்புகள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

22. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறைக்கு 5 கணினிகள் மற்றும் துணைப் பொருட்கள் ரூபாய் 2.00 இலட்சம் செலவில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

23. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ரூபாய் 24 இலட்சம் செலவில் மின்தூக்கி மற்றும் மின்தூக்கி அறை அமைக்கப்படும்.

24. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் பணியாளர்கள் மற்றும் திருக்குவளை வட்டாட்சியர் அலுவலகக் கூடுதல் பணியாளர்களுக்கு மரத் தளவாடங்கள் வாங்குவதற்கு, வரும் நிதியாண்டில் ரூபாய் 10.50 இலட்சம் செலவிடப்படும்.

25. பொது மக்கள் மற்றும் அலுவலர்களின் பாதுகாப்பு கருதி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு மாவட்டம், கோபி கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றிற்கு ரூபாய் 2.70 இலட்சம் செலவில் தீயணைப்புச் சாதனங்கள் அளிக்கப்படும்.

26. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மிகப் பழமையான பைமாஷ் ஆவணங்களைப் பாதுகாக்க் மைக்ரோ ஃபிலிமிங் செய்வது தொடர்பாக ஏற்படக்கூடிய செலவினங்களுக்கென ரூபாய் 12.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

27. பொது மக்கள் மற்றும் அலுவலர்களின் வசதி கருதி, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதலான கழிப்பறைகள் ரூபாய் 24.00 இலட்சம் செலவில் கட்டித் தரப்படும்.

28. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அவசியம் கருதி 2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் 3.00 இலட்சம் செலவில் கூடுதல் கழிப்பறை கட்டப்படும்.

29. புதுக்கோட்டை வருவாய்க் கோட்ட வளாகத்தில் அலுவலர்களுக்கென ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறைகளும், பொது மக்களுக்காக கழிப்பறைகளும் ரூபாய் 11.50 இலட்சம் செலவில் கட்டித் தரப்படும்.

30. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வருவாய்க் கோட்ட அலுவலகத்திற்குக் கூட்ட அறையும், கூடுதல் பதிவறையும் கட்ட ரூபாய் 16.00 இலட்சம் செலவிடப்படும்.

31. சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குத் தேவையான கழிப்பறைகள், வாகனங்கள் நிறுத்துமிடம், நுழைவாயில் வளைவு மற்றும் மின்வசதிக்கென ரூபாய் 14.50 இலட்சம் செலவிடப்படும்.

32. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர் வட்டாட்சியர் அலுவகத்திற்கு வாகனங்கள் நிறுத்துமிடம், கூட்ட அரங்கு மற்றும் கழிப்பறை ஆகியவை கட்டுவதற்கென ரூபாய் 11.50 இலட்சம் செலவிடப்படும்.

33. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 5.00 இலட்சம் செலவில் கணினி அறை கட்டித் தரப்படும்.

34. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குத் தேவையான கணினி அறை, இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், அலுவலர்களுக்கான கழிப்பறைகள் ஆகியவை ரூபாய் 13.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

35. நாகப்பட்டினம் வருவாய்க் கோட்ட அலுவலருக்கு ரூபாய் 17.60 இலட்சம் செலவில் முகாம் அலுவலகம் கட்டித் தரப்படும்.

36. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூபாய் 76.00 இலட்சம் செலவில் கூடுதல் தளம் கட்டப்படும்.

37. திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலருக்கு ரூபாய் 23.32 இலட்சம் செலவில் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டித் தரப்படும்.

38. மிகப் பழமையான மற்றும் பழுதடைந்த கட்டடத்தில் இயங்கி வரும் கோவை மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் ரூபாய் 25.40 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

39. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 9.35 இலட்சம் செலவில் உணவருந்துவதற்கான கூடம் கட்டப்படும்.

40. மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூபாய் 53.00 இலட்சம் செலவில் கூடுதலாக பல்நோக்குக் கருத்தரங்கு கட்டப்படும்.

41. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 49.50 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படும்.





# இணைப்பு—II

(406ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 26—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## அறிவிப்புகள்

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

**1. புதிய திட்டங்கள்**

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீட்டு வசதித் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் 22,000 குடியிருப்புகள் தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கூட்டு முயற்சித் திட்டம், உரிமை மாற்று முறை (Turnkey) மற்றும் சுய நிதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும். பிரதானமாக சென்னை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் 17,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும். இவற்றில் குறைந்த வருவாய் பிரிவினருக்கும் மற்றும் மத்திய வருவாய் பிரிவினருக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**2. புதிய அலுவலகம் மற்றும் வணிக வளாகங்கள் கட்டுதல்**

மதுரையில் ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் அலுவலகம் மற்றும் வணிக வளாகமும், சென்னையில் பெசன்ட் நகரில் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாயக் கூடமும் கட்டப்படும். இதர மாவட்டங்களிலும் வணிக வளாகங்கள் கட்டப்படும்.

**3. நிலச் சொந்தக்காரர்களை வாரியத் திட்டத்தின்கீழ் மனைபெறும் முன்னுரிமையாளர்களாக ஏற்றுக்கொள்வது**

வீட்டு வசதி வாரியத்திற்காகக் கையகப்படுத்தப்படுகின்ற நிலங்களின் உரிமையாளர்கள் அதிக இழப்பீட்டுத் தொகை கோரியும் நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்தும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வதால், வீட்டு வசதித் திட்டங்களை விரைந்து செயல்படுத்த முடியாத நிலை உள்ளது. ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்க இயலாத நிலையும் உள்ளது. எனவே, இக்குறைகளைப் போக்க நிலச் சொந்தக்காரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதுடன் மேலும் அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2008 ஏப்ரல் 15

**4. சூரிய சக்தியின்மூலம் மின்னாற்றலும் மற்றும் இயற்கை ஒளி தொழில் நுட்பத்துடன் கூடிய புதிய கட்டுமானங்கள் கட்டுதல் (Green Building)**

இவ்வாண்டு முதல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்படும் கட்டடங்களில் சுற்றுச் சூழலின் அடிப்படையில் இயற்கை சக்திகளை முழுவதையும் பயன்படுத்தி மக்கள் சுகாதாரமாகவும், இயற்கையாகவும் வாழ்வதற்கு ஏற்ற கட்டடங்கள் வடிவமைத்து கட்டப்படும்.

**5. ஒதுக்கீடு மற்றும் விலை நிர்ணயக் கொள்கையில் மாற்றம்**

வீட்டு வசதி வாரியம், ஏற்கெனவே நடைமுறைப்படுத்துகின்ற ஒதுக்கீடு மற்றும் விலை நிர்ணயக் கொள்கையை ஏழை எளிய மக்களுக்குப் பயன்பெறும் வகையில் மாற்றி அமைத்துப் புதிய கொள்கைகள் இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**6. பட்டினப்பாக்கத்தில் உலகத் தரம் வாய்ந்த புதிய நகரியம் உருவாக்குதல்**

சென்னை மாநகரத்தில் நிலவிவரும் நிலத்தின் மதிப்பு அறிந்து சென்னை, பட்டினப்பாக்கத்தில் மிகவும் பழுதடைந்துள்ள அரசுக் குடியிருப்புகளை அகற்றிவிட்டு, சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து உலகத் தரம் வாய்ந்த நவீன தொழில்நுட்ப யுக்தியுடன் புதிய நகரியம் அமைக்கப்படும். மேலும் மாற்றுக் குடியிருப்பு கோருபவர்களுக்கு உடனடியாக செம்மஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளில் மாற்றுக் குடியிருப்பு வழங்கப்படும்.

**7. புதிய சரகங்கள் அமைத்தல்**

இந்த ஆண்டு திட்டமிடப்பட்ட 22,000 குடியிருப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் ஆகியவற்றைச் செவ்வனே செயல்படுத்தவும் மற்றும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ள உள்ள திட்டங்களுக்காக ஒரு தலைமைப் பொறியாளர் மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, வேலூர் ஆகிய இடங்களில் மேற்பார்வைப் பொறியாளர்களின் அலுவலகங்கள் திறக்கப்படும்.

**8. விற்பனைப் பத்திரங்கள் வழங்குதல்**

நடப்பாண்டில் ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெறும் வகையில் புதியதாக, 50,000 விற்பனைப் பத்திரங்கள் மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம்கள் மூலம் வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 15]

**9. ஊழியர்களுக்கான நிலுவைத் தொகை வழங்குதல்**

கடந்த 2006 ஆம் ஆண்டு பணி உதவியாளர்களுக்கு தேர்வுநிலை வழங்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு 10 ஆண்டு முடிவிலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை வாரியத்தின் வருவாயிலிருந்து வழங்க வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

## தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

**1. ஒருங்கிணைந்த நகரம் (Integrated Township)**

சென்னை மாநகரத்தை குடிசைப் பகுதிகளற்ற நகரமாக 2013 ஆம் ஆண்டிற்குள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 20,000 குடியிருப்புகள் ரூ.814.85 கோடி செலவில் கட்டப்பட்டு, ஓர் ஒருங்கிணைந்த நகரம் (Integrated Township) சுமார் ஒரு இலட்சம் நபர்கள் வாழும் வகையில் அமைக்கப்படும். இந்நகரில் கல்விக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், பூங்காக்கள் மற்றும் இதர தேவையான வசதிகள் அமைக்கப்படும்.

**2. புதிய கட்டுமானத் தொழில்நுட்ப முறைகள் (New construction Technology)**

நகரப் பகுதிகளில், குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு வீட்டு வசதி அமைக்கும் திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மிகக் குறுகிய காலத்தில் உயர்ந்த தரத்தில் அமைக்கும் பொருட்டு, புதிய (New construction Technology) தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படும்.

**3. வாழ்வாதார மையம் மற்றும் தகவல் நுழைவாயில் (Web Portal)**

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் பல்வேறு வேலைவாய்ப்புகள் பெற பயிற்சி பெற்ற இளைஞர்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த, வேலைவாய்ப்பு அளிப்போருக்கும் பயிற்சிபெற்ற குடிசைப் பகுதிவாழ் இளைஞர்களுக்கும் இடையே ஓர் இணைப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு வாழ்வாதார மையம் மற்றும் தகவல் நுழைவாயில் (Web portal), தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் விரைவில் ஏற்படுத்தப்படும்.

**4. குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு 7 அடுக்குகள் கொண்ட மாடி வீடுகள்**

நகர குடிசைப் பகுதி வாழ் மக்களை அவர்களின் விருப்பத்திற்கிணங்க நகரப்பகுதிகளுக்கு அருகே குடியமர்த்தும் பொருட்டும், மற்றும் நிலப் பற்றாக்குறையையும் விலையையும் கருத்தில் கொண்டும், 7 அடுக்குகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் மின்தூக்கி மற்றும் இதர வசதிகளுடன் அமைக்கப்படும்.

**5. பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு வீட்டு வசதி (Economically Weaker Section)**

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் தற்போது நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்காக மட்டுமே வீட்டு வசதி அமைக்கப்படுகின்றது. இனிவரும் ஆண்டுகளில் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கும் (Economically Weaker sections) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்படும் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியத்தினை நன்காய்ந்து அதற்கான வழிமுறைகள் கண்டறியப்படும்.



## இணைப்பு–III

*(406 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் [உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை]

### அறிவிப்புகள்

1. மதுரை மத்திய சிறையில் தற்போதுள்ள நோயாளர் ஊர்திக்குப் பதிலாக ரூபாய் 6.80 இலட்சம் செலவில் புதிய நோயாளர் ஊர்தி ஒன்று வழங்கப்படும்.

2. நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல் மாவட்ட சிறைகளுக்கு ரூபாய் 9.48 இலட்சம் செலவில் இரண்டு ஜீப்புகள் வழங்கப்படும்.

3. சிறைத் துறைப் பணியாளர்களுக்கு ரூபாய் 16.36 இலட்சம் செலவில் கணினிப் பயிற்சி அளிக்கப்படும்.

4. சிறைவாசிகளின் நேரத்தைப் பயனுள்ள முறையில் செலவிடவும், தானே சுயமாக சம்பாதித்து ஊதியம் பெறுவதோடு மன நிறைவையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் நோக்கத்தில், கோவை மத்திய சிறையில் உள்ள சிறைவாசிகளுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலைகளில் ஏற்படும் பனியன் கழிவுகளிலிருந்து நூலைப் பிரித்தெடுக்கும் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# இணைப்பு–IV

*(459 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

### முகவுரை

இந்தியாவில் அதிக அளவில் நகர்ப்புறப் பகுதிகளைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு ஆகும். நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் பல நல்ல திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. மேலும், தொலைநோக்குப் பார்வையோடு தூய்மையான நகரங்களை உருவாக்கிடவும், மக்கள் நலப் பணிகளைச் செயல்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், முழு அளவில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி வருவதுடன் நகர்ப்புறங்களில் ஏழ்மையினை ஒழிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் முக்கியத்துவம்

பல்வேறு நிதி ஆதாரங்களைக்கொண்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் (TURIF) பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் (JNNURM) கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிப் பகுதிகளும் அவற்றுக்கு அருகிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளும் புதுப் பொலிவினைப் பெற்று வருகின்றன. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III (TNUDP-III), சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) ஆகிய திட்டங்களின்கீழ் பெறப்படும் நிதியுதவி, மாநில அரசின் நிதியுதவி, நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் நிதி மற்றும் உள்ளாட்சிகளின் பொது நிதி ஆகிய நிதி ஆதாரங்களைக்கொண்டு குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பகுதி - II திட்டத்தின்கீழ், நவீன சுடுகாடு அமைத்தல், நவீன இறைச்சிக் கூடம் கட்டுதல், சாலைகளை மேம்படுத்துதல், மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றுதல் போன்ற பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பெருமளவில் மேற்கொண்டு வருகின்றன.

பொன்விழா ஆண்டு வேலைவாய்ப்புத் திட்டத்தின் (SJSRY) மூலம் நகர்ப்புற ஏழ்மையைக் களையவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் மற்றும் அவற்றைச் சார்ந்த பகுதிகளில், நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் (BSUP) திட்டத்தின்கீழும், ஏனைய நகர்ப்புறப் பகுதிகளில் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (IHSDP) கீழும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### தர மேம்பாடு

தரமான செயல்பாடுகளுக்காகவும், சிறப்பான அமைப்பு முறையினை உருவாக்குதலுக்காகவும், சர்வதேசத் தர நிர்ணய நிறுவனச் (ISO) சான்றுகள் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. இச்சான்றிதழ்கள் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளன. மிகச் சிறந்த திடக் கழிவு மேலாண்மை நடைமுறைகளுக்காக, நகர்ப்புற உள்ளாட்சிகளிலேயே நாட்டிலேயே முதலாவதாக நாமக்கல் நகராட்சி 2006 ஆம் ஆண்டில் ISO-14001 சான்றினைப் பெற்றது. மதுரை மாநகராட்சி, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு ISO-9001-2000 சான்றினைப் பெற்றுள்ளது. இதேபோன்று, தூத்துக்குடி நகராட்சியும், சத்திரம் தெருவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்திற்கு ISO-9001-2000 தரச் சான்றினைப் பெற்றுள்ளது. நகராட்சிகள் தர மேன்மை பெற்றுவருவதற்கு இவையெல்லாம் எடுத்துக்காட்டுகளாகும்.

கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகள் இவ்வாண்டில் முதன்முறையாக “விளைபயன் காட்டும் வரவு-செலவுத் திட்டத்தினைத் (Outcome Budget)” தயாரித்து வெளியிட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் இவ்வகைத் திட்டங்கள் அனைத்து மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.



### நிருவாகச் சீர்திருத்தம்

கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசால் மேற்கொள்ளப்பட்ட நிருவாகச் சீர்திருத்த நடவடிக்கைகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நிருவாகத்தைத் திறம்படச் செயல்படுத்த வழிவகை செய்துள்ளன. நகர மக்களுக்கென வழங்கும் பணிகளைச் சிறப்புறச் செய்வதற்கு ஏதுவாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்படும் அனைத்துக் காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட 145 பணியிடங்கள் மற்றும் 2,020 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. நிருவாகத் திறனை மேம்படுத்தும் வகையில் பணியாளர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. தற்போதைய சூழலுக்கு ஈடுகொடுக்கும் வகையில், பணிகளுக்கு வழங்கப்படும் நிருவாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சிகளின் கடன் சுமையைத் தள்ளுபடி செய்ததன்மூலம், நகராட்சிகள் கடன் சுமையிலிருந்து மீண்டுள்ளதால், அத்தியாவசிய சேவைகளை மேம்படுத்துவதில் நகராட்சிகள் தங்களது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளன. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த வழங்கப்பட்ட அரசு ஆணை, இப்பகுதிகளில் பல்லாண்டுகளாக அடிப்படை வசதிகளற்றிருந்த மக்களின் வாழ்வில் புத்தொளி ஏற்றியுள்ளது. தற்போது, மேற்படி மனைப் பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசினால் கடந்த இரண்டாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி மின்னாளுகையை முழு வீச்சுடன் செயல்படுத்தி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை “மக்கள் நட்பு அமைப்புகளாக” உருவாக்குவது, 2008-2009 ஆம் ஆண்டின் கொள்கை நோக்கமாகும்.

### 2008-2009ஆம் ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அடைந்த சாதனைகளும்

கடந்த இரண்டாண்டுகளின் கொள்கை அறிவிப்புகள் மற்றும் அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு, கீழே கொடுக்கப்பட்டுள்ளது. நிருவாகம், கட்டமைப்பு மேம்பாடு, வரி, நிதி மேலாண்மை மற்றும் சிறப்பு முயற்சிகள் ஆகிய தலைப்புகளில் இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2008-2009ஆம் ஆண்டிற்கான அரசின் கொள்கைகளையும் இவை உள்ளடக்கியுள்ளன.

[2008 ஏப்ரல் 15

# நகராட்சி நிருவாகம்

## I. நிருவாகம்

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய 8 மாநகராட்சிகள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் உள்ளன. ஈரோடு மற்றும் திருப்பூர் நகராட்சிகள், மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டு 1-1-2008 முதல் மாநகராட்சிகளாகச் செயல்பட்டு வருகின்றன. சென்னையைத் தவிர, ஏழு மாநகராட்சிகளும் 49 மூன்றாம் நிலை நகராட்சிகள் உட்பட, 150 நகராட்சிகளும் நகராட்சி நிருவாக ஆணையரின் மேற்பார்வையில் உள்ளன.

வருமானம் மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் நகராட்சிகள் ஐந்து நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | நிலை | ஆண்டு வருமானம் (ரூ. கோடியில்) | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | 5.00 க்கு மேல் | 11 |
| 2 | தேர்வு நிலை | 2.00-5.00 | 28 |
| 3 | நிலை I | 1.00-2.00 | 36 |
| 4 | நிலை II | 1.00க்குக் கீழ் | 26 |
| 5 | நிலை III | 30,000க்குமேல் மக்கள் தொகை | 49 |
| | | மொத்தம் | 150 |

### 1. இரு புதிய மாநகராட்சிகள் உருவாக்கம்

திருப்பூர் நகராட்சி மற்றும் ஈரோடு நகராட்சி மாநகராட்சிகளாக அமைக்கப்பட்டு, 1-1-2008 முதல் மாநகராட்சிகளாகச் செயல்படத் தொடங்கின.



2008 ஏப்ரல் 15]

### திருப்பூர் மாநகராட்சி

பின்வரும் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை ரூ. 104575 இலட்சம் செலவில் மேற்கொள்ள அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இச்செலவினத்திற்காக ஒருமுறை மானியமாக ரூ. 500 இலட்சம் அரசு வழங்கி ஆணையிட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

| வ.எண் | பணியின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 450.00 |
| 2 | சாலை மேம்பாடு | 300.00 |
| 3 | சாலை மைய தெரு விளக்குகள் அமைத்தல் | 198.75 |
| 4 | உயர் மின் கோபுர விளக்குகளைப் பத்து இடங்களில் அமைத்தல் | 60.00 |
| 5 | கம்பியில்லாத் தொலைதொடர்பு வசதிகள் வழங்குதல் | 15.00 |
| 6 | குமரன் நினைவு இல்லத்தினைச் செம்மையுறச் செய்தல் | 2.00 |
| 7 | பூங்காக்கள் மேம்பாடு | 20.00 |
| | மொத்தம் | 1,045.75 |

[2008 ஏப்ரல் 15

மேலும், மாநகராட்சியின் தொடக்கக் கல்வி நிதியிலிருந்து கூடுதல் வகுப்பறைகள் கட்டிக்கொள்ளவும் அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. பணிகளின் விவரங்கள்:

| வ. எண் | பணி விவரங்கள் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 | நஞ்சப்பா ஆண்கள் மேனிலைப் பள்ளியில் 24 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 190.00 |
| 2 | ஜெய்வாபாய் பெண்கள் மேனிலைப் பள்ளியில் 33 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 240.00 |
| 3 | பழனியம்மாள் பெண்கள் மேனிலைப் பள்ளியில் 24 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 200.00 |
| | மொத்தம் | 630.00 |

மேலும், குமார் நகர் மேனிலைப் பள்ளியில் ரூ. 80 இலட்சம் செலவில் 14 கூடுதல் வகுப்பறைகள் கட்டவும், ஜெய்வாபாய் மேனிலைப் பள்ளியில் ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளி அரங்கம் கட்டவும் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



2008 ஏப்ரல் 15]

**ஈரோடு மாநகராட்சி**

பின்வரும் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை ரூ.1,019 இலட்சம் செலவில் மேற்கொள்ள, அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இச்செலவினத்திற்காக ஒருமுறை மானியமாக ரூ.500 இலட்சம் அரசு வழங்கி ஆணையிட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

| வ. எண் | பணி | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 300.00 |
| 2 | காந்தி சாலையில் உள்ள மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனையை மேம்படுத்துதல் | 200.00 |
| 3 | மாநகராட்சிக்குப் புதிய வாகனங்கள் வாங்குதல் | 74.00 |
| 4 | பெரியார் நகர் நூலக மேம்பாட்டுப் பணிகள் | 20.00 |
| 5 | பதினோரு இடங்களில் உயர்மின் கோபுர விளக்குகள் அமைத்தல் | 55.00 |
| 6 | சாலை மைய தெரு விளக்குகள் அமைத்தல் | 20.00 |
| 7 | கம்பியில்லாத் தொலைத்தொடர்பு வசதிகள் வழங்குதல் | 30.00 |
| 8 | பிரதான சாலைகளில் மின்சிக்கன விளக்குகள் அமைத்தல் | 20.00 |
| 9 | பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் | 300.00 |
| | மொத்தம் | 1,019.00 |

இவை தவிர, பின்வரும் பணிகள், மாநகராட்சி தொடக்கக் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படவுள்ளன:

| வ. எண் | பணி | அனுமதிக்கப் பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காவேரி சாலை நகராட்சி பெண்கள் நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 48.00 |
| 2 | இரயில்வே குடியிருப்பு நகராட்சி மேனிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அரங்கக் கட்டடம் கட்டுதல் | 100.00 |
| 3 | இரயில்வே குடியிருப்பு நகராட்சி தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 40.00 |
| 4 | இரயில்வே குடியிருப்பு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 30.00 |
| 5 | பாலசுப்பராயலு நகராட்சி ஆரம்பப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 30.00 |
| 6 | காவேரி சாலை நகராட்சி பெண்கள் மேனிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 100.00 |
| | **மொத்தம்** | **348.00** |

ஈரோடு மாநகராட்சி மற்றும் அதன் அருகிலுள்ள 4 மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் ரூ. 154 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளை மேற்கொள்ள, அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**வேலூர் மாநகராட்சி**

வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் பல முக்கியக் கல்வி நிலையங்கள் அமையப் பெற்றதுமாகிய வேலூர் நகராட்சி வரும் நிதியாண்டில் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படும்.





**2. நகர்ப்புற உள்ளாட்சிகளுக்குப் பொதுவான சட்டம் இயற்றுதல்**

நடைமுறைப்படுத்தப்பட்டு பின்பு நிறுத்தி வைக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொதுவான ஒரு புதிய சட்டம் இயற்றிட, நகராட்சி நிருவாகத் துறையின் முதுநிலை அதிகாரிகளின் தலைமையில் நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்கள், மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் மூத்த நகராட்சி ஆணையர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 6 குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் மத்திய அரசு தயாரித்த மாதிரி நகராட்சிகள் சட்டம் ஆகியவற்றின் சட்டப் பிரிவுகளை ஆய்வு செய்து பரிந்துரைகளை இறுதி செய்துள்ளன. மேற்படி பரிந்துரைகள் ஆய்வில் உள்ளன. இயற்றப்படவிருக்கும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொதுச் சட்டம், எளிய முறைகளைக் கொண்டதாகவும், நகர்ப்புற ஆளுகைக்கு பேருதவியாகவும் இருக்குமென எதிர்நோக்கப்படுகிறது.

**3. நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குதல்**

உள்ளாட்சி நிறுவனங்களில் நிதி நிலைமையை ஆய்வு செய்து அரசிற்கு அதனுடைய பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க மாநில மூன்றாவது நிதி ஆணையத்தை அரசு அமைத்தது. இந்த ஆணையம் உள்ளாட்சிகளின் நிதி நிலையினை ஆய்வு செய்து தன்னுடைய பரிந்துரைகளை 30-09-2006 அன்று சமர்ப்பித்தது.

மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் சில பரிந்துரைகளைப் பரிசீலிக்கவும், உள்ளாட்சிகளுக்கு எந்தெந்த இனங்களில் அதிக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கலாம் என்பது குறித்து ஆலோசனை வழங்கவும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த உயர்நிலைக் குழு மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் குறிப்பிட்ட பரிந்துரைகளை செயல்படுத்துவதற்குரிய சாத்தியக்கூறுகள் குறித்தும், பிற இனங்களையும் ஆராய்ந்து அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையில் அரசு, நகர்ப்புற உள்ளாட்சிகளின் அதிகார வரம்பை உயர்த்தி கீழ்க்காணும் ஆணைகளை வெளியிட்டுள்ளது:

[2008 ஏப்ரல் 15

### (அ) நிருவாக அனுமதி அளிக்கும் அதிகாரத்தைப் பரவலாக்குதல்

நலத் திட்டங்கள் அனைத்தும் காலதாமதமின்றி மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும். பணிகளை விரைவாக முடிக்கவும், அதன்மூலம் பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்யவும், உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு அரசால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரசு நகராட்சிகளின் நிருவாக அனுமதி அளிக்கும் அதிகாரத்தை பின்வருமாறு உயர்த்தி ஆணையிட்டுள்ளது:

| அதிகார அமைப்பு | தற்பொழுதுள்ள நிருவாக அனுமதி அதிகார வரம்பு | திருத்தியமைக்கப்பட்ட நிருவாக அனுமதி அதிகார வரம்பு |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| **நகராட்சிகள்** | | |
| சிறப்பு நிலை | 10.00 வரை | 40.00 வரை |
| தேர்வுநிலை | 10.00 வரை | 35.00 வரை |
| முதல் நிலை | 7.00 வரை | 30.00 வரை |
| இரண்டாம் நிலை | 5.00 வரை | 25.00 வரை |
| மூன்றாம் நிலை | 2.00 வரை | 15.00 வரை |
| நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர் | -- | 50.00 வரை |
| நகராட்சி நிருவாக ஆணையர் | 100.00 வரை | 500.00 வரை |
| அரசு | 100.00-க்கு மேல் | 500.00-க்கு மேல் |



2008 ஏப்ரல் 15]

### (ஆ) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் அமர்வுப் படி உயர்வு

நகர்ப்புற உள்ளாட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கான அமர்வுப் படியினை (Sitting Fees) பின்வருமாறு உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது:

| உள்ளாட்சி அமைப்பு | அமர்வுப் படி (ரூபாய்) | |
|---|---|---|
| மாநகராட்சிகள் | மேயர் | 800/- |
| | உறுப்பினர்கள் | |
| நகராட்சிகள் | தலைவர் | 600/- |
| | உறுப்பினர்கள் | |
| மூன்றாம் நிலை நகராட்சிகள் | தலைவர் | 500/- |
| | உறுப்பினர்கள் | |

### (இ) வீடுகளுக்கான கூடுதல் குடிநீர் இணைப்புகள் வழங்க அனுமதியளிக்கும் அதிகாரப் பரவலாக்கம்

எண்ணிக்கையில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, வீடுகளுக்குக் கூடுதல் குடிநீர் இணைப்பு வழங்க, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் வழங்கி 12-7-2007-ல் அரசு ஆணையிட்டுள்ளது. தகுதியான இனங்களில், விண்ணப்பம் பெறப்பட்ட 7 நாட்களில் இணைப்பினை வழங்கிடவும் அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாணையினைத் தொடர்ந்து ஏறத்தாழ 40,000 வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

## II. கட்டமைப்பு மேம்பாடு

### 1. நவீன பேருந்து நிலையங்கள்

பயணிகளின் வசதிகளை மேம்படுத்தும் குறிக்கோளுடன் தேசிய / மாநில நெடுஞ்சாலைகளிலும், மக்கள் அதிக அளவில் கூடும் புனிதத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களின் அருகிலும் அமைந்துள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளின் பேருந்து நிலையங்களை நவீனப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதுவரை முடிக்கப்பட்ட மற்றும் நடவடிக்கையிலுள்ள திட்டங்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

[2008 ஏப்ரல் 15

**(அ) முடிவடைந்துள்ள திட்டங்கள்:**

1. நாகர்கோவில் நகராட்சியில் ரூ.156 இலட்சம் செலவில் கழிப்பிட வசதி, முன்பதிவு மையம், நடமாடும் தபால் நிலையம், ஊனமுற்றோருக்காக சாய்தள மேடை முதலிய நவீன வசதிகளுடன் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இப்பேருந்து நிலையம்மூலம் நகராட்சிக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ.2.79 இலட்சத்திலிருந்து ரூ.26 இலட்சமாக உயர்ந்துள்ளது.

2. கோவில்பட்டி நகராட்சி பேருந்து நிலையம் ரூ. 180 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதில் 50 பேருந்து நிறுத்துமிடங்கள், 29 கடைகள், 2 உணவகங்கள், பொருள் பாதுகாப்பு அறை, உடல் ஊனமுற்றோர்களுக்காக சாய்தள மேடை போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பேருந்து நிலையம், 16-7-2007 முதல் பொதுமக்களின் பயன்பாட்டிலுள்ளது. இப்பேருந்து நிலையம்மூலம் ஆண்டிற்கு ரூ. 75 இலட்சம் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. இராஜபாளையம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம், 60 பேருந்து நிறுத்துமிடங்கள், கடைகள், உணவகங்கள், முன்பதிவு மற்றும் விசாரணை மையங்கள், பொருள் பாதுகாப்பு அறை, உடல் ஊனமுற்றோருக்காக சாய்தள மேடை முதலிய வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையம்மூலம் ஆண்டொன்றிற்கு ரூ. 92.95 இலட்சம் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. திருவண்ணாமலை பேருந்து நிலையம் ரூ. 38 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்று 19-11-2007 முதல் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

5. கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூ. 678 இலட்சம் மதிப்பீட்டில் 50 பேருந்து நிறுத்துமிடங்கள், கடைகள், ஓட்டுநர், நடத்துனருக்கான ஓய்வு அறைகள், ஊனமுற்றோருக்காக சாய்தள மேடை, கழிவறைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளுடன் புதிதாகப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையம் 26-2-2008 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டுக்கு ரூ. 57.50 இலட்சம் நகராட்சிக்கு வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ) நடைபெற்று வரும் பேருந்து நிலையப் பணிகள்**

நெல்லிக்குப்பம், கொடைக்கானல், கோயம்புத்தூர் மாநகராட்சியில் மேட்டுப்பாளையம் சாலை, மணலி, அனகாபுத்தூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், பொள்ளாச்சி, பூவிருந்தவல்லி, வந்தவாசி, பழனி மற்றும் ஓசூர் ஆகிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பேருந்து நிலையங்களில் ரூ.3,414.79 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2. நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல்**

2006-2007ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 33 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்க அரசு அனுமதி வழங்கி, ரூ. 7.60 கோடி மானியம் விடுவித்துள்ளது. பணிகள் பல்வேறு கட்டங்களில் முன்னேற்ற நிலையில் உள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் மேலும் கீழ்க்காணும் 14 நகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| 1. | செங்கற்பட்டு | 8. | கொமாரபாளையம் |
| 2. | திருவொற்றியூர் | 9. | ஓசூர் |
| 3. | பல்லவபுரம் | 10. | மேட்டுப்பாளையம் |
| 4. | பண்ருட்டி | 11. | மன்னார்குடி |
| 5. | மாதவரம் | 12. | பட்டுக்கோட்டை |
| 6. | ஆரணி | 13. | போடிநாயக்கனூர் |
| 7. | திண்டிவனம் | 14. | புளியங்குடி |

[2008 ஏப்ரல் 15

அனுமதிக்கப்பட்ட 52 பணிகளில், தூத்துக்குடி நகராட்சியிலும், ஈரோடு மாநகராட்சியிலும் பணிகள் முடிவுற்று பயனுக்குக் கொண்டு வரும் நிலையில் உள்ளன. கீழ்க்காணும் 15 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணி முடிவடையும் நிலையில் உள்ளது:

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் |
|---|---|
| 1. | கடலூர் |
| 2. | திருச்சிராப்பள்ளி |
| 3. | திருநெல்வேலி |
| 4. | கரூர் |
| 5. | தேனி அல்லி நகரம் |
| 6. | விருதுநகர் |
| 7. | வேலூர் |
| 8. | தருமபுரி |
| 9. | திருவாரூர் |
| 10. | கிருஷ்ணகிரி |
| 11. | நாகப்பட்டினம் |
| 12. | தஞ்சாவூர் |
| 13. | சிவகங்கை |
| 14. | திண்டுக்கல் |
| 15. | திருவண்ணாமலை |

ஏனைய மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில், இப்பணி 2008-2009 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பழனி நகராட்சியில் ஒரு திட்டம் பொது மக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நவீன எரிவாயு தகன மேடைகளைப் பராமரிப்பதிலும், இவ்வசதியைப் பேணுவதிலும் அரசு சாரா நிறுவனங்கள், தனியார் சேவை நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவற்றின் உதவியைப் பெற திட்டமிடப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

### 3. நவீன இறைச்சிக் கூடங்கள்

பிராணிகளைப் பொது இடங்களில் உணவுக்காக வதை செய்வதைத் தவிர்க்கும் பொருட்டு, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் நவீன இறைச்சிக் கூடங்களைப் பராமரிக்கவேண்டும் என உச்ச நீதிமன்றம், 2000 ஆம் ஆண்டில் ஆணை பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தின் ஆணையினை நடைமுறைப்படுத்த முதல்கட்டமாக 32 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் 2006-2007 ஆம் ஆண்டில் நவீன இறைச்சிக் கூடங்களை அமைக்க அரசு அனுமதி வழங்கியதுடன் சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு ரூ. 3.70 கோடி மானியமும் வழங்கியது.

2007-2008 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ. 13 கோடி மதிப்பீட்டில் 65 நகர்ப்புற உள்ளாட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்களை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் எடப்பாடி, தாராபுரம், உடுமலைப்பேட்டை, மயிலாடுதுறை, திருத்துறைப்பூண்டி, சீர்காழி, கூத்தாநல்லூர், காரைக்குடி, பரமக்குடி மற்றும் சிவகாசி ஆகிய நகராட்சிகளில் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், பணிகள் 2008-2009 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

### 4. பாதாளச் சாக்கடைத் திட்டம்

பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், மாநகர் மற்றும் நகரங்களில் வசிக்கும் பொது மக்களுக்குச் சுத்தமான சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும், ஆரோக்கியமான வாழ்விற்கும் உதவக்கூடியதாகும்.

2006-2007 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களில் அமைந்துள்ள நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, கரூர், இனாம் கரூர் மற்றும் மதுரை நகரங்களில் மேற்படி திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. கும்பகோணம் மற்றும் மதுரை நகரங்களைத் தவிர, இதர நகரங்களில் இத்திட்டப் பணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் III-ன்கீழ் 24 மாவட்டத் தலைமையிடங்களில் அமைந்துள்ள நகராட்சிகளில் (நாகர்கோவில் மற்றும் அரியலூர் தவிர) இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. நாகர்கோவில் மற்றும் அரியலூர் நகராட்சிகளில் இப்பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில்

எடுத்துக்கொள்ளப்படும். மாவட்ட தலைநகரங்களல்லாத திருப்பூர், இனாம் கரூர், ஆலந்தூர் மற்றும் வளசரவாக்கம் நகராட்சிகளில் இத்திட்டப்பணி முடிவடைந்துள்ளது.

மேலும், கோபிசெட்டிப்பாளையம், தென்காசி, பரமக்குடி, சங்கரன்கோவில், இராசிபுரம், மேட்டூர், கொமாரபாளையம் மற்றும் சத்தியமங்கலம் நகராட்சிகளில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் III-ன் நிதி உதவியுடன் இத்திட்டத்தினைச் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டப் பணிகளுக்கான பணி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. முன்னுரிமைப் பட்டியல் அடிப்படையில் படிப்படியாக இப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**5. சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள்**

**(அ) மண்சாலைகளை தார் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றுதல்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து மண் மற்றும் கருங்கல் சாலைகளையும் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. இப்பணி படிப்படியாக முடிக்கப்படும். 2006-2007 ஆம் ஆண்டில் 87.52 கி.மீ. சாலைகள் ரூ. 14.35 கோடி செலவில் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் 467.97 கி.மீ. சாலைகளுக்கான பணிகள், ரூ. 65.67 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இனங்களில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன:

2007-2008 ஆம் ஆண்டில், 68 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 23.49 கி.மீ. சாலைகள் மூன்றாவது மாநில நிதிக் குழு மானியத்தில் இருப்பு, சமன்பாடு மற்றும் ஊக்க நிதியின்கீழ் வழங்கப்பட்ட ரூ.19.14 கோடி மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்கொள்ளப்பட்ட 523 பணிகளில் 115 பணிகள் முடிவடைந்துள்ளன. 267 பணிகள் நடைபெற்று வருகின்றன. 141 பணிகள் தொடங்கப்படவுள்ளன.





2007-2008 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் மண் சாலைகளை தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றியமைக்க 60 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 10 கோடி வழங்கப்பட்டு 75.063 கி.மீ. சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

செலவு செய்யப்படாத தேர்தல் நிதியிலிருந்து 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 6.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 46.310 கி.மீ. மண் சாலைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மேலும் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதன்மூலம் பெறப்பட்ட தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உத்தேசித்துள்ளன.

கேளிக்கை வரி இழப்பீட்டுத் தொகையாக அரசு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

பகுதி-II திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் 63.68 கி.மீ. மண் சாலைகளை ரூ. 10 கோடி மதிப்பீட்டில் தார் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சரி செய்யும் பணிக்கு நிதியுதவி**

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீர்செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 13.31 கோடியில் எடுத்துக்கொள்ளப்பட்ட 236 சாலைப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் மழையினால் பழுதடைந்த சாலைகளைப் புதுப்பிக்க ரூ. 14 கோடி வழங்கப்பட்டது. எடுத்துக்கொள்ளப்பட்ட 301 பணிகளில் ரூ. 11.22 கோடி செலவில் 227 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. ஏனைய பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. இவை 2008-2009 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

மேலும் வடகிழக்குப் பருவமழையினால் 2007-2008-ல் பாதிப்படைந்த சாலைகளைப் புதுப்பிக்க 13-3-2008-ல் ரூ. 16.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

**6. அலுவலகக் கட்டடங்கள்**

நகர்ப்புறப் பகுதிகளில், நகராட்சிப் பணிகளின் முக்கிய செயல்பாட்டு மையங்களாக நகராட்சி அலுவலகங்கள் உள்ளன. பல நகராட்சிகள் நிதிப் பற்றாக்குறை காரணமாக, போதிய இட வசதியில்லாமல் உள்ளன. இந்நிலையை மாற்ற அரசு முன்வந்துள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் நகராட்சிகளுக்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காக 9 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 275 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலையில் உள்ளன. இப்பணிகள் 2008-2009-ல் முடிக்கப்படும்.

இம்முயற்சியின் காரணமாக ஏனைய நகராட்சிகளிடமிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, அரசு 2008-2009 ஆம் ஆண்டில் 11 நகராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்ட ரூ. 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**7. மகப்பேறு மையங்கள்**

சிறந்த சுகாதாரப் பாதுகாப்பை வழங்க 42 நகராட்சிகளிலுள்ள 45 மகப்பேறு மையங்கள் ரூ. 253 இலட்சம் செலவில் 2007-2008 ஆம் ஆண்டில், கட்ட/மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டது. இப்பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. இப்பணிகள் 2008-2009-ல் முடிக்கப்படும்.

இத்திட்டத்தைத் தேவையின் அடிப்படையில் விரிவாக்க வேண்டியுள்ளதால் 2008-2009 ஆம் ஆண்டில் 20 நகராட்சிகளுக்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்கள்**

**(அ) வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் கணக்கெடுப்புப் பட்டியல் சரிபார்த்தல்**

2003-2004 ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்கெடுப்பு குறித்து குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதைத்



தொடர்ந்து, 2004 ஆம் ஆண்டின் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் மேற்படி கணக்கெடுப்புப் பட்டியலில் சேர்த்தல் / நீக்குதல் போன்ற சரிபார்க்கும் பணியை மேற்கொள்ள அரசு ஆணையிட்டது. இவ்வரசாணையின்படி மேற்படி பட்டியலைச் சரிபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

**(ஆ) பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)**

நகரம் மற்றும் பெருநகரங்களில் வறுமையை ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. மேற்படி திட்டத்தை நிறைவேற்ற, 2006-2007 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ. 18.91 கோடியும், மாநில அரசு ரூ. 6.30 கோடியும் வழங்கின. 2007-2008 ஆம் ஆண்டிற்கு, மத்திய அரசு, ரூ. 26.50 கோடியை ஒதுக்கீடு செய்து, முதல் தவணையாக ரூ. 13.25 கோடி தொகையை விடுவித்துள்ளது. இத்தொகை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 3,565 மகளிருக்குக் கூட்டு முயற்சிக்கு உதவியளிக்கப்பட்டது. மேலும், 3,880 நகர்ப்புற ஏழைகளுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கென ஒரு பயிலுனருக்கு ரூ. 2,000/- வீதம் செலவிடப்பட்டுள்ளது.

2007-2008ஆம் ஆண்டில் 5,000 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குக் கூட்டு முயற்சிக்காக உதவியளிக்கப்பட்டுள்ளது. மேலும், 10,000 நகர்ப்புற ஏழைகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டில் 2,684 நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்குப் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவி வழங்கப்படும்.

**(இ) நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டு வசதி**

நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் (BSUP) மற்றும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP) ஆகியவைமூலமாக நகர்ப்புற குடிசைப் பகுதிகள் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

**1. நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் (BSUP)**

கண்டறியப்பட்டுள்ள நகர்ப்புற பகுதிகளின் குடிசைப் பகுதி மக்களுக்குப் போதுமான உறைவிடம் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை வழங்கி, ஓர் ஆரோக்கியமான நகரச் சூழலை வழங்குகின்ற ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழான முழுமையான குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டத்தின்கீழ், மத்திய அரசு 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ. 75.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, 9 திட்டங்களை அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசு ரூ. 82.99 கோடியும், மாநில அரசு தனது பங்கிற்கான தொகை ரூ.78.86 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ. 161.85 கோடி, 9 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகள் வழங்குதல், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாகும். மத்திய அரசு, 2006-2007 ஆம் ஆண்டில் 45,633 புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் 685 வீடுகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட 9 திட்டங்களை ரூ. 830.26 கோடி செலவில் நிறைவேற்ற அனுமதி வழங்கியுள்ளது.

அனுமதிக்கப்பட்ட இத்திட்டங்களில், 35,260 புதிய கட்டுமானங்கள் மற்றும் 685 மேம்பாட்டுப் பணிகள் உள்ளடக்கிய 9 திட்டங்கள் திருவொற்றியூர், ஆலந்தூர், கத்திவாக்கம், அம்பத்தூர் மற்றும் மாதவரம் நகராட்சிகளிலும், மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளிலும் ரூ. 412.20 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பேரூராட்சிகளின் ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வாயிலாகவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டுக்கு ரூ. 1,303.85 கோடி செலவில் கீழ்க்காணும் ஐந்து திட்டங்களுக்கு மத்திய அரசால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி நீங்கலாக, நான்கு திட்டங்களுக்கு, ரூ. 125.23 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

| வ. எண் | செயல்படுத்தும் நிறுவனம் | திட்டம் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 2 திட்டங்கள் | 814.85 |
| 2 | சென்னை மாநகராட்சி | 1 திட்டம் | 127.44 |
| 3 | நகராட்சி நிருவாக ஆணையரகம்- 2 திட்டங்கள் | மதுரை மாநகராட்சி கட்டம்-III | 176.75 |
| | | கோயம்புத்தூர் மாநகராட்சி கட்டம்-III | 184.81 |
| | | மொத்தம் | 361.56 |
| | | கூடுதல் மொத்தம் | 1,303.85 |

நகராட்சி நிருவாக ஆணையரகம் இத்திட்டங்கள் தொடர்பான மாநில அமலாக்க முகமை என்பதன் அடிப்படையில் குடிசைப் பகுதிகள் தேர்வு முன்னுரிமை, மற்றும் பயனாளிகள் தேர்வு, குறித்த காலத்தில் பயனாளிகளுக்கு மானியத் தொகை வழங்கல், பணி ஆணைக்கான சட்ட ரீதியான படிவம் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அறிவுரைகள் / வழிமுறைகளை மேற்கொள்ள செயலாக்க முகமைகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

இவற்றுடன் தங்களுடைய பங்களிப்பை அளிக்க முடியாத பயனாளிகளுக்கு வங்கிகளிலும் இதர நிதி நிறுவனங்களிலும் கடன் வழங்க உள்ளாட்சி நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆரம்பப் பிரச்சினைகளைச் சரிசெய்து திட்டங்களை முழுமையாகச் செயலாக்கத்திற்கு விரைவில் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## விழிப்புணர்வுப் பிரச்சாரம்

இத்திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்த, உள்ளாட்சி அமைப்புகளில், இலக்குக்கு உட்பட்ட மக்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள், துண்டுப் பிரசுரங்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டச் செயல்பாட்டை அதிக வெளிப்படைத் தன்மையானதாக ஆக்குவதற்கு, குறிப்பிட்ட கால இடைவெளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அரசால் வழங்கப்படுகிற பயன்கள் தகுதியுள்ள பயனாளிகளைச் சென்றடையவும், அவர்களை ஊக்குவிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

## பயனாளிகளுக்கான அடையாள அட்டை

ஒவ்வொரு பயனாளிக்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் அடையாள அட்டைகளை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டம்-கட்டமைப்பு

கத்திவாக்கம் மற்றும் திருவொற்றியூர் நகராட்சிகளில் கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகளுக்குச் சாலைகள் அமைத்தல், வடிகால் மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஏனைய நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில், வீட்டு வசதிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## வேலை நிலை

வீடுகள் கட்டும் பணி பல்வேறு கட்டங்களாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பயனாளிகளுக்கு நில உரிமை வழங்குவது தொடர்பாக மாவட்ட நிருவாகம்மூலம் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு புதிய வீடுகள் கட்ட பணி ஆணை வழங்கப்பட்டு வருகின்றது. நிலம் தேவைப்படும் அலகுகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.





## 2. ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP)

தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா ஆகிய திட்டங்களை இணைத்து ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை மத்திய அரசு தோற்றுவித்துள்ளது. நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதியில் உள்ள ஏழை மக்கள் பயனடைய இத்திட்டம் உதவிபுரிகிறது. நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், வீட்டு வசதி மேம்பாடு, குடிநீர், சாலைகள், சமுதாயக் கழிப்பிடங்கள், தெரு விளக்குகள் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்ட வசதி / மழைநீர் வடிகால் ஆகிய வசதிகள் குடிசைவாழ் மக்களுக்குச் செயல்படுத்தப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில், மத்திய அரசு 5 திட்டங்களுக்கு ரூ. 32.06 கோடி ஒதுக்கீடு செய்து, அதில் ரூ. 18.40 கோடி நிதியினை விடுவித்துள்ளது.

2006-2007 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு 10,125 புதிய வீடுகள் கட்டுதல், 483 வீடுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய 15 திட்ட செயற்குறிப்புகளுக்கு ரூ. 121.45 கோடி உத்தேச மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டிற்கு 4,995 புதிய வீடுகள் கட்டவும் மற்றும் 1,637 வீடுகளை மேம்படுத்தவும் 7 திட்ட செயற்குறிப்புகளுக்கு மத்திய அரசு ரூ. 77.92 கோடி உத்தேச மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

## 9. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JNNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் 3-12-2005 அன்று மத்திய அரசால் தொடக்கப்பட்டது. இத்திட்டத்தில் பின்வரும் உட்கூறுகள் உள்ளன:

(அ) நகர்ப்புற கட்டமைப்பு மற்றும் ஆளுகை துணைத் திட்டம் (பெருநகர திட்டத்திற்கு மாற்றாக)

(ஆ) நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் திட்டம்

[2008 ஏப்ரல் 15

## (அ) செயலாக்கத் திட்ட நகரங்கள்

தமிழ்நாட்டில் 10 இலட்சம் மக்கட்தொகைக்கும் மேற்பட்ட நகரங்களான சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் திட்ட செயலாக்க நகரங்களாக (Mission Cities) தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன:

**மதுரை மாநகராட்சி**

இத்திட்டத்தின் கட்டமைப்பு மற்றும் ஆளுகை துணைத் திட்டத்தின்கீழ் நான்கு திட்டங்களுக்கு ரூ. 614.756 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

**கோயம்புத்தூர் மாநகராட்சி**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.587.38 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோகம், பாதாளச் சாக்கடைத் திட்டம், திடக்கழிவு மேலாண்மை உள்ளடக்கிய 3 திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பல்வேறு செயலாக்க நிலையில் உள்ளன.

**சென்னைப் பெருநகருக்கு அருகில் உள்ள நகர்ப்புறத் தொகுப்புப் பகுதி (Urban Agglomeration Area)**

**(i) தாம்பரம் குடிநீர் விநியோகம்**

மத்திய ஒப்புதல் வழங்கல் மற்றும் கண்காணிப்புக் குழு (CSMC) 8-1-2007 அன்று ரூ. 32.61 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்பந்தப்புள்ளி முடிவுசெய்யப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிணறு ஆழப்படுத்தும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. இத்திட்டம் 2008-2009-ல் முடிவடையும். இப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(ii) மதுரவாயல் குடிநீர் விநியோகம்**

மத்திய ஒப்புதல் வழங்கல் மற்றும் கண்காணிப்புக் குழு (CSMC) 20-7-2007-ல், ரூ. 23.30 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 15]

**(iii) ஆவடி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம்**

மத்திய ஒப்புதல் வழங்கல் மற்றும் கண்காணிப்புக் குழு (CSMC) 26-7-2007-ல், ரூ. 103.84 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய ஒப்புதல் வழங்கல் மற்றும் கண்காணிப்பு குழு (CSMC) தனது 29-2-2008 ஆம் நாளிட்ட கூட்டத்தில், இவ்வுள்ளாட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு ரூ.158.08 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**(iv) உள்ளகரம்-புழுதிவாக்கம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்**

மத்திய ஒப்புதல் வழங்கல் மற்றும் கண்காணிப்பு குழு (CSMC) 23-11-2007 அன்று ரூ. 24.24 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்மூலமாக செயல்படுத்தப்பட உள்ளது.

**மதுரைப் பெருநகருக்கு அருகிலுள்ள நகர்ப்புறத் தொகுப்பு பகுதி**

**திருப்பரங்குன்றம் மற்றும் ஆனையூர் குடிநீர் விநியோகம்**

மத்திய ஒப்புதல் வழங்கல் மற்றும் கண்காணிப்புக் குழு (CSMC) திருப்பரங்குன்றம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 969 இலட்சமும், ஆனையூருக்கு ரூ. 788 இலட்சமும் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்காணும் இரு திட்டங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**சீர்திருத்தங்கள்**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசுடன், தமிழ்நாடு அரசு மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சில சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. நகராட்சி அளவில் நடைமுறைப்படுத்த ஒப்புக்கொள்ளப்பட்ட மின்னணு ஆளுகை, இரட்டைப் பதிவு நவீன கணக்கு முறையைக் கொண்டுவருதல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் குறைந்தபட்சம் 85 விழுக்காடு கட்டடங்களுக்குச் சொத்து வரி விதித்தல் மற்றும் குறைந்தபட்சம் 90 விழுக்காடு சொத்து வரி வசூல் செய்தல் ஆகிய இனங்களில் ஏற்கெனவே இலக்குகள் எட்டப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில், தண்ணீர் மற்றும் திடக் கழிவு

[2008 ஏப்ரல் 15

மேலாண்மைக்காகும் செலவினங்களை 100 விழுக்காடு வசூல் செய்ய உறுதியளிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற ஏழை மக்களுக்கு வசதிகளைச் செய்துதர நகராட்சிகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் 2012 ஆம் ஆண்டுக்குள் செய்து கொடுப்பதற்கான உத்தரவாதம் ஏற்படுத்தப்படும். கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், நீரேற்று நிலையம், தெரு விளக்குகள் ஆகியவற்றைப் பராமரித்தல், திடக் கழிவு மேலாண்மை, வாகனங்களை வாடகைக்கு எடுத்தல் ஆகிய பணிகள் பொது-தனியார் பங்கேற்புமூலம் செயல்படுத்துவது ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

**அரசின் கட்டாய சீர்திருத்தங்கள்**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அரசு கீழ்க்காணும் சீர்திருத்தங்களைச் செய்ய உறுதி பூண்டுள்ளது:

1. தமிழ்நாடு சட்டம் 20 / 1999-ன் வாயிலாக நில உச்சவரம்புச் சட்டம் நீக்கப்பட்டது.
2. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ், 52 சொத்துக்கள் மட்டும் தற்போது உள்ளன. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.
3. முத்திரைத்தாள் கட்டணம் 13%-லிருந்து 8% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
4. இந்திய அரசமைப்பு 74-வது திருத்தச் சட்டத்தின்படி, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ள 18 செயல்பாடுகளில் ஏற்கெனவே 17 செயல்பாடுகள் (தீயணைப்புத் துறை தவிர) மாற்றம் செய்யப்பட்டுள்ளன.
5. மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மற்றும் அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் ஏற்கெனவே சட்டப் பேரவையில் வைக்கப்பட்டது; மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தல் ஏப்ரல் 2007-ல் நடைபெற்றது.
6. சமுதாய அமைப்புகள் பங்கேற்பிற்கான சட்டம் மற்றும் பொது மக்களுக்கு வெளிப்படையாகத் தகவல்கள் தெரிவிக்க உதவும் சட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்குத் தேவையான விவரங்கள் அளிப்பது குறித்து நகராட்சி ஆணையர்களுக்கு உரிய நிருவாக அறிவுரைகள் நகராட்சி நிருவாக ஆணையரால் வழங்கப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 15]

**10. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)**

இத்திட்டத்தின் நோக்கம், திட்டமிட்ட முறையில் மாநகரம் மற்றும் நகரங்களில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகும்.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்**

- மாநகரம் மற்றும் நகரங்களில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய பொதுச் சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் தரமான சேவைகளை வழங்குதல்
- கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளில் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பினை அதிகப்படுத்துதல்; மற்றும்
- மாநகரம் மற்றும் நகரங்களில் திட்டமிட்ட, ஒருங்கிணைந்த மேம்பாட்டினை உருவாக்குதல்.

இத்திட்டத்தின்கீழ், ஈரோடு மாநகராட்சியின் பேருந்து நிலையத்தில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியும், 13 நகராட்சிகளில் சாலை / வடிகால் மேம்பாட்டுப் பணிகளும் ரூ. 6,537.60 இலட்சம் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**குடிநீர்த் திட்டப் பணிகள்**

இத்திட்டத்தின் பகுதி-1-ன்கீழ் ரூ. 8,168.32 இலட்சம் மதிப்பீட்டில் 10 நகராட்சிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் பகுதி-2-ன்கீழ் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மறைமலைநகர் நகராட்சியில் ரூ. 254 இலட்சத்திலும், விழுப்புரம் நகராட்சியில் ரூ. 955 இலட்சத்திலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூ. 1,632.54 இலட்சம் மதிப்பீட்டில் கரூர், தேவகோட்டை, தஞ்சாவூர் நகராட்சிகளிலும் மற்றும் ஈரோடு மாநகராட்சியிலும், அந்தந்த நகராட்சி/மாநகராட்சிமூலமே பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேவகோட்டை நகராட்சியில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. கரூர் நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டும், தஞ்சாவூர் மற்றும் ஈரோடு ஆகியவற்றில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் நடவடிக்கையில் உள்ளன.

[2008 ஏப்ரல் 15

இத்திட்டத்தின் பகுதி-3-ன்கீழ், இராமநாதபுரம், பரமக்குடி, கீழக்கரை, இராமேஸ்வரம் மற்றும் சிவகங்கை நகராட்சிகளில் ரூ. 19,266.20 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**நாமக்கல் நகராட்சி**

2005-2006 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக நாமக்கல் நகராட்சி தரக் கட்டுப்பாட்டு நிறுவனச் சான்றிதழ்-14001 (ISO) பெற்றுள்ளது. ரூ. 358.25 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிலை குப்பைகளைச் சேகரிப்பதற்கான வாகனங்கள் வாங்குதல், உரக் கிடங்கு அமைத்தல், அறிவியல் முறையில் மக்காத குப்பைகளை மூடி நிலத்தினை மேம்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாகும். தனியார் பங்களிப்பின்மூலம் உரக் கிடங்கு அமைத்தல் மற்றும் அறிவியல் முறையில் மக்காத குப்பைகளை மூடி நிலத்தினை மேம்படுத்துதல் போன்ற பணிகள் செய்யப்படுகின்றன. இது தொடர்பான சலுகை ஒப்பந்தம், 10-3-2008-ல் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

**11. பொது சுகாதாரம்**

**1. திடக் கழிவு மேலாண்மை**

உள்ளாட்சி அமைப்புகளில் திடக் கழிவு மேலாண்மை என்பது அடிப்படைப் பணிகளில் ஒன்றாகும். உச்ச நீதிமன்ற ஆணைகளின்படி வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டு திடக் கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவ்விதிகளின் அடிப்படையில் உரக் கிடங்கு அமைப்பதற்கான நிலம் வாங்குவது குறித்து, அரசு தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளது.

இதன்படி 80 நகராட்சிகள் மற்றும் 7 மாநகராட்சிகளில், 2025 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் மக்கட்தொகைக்கேற்ப போதிய நிலம் உள்ளது. மேலும் 48 நகராட்சிகளில் தற்போது உள்ள நிலத்துடன் கூடுதலாக நிலம் வாங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் இல்லாத 22 மூன்றாம் நிலை நகராட்சிகளில் நிலத் தேர்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



2008 ஏப்ரல் 15]

திடக் கழிவு மேலாண்மைக்காகக் கீழ்க்காணுமாறு மானியம் வழங்கப்பட்டுள்ளது:

1. பகுதி 2 திட்டத்தின்கீழ் 69 நகராட்சிகளுக்கு 2000-2001 முதல் 2006-2007 வரையிலான காலகட்டத்தில் ரூ. 4.75 கோடி வழங்கப்பட்டுள்ளது.
2. 2006-2007 ஆம் ஆண்டில் 12 மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு உரக் கிடங்கு அமைக்க நிலம் வாங்க ரூ. 1.73 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
3. மேலும் சென்னையைச் சுற்றியுள்ள 16 நகராட்சிகளுக்கு 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 6 கோடியும், 2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ. 7 கோடியும், 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ. 8 கோடியும், 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ. 8 கோடியும் ஆக மொத்தம் இதுவரை ரூ. 29 கோடி, திடக் கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
4. 12-வது நிதிக் குழு மானியத்திலிருந்து திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 41.15 கோடி நிதி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. இதே அளவுத் தொகை 2008-2009 ஆம் ஆண்டிலும் விடுவிக்கப்படும்.

**தற்போதைய நிலை**

❖ அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் ஒரு நாளைக்கு 11,000 மெட்ரிக் டன் குப்பை உருவாகின்றது. இக்குப்பையை மக்கும் மற்றும் மக்காத குப்பை எனத் தனித்தனியே பிரித்து மக்கும் குப்பையில் இருந்து உரம் விஞ்ஞான முறையில் மேற்கொள்ளப்பட்டு அறிவுரைகள் தயாரிக்க திட்டம் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி திருப்பூர், ஈரோடு, தாராபுரம் ஆகிய நகரங்களில் உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. திடக் கழிவு மேலாண்மையில் 100 சதவீதம் உற்பத்தியாகும் இடத்திலேயே கழிவுகளைப் பிரித்தல், திடக் கழிவுகளை விஞ்ஞான முறையில் கழிவுசெய்து குப்பையில்லா நகரமாக மாற்றுதல் ஆகியன இத்திட்டத்தின் முதன்மைக் குறிக்கோள்கள் ஆகும்.

[2008 ஏப்ரல் 15

❖ அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு செயல்பாட்டுத் திட்டம் ரூ. 237.42 கோடியில் தயார் செய்யப்பட்டு அவை மேலாண்மை செயல் திட்டத்தில் உள்ளவாறு நகராட்சிகளால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**12. 69 நகராட்சிகளில் இடுகாடுகளில் வசதிகளை மேம்படுத்துதல்**

69 நகராட்சிகளில் இடுகாடுகளை மேம்படுத்தும் பணிகள், அரசு மானியமாக விடுவித்துள்ள ரூ. 3.14 கோடி, 50 சதவீதம் நிதியுதவியுடன், ரூ. 6.28 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**13. சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள்**

நகர்ப்புற உள்ளாட்சிகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பணிகளில் பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிறுத்தங்களின் மேம்பாடு, ஆலயங்களைச் சுற்றியுள்ள சாலைகளை மேம்படுத்துதல், நீர் நிலைகளை அழகுறச் செய்தல், பொது சுகாதாரக் கழிப்பிடங்கள் அமைத்தல், பூங்காக்கள், வண்ண விளக்குகள் மற்றும் திறந்த புல்வெளிகள் அமைத்து அழகுறச் செய்தல் ஆகியன அடங்கும்.

மத்திய அரசின் நிதியுதவியுடன் இரு மாநகராட்சிகள் மற்றும் 13 நகராட்சிகளில் ரூ. 25.14 கோடி மதிப்பீட்டில் 175 பணிகள் எடுக்கப்பட்டு அவற்றில் 94 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. ஏனைய 81 பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழக அரசின் நிதியுதவியுடன் நகராட்சிகளில் ரூ. 4.80 கோடி மதிப்பீட்டில் 59 பணிகள் எடுக்கப்பட்டு அவற்றில் 51 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. ஏனைய 8 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**14. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III**

உலக வங்கியின் நிதி உதவியுடன் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III இதற்கு முன்னதாக இருந்த திட்டத்தின் தொடர்ச்சியாக 19-10-2005 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III-ன் உட்கூறுகளுக்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு :



2008 ஏப்ரல் 15]

| உட்கூறு | | தொகை | | உலக வங்கி நிதி | |
|---|---|---|---|---|---|
| | | அமெரிக்க $ மில்லியன் | மொத்தத்தில்% | அமெரிக்க $ மில்லியன் | % |
| (i) | நிறுவன வளர்ச்சிக் கூறு | 25.00 | 5.76% | 5.00 | 5% |
| (ii) | தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) மூலமாக உள்ளாட்சி முதலீடுகள் | 407.50 | 93.89% | 283.50 | 94.50% |
| (iii) | நுழைவுக் கட்டணம் | 1.50 | 0.35% | 1.50 | 0.50% |
| | **மொத்த திட்ட மதிப்பு** | **434.00** | **100%** | **300.00** | **100%** |

**தமிழ்நாடு நகர்ப்புறக் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் மானிய நிதி I மற்றும் II**

**மானிய நிதி-I:** மானிய நிதி-I-ன்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான வழிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. மானிய நிதி-I, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிறைவேற்றப்படும் கீழ்க்காணும் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்:

(i) நகர்ப்புறத்தில் வாழும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நேரடி பயன் அளிக்கும் வகையில் குடிநீர் விநியோகம், துப்புரவு, மழைநீர் வடிகால், தெரு விளக்கு, கழிவு நீர் அமைப்பு போன்ற திட்டங்களுக்கு இந்த நிதியிலிருந்து உதவி வழங்கப்படவேண்டும்

(ii) தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் III-ன் கீழ் செயல்படுத்தப்படும் துணைத் திட்டங்களில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை நிறைவு செய்தல்

(iii) தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்தப்பட உள்ள துணைத் திட்டங்களில் நகர்ப்புற ஏழை மக்களை மாற்றுக் குடியமர்த்தல் மற்றும் மறுவாழ்வுக்கான செலவிற்கான தொகையினை ஈடுசெய்தல்

**மானிய நிதி II :** மானிய நிதி II-ன்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நெறிமுறைகள் அரசால் தனியே பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்நிதியினை உள்ளாட்சி அமைப்புகளில் நிறைவேற்றப்படும் கீழ்க்காணும் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்:

மானிய நிதி II-ன்கீழ், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சட்டப்படி அமைக்கப்பட்ட அமைப்புகள் ஆகியவற்றின் புதிய திட்டங்களுக்கும் பொது-தனியார் பங்கேற்பு (PPP) "கட்டி, செயல்படுத்தி ஒப்படைத்தல்" (BOT) போன்ற செலவுத் தொகையினைக் குறைக்கும் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் அல்லது வேறு பல காரணங்களுக்காகவும் தமிழ்நாடு நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் கணிப்பின்படி உலக அளவிலான கண்டுபிடிப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நீடித்த தேவைகள் ஆகியவற்றிற்கும் பயன்படுத்தலாம்.

**திட்ட ஒப்புதல் குழுக்கள்**

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III-ன்கீழ் திட்டப் பணிகளை நிறைவேற்ற ரூபாய் ஒரு கோடிக்கு உட்பட்ட மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க ஒரு துணைக் குழுவும், ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க மாநில அளவிலான திட்ட ஒப்புதல் அளிக்கும் குழுவும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் III-ன்கீழ் நகராட்சிப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்**

நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளின் செயல்திறனைத் தொடர் பயிற்சிமூலமாக மேம்படுத்துதல் இந்த உட்கூறின் நோக்கமாகும். இந்த உட்கூறின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டிற்கான பயிற்சித் திட்டங்களுக்கு



அரசால் ரூ. 412.35 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அரசு 2006-2007 ஆம் ஆண்டிற்கான பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 537.30 இலட்சம் வழங்கியுள்ளது. மேற்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு பயிற்சிகள் / கருத்தரங்கங்கள் / பயிற்சிப் பட்டறைகள், தேசிய மற்றும் சர்வதேச அளவில் நேரடியாகச் சென்று பார்வையிடல், சான்று வகுப்புகள் நடத்துதல் போன்றவை நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் 11,000 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் / அலுவலர்கள் ஆகியோர் பல்வேறு பயிற்சித் திட்டங்களில் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

**உள்ளாட்சி அமைப்புகளில் மின் ஆளுகை அமலாக்கம்**

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III-ன், தகவல் மற்றும் தொலை தொடர்பு உட்கூறானது, தொடங்கப்பட்டுள்ள மின் ஆளுகைத் திட்டத்தினை நிறைவு செய்ய தேவையான கணினி சம்பந்தமான சாதனங்கள் மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்தலை உள்ளடக்கியதாகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மின் ஆளுகை நிருவாக நடவடிக்கைகள் விரைவில் நிறைவு செய்வதை உறுதிப்படுத்திட நகராட்சி நிருவாக ஆணையரகம் தொடர் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் சில பின்வருமாறு:

❖ மின் ஆளுகை தொடர்பான 18 மென்பொருள் ஆணைத் தொகுப்புகளை (modules) அமலாக்கத்திற்குக் கொணர்ந்து வலைதளத்தில் கொணர, நகர்ப்புற உள்ளாட்சிகளில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 157 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மற்றும் மின் ஆளுகை நடவடிக்கைகளை வலைதளத்தின்மூலம் கண்காணிக்க தனியான வலை மென்பொருள் தயாரிக்கப்பட்டுப் பயன்பாட்டிலுள்ளது.

## உள்ளாட்சி அமைப்புகளில் கடன் கண்காணிக்க தனிப் பிரிவு (Debt Monitoring Cell)

ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சியின் நிதிநிலை தொடர்பான விவரம் சேகரித்தல், எதிர்கால நிதித் தேவை குறித்த யதார்த்தமான அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் நிதி தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதன்மூலம் சந்தையில் நிதி திரட்ட உதவுதல் ஆகிய குறிக்கோள்களுடன் நகராட்சி நிருவாக ஆணையரகத்தில் ஒரு கடன் கண்காணிப்புப் பிரிவு (Debt Monitoring Cell) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சிகளின் நிதி மேலாண்மை தொடர்பான பொருட்களில் நகராட்சி நிருவாக ஆணையருக்கு நிபுணத்துவ ஆலோசகராக இந்தக் கடன் கண்காணிப்புப் பிரிவு செயலாற்றும். கடன் கண்காணிப்புப் பிரிவின் சேவைகள், கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்:

- ❖ நகர்ப்புற உள்ளாட்சி வாரியாக நகராட்சிகளின் நிதிநிலை தொடர்பான விவரங்களைத் தொகுத்துப் பராமரித்தல் (2001-2002 முதல் நடப்பாண்டு வரை)
- ❖ கடன் திருத்தியமைத்தலின்மூலம் நகர்ப்புற உள்ளாட்சிகளின் கடன் சுமையினைக் குறைக்க ஆலோசனை வழங்கல்
- ❖ நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கணக்கினைக் கடன் வழங்கிய நிறுவனத்தின் கணக்குடன் சரிபார்க்க வழிகாட்டுதல்
- ❖ நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக கணக்குகளைத் திறனாய்வு செய்தல்
- ❖ அரசு மற்றும் மாநில நிதிக் குழு போன்றவற்றிற்கும் தேவையான விவரங்களை வழங்குதல் மற்றும் திறனாய்வு செய்தல்
- ❖ உள்ளாட்சி அமைப்புகளின் நிதி / கடன் சம்பந்தமாக ஒரு குறியீடு தயார் செய்து, வரவு - செலவு குறித்தும் நகராட்சி நிருவாக ஆணையருக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் புதிதாக எடுத்துக்கொள்ளும் மூலதனச் செலவினத் திட்டங்கள் / நகர்ப்புற உள்ளாட்சிகள் பெறும் கடன்களுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்தும் அறிவுரை வழங்கல்



- ❖ கடன் தகுதி மதிப்பீடு செய்யும் முகமைகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு விவரங்களை அளித்தலில் வினை ஊக்கியாகச் செயல்படுதல்
- ❖ ஆண்டுக் கணக்கை முடிக்கவும், குறித்த காலத்தில் உள்ளாட்சி நிதித் தணிக்கைக்குக் கணக்குகளைச் சமர்ப்பிக்கவும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் அளித்தல்
- ❖ கடன் மேலாண்மையைக் கையாள, நகராட்சி நிருவாக ஆணையரகத்தில் ஓர் அமைப்பு முறை மற்றும் செயல்திறன் உருவாக்குதல்.

## திட்டத் தயாரிப்பு நிதி (Project Preparation Fund)

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் III-க்கு நிருவாக ஒப்புதல் அளிக்கும்பொழுது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கட்டமைப்புத் திட்டங்களை மேற்பார்வையிட, தனியாக கலந்தறிதற்குரியவரை நியமனம் செய்து, திட்டங்களுக்கான வடிவமைப்பு / கண்காணிப்பு அறிக்கையினைத் தயார் செய்யும் பொருட்டு திட்டக் காலத்திற்கு ரூ. 30 கோடியினை நகராட்சி நிருவாக ஆணையருக்கு அரசு ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது. இதன்படி இந்த நிதியினைச் செலவிடுவதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிதியின் நோக்கம் கீழ்க்காணும் பணிகளுக்கான தொழில்நுட்ப செலவிற்கு நிதியுதவியளிப்பதாகும் :

(அ) திட்டங்களுக்கான முதல்கட்ட மற்றும் விரிவான அறிக்கை மற்றும் அதன் தொழில்நுட்ப வடிவமைப்பு, கொள்முதல் செய்வது போன்றவற்றுக்கு அறிக்கை தயார் செய்தல்

(ஆ) நகராட்சிகளில் செயல்படுத்தும் திட்டங்களுக்கு விரிவான வடிவமைப்பு, கொள்முதல், மேற்பார்வை மற்றும் நகராட்சித் திட்டங்களை நிருவகித்தல்.

(இ) நகர்ப்புற உள்ளாட்சிகளில் திட்டச் செயலாக்கத்தின் அமைப்பு முறையை மேம்படுத்துதல் (CAD-கணினிமூலம் வடிவமைப்பு போன்று)

நகர்ப்புற பகுதிகளில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் கட்டமைப்புக்கான (மின்சாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தவிர) திட்டங்களுக்கு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான திட்டச் சொத்துக்களுக்கு அறிக்கை தயார் செய்யவும், திட்ட மதிப்பீடு குறித்து ஆராய இந்த நிதி உபயோகிக்கப்படலாம். இதுபோன்ற அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதாரம், திடக் கழிவு மேலாண்மை, சாலைகள், பேருந்து நிலையம், சந்தை, குடிசைப் பகுதி மேம்பாடு போன்ற திட்டப் பணிகள் இதில் அடங்கும்.

மொத்தம் 199 திட்டங்களுக்கு துணைக் குழு இதுவரை ஒப்புதல் வழங்கியுள்ளது.

**ஐந்து நகர்ப்புற உள்ளாட்சிகளில் நிலவியல் தகவல் முறையினை (GIS) செயலாக்கக் கலந்தறிதற்குரியவர் நியமித்தல்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மின் ஆளுகை செயலாக்கத்தின் ஒரு பகுதியாக, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளிலும், இராஜபாளையம் மற்றும் கோபிசெட்டிபாளையம் நகராட்சிகளிலும், நிலவியல் தகவல் முறையினை (GIS) சோதனை முறையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் சொத்துகளின் வரைபடம், பயன்பாட்டு வரைபடம் போன்றவற்றை நகராட்சி தகவல் முறையுடன் (MIS) இணைப்பதன்மூலம், மேலே சொன்ன நகர்ப்புற உள்ளாட்சிகளின் சொத்து வரி மற்றும் இதர வரிகள் வசூல் முன்னேற்றம், கட்டமைப்பு, திட்டம் தீட்டுதல் போன்றவற்றுக்கும் இந்த முறையைப் பயன்படுத்தி மேம்படுத்த வாய்ப்புள்ளது.

கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளிலும், இராஜபாளையம் மற்றும் கோபிசெட்டிபாளையம் நகராட்சிகளிலும் தகவல் சேகரிப்பு மற்றும் சேகரித்த தகவல்களைக் கணினிமயமாக்குதல், மென்பொருள் தயாரிக்க உலக வங்கி வழிகாட்டுதல்படி ஒரு கலந்தறிதற்குரிய நிறுவனம், நகராட்சி நிருவாக ஆணையரகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தனது பணியினைத் தொடங்கியுள்ளது.





**நகர்ப்புற முதலீட்டுக் கூறு (Urban Investment Component)**

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III-ன்கீழ், கீழ்க்காணும் பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது:

1. சாலைகள்
2. குடிநீர் விநியோகம்
3. பாதாளச் சாக்கடைத் திட்டம்
4. திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டிற்கு மாநில அளவிலான திட்ட ஒப்புதல் வழங்கும் குழு, 5 நகராட்சிகளில் ரூ. 20.74 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையப் பணிகளுக்கும், 8 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ரூ. 276.14 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோகத் திட்டப் பணிகளுக்கும், 35 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ரூ. 1,053.85 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளுக்கும் மற்றும் ரூ. 31.50 கோடி மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சியில் வெள்ளத் தடுப்புத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளித்துள்ளது.

## 15. சுனாமி சீரமைப்புப் பணிகள்

**ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி பெறும் சுனாமி அவசர உதவித் திட்டம் (TEAP)**

திட்டச் செயலாக்க உயர்நிலைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நகராட்சிகளில் பல்வேறு கட்டமைப்பு அபிவிருத்தி மூலதனப் பணிகளான குடிநீர் விநியோக சீரமைப்பு, சுகாதாரம், பள்ளிக் கட்டடங்களின் மறு கட்டுமானம் உள்ளிட்ட கட்டமைப்பு மேம்பாடு, மதிய உணவு மையங்கள், பல்நோக்கு சமுதாயக் கட்டடங்கள், சுனாமியால் சேதமுற்ற சாலைகள் மற்றும் கட்டடங்களின் மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள மொத்தம் ரூ. 3,660.87 இலட்சம் தொகை அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொகையிலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், கடலூர், வேதாரண்யம், திருவொற்றியூர், கத்திவாக்கம் மற்றும் குளச்சல் நகராட்சிகளில் ரூ. 3,921.60 இலட்சம் மதிப்பீட்டில் 45 பணித் தொகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 34 பணித் தொகுப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. மற்றவை 2008-2009 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

[2008 ஏப்ரல் 15

**சுனாமி வாழ்வாதாரப் பணிகள்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சிகளுக்குச் சமுதாய அமைப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் திறன் உருவாக்குதல் ஆகிய கீழ்க்காணும் 3 முக்கிய கூறுகளின்கீழ் மொத்தம் ரூ. 1,563.41 இலட்சம் தொகை அரசால் வழங்கப்பட்டுள்ளது:

❖ சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் மற்றும் குறைந்த வருவாய்க் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினைச் சீர் செய்தல்

❖ சுனாமியால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட சுய உதவி குழுக்கள் மற்றும் அவை போன்ற பிற குழுக்களைக் கண்டறிதல்

❖ திறன் உருவாக்குதலுக்கான ஒத்துழைப்பு, பயிற்சி, புதிய சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல், நிருவாகம் மற்றும் ஆளுகைப் பயிற்சி, திறன் மேம்பாடு, குழு ஆயுள் மற்றும் சொத்துக் காப்பீடுமூலம் இடர்ப்பாட்டினைத் தவிர்த்தல்

**உலக வங்கி உதவி பெறும் சுனாமி அவசர மறுசீரமைப்புத் திட்டம் (ETRP)**

சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட நகராட்சிகளில் சாலைகள், வடிகால்கள், தெரு விளக்குகள், கட்டடங்கள் மற்றும் குடிநீர் விநியோகம் போன்ற அடிப்படை வசதிகளுக்காக, உலக வங்கியின் நிதி உதவியின்கீழ் சுனாமி அவசர மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் அரசு ரூ. 1,425.08 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட நகராட்சிகளால் ரூ. 1,350.35 இலட்சம் மதிப்பீட்டில் 30 பணித் தொகுப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 8 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 22 பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 16. பகுதி-2 திட்டங்கள்

நகர்ப்புறங்களின் வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 27.72 கோடி மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள மானியத் தொகை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.



2008 ஏப்ரல் 15]

2008-2009 ஆம் ஆண்டிற்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டப் பணிகளுக்கு ரூ. 20.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**III. வரி மற்றும் நிதி மேலாண்மை**

**1. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் வருவாய் இனங்கள்**

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கீழ்க்கண்ட இனங்கள்மூலம் வருவாய் கிடைக்கிறது:

1. சொத்து வரி
2. தொழில் வரி
3. வாடகை மற்றும் கட்டணங்கள்
4. முத்திரைத் தீர்வைமீது கூடுதல் வரி (Surcharge)
5. கேளிக்கை வரி
6. அரசு அளிக்கும் நிதிப் பகிர்வு மானியம்
7. அரசின் இதர மானியங்கள்.

**2. வரி விதிப்பு**

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சொத்து வரிச் சீராய்வு**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வருவாயில் சொத்து வரி விதிப்புமூலம் கிடைக்கும் வருவாய் முக்கியமானதாகும். நகர்ப்புற கட்டமைப்பினை உருவாக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவினம் அதிகரித்து வருவதால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் வருவாயை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகிறது. அத்தகைய நடவடிக்கைகளில் சொத்து வரி பொதுச் சீராய்வும் ஒன்றாகும். சொத்து வரிச் சீராய்வு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படவேண்டும். கடந்த 1-10-1998-ல் கடைசியாக சொத்து வரிச் சீராய்வு செய்யப்பட்டது. அதன்பின் 1-10-2003-ல் நடைபெற வேண்டிய சொத்து வரிச் சீராய்வு நடைபெறவில்லை. தற்போது 1-4-2008 முதல் சொத்து வரி பொதுச் சீராய்வினை மேற்கொள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய சீராய்வில் சொத்து வரிக்கான சுய மதிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சீராய்வின்போது உயர்த்தி விதிக்கப்படும் சொத்து வரி, குடியிருப்புக் கட்டடங்களுக்குத் தற்போது உள்ள சொத்து வரியில் 25 சதவீதத்திற்கு மிகாமலும், தொழிற்சாலைக் கட்டடங்களுக்கு

[2008 ஏப்ரல் 15

100 சதவீதத்திற்கு மிகாமலும் வணிகக் கட்டடங்களுக்கு 150 சதவீதத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும். வரி விதிப்புதாரர்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படும் சுய மதிப்பீட்டுப் படிவத்தில் பெறப்பட்ட கட்டடப் பரப்பளவு, கட்டடத்தின் பயன்பாடு, கட்டடத்தின் வயது மற்றும் கட்டடத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் சொத்து வரி விதிக்கப்படுவதால், சொத்து வரிச் சீராய்வு ஒளிவு மறைவற்றதாக இருக்கும்.

**3. கடன் நிவாரணம்**

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் உள்ள சொத்துகளைப் பராமரிக்கவும், புதியதாகச் சொத்துகளை உருவாக்கவும் அரசு முக்கியத்துவம் அளித்து, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அரசு, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கும் நிதிப் பகிர்வில் பெரும்பகுதி தொகையைக் காலங்கடந்த கடன் மற்றும் இதர தொகைகளுக்காகப் பிடித்தம் செய்து வந்ததை விரிவாக ஆராய்ந்தது. உள்ளாட்சி நிறுவனங்கள் அரசுக்குத் திருப்பி செலுத்தும் கடன் மற்றும் வட்டித் தொகைகள் மிக அதிகமாக இருந்ததைக் கருணையுடன் பரிசீலித்தது.

அரசுக்குச் செலுத்த வேண்டிய காலங்கடந்த கடன் மற்றும் வட்டித் தொகைகள் செலுத்தாமல் நிலுவையில் இருந்ததால், உள்ளாட்சி நிறுவனங்களில் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் குந்தகம் ஏற்பட்டதால், 31-3-2007-ம் தேதிய நிலவரப்படி காலங்கடந்த அசல் கடன் தொகை ரூ. 429.84 கோடி மற்றும் காலங்கடந்த வட்டித் தொகை ரூ. 357.58 கோடி ஆக மொத்தம் ரூ. 787.42 கோடியை அரசுக்குச் செலுத்துவதிலிருந்து தள்ளுபடி செய்து அரசு ஆணை 9-11-2007-ல் ஆணை பிறப்பித்துள்ளது. அரசின் இந்த நடவடிக்கையினால் உள்ளாட்சி நிறுவனங்களில் கடன் மற்றும் சொத்துக்களின் விகிதாச்சாரம் பெருமளவில் மாறியிருப்பதோடு, கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள புதிய கடன் பெறவும் ஏதுவாக அமைந்துள்ளது.

**4. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான கடைகள்/ கட்டடங்கள் குத்தகைக்கு விடுவதில் உள்ள நடைமுறைகளை எளிதாக்குதல்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற ஏதுவாக அவற்றின் நிதிநிலையை மேம்படுத்த அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதில், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் கடைகள்,



2008 ஏப்ரல் 15]

சொந்த நிலங்கள் மற்றும் கட்டடங்களிலிருந்து வசூலிக்கப்படும் குத்தகைத் தொகை ஒரு முக்கியமான வரியில்லா வருவாயாக உள்ளது. இந்த முக்கியமான இனத்தின் குத்தகை நடைமுறைகளை எளிதாக்கி 3-7-2007-ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

- நகராட்சிகளின் சொத்துகளை முதலில் குத்தகைக்கு விடும்போது பொது ஏலம்மூலம் விட வேண்டும்.

- இந்தக் கடைகளின் / கட்டடங்களின் குத்தகை முதலில் 3 வருடங்களுக்கு விடப்பட்டு, மூன்றாண்டு முடிவில் தானாக புதுப்பிக்கப்படும். இந்தப் புதுப்பித்தல் 9 வருடங்கள்வரை இருக்கும். ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் குத்தகைத் தொகை 15 சதவிகிதம் உயர்த்தி வசூலிக்கப்படும் (இது ஏற்கெனவே உள்ள குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்.)

- ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் குத்தகையினைப் புதுப்பிக்க, குத்தகைதாரர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

- ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், குத்தகைத் தொகை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

- குத்தகையை மேலும் 9 ஆண்டுகளுக்கு நீட்டிக்கும்போது ஏற்கெனவே இருந்த குத்தகைதாரரே புதிதாக நிர்ணயிக்கப்படும் சந்தை வாடகையினைச் செலுத்த ஒப்புக்கொள்வாரேயானால் அவருக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். இல்லையெனில் அச்சொத்து பொது ஏலத்தின்மூலம் குத்தகைக்கு விடப்பட வேண்டும்.

- சட்டப்படியல்லாமல் குடியிருப்போருக்குப் பெயர் மாற்றம் செய்ய அவர்கள் விண்ணப்பித்தால் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகையாக, 12 மாதக் குத்தகைத் தொகை, வைப்புத் தொகையாகவும், அதுதவிர 12 மாதக் குத்தகைத் தொகை, குறைந்தபட்ச பெயர் மாற்றக் கட்டணமாகவும் பெற்றுக்கொண்டு, விண்ணப்பதாரர் பெயருக்குக் குத்தகையை உரிமை மாற்றம் செய்யலாம்.

[2008 ஏப்ரல் 15

## 5. மாநில நிதிக் குழு மானியங்கள் பகிர்வு

முன்பு மாநில நிதி ஆணையப் பகிர்வு, மாநில அரசின் சொந்த வருவாயில் 8 சதவிகிதமாக இருந்தது. இத்தொகையினை 2007-2008 முதல் 8 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக உயர்த்தி, அரசு 25-5-2007-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இதன்மூலம் ரூ. 178.72 கோடி உள்ளாட்சிகளுக்கு அதிகமாக வழங்கப்பட்டது. (மாநில நிதிப் பகிர்வுத் தொகை ரூ. 638.03 கோடியிலிருந்து ரூ. 816.75 கோடியாக உயர்ந்துள்ளது). மாநில நிதிப் பகிர்வு மானியம் உயர்த்தியதன்மூலம் உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலைமை கணிசமாக மேம்பாடு அடைந்துள்ளது.

## 6. பன்னிரண்டாவது மத்திய நிதிக் குழு மானியம்

மத்திய அரசு பன்னிரண்டாவது நிதிக் குழு மானியமாக, ரூ. 572 கோடியைத் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005-2006 முதல் 2009-2010 வரை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி மானியத் தொகை பின்வருமாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது :

(i) 50% திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் பொதுமக்கள் தனியார் பங்கீட்டுடன் செயல்படுத்துதல்

(ii) 25% சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் பராமரித்தல்

(iii) 25% அடிப்படை விவரக் குறிப்பு உருவாக்குதல், மின் கட்டணம் செலுத்துதல் போன்ற சில்லறைப் பணிகளுக்காக

அதன்படி, மாநில அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ. 82.30 கோடி சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 158 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இரு தவணைகளாக 2005 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. நடப்பாண்டிற்கும் ரூ.82.30 கோடி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்படும்.

# IV. சிறப்பு முயற்சிகள்

## 1. தொடக்கக் கல்வி நிதி

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், தொடக்கக் கல்வி வரியினை வசூலித்து வருகின்றன. 1,206 பள்ளிகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பராமரிப்பில் உள்ளன.



2008 ஏப்ரல் 15]

2008-2009 ஆம் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் உள்ள தொடக்கக் கல்வி நிதியைப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2. தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டம்

தெரு நாய்களை, சட்ட விரோதமாக, மனிதாபிமானம் இல்லாமல் கொல்லுவதைத் தவிர்க்கும்பொருட்டு, உலக சுகாதார நிறுவனம் தெரு நாய்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டத்தைப் பரிந்துரை செய்துள்ளது. 1960-ஆம் ஆண்டு பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 38(1)-ன்கீழ், 2001 ஆம் ஆண்டு பிராணிகள் (நாய்கள்) கருத்தடை அறுவை விதிகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. தெரு நாய்கள் மற்றும் வீட்டு நாய்களின் எண்ணிக்கையைக் கண்டறிய, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இக்கணக்கெடுப்பு அடிப்படையில், இத்திட்டத்தைச் செயல்படுத்த 5 மாநகராட்சிகள் மற்றும் 50 நகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 5,28,27,150/- செலவு செய்து கொள்ளவும், இந்தியப் பிராணிகள் நலச் சங்கத்திடமிருந்து, பின்னர் செலவுத் தொகையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும், அரசு 18-1-2007-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தை மிகப் பெரிய அளவில் செயல்படுத்தியுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். 31-8-2007 முடிய 42,460 தெரு நாய்களுக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

## 3. மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல்

மூன்றாம் நிலை நகராட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு, இந்நகராட்சிகள், சமூக மற்றும் அடிப்படை வசதிகளையும் அளித்து வருவதாலும், இப்பகுதிகள் மேலும் வளர்ச்சி பெற அனைத்து வாய்ப்புகளும் உள்ளதாலும், நகர்ப்புற வளர்ச்சியினை மூன்றாம் நிலை நகராட்சிகளிலும் முழுமையான அளவில் உறுதி செய்ய நகர மேம்பாட்டுத் திட்டத்தின் தேவை உணரப்பட்டு அதனடிப்படையில் கலந்தறிதற்குரியர் நியமனம் செய்யப்பட்டு, நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 15

7 நிருவாக மண்டலங்களின் கீழுள்ள 49 மூன்றாம் நிலை நகராட்சிகளைப் புவியியல் அடிப்படையில் வகைப்படுத்தி நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்க கலந்தாய்வர் நியமிப்பதற்கு ரூ. 142.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பணி 2008-2009-க்குள் முடிக்கப்படும். நகரத்தின் தற்போதைய நிலையும், அடிப்படைக் கட்டமைப்புகளின் தேவையும் அறிந்து, தேவைக்கான திட்டமிடுதலுக்கு முறையான முயற்சி மேற்கொள்ளப்படுவது, இந்நகராட்சிகளில் இதுவே முதல் முறையாகும்.

**4. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்**

நகர்ப்புற மேலாண்மைக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான முதன்மையான நிறுவனமாக, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூரில், 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இதன் நோக்கங்கள் பின்வருமாறு :

1. நகர்ப்புற மேலாண்மையின் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள சமீபத்திய மேலாண்மை நுணுக்கங்களை அறியச் செய்தல்
2. பயிற்சிக் கருத்தரங்கு, வெளியீடு, பட்டயச் சான்று மற்றும் பட்டமளித்தல் ஆகியவற்றின்மூலம் நகர்ப்புற மேலாண்மை மற்றும் நகர்ப்புற மேம்பாடு குறித்த விவரங்களைப் பகிர்ந்தளித்தல்
3. நகர்ப்புற வளர்ச்சி குறித்து, ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுப் பணியினை மேற்கொள்ளுதல்.
4. ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான நகர்ப்புறக் கட்டமைப்பினை மேம்படுத்த உதவிபுரிதல்.

இப்பயிற்சி நிறுவனத்தின் செயல்பாடுகளை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலாளர் தலைமையில் உள்ள நிருவாகக் குழு கவனித்து வருகிறது. பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர், இக்குழுவின் செயலாளராக இருந்து, அன்றாடப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுப் பங்களிப்பாக ரூ. 30.06 இலட்சம் இப்பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது. மேலும், கட்டமைப்பு வளர்ச்சிக்காக அரசு மானியம் அளிக்கிறது.



2008 ஏப்ரல் 15]

2007-2008 ஆம் ஆண்டில், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் III-ன்கீழ் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு 8 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மேற்படி பயிற்சி வகுப்பில் 4,000 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மேலும், நகராட்சி ஆணையர், இளநிலை உதவியாளர் ஆகியோருக்கும் முழுமையான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் அலுவலர்களுக்குப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. மேற்படி திட்டத்தில் 6,100 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களுக்கு அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, மன அழுத்த மேலாண்மை (Stress management) குறித்து சிறப்புப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது.

இப்பயிற்சி நிறுவனத்தின் தங்கும் விடுதியில், கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக 2008-2009 ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ. 1.50 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**5. நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவித்தல்**

அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிப்பது, அரசின் நோக்கமாகும். 10 மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில், நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் அதிக மதிப்பெண் பெறும் 25 மாணவர்களுக்குப் பரிசுத் தொகையும், தகுதிச் சான்றும் 2007-2008 ஆம் ஆண்டிலிருந்து அளிப்பது என அரசு அறிவித்துள்ளது. மேலும், பொருளாதாரக் காரணங்களுக்காக மேற்படிப்பைத் தொடர முடியாத நிலையிலுள்ள அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள 25 மாணவர்களுக்குப் பட்டப் படிப்புவரை படிப்பதற்கு, கல்வி உதவித் தொகை அளிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. இச்செலவினத்தை ஈடு செய்வதற்காக 'நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர்களின் கல்வி உதவித் தொகை நிதி' ஏற்படுத்தப்பட்டு, அந்நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, கல்வி உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்படும்.

[2008 ஏப்ரல் 15

## 6. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துதல்

நீண்ட நாட்களாக முறைப்படுத்தப்படாத மனைப் பிரிவுகள் மற்றும் மனைகளை முறைப்படுத்துவது குறித்தும், அவற்றில் அடிப்படை வசதிகளான சாலை, குடிநீர், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் அரசு 25-7-2006-ல் ஆணை பிறப்பித்தது. இத்திட்டத்தினை 31-12-2007 வரை நீட்டித்து, சென்னை தவிர பிற மாநகராட்சிகளில் 61,812 வீட்டு மனைகளும், நகராட்சிப் பகுதிகளில் 1,12,095 வீட்டு மனைகளும் முறைப்படுத்தப்பட்டு, ரூ. 87.97 கோடி வருவாய் பெறப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை வரன்முறை செய்வதன்மூலம் கிடைக்கப்பெற்ற நிதியைக் கொண்டு மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்ற உத்தேசித்துள்ளன.

### 1. மதுரை மாநகராட்சி

மதுரை, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்ட செயலாக்க மாநகரமாகும். இரண்டாம் வைகை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், திடக் கழிவு மேலாண்மைத் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்காக ரூ. 614.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. நகர்ப்புற ஏழைமக்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுக்கும் திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ. 130.42 கோடி செலவில் 12,078 வீடுகள் கட்டப்படும். ரூ. 316 இலட்சம் செலவில் 10.65 கி.மீ. மண்சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்கப்பட உள்ளன. சுற்றுலா வளர்ச்சி நிதியின்கீழ் ரூ. 329.84 இலட்சம் மதிப்பீட்டில் அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் சுற்றுப்புறப் பகுதிகளை அழகுபடுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக மதுரை மாநகராட்சியின் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு 'ISO 9001-2000' தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மதுரை மாநகராட்சி 2008-2009-க்கு விளைபயன் காட்டும் வரவு-செலவுத் திட்டத்தினைத் தயாரித்துள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க பணியாகும்.



2008 ஏப்ரல் 15]

### 2. கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்ட செயலாக்க மாநகரமாகும். பில்லூர் குடிநீர்த் திட்டம், திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ரூ. 587.38 கோடி மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் (BSUP) திட்டத்தின்கீழ் ரூ. 258.82 கோடி செலவில் 12,630 வீடுகள் கட்டப்படும்.

மேட்டுப்பாளையம் சாலையில் ரூ. 7 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. புதிதாக வரன்முறைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு ரூ. 17.60 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் செய்துதரப்படும். மேட்டுப்பாளையம் சாலையில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் அண்ணா காய்கறி அங்காடி கட்டப்படவுள்ளது. மின் ஆளுகை செயல்பாட்டின்கீழ் இணையதளம் மூலம் வரி செலுத்தும் வசதி செயல்படுத்தப்படவுள்ளது. இணையதளம் மூலம் கட்டட உரிமம் வழங்குவதற்கான சிறப்பு மென்பொருள் தயாரிக்கப்பட்டு நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 'மக்களைத் தேடி மாநகராட்சி' என்ற முகாம் 22 வார்டுகளில் நடத்தப்பட்டது. இவ்வாண்டு இம்முறை மற்ற வார்டுகளுக்கும் விரிவுபடுத்தப்படும். 2008-2009 ஆம் ஆண்டில் விளைபயன் காட்டும் வரவு-செலவுத் திட்டத்தினைத் தயாரித்துள்ளது குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

### 3. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

சத்திரம் பேருந்து நிலையத்தில் அபிவிருத்திப் பணிகளும், ஒருங்கிணைந்த பேருந்து நிலையப் பணிகளும் ரூ. 1.75 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 19.96 கோடி மதிப்பீட்டில் 1,208 வீடுகள் கட்டப்படவுள்ளன. ஜப்பான் வங்கியின் நிதி உதவியுடன் ரூ. 144.86 கோடி செலவில் ஒருங்கிணைந்த குடிநீர் விநியோகத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. ரூ. 160 கோடி மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியும், ரூ. 30 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணியும் செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வாண்டில் காந்தி அங்காடியில் ரூ. 90 இலட்சம் செலவில் நவீன இறைச்சிக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. எரிவாயு தகன மேடை ரூ. 70 லட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது.

[2008 ஏப்ரல் 15

## 4. சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சியில் ரூ. 31.50 கோடி செலவில் திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணியும், ரூ. 168 கோடி செலவில் தனிக் குடிநீர்த் (Dedicated Water Supply) திட்டப் பணியும், ரூ. 149.39 கோடி செலவில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியும் இவ்வாண்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. ரூ. 5 கோடி செலவில் 50 கி.மீ. மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்படவுள்ளன. குமாரசாமிப்பட்டி மற்றும் சூரமங்கலம் பகுதிகளிலுள்ள மருத்துவமனைகள் தலா ரூ. 30 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ளன. மாநகரப் பழைய பேருந்து நிலையம் மற்றும் நேரு கலையரங்கம் ஆகியவை முறையே ரூ.2 கோடி மற்றும் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படவுள்ளன.

## 5. திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சியில் ரூ. 3.94 கோடி செலவில் புதிய குடிநீர் விநியோகத் திட்டம், 3 வார்டுகளில் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பாதாளச் சாக்கடைத் திட்டம், விடுபட்ட பகுதிகளில் தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.8.77 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ரூ. 2.92 கோடி செலவில், திடக் கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளுக்கான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்படவுள்ளது. மேலப்பாளையம் பகுதியில் குடிநீர் மேலேற்றும் குழாய், ரூ. 2 கோடி செலவில் மாற்றியமைக்கப்படும். 7.69 கி.மீ. நீளமுள்ள மண்சாலைகள், ரூ. 1.50 கோடி செலவில் தார்ச் சாலைகளாக மாற்றியமைக்கப்படும்.

ரூ. 58 இலட்சம் செலவில், எரிவாயு தகன மேடையும், ரூ. 50 இலட்சம் செலவில் நவீன இறைச்சிக் கூடம் கட்டும் பணியும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.



2008 ஏப்ரல் 15]

## 6. திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் நகராட்சி, மாநகராட்சியாக அமைக்கப்பட்டு 1-1-2008 முதல் மாநகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்காக அரசால் ஒருமுறை மானியமாக ரூ. 500 இலட்சம் வழங்கப்பட்டு இவ்வாண்டில் செயல்படுத்தப்படவுள்ளது. நகராட்சிப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கூட்ட அரங்கம் ரூ. 810 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ. 2,067.54 இலட்சம் செலவில் 2,060 வீடுகள் கட்டித் தரப்படும். இவ்வாண்டில் ரூ. 250 இலட்சம் மதிப்பீட்டில் 20 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்கப்படும்.

## 7. ஈரோடு மாநகராட்சி

ஈரோடு நகராட்சி, மாநகராட்சியாக அமைக்கப்பட்டு 1-1-2008 முதல் மாநகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்காக அரசால் ஒருமுறை மானியமாக ரூ. 500 இலட்சம் வழங்கப்பட்டு, இவ்வாண்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வாண்டில் ரூ. 3.58 கோடி செலவில் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படவுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ. 2.50 கோடி செலவில் பேருந்து நிலையத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்படும். ரூ. 5.58 கோடி செலவில் குடிநீர் விநியோகப் பணிகள் செயல்படுத்தப்படும். இவ்வாண்டில் ரூ. 154 கோடி செலவில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ. 5.06 கோடி செலவில் 454 வீடுகள் கட்டித் தரப்படும். இவ்வாண்டில் ரூ. 250 இலட்சம் செலவில் எரிவாயு தகன மேடை அமைக்கப்படவுள்ளது.

[2008 ஏப்ரல் 15

## பேரூராட்சிகள் நிர்வாகம்

தமிழ்நாட்டிலுள்ள 561 பேரூராட்சிகள், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி இயங்கி வருகின்றன. இப்பேரூராட்சிகள் வருவாய் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:


| நிலை | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | வருமான வரம்பு |
|---|---|---|
| சிறப்பு நிலை | 13 | ரூ. 20 இலட்சத்திற்கு மேல் |
| தேர்வு நிலை | 245 | ரூ. 16 இலட்சத்திற்கு மேல் |
| முதல் நிலை | 221 | ரூ. 8 இலட்சத்திற்கு மேல் |
| இரண்டாம் நிலை | 82 | ரூ. 4 இலட்சத்திற்கு மேல் |


பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக நகரங்கள் விளங்குகின்றன. மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் தேவையான வாய்ப்புகளை நகரங்கள் உருவாக்குகின்றன. பேரூராட்சிகளில் வசிக்கும் மக்கள் தொகையின் எண்ணிக்கை 76,46,386 ஆகும். இது தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 12



2008 ஏப்ரல் 15]

சதவீதமாகும். பெரும்பாலான பேரூராட்சிகள், சுற்றுலாத் தலங்களாகவும், புனிதத் தலங்களாகவும் மற்றும் புராதனப் பெருமை வாய்ந்த நகரங்களாகவும் உள்ளன.



[2008 ஏப்ரல் 15

## நிருவாக அமைப்பு

பேரூராட்சிகள் ஆணையரகம், பேரூராட்சிகளில் நிருவாகப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 7-5-1981 அன்று உருவாக்கப்பட்டது. பேரூராட்சிகளின் ஆணையர், பேரூராட்சிகளின் நிருவாகத் துறைத் தலைவராகவும், பேரூராட்சிகளின் ஆய்வாளராகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறார். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள் பேரூராட்சிகளின் கண்காணிப்பு அலுவலர்களாகவும், நிருவாக அலுவலர்களாகவும் உள்ளனர். இவை தவிர; உதவி இயக்குநர்கள் தலைமையிலான 16 மண்டலப் பேரூராட்சிகள் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

### பேரூராட்சிகளின் செயல்பாடுகள்

பேரூராட்சிகள் பொதுமக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், முறையான வடிகால் மற்றும் கழிவுநீர் வசதிகள் அளித்தல், திடக் கழிவு மேலாண்மை, சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், தெரு விளக்குகள் அமைத்தல், பொதுமக்கள் சேவைக்கான பேருந்து நிலையங்களை அமைத்துப் பராமரித்தல், சமுதாயக் கூடங்கள் மற்றும் வியாபார மையங்களைப் பராமரித்தல், பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற முக்கியப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

### வருவாய் ஆதாரங்கள்

சொத்து வரி, தொழில் வரி, கட்டணங்கள் மற்றும் வாடகை, முத்திரை வரி மீதான மேல் வரி, கேளிக்கை வரியில் ஒரு பகுதி, மாநிலப் பகிர்வு நிதி மற்றும் அரசு மானியம் போன்ற நிதி ஆதாரங்களின்மூலம். பேரூராட்சிகள் தங்களது வருவாயைப் பெறுகின்றன.

### பல்வேறு அதிகார அமைப்புகளின் நிதி ஒப்பளிப்பு அதிகாரம்

திட்டங்களைச் சிறப்பாகவும், துரிதமாகவும் செயல்படுத்திட ஏதுவாக கீழ்க்குறிப்பிட்டவாறு அதிகார அமைப்புகளுக்கு நிதி ஒப்பளிப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது:



2008 ஏப்ரல் 15]

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | அலுவலர்கள் | நிருவாக ஒப்பளிப்பு வழங்குதல் | தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்குதல் |
|---|---|---|---|
| 1 | அரசு | 100.00-க்கு மேல் | -- |
| 2 | பேரூராட்சிகள் ஆணையர் | 100.00 | -- |
| 3 | செயற் பொறியாளர் | -- | 100.00 |
| 4 | மாவட்ட ஆட்சியர் | 10.00 | -- |
| 5 | பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் | 5.00 | -- |
| 6 | உதவி செயற் பொறியாளர் | -- | 15.00 |

திட்டங்கள் செயல்படுத்துதலை மேலும் எளிதாக்கி விரைவுபடுத்திட மேலும் கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

### அடிப்படை வசதிகள்

### குடிநீர் வழங்கல்

பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு குறைந்தது 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை அரசு இலக்காகக் கொண்டுள்ளது. தற்போது குடிநீர் வழங்கும் அளவு பின்வருமாறு:

[2008 ஏப்ரல் 15

| வ. எண் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு குடிநீர் வழங்கும் அளவு | பேரூராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40 லிட்டருக்குக் குறைவாக | 18 |
| 2 | 40-69 லிட்டர் | 193 |
| 3 | 70 லிட்டர் மற்றும் அதற்கு மேல் | 350 |

எழுபது லிட்டருக்குக் குறைவாக குடிநீர் வழங்கும் பேரூராட்சிகளுக்குக் கூடுதல் குடிநீர்த் திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் படிப்படியாகச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும் 40 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வழங்கும் 18 பேரூராட்சிகளுக்கும் நடப்பு நிதியாண்டில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**சாலை மற்றும் மழைநீர் வடிகால்**

புதிய சாலைகள், வடிகால்கள் மற்றும் சாலை மேம்பாடுகள் அமைத்து, அவற்றைப் பராமரிப்பது பேரூராட்சிகளின் செயல்பாடாகும். பேரூராட்சிப் பகுதிகளில் தற்போதுள்ள மண் சாலைகளைப் படிப்படியாகத் தார்ச் சாலைகளாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பேருந்துகள் செல்லும் அனைத்துச் சாலைகளின் இரு புறங்களிலும் மழைநீர் வடிகால் வசதிகள் படிப்படியாக அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**தெரு விளக்குகள்**

தற்போது பேரூராட்சிகளில் 3,29,624 தெரு விளக்குகள் உள்ளன. அவற்றில் 3,239 பாதரச விளக்குகளையும், 49,531 சோடியம் ஆவி விளக்குகளையும், மின்சாரத்தைச் சேமிக்கும் பொருட்டு படிப்படியாக ஒளிரும் அடர் மின் விளக்குகளாக (CFL) மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 2,000 ஒளிரும் அடர் மின் விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு திடக் கழிவு மேலாண்மை**

2007-2008 ஆம் ஆண்டில் பேரூராட்சிப் பகுதிகளில் ரூ. 16.05 கோடி மதிப்பீட்டில் திடக் கழிவு மேலாண்மை கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2008-2009 ஆம் ஆண்டில் 40 பேரூராட்சிகளில், ரூ. 4 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின்கீழ் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பேரூராட்சிகளில், குப்பைகள் உருவாகும் இடத்திலேயே பிரித்தெடுத்தல், மீள உபயோகித்தல், மறு சுழற்சி முறையில் உபயோகப்படுத்துதல் மற்றும் மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரித்தல் மக்கும் கழிவுகளை வீட்டிலேயே உரக் குழி அமைக்க ஊக்குவித்து உரம் தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

**வீடுகளுக்கான தனி நபர் கழிப்பிடம்**

பேரூராட்சிப் பகுதிகளில் திறந்த வெளிகளைக் கழிப்பிடமாகப் பயன்படுத்தும் நிலையை மாற்ற, வீடுகளில் கழிப்பிடம் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பொருளாதார நிலை உயர்த்துதல்**

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)**

நகர்ப்புறப் பெண்கள், வேலையற்ற இளைஞர்கள் மற்றும் ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் (1) திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் (2) வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள நபர்களுக்குப் பொருளாதார உதவி அளித்தல் (3) நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுக்குப் பொருளாதார உதவி அளித்தல் ஆகிய உப திட்டங்கள் அடங்கியுள்ளன.

நகர்ப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த 2008-2009 ஆம் ஆண்டில் ரூ. 35.12 கோடி மதிப்பீட்டில் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்க இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**திட்டங்கள்**

**அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

❖ அனைத்துப் பேரூராட்சிகளிலும், அனைத்து அடிப்படை வசதிகளையும் அளிக்கும் பொருட்டு அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டம் 561 பேரூராட்சிகளிலும் 2007-2008 முதல் நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 140

பேரூராட்சிகளில் 1,492 பணிகள் ரூ. 70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர, கூடுதலாக 4,584 பணிகள் ரூ. 266.25 கோடி மதிப்பீட்டில் இதர திட்டங்களை ஒருங்கிணைத்து நிறைவேற்றப்பட்டுள்ளன.

- ❖ 2008-2009 ஆம் ஆண்டில் மேலும் 140 பேரூராட்சிகளில் ரூ. 70 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப் படவுள்ளது.

**சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இடம் பெறாத அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் இத்திட்டம் பொருந்துவதாகும். இத்திட்டத்தின்கீழ் 58 பேரூராட்சிகளில் ரூ. 159.67 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளான குடிநீர் மேம்பாடு, சாலைகள், வடிகால்கள் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. 2008-2009 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் (IHSDP & BSUP)**

பேரூராட்சிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழைகளுக்கு ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்களின்கீழ் 14 பேரூராட்சிகளில் ரூ. 50.66 கோடி மதிப்பீட்டில் 4762 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வீடுகள் கட்டித் தருதல், புனரமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ. 24 கோடி மதிப்பீட்டில் 3,000 வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது.





**பகுதி-2 திட்டம் மற்றும் பிற திட்ட மானியங்கள்**

2008-2009 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

- ❖ செயற் பொறியாளர் மற்றும் 16 மண்டலப் பேரூராட்சிகளின் 20 உதவி செயற் பொறியாளர்களுக்கு ரூ 1.05 கோடி மதிப்பீட்டில் ஈப்புகள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ ரூ. 6.46 கோடி மதிப்பீட்டில் 44 பேரூராட்சிகளில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ ரூ. 1 கோடி மதிப்பீட்டில் 200 பேரூராட்சிகளில் 2,000 ஒளிரும் அடர் மின் விளக்குகள் (CFL) அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ ரூ. 4 கோடி மதிப்பீட்டில் 40 பேரூராட்சிப் பேருந்து நிலையங்களில் நவீன சுகாதார வளாகம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ ரூ. 4 கோடி மதிப்பீட்டில் 40 பேரூராட்சிகளில் திடக் கழிவு மேலாண்மை அறைகள் கட்டுதல் மற்றும் உரக் கிடங்குகள் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## இதர செயல்பாடுகள்

**பேரூராட்சிகளில் அனுமதியற்ற மனைகள் வரன்முறைபடுத்தும் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 31-12-2007 வரை 26,413 அனுமதியற்ற வீட்டு மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு ரூ. 675.19 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இத்தொகை இப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த உபயோகப்படுத்தப்படும்.

**சிறப்புப் பணிகள்**

மக்களிடையே பொறுப்புணர்ச்சி மற்றும் தங்களது நகரைப்பற்றி பெருமையை உருவாக்கும்பொருட்டு "எனது நகரம் எனது பெருமை, இதை நான் சுத்தமாகவும் பசுமையாகவும் பேணுவேன்" என்ற வாசகம் விளம்பரத் தட்டிகள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரம் மூலம் பிரபலப்படுத்தப்பட்டது.

[2008 ஏப்ரல் 15

### தி மேலாண்மை

2008-2009 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளுக்கு மாநிலப் பகிர்வு தியாக ரூ. 322.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 12-து மத்திய நிதிக் குழு பரிந்துரையின்பேரில் ரூ. 32.10 கோடி நிதி துக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ாவட்ட அளவிலான உயர்நிலைக் குழு

பேரூராட்சிகளில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தணிக்கைத் டைகளை நீக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர்களைத் தலைவராகக் காண்ட மாவட்ட உயர்நிலைக் குழு, அரசால் அமைக்கப்பட்டது. )07-2008 ஆம் ஆண்டில் 16 கூட்டங்கள் நடத்தப்பட்டு 630 தடைகள் ங்கப்பட்டுள்ளன.

### ன்னணு மேலாண்மை

❖ பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கணினி வலைதளம் மூலம் கண்காணிப்பதற்கு ஒருங்கிணைந்த உடனடி கண்காணிப்புத் திட்டம் (Cosmos) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது திட்ட வேலைகளைக் கூர்ந்து கண்காணிக்க உதவுகிறது.

❖ மாவட்ட ஆட்சியர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள், உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் ஆகியோரோடு திட்டப் பணிகளை ஆய்வு செய்ய ஒளித்தோற்ற கலந்துரையாடல் வசதி (Video conferencing) பயன்படுத்தப்படுகிறது.

❖ அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றிய தனி வலைதளம் அமைக்கப்பட்டுள்ளது.

❖ நிருவாக மேலாண்மையின் ஓர் அங்கமாக 375 பேரூராட்சிகளுக்குக் கணினி வழங்கப்பட்டுள்ளது. மற்றும் 2008-2009 ஆம் ஆண்டில் மீதம் உள்ள பேரூராட்சிகளுக்கும் கணினிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

❖ 2007-2008 ஆம் ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை வலைதளம்மூலம் பெறும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறை (e-tendering) அறிமுகப்படுத்தப்படவுள்ளது.



2008 ஏப்ரல் 15]

❖ 2008-2009 ஆம் ஆண்டில் வலைதளம்மூலம் சொத்து வரி, குடிநீர்க் கட்டணம், தொழில் வரி மற்றும் வரியற்ற இனங்கள் ஆகிய பேரூராட்சிகளின் வருவாய்க் கணக்குகளைப் பராமரிக்கவும் கண்காணிக்கவும் வகை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### சுனாமி நிவாரணப் பணிகள்

சுனாமி நிவாரணப் பணிகள் ரூ. 60.16 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர உதவி திட்டத்தின்கீழும் ரூ. 15.17 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசர மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழும் சுனாமியால் பாதிக்கப்பட்ட 6 மாவட்டங்களில், 21 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களின்கீழ் காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 கடலோர மாவட்டங்களில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட 19 பேரூராட்சிகளில் வாழும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் பணிகள், பழுதடைந்த சாலைகள் செப்பனிடுதல், பொதுக் கட்டடங்கள், குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள ரூ.57.80 கோடி அரசு விடுவித்துள்ளது. இவற்றில் 153 சாலை மற்றும் கட்டடப் பணிகளும் 67 குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் வாழ்வாதார உதவிகள் உட்பட மேற்சொன்ன பணிகளுக்காக ரூ. 37.48 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று, புதியதாகக் கட்டப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில், அவசர கால சுனாமி புனரமைப்புத் திட்டத்தின்கீழ், தெரு விளக்குகள், வீடுகளுக்கு மின் இணைப்புகள், உள்ளூர் சாலைகள், இணைப்புச் சாலைகள் மற்றும் அங்கன்வாடிக் கட்டடங்கள், சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடங்கள், சமையற் கூடங்கள், நூலகக் கட்டடங்கள், ஆரம்பப் பள்ளி கட்டடங்கள், கடைகள், பயணிகள் நிழற்குடை, மயான எரிமேடை போன்ற பொதுமக்களுக்கான வசதிகள் ஆகியவற்றிற்கென ரூ. 15.17 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பணிகளும் 2008-2009 ஆம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

## சென்னை மாநகராட்சி

தென்னிந்தியாவின் நுழைவாயில் என்று அழைக்கப்படும் சென்னை மாநகரம், அறிவுசார் தலைநகரமாக மிக வேகமாக மாறி வருகின்றது. பாரம்பரிய கலாச்சாரமும் புதுமையும் கலந்த ஓர் அழகிய நகராக சென்னை வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சியின் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவையான கட்டமைப்பு வசதிகளையும், அளிக்கப்படும் இதர பணிகளையும் உலகத் தரத்தில் வழங்குவதன் மூலம் தீர்ப்பதில், அரசு மிகுந்த முனைப்பு கொண்டுள்ளது. மாநகர மக்களுக்குச் சாலை, தெரு விளக்கு, அடிப்படை சுகாதாரப் பராமரிப்பு, மழைநீர் வடிகால் ஆகிய வசதிகளை, சென்னை மாநகராட்சி அளித்து வருகிறது.

அரசு, குடிசைப் பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளின் குறைபாடுகளைச் சரி செய்ய சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்தின் (BSUP) கீழ், குடிசைப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென, மத்திய அரசு, ரூ. 120 கோடி மதிப்பீட்டிலான ஒரு திட்டத்தை அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் தற்போதுள்ள தார்ச் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றுதல் மற்றும் தெரு விளக்கு, பொதுக் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

### மூலதனப் பணிகள்

*2008-2009* ஆம் ஆண்டில், கடந்த பத்தாண்டுகளில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, சென்னை மாநகராட்சி, ரூ. 374 கோடி மதிப்பிலான மூலதனப் பணிகளை நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது. இதன்கீழ் நிறைவேற்றப்படவுள்ள முக்கிய திட்டங்கள் கீழ்க்காணுமாறு :

(1) 400 கி. மீ. நீளத்திற்கு பழைய தார்ச் சாலைகளை ரூ. 85 கோடி செலவில் புதுப்பித்தல் மற்றும் ரூ. 70 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்

(2) ரூ. 10 கோடி செலவில் பல்வேறு வார்டுகளில் 36 சுகாதார மையங்கள் கட்டுதல்

(3) பெரம்பூரில் உள்ள இறைச்சிக் கூடத்தைக் கட்டி, செயல்படுத்தி, ஒப்படைத்தல் (BOT) அடிப்படையில் நவீனமயமாக்குதல்



2008 ஏப்ரல் 15]

(4) செனாய் நகர் மற்றும் பேசின்பிரிட்ஜ் சாலையில் ரூ. 10 கோடி மதிப்பீட்டில் நவீன கலையரங்கங்கள் கட்டுதல்

(5) ரூ. 30 கோடி மதிப்பீட்டில் இரு மண்டல அலுவலகங்கள் கட்டுதல் மற்றும் ரிப்பன் மாளிகையில் ஓர் இணைக் கட்டடம் கட்டுதல்

(6) ரூ. 12 கோடி மதிப்பீட்டில் 7,500 புதிய தெரு மின் விளக்குக் கம்பங்கள் நிறுவுதல்

(7) அண்ணா சாலை, ஈ. வெ. ரா. பெரியார் சாலை, வ. உ. சி. சாலை போன்ற முக்கிய சாலைகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் ரூ. 35 கோடி மதிப்பீட்டில் மழை நீர் வடிகால்வாய்கள் கட்டுதல்

(8) ரூ. 175 கோடி திட்ட மதிப்பீட்டில் 11 மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருகிறது

(9) கேப்டன் காட்டன் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய், டிரஸ்ட்புரம் கால்வாய், மாம்பலம் கால்வாய், வேளச்சேரி கால்வாய் மற்றும் ராஜ்பவன் கால்வாய் ஆகியவற்றின் குறுக்கே குடியிருப்புப் பகுதிகளை இணைக்கும் வண்ணம் சிறு பாலங்கள் ரூ. 10 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.

### திடக் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் ஆரம்பநிலை திடக் கழிவு அகற்றுதலை நவீனப்படுத்தும் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 80 எண்ணிக்கை “குப்பையை அழுத்தி எடுத்துச் செல்லும் வாகனங்கள்” வாங்கப்பட்டு 2008-2009 ஆம் ஆண்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும். மேலும் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் இடங்களும், குப்பை மாற்று நிலையங்களும் மேம்பாடு செய்யப்படும். மேலும் குப்பையின் அளவை, அவை உருவாகும் நிலையிலேயே குறைப்பதற்காக, அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும் தனி வீடுகளிலும் எரு தயாரிப்பதை ஊக்குவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், அறிவிக்கை செய்யப்பட்ட குடிசைப் பகுதிகளில், குப்பை தரம் பிரிக்கப்படுவதை ஊக்கப்படுத்துவதற்கென ஒவ்வோர் இல்லத்திற்கும் இரண்டு

[2008 ஏப்ரல் 15

குப்பைவாளிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தரம் பிரித்தல், மக்களின் அன்றாட வாழ்வில் ஓர் அங்கமென உருவாக்கும் வகையில் பெரிய அளவில், தகவல் அளித்தல், கற்பித்தல், தகவல் பரப்புதல் (Information, Education and Communication) திட்டம், சுய உதவிக் குழுக்களின் மூலம் தொடங்கப்படும்.

**கல்வி**

சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 300 பள்ளிகள் உள்ளன. அவற்றில் மழலையர் கல்வி முதல் 12 ஆம் வகுப்பு வரையில் 1,37,000 மாணவ / மாணவியர் பயின்று வருகின்றனர். இவை தவிர 4 சமுதாயக் கல்லூரிகளும் சென்னை மாநகராட்சியால் நடத்தப்படுகின்றன. இந்தக் கல்வி நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த ரூ. 10 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இந்த ஆண்டு தெருச் சிறார்களுக்கென ஓர் இரவு நேர தங்குமிடம் ஏற்படுத்தப்படும்.

மாணவிகளிடையே சிறந்த உடல் நலம் மற்றும் சுகாதார நடவடிக்கைகளை வளர்க்க “சுகாதார நாப்கின்கள்”, சென்னை மாநகராட்சிப் பெண்கள் பள்ளிகளில் பயிலும் அனைத்து வளர்இளம் பருவ மாணவிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

அனைத்து மாணவ/மாணவியர்களின் பல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலன்**

சென்னை மாநகராட்சியின் 155 மருந்தகங்கள் மற்றும் நகர நல வாழ்வு மையங்கள்மூலமாக ஆரம்ப சுகாதார நலன் மற்றும் இதர சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் ஆண்டுக்கு 14,000 பிரசவங்கள் நடைபெறுகின்றன. இவ்வாண்டு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலன் சேவைகளின் தரத்தை மேம்படுத்தவும், இம்மருத்துவமனைகளில் 28,000 பிரசவங்களுக்குத் தேவையான கூடுதல் வசதிகள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன. தற்போது 24 மணி நேரமும் செயல்படும் மகப்பேறு மருத்துவமனைகள் 2 மட்டுமே உள்ளன. மேலும் எட்டு இடங்களில் 24 மணி நேரமும் செயல்படும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைகள் அமைக்கப்படும். பெண்களுக்கு மட்டுமே ஏற்படும் கருப்பை-வாய் புற்றுநோய் போன்ற நோய்களுக்கான சிகிச்சை அளிப்பதற்குச் சிறப்பு மருத்துவ முகாம்கள்



2008 ஏப்ரல் 15]

நடத்தப்படும். திடீரென பரவும் தொற்று நோய்களைக் கண்காணிக்க நோயாளிகளின் சுகாதாரப் பதிவுகளைக் கணினிமயமாக்கி, தொற்று நோய்க் கண்காணிப்புப் பணிகள் மேம்படுத்தப்படும்.

அனைத்துச் சுகாதார மையங்களிலும் ‘அல்ட்ரா சோனோகிராம்’ கருவிகள் நிறுவப்பட்டு இலவசமாக ஸ்கேன் செய்யப்படும். மேலும் கருவுற்ற தாய்மார்களுக்கு எச்.ஐய்.வி. பரிசோதனைகள் இலவசமாக செய்யப்படும்.

சென்னை மாநகராட்சி, 38 மயானங்களைப் பராமரித்து வருகிறது. இனி, மயான வசதிகள் மற்றும் சேவைகள் சென்னை மாநகரின் மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும். மேலும் அமரர் ஊர்தி, குளிர்சாதனப் பெட்டி சேவைகளும் இலவசமாக வழங்கப்படும்.

**தகவல் தொழில்நுட்ப சேவை**

தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டை அதிகரிக்கவும், சென்னை மாநகர மக்களுக்குப் பல்வேறு சேவைகளைச் செய்யவும் பின்வரும் தகவல் புதுமை தொழில்நுட்ப திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள், இணையதளத்தின்மூலம் எங்கிருந்து வேண்டுமானாலும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

வீட்டு வசதி சம்பந்தமான பல்வேறு விவரங்களை அளிக்கவும் மற்றும் மக்கள் சொத்து வரியினை ரொக்கமாகவோ, காசோலையாகவோ, கடன் சீட்டாகவோ (Credit Card), பற்றுச் சீட்டாகவோ, தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (ATM) சேவை போல செலுத்தும் பொருட்டு தகவல் நிலையங்கள், சென்னை மாநகரத்தின் பல இடங்களிலும் அமைக்கப்படும்.

கட்டடங்கள் கட்டுவதற்காக வழங்கப்படும் அனுமதியை விரைந்து வழங்கும் வகையில் “விரைவு வழி” என்கின்ற முறை, சென்னை மாநகராட்சியில் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பம் பெறப்பட்டு, உடனுக்குடன் கட்டட அனுமதி வழங்கப்படும். மேலும் வரைபடத்தின் சரித்தன்மையைச் சரிபார்க்க ஓர் இணைய தள மென்பொருள் வசதியும் உருவாக்கப்படும். இதன் மூலம் மனுவின்மீது நடவடிக்கை எடுக்க ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கலாம்.

புனித ஜார்ஜ் கோட்டை எதிர்ப்புற நிலப் பரப்பு, எலியட்ஸ் கடற்கரை மற்றும் மெரினா கடற்கரை ஆகியவற்றை அழகுபடுத்தும் பணிகள் 2008-2009 ஆம் ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும்.

[2008 ஏப்ரல் 15

## பாலங்கள்

### இரயில்வே சந்திக் கடவுகளில் மேம்பாலங்களும், சுரங்கப் பாதைகளும்

சென்னை மாநகரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 7 இரயில்வே சந்திக் கடவுகள் உள்ளன. இச்சந்திக் கடவுகள் வாகனப் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளன. வாகனங்கள் இந்தச் சந்திக் கடவுகளில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளன. எனவே இச்சந்திக் கடவுகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப் பாதைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரங்கராஜபுரம் சந்திக் கடவில் ரூ. 15.74 கோடி மதிப்பீட்டில் மேம்பாலமும், கத்திவாக்கம்- காக்ரேன் பேசின் சாலை சந்திக் கடவில் ரூ. 12.20 கோடி மதிப்பீட்டில் மேம்பாலமும், வில்லிவாக்கம் (LC-1) சந்திக் கடவில் ரூ. 12 கோடி மதிப்பீட்டில் மேம்பாலமும், ஜோன்ஸ் சாலை சந்திக் கடவில் ரூ. 4.32 கோடி மதிப்பீட்டில் சுரங்கப் பாதையும், மணியக்கார சத்திரம் சாலை சந்திக் கடவில் ரூ. 10.55 கோடி மதிப்பீட்டில் சுரங்கப் பாதையும், வில்லிவாக்கம் (LC-2) சந்திக் கடவில் ரூ. 13.39 கோடி மதிப்பீட்டில் சுரங்கப் பாதையும் மற்றும் கொருக்குப்பேட்டை சந்திக் கடவில் ரூ. 6.28 கோடி மதிப்பீட்டில் சுரங்கப் பாதையும் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### மழைநீர் வடிகால்

சென்னை நகரில் 2870 கி.மீ. நீளம் சாலைத் தொகுப்பு உள்ளது. இவற்றில் பெரும்பாலானவை, சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படுகிறது. இதில் 850 கி.மீ. நீளம் சாலைகளில் மட்டுமே மழைநீர் வடிகால்வாய்கள் உள்ளன. இந்த மழைநீர் வடிகால்வாய்த் தொகுப்பும், 16 சிறிய கால்வாய்கள், கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு ஆறு மழைநீர் வடிவதற்குத் தொகுப்பாக அமைகிறது. மழைக் காலங்களில் சென்னையில் பலப் பகுதிகளில் மழை நீர் தேங்குகிறது. சென்னை மாநகருக்கு மழைநீர் வடிகால் அமைப்பு குறித்த பெருந்திட்டம் 15 ஆண்டுகள் பழமையானது. மழைநீர் தேங்குவதைத் தவிர்க்க ஒரு முழுமையான தீர்வு காண்பதற்கு, சென்னை மாநகராட்சி கலந்தறிதற்குரியவரை நியமிக்க உள்ளது. தற்போதுள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு குறித்து விரிவான அளவைகளை மேற்கொண்டு, மழைநீர் தேங்குவதைத் தவிர்க்க, முழுமையான மழைநீர் வடிகால்வாய் கட்டுமான பணிக்குத் திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். அத்திட்ட அறிக்கையின்படி, மழைநீர் வடிகால்வாய் கட்டுமானப் பணிகளும், கால்வாய் மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.



2008 ஏப்ரல் 15]

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF)

வேகமாக நகரமயமாகி வரும் தமிழகத்தில் தரமான கட்டமைப்பு வசதிகளின் தேவை அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் என்னும் அமைப்பு, பொது மற்றும் தனியார் முதலீட்டு பங்களிப்போடு வளர்ந்துவரும் கட்டமைப்பு வசதிகளின் தேவை மற்றும் அளிக்கும் திறன் ஆகியவற்றின் இடைவெளியைக் குறைக்கும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதித் தேவையை மூலதனச் சந்தையுடன் இணைப்பதற்காகவும் ICICI, HDFC மற்றும் IL & FS பங்களிப்போடு உருவாக்கப்பட்டது. இந்த நிதியமானது தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்மூலம் நிருவகிக்கப்படுகிறது.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோள்கள்

❖ நகர்ப்புறக் கட்டமைப்பு திட்டங்களுக்கு, நிதி அளிப்பதன் மூலம், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்

❖ பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்

❖ நகர்ப்புற ஏழை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் வகையில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மானிய நிதி என்னும் துணைத் திட்டத்தைச் செயல்படுத்துதல்

❖ நகர்ப்புற வளர்ச்சி அமைப்புகள், மூலதனச் சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிருவாகத்தை மேம்படுத்துதல்.

அடிப்படை வசதிகளான சாலைகள், குடிநீர் விநியோகம், மழை நீர் வடிகால், திடக் கழிவு மேலாண்மை, சுகாதாரத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிப்பதோடு மட்டுமல்லாமல், வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றுக்கும் இந்த நிதியம் நிதி உதவி அளிக்கிறது.

### தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III (TNUDP-III)

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை 1999 முதல் 2004 வரை உலக வங்கியின் கடன் வரிசை (Line of credit) மூலம் வெற்றிகரமாகத் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியம் அமல்படுத்தியது.

[2008 ஏப்ரல் 15

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-II சாதனைகளைத் தொடர்ந்து தமிழ்நாடு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III உருவாக்கப்பட்டது.

**இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:**

❖ உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொடர்ந்து நிதி அளிக்கும் நோக்கத்தோடு செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) என்னும் அமைப்பை நிதி இடையீட்டாளராக மேம்படுத்துதல்

❖ நகர்ப்புற சீர்திருத்தங்களைப் பலப்படுத்துதல் மற்றும் இரண்டாவது திட்டத்தின் சாதனைகளைத் தொகுத்து அத்திட்டத்தின் நிறுவன மற்றும் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்துதல்

❖ சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் சாலைகளை அகலப்படுத்துதல், சாலை மேம்பாலம், சாலை கீழ் பாலம் ஆகிய போக்குவரத்துத் துணைத் திட்டங்களை எடுத்துக் கொள்ள ஒரு மானிய நிதியை ஏற்படுத்துதல்.

இத்திட்டம், 19-10-2005 முதல் ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 1300 கோடி (300 மில்லியன் அமெரிக்கன் டாலர்) உலக வங்கி நிதி உதவியுடன் ரூ. 1884 கோடியில் (434 மில்லியன் அமெரிக்கன் டாலர்) தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், நிறுவன மேம்பாட்டுக் கூறு மற்றும் நகர்ப்புற முதலீட்டுக் கூறு என்று இரண்டு பிரிவுகளைக் கொண்டது. நிறுவன மேம்பாட்டுக் கூறு என்பது தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்றுவித்தல்மூலம் இத்திட்டத்தை மேம்படுத்துவது. நகர்ப்புற முதலீட்டுக் கூறு என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதலீட்டு மானியம் மற்றும் கடன் வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. உள்ளாட்சி அமைப்புகளின் தேவைக்கேற்ப அவற்றின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் மற்றும் சுத்திகரித்தல், திடக் கழிவு மேலாண்மை, மழை நீர் வடிகால், சாலைகள் மற்றும் பொது வசதிகளை மேம்படுத்துதல் இதன் நோக்கம் ஆகும்.



2008 ஏப்ரல் 15]

இதில் நகர்ப்புற முதலீட்டுக் கூறில் உள்ள அனைத்து நிதிக்கும் திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது. 31-1-2008 வரையில் ரூ. 915 கோடி மதிப்பீட்டிலான (ரூ. 557 கோடி கடனாகவும், ரூ. 358 கோடி மானியமாகவும்) மொத்தம் 104 திட்டங்களுக்கு (35 திட்டங்கள் முடிவடைந்து விட்டது. 69 திட்டங்கள் நடைபெற்று வருகிறது) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நான்கு திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

**KfW கடன் வரிசை**

தமிழ்நாட்டின் நகர்ப்புறக் கட்டமைப்புத் திட்டத்திற்காக, ஜெர்மானிய நாட்டு வளர்ச்சி வங்கி சுமார் 77 மில்லியன் யூரோ அளவிற்குக் கடன் அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:

65 மில்லியன் யூரோ வளர்ச்சிக் கடன்மூலம் கட்டமைப்புத் திட்டங்களுக்கு மறு கடன் வழங்குதல். இதன் வட்டி விகிதம் ஆறு மாத LIBOR விகிதத்திலிருந்து 0.40 கழித்தது போக மீதமுள்ளது ஆகும். இதன் திரும்பச் செலுத்தும் காலம், மூன்று ஆண்டுகள் சலுகைக் காலம் உட்பட மொத்தம் 12 ஆண்டுகள்.

10 மில்லியன் யூரோ நிலையான கடன் 0.75 % வட்டி விகிதத்தில் கடன் அதிகரிப்பு நிதியாக வழங்கப்படும். இதன் திரும்பச் செலுத்தும் காலம், 10 ஆண்டுகள் சலுகைக் காலம் உட்பட மொத்தம் 40 ஆண்டுகள் ஆகும்.

2 மில்லியன் யூரோ-மானிய நிதி-தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதற்கு வழங்கப்படுகிறது.

மேற்கூறிய வகையில், இந்த நிதி உதவியானது ஒப்பந்தம் கையொப்பமான தேதியிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் KfW நிறுவனத்தாரால் வழங்கப்படும்.

**ஜப்பான் நாட்டு பன்னாட்டு நிதியம் (JBIC) கடன் வரிசை**

ஜப்பான் நாட்டு பன்னாட்டு நிதியம் (JBIC)) வழங்க உள்ள கடன் வரிசையைக் கையாள தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நிதி மற்றும் அதன் தொழில்நுட்பத் திறனை ஆய்வு செய்து திருப்தி தெரிவித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, திட்டங்களுக்கு நிதியளிக்க

[2008 ஏப்ரல் 15

ஒப்புக்கொண்டுள்ளது. சிதம்பரம், பட்டுக்கோட்டை, ஆம்பூர், மதுராந்தகம், பேரணாம்பட்டு மற்றும் இராமேஸ்வரம் ஆகிய நகரங்களில் ரூ. 345 கோடி மதிப்பீட்டில் ஆறு பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கும் மற்றும் திருச்சி மாநகராட்சி குடிநீர் வழங்கல் திட்டத்திற்கும் நிதி உதவியளிக்க ஜப்பான் நாட்டு பன்னாட்டு நிதியம் (JBIC) ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டங்களின் செயலாக்கம் சுமார் 5 ஆண்டுகள் ஆகும். (2008-2013)

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் ஒப்புதல்கள்-துறைவாரியாக

2007-2008 ஆம் ஆண்டு இறுதிவரை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் ரூ. 1374.29 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவை பின்வருமாறு:

| துறை | ரூ. கோடிகளில் | சதவீதம் |
|---|---|---|
| சுகாதாரம் | 591.95 | 43.07 |
| சாலைகள், பாலங்கள் | 486.90 | 35.43 |
| குடிநீர் வழங்கல் | 216.80 | 15.78 |
| திடக் கழிவு மேலாண்மை | 34.52 | 2.51 |
| பேருந்து நிலையம், வணிக வளாகங்கள் | 39.31 | 2.86 |
| மற்றவை | 4.81 | 0.35 |
| **மொத்தம்** | **1374.29** | **100** |

### 2008-2009-ல் உத்தேசமாக ஒப்புதல் அளிக்கப்படவிருக்கும் திட்டங்கள்

திடக் கழிவு மேலாண்மை, சுகாதாரம், குடிநீர்த் திட்டங்கள் மற்றும் சாலைகள் [illegible] திட்டங்களுக்கு ரூ. 300 கோடியளவிற்கு 2008-2009 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

### குடிநீர் மற்றும் சுகாதாரக் கூட்டு நிதி

குடிநீர் மற்றும் சுகாதாரக் கூட்டு நிதி, அரசுக்குச் சொந்தமான ஒரு அறக்கட்டளையாகும். மூலதனச் சந்தையில் கடன் பத்திரங்கள் வெளியிடுவதன்மூலம் நிதி திரட்டி, கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடன் வழங்குவதற்காக இந்த நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

**இதன் நோக்கங்களாவன:**

- கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்
- கூட்டு நிதி திட்டத்தின்கீழ் மூலதனச் சந்தையில் நிதி திரட்டுதல்
- குடிநீர் மற்றும் கழிவுநீர்த் துறைகளில் தனியார் அதிக அளவில் ஈடுபடும் வகையில் பொது மற்றும் தனியார் துறை பங்களிப்பினை ஊக்குவித்தல்
- மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக உள்ளாட்சி அமைப்புகள் நிதி திரட்ட உதவுதல்
- குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளில் மத்திய / மாநில அரசின் நேரடி முகவராகச் செயல்படுதல்

இந்த நிதியானது, 2002 ஆம் ஆண்டு 13 உள்ளாட்சி அமைப்புகளுக்காக, கடன் பத்திரங்கள் வெளியீட்டின் வாயிலாக, ரூ. 30.41 கோடி நிதி திரட்டியது. 5 ஆண்டுகளாக இக்கடன் பத்திரங்களுக்கு வட்டி அளிப்பதையும், மீட்பதையும் தவறாது செய்து வருகிறது. தற்போது இதில் ரூ. 20.27 கோடி மட்டுமே அசல் தொகையாக உள்ளது.

### கூட்டு நிதி வளர்ச்சி நிதியத்தின் செயலாக்கம்

மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ், குடிநீர் மற்றும் சுகாதாரக் கூட்டு நிதியை மாநில அரசின் கூட்டு நிதி வளர்ச்சி நிதிய அமைப்பாக அரசு நியமித்துள்ளது. இத்திட்டத்தின்படி தொடர்ந்து வரியில்லா கடன் பத்திரங்கள் வெளியிடுவதன்மூலம் நிதி திரட்டி கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தொடர்ந்து நிதியளிக்க முடியும்.

இதன்படி, ரூ. 45 கோடி அளவிற்குக் கடன் பத்திர வெளியீட்டின்மூலம் நிதி திரட்டி விருதுநகர், அம்பத்தூர், பல்லவபுரம், காஞ்சிபுரம், நாமக்கல் மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஆறு நகரங்களின் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கும், சேலம் மாநகராட்சி குடிநீர்த் திட்டத்திற்கும் பகுதி நிதி அளிக்க மத்திய அரசும், மாநில அரசும் ஒப்புதல் அளித்துள்ளன.

குடிநீர் மற்றும் சுகாதாரக் கூட்டு நிதியின் இந்த வெளியீட்டிற்கு, மத்திய அரசின் நேரடி வரி வாரியம் வரியில்லாச் சலுகையை அளித்துள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புறக் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL)**

இந்திய நிறுவனங்கள் சட்டம், 1956-ன்கீழ், இது ஒரு பொது வரையறை நிறுவனமாக 1996-ல் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம், ரூ. 2 கோடி முதலீட்டில் தமிழக அரசு, ICICI, HDFC மற்றும் IL & FS ஆகிய தனியார் நிதி நிறுவனங்கள் பங்களிப்போடு துவக்கப்பட்டது.

அடையாறு பூங்கா, குடிநீர் மற்றும் சுகாதாரக் கூட்டு நிதி, மானிய நிதிகள் போன்ற அரசு அறக்கட்டளைகளை அரசின் ஆணைக்கேற்ப இது நிருவகிக்கிறது. மேலும், இது நிதியளிப்புப் பணிகளான முகவர் செயல்பாடு, மூலதனத் திரட்டு, திட்ட மேம்பாடு, மதிப்பீடு, செயல்பாடு மற்றும் வடிவமைப்பு ஆகிய பல பணிகளை ஆற்றுகிறது.

திட்ட வடிவமைப்பு மற்றும் நிதிப் பணிகளில் பல்வேறு புதுமைகளைப் புகுத்தி கட்டமைப்பு வளர்ச்சித் துறையில், கீழ்வரும் பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகிறது.

- ❖ சுங்க வரி பாலம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை BOT முறையில் கட்டுதல்;
- ❖ பொது மக்கள் பங்களிப்போடு பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்துதல்
- ❖ அரசின் காப்புறுதி இல்லாமல் பங்குகளை வெளியிடுதல்
- ❖ USAID-ன் பகுதி உறுதி மூலம் கூட்டு நிதி பங்குகளை வெளியிடுதல்
- ❖ நகரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான நகர்ப்புற மேம்பாடு மற்றும் வணிக நோக்கத் திட்டங்களைத் தயாரித்தல்



**பின்வரும் இனங்கள் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன:**

- ❖ மின்சாரக் கட்டணத்தைச் சேமிக்கும் நோக்கில், தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்கலில் BOT முறையில் திட்டங்களை செயல்படுத்துதல்
- ❖ கார்பன் நிதியைப் பெறும் நோக்கில் ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்துதல்
- ❖ கூட்டு நிதி கடன் பத்திர வெளியீடுமூலம் நிதி திரட்டுதல்

திட்டத்தின் கருத்துருவாக்கம் முதல் செயலாக்கம் வரையிலான பணிகளுக்கு ஒட்டு மொத்த உதவிகளையும் அளித்து மாநிலத்தின் கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் பாடுபடுகிறது.

## தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டுபிட்கோ)

தமிழகத்தில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் பல்வேறு அரசு அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு, தமிழக அரசால் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொடங்கப்பட்டது. மேலும், இந்நிறுவனம் மத்திய அரசு திட்டங்களான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு முகமை நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது.

**1. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டம் (JNNURM)**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்கள் மற்றும் அவற்றைச் சார்ந்த நகர்ப்புறப் பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. இது ஒரு சீர்திருத்தம் உள்ளடக்கிய திட்டமாகும்.

இத்திட்டத்தின்கீழ், சென்னை மற்றும் அதன் அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 45,000 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளுக்கு ரூ. 3375 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளுக்கு ரூ. 2,800 கோடி மதிப்பீட்டிலும் நகர வளர்ச்சித் திட்டங்கள் மத்திய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி, சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதிகளை உள்ளடக்கிய ஆவடி, அம்பத்தூர், மதுரவாயல், உள்ளகரம்-புழுதிவாக்கம் நகராட்சிகளுக்கும், போரூர் பேரூராட்சிக்கும் நெற்குன்றம் ஊராட்சிக்கும் என 12 திட்டங்களுக்கு ரூ. 1,367.34 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்பளித்துள்ளது.

2008-2009 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி, கழிவு நீர் அகற்றல் திட்டம், திடக் கழிவு மேலாண்மை மற்றும் வடிகால் வசதி ஆகிய திட்டங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளிலும், இம்மூன்று நகரங்களை ஒட்டியுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் பகுதிகளிலும் ரூ. 2,100 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**2. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)**

இந்தத் திட்டம் 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தில் உள்ளடங்காத அனைத்து நகரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ. 313.01 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ. 51.63 கோடியும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு ரூ. 256.74 கோடியும், சாலை மேம்பாட்டிற்காக ரூ. 4.64 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் இதுவரை 46 நகராட்சிகள் மற்றும் 69 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

2008-2009 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ. 200 கோடி மதிப்பிலான திட்டப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**3. பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டம் (MIDF)**

மாநகர திட்டத்தின் வழிமுறைகளின்படி, மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குகளில் 75 விழுக்காடு நிதியைச் சுழ்ற்சி நிதியாக உருவாக்க வேண்டும். அதன்படி, இந்நிறுவனம், சுழற்சி நிதியை உருவாக்கியுள்ளது. மத்திய அரசு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை இந்த நிதியைக் கொண்டு மாநகரத் திட்டத்தில் பின்பற்றப்பட்ட அதே வழிமுறைகளின்படி சென்னைப் பெருநகரப் பகுதியில் கட்டமைப்பை உருவாக்க அனுமதித்துள்ளது.

2007-2008 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டக் குழுமத்தில் ஒப்பளிப்பு அளித்துள்ள திட்டங்களின் பகுதிப் பங்களிப்பாக, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கும், சென்னை மாநகராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ரூ. 143 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் நிதியாண்டில் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியிலிருந்து குடிநீர் வசதி மேம்பாடு, பாதாளச் சாக்கடைத் திட்டம், திடக் கழிவு மேலாண்மை போன்ற திட்டங்களுக்குச் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரப் பரப்பின் கீழுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ. 280 கோடி ஒப்பளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4. டுபிட்கோ அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (TIFS)**

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், மேற்கூறிய மத்திய அரசு திட்டங்களுக்கு முகமையாகச் செயல்படுவதுடன், தனது சொந்த நிதித் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது பல்வேறு அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், குழுமங்கள் ஆணைக் குழுக்கள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களுக்கு உதவியாக உள்ளது. இத்திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகத் திட்டம், வடிகால் திட்டம், சாலை மேம்பாட்டுத் திட்டம், வணிக வளாகங்கள் போன்ற அனைத்து அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 15

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உள்ளாட்சி நிறுவனங்களின் பங்குத் தொகைக்காக குறைந்த வட்டிக்குக் கடனாக வழங்குகிறது.

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், 2007-2008 ஆம் ஆண்டு ரூ. 21.53 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. 2008-2009 ஆம் நிதியாண்டில் ரூ. 100 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு அரசு, இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சிகளின் ஒரு பகுதியாக, திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள பின்னலாடை தொழில் நிறுவனங்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, ஒரு குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென, அரசு, 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், அப்போதைய திருப்பூர் நகராட்சியுடனும், சிறப்பு நோக்கு நிறுவனமான திருப்பூர் புதிய பகுதி மேம்பாட்டு நிறுவனத்துடனும் முப்பது ஆண்டுகளுக்கான சலுகை ஒப்பந்தத்தை மேற்கொண்டது. இத்திட்டப் பணிகள் யாவும் திட்ட மதிப்பீட்டிற்குள்ளாக திட்டமிட்ட காலத்திற்குள்ளேயே, மே, 2005-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டம், சாயப் பட்டறை மற்றும் சலவைத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உயர்ந்த தரத்திலான தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்துள்ளது. இது, இப்பகுதியின் பின்னலாடைத் தொழிற்சாலைகளின் தயாரிப்புகள், பன்னாட்டுத் தரத்தினை எட்டுவதற்கு உதவியுள்ளது. இது மட்டுமல்லாது, 15 ஊராட்சிகள் மற்றும் 5 ஒன்றியங்களில் அமைந்துள்ள சுமார் 600 ஊரகக் குடியிருப்புகளும், திருப்பூர் மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் இத்திட்டத்தால் பயன்பெறுகின்றன.



2008 ஏப்ரல் 15]

திருப்பூர் மாநகராட்சியின் பெரும்பான்மையான பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதிகளை அமைப்பதும் இத்திட்டத்தில் அடங்கும். இப்பணிகள் நிறைவு பெற்று விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட உள்ளன.

கடந்த இரண்டரை வருடங்களாக் குடிநீர்த் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம், பெருமளவிலான தனியார் நிதிப் பங்களிப்பாகும். இத்திட்டத்தில் அரசின் பங்கானது, மொத்த திட்ட மதிப்பீடான ரூ. 1023 கோடியில், ரூ. 55 கோடி மட்டுமேயாகும்.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### குடிநீர் வழங்கல்

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதி மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதும் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதும் அரசின் முக்கியக் குறிக்கோளாகும். நிலத்தடி நீர் செறிவூட்டுதல்மூலம் குடிநீர் ஆதாரங்களின் நிலைத் தன்மையை மேம்படுத்துவதும் இன்றியமையாததாகும். ஒருங்கிணைந்த நீராதார மேலாண்மைமூலம் நீராதாரங்களின் நிலைத் தன்மையைப் பாதுகாக்க, ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சட்டப்பூர்வமான ஒரு நிறுவனமாக 14-4-1971 அன்று அமைக்கப்பட்டு, சென்னைப் பெருநகர் நீங்கலாக மாநிலம் முழுவதும் உள்ள ஊரக, நகர்ப்புறப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றி வருகிறது. அரசினால் அறிவிக்கப்படும் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை 37 ஆண்டுகளாக செயல்படுத்தி வருவதால், வாரியத்தின் செயல்திறன் அனைத்து நிலைகளிலும் இன்று மேலோங்கியுள்ளது. வாரியத்தின் குறிக்கோளை நிறைவேற்றத் தேவையான மனிதவளம் மற்றும் தொழில்நுட்ப வளங்களை வாரியம் தன்னகத்தே கொண்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

**வாரியத்தின் திறன்**

- 1681 தகுதி வாய்ந்த பொறியாளர்கள், 7,030 தொழில்நுட்ப மற்றும் நிருவாக அலுவலர்களை உள்ளடக்கிய 8,711 பணியாளர்கள்
- செயற்கைக் கோள் உதவியுடன் தொலை உணர்வு தொழில்நுட்பம் மற்றும் நிலவியல் தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய நிலத்தடி நீர் வள மேலாண்மை.
- நீர் தரக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு 29 குடிநீர் தரப் பரிசோதனைக் கூடங்கள்
- கணினி மென்பொருளைப் பயன்படுத்தி திட்ட வடிவமைத்தல் மற்றும் மதிப்பீடு உருவாக்கும் திறன்
- கணினியில் குடியிருப்புகள் வாரியான குடிநீர்த் திட்டப் பணிகளின் விவரங்கள் மற்றும் கட்டமைப்புகளின் விவரத் தொகுப்பு
- மனித வளத்தை மேலும் மேம்படுத்த சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் பயிற்சி மையங்கள்

**ஊரகப் பகுதிகளில் குடிநீர் வசதி நிலை**

ஊரகப் பகுதிகளில் மாநில அரசின் குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின்கீழ் முழு மானியத்துடனும், மத்திய அரசின் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் முழு மானியத்துடனும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஊரகக் குடியிருப்புகளில் குடிநீர் வழங்கும் நிலையை அறிய அவ்வப்போது ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் ஊரகக் குடியிருப்புகளின் தற்போதைய குடிநீர் வசதி நிலை பின்வருமாறு :

| | |
|---|---|
| மொத்தம் உள்ள ஊரகக் குடியிருப்புகள் | 87,010 |
| முழுஅளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டரும் அதற்கு மேலும்) | 76,755 |
| பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 முதல் 39 லிட்டர் வரை) | 10,255 |



2008 ஏப்ரல் 15]

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் 17,367 ஊரகக் குடியிருப்புகளுக்குத் தனி மின்விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்டது. இவையன்றி 3,476 குடியிருப்புகளில் உள்ள தனி மின்விசைத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டு, இக்குடியிருப்புகள் முழுமையான அளவு குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாக மாற்றப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில், 2,070 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளுக்குத் தனியாக மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு, குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டிற்குள் எஞ்சியுள்ள 10,255 பகுதியளவு குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளை முழு அளவு குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாக மாற்ற அரசு உறுதி பூண்டுள்ளது. இதன்மூலம் மத்திய அரசின் 'பாரத் நிர்மாண்' குறிக்கோளை 2008-2009 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எட்டும்.

**ஊரகக் குடிநீர்த் திட்டம்**

**2007-2008 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

2007-2008 ஆம் ஆண்டில், குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் ரூ. 411 கோடி நிதி ஒதுக்கீட்டையும் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.190.90 கோடி நிதி ஒதுக்கீட்டையும் பயன்படுத்தி 9,625 குடியிருப்புகளுக்குத் தனி மின்விசைத் திட்டங்கள்மூலமும், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலமும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டன:

- 200 பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவு மாணவர்களுக்கான விடுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.
- மேல்நிலைத் தொட்டி வசதி இல்லாத 2,070 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

[2008 ஏப்ரல் 15

- ஊரகப் பகுதிகளில் உள்ள 1,419 மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் குடிநீர் வசதியும், கழிப்பிடங்களுக்குத் தண்ணீர் வசதியும் அளிக்கப்பட்டன.
- 53 கால்நடைச் சந்தைகளுக்கும், 385 வாரச் சந்தைகளுக்கும் குடிநீர் வசதிகள் அளிக்கப்பட்டன.
- 1,426 தனி மின்விசைத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டன.

## 2008-2009 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

2008-2009 ஆம் ஆண்டில், எஞ்சியுள்ள 10,255 பகுதியளவு குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளுக்குத் தனி மின்விசைத் திட்டங்களும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் ரூ. 700 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

- புனரமைக்க முடியாத நிலையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குப் பதிலாக ரூ. 20 கோடி மதிப்பீட்டில் 700 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படும்.
- 160 கால்நடை மருத்துவமனைகளில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.
- மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாத 4,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்குப் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூ. 120 கோடி செலவில் அமைக்கப்படும்.
- 2,000 அரசுப் பள்ளிகளில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள குடிநீர்த் திட்டங்கள் ரூ. 20 கோடி மதிப்பீட்டில் புனரமைத்துப் பயனுக்குக் கொண்டு வரப்படும். குடிநீர் வசதி இல்லாத மீதமுள்ள 850 அரசுப் பள்ளிகளுக்கு ரூ. 9 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வசதி அளிக்கப்படும்.
- ஊரகப் பகுதிகளில் உள்ள 10,000 அங்கன்வாடிகளுக்கு ரூ. 20 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.



2008 ஏப்ரல் 15]

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

## 2007–2008 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் செயலாக்கம் மற்றும் பராமரிப்பை மேம்படுத்தும் வகையில் அரசு சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதன் முதற்கட்டமாக பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொலையுணர்வு கருவிகள்மூலமாகக் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் திட்டத்தினை (Scada / Telemetry System) அமைத்துள்ளது. மேலும் வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும் இக்கருவியை நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 12 மணி நேரத்திற்கும் அதிகமாக மின்மோட்டார்கள் இயங்கும் திட்டங்களில் தங்கு தடையின்றி மின்சாரம் பெற ஏதுவாக தனி மின்பாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 54 திட்டங்களில் தனி மின்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் மேலும் 60 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

2007-2008 ஆம் ஆண்டில் 50 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 14 பேரூராட்சிகள் மற்றும் 1,385 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ. 255.46 கோடி மதிப்பீட்டில் சுமார் 19.87 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டன. இவற்றில் பின்வரும் முக்கிய திட்டங்கள் அடங்கும்:

- நாமக்கல் மாவட்டத்தில் நாமகிரிப்பேட்டை, ஆர். புதுப்பட்டி, பட்டினம், சீராப்பள்ளி பேரூராட்சிகள் மற்றும் மல்லசமுத்திரம், ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, எலச்சிபாளையம், நாமக்கல், புதுச்சத்திரம், சேந்தமங்கலம், பரமத்தி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,081 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 95.60 கோடி மதிப்பீட்டில் 4.19 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் ஆயக்குடி, அச்சம்புதூர், பன்பொழி, வடகரை கீழ்பிடாகை பேரூராட்சிகள் மற்றும் கடையம், கீழப்பாவூர், செங்கோட்டை, தென்காசி ஒன்றியங்களைச் சார்ந்த 151 குடியிருப்புகளுக்கு ரூ. 29.92 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.86 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 40 குடியிருப்புகள் மற்றும் நாங்குநேரி ஒன்றியத்தைச் சார்ந்த 143 குடியிருப்புகளுக்கு ரூ. 16.60 கோடி மதிப்பீட்டில் சுமார் 78,272 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ தேனி மாவட்டத்தில் சி.புதுப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அனுமந்தம்பட்டி, உத்தமபாளையம் பேரூராட்சிகள் மற்றும் கம்பம் ஒன்றியத்தைச் சார்ந்த நாராயணதேவம்பட்டி மற்றும் 4 ஊராட்சிகளுக்கு ரூ.8.77 கோடி மதிப்பீட்டில் 78,439 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம்பட்டு, செங்கம், திருவண்ணாமலை, துரிஞ்சாபுரம் மற்றும் கலசப்பாக்கம் ஒன்றியங்களைச் சார்ந்த 90 குடியிருப்புகளுக்கு ரூ. 7.50 கோடி மதிப்பீட்டில் 60,863 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி ஒன்றியத்தில் மாப்பிள்ளையூரணி, சங்கரப்பேரி, மேலவிட்டான் மற்றும் தூத்துக்குடி ஊராட்சிகளைச் சார்ந்த 43 குடியிருப்புகளுக்கு ரூ. 8.64 கோடி மதிப்பீட்டில் சுமார் 67,231 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் ஊத்தங்கரை ஒன்றியங்களைச் சார்ந்த பேராண்டபள்ளி, கல்லாவி மற்றும் 166 குடியிருப்புகளுக்கு ரூ. 6.60 கோடி மதிப்பீட்டில் சுமார் 56,700 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூர் ஒன்றியத்தில் 7 ஊராட்சிகளைச் சார்ந்த 43 குடியிருப்புகளுக்கு ரூ. 4.99 கோடி மதிப்பீட்டில் சுமார் 45,822 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.



**2007–2008 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:**

❖ விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிப்புத்தூர் நகராட்சி, விருதுநகர் மற்றும் இராஜபாளையம் ஒன்றியங்களைச் சார்ந்த 41 குடியிருப்புகளுக்கு ரூ. 15.22 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த 165 குடியிருப்புகளுக்கு ரூ. 14 கோடி மதிப்பீட்டில் சுமார் 83,875 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர், வேப்பந்தட்டை மற்றும் ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 306 குடியிருப்புகள் மற்றும் பூலாம்பாடி, அரும்பாவூர் பேரூராட்சிகளுக்கு ரூ. 61.11 கோடி மதிப்பீட்டில் சுமார் 2.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ மதுரை மாவட்டத்தில் திருப்பரங்குன்றம் நகராட்சி மற்றும் ஆர்.வி.பட்டி பேரூராட்சிக்கு ரூ. 9.70 கோடி மதிப்பீட்டில் சுமார் 47,184 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி பேரூராட்சி மற்றும் மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சார்ந்த 36 குடியிருப்புகளுக்கு ரூ. 2.70 கோடி மதிப்பீட்டில் சுமார் 12,472 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**2008-2009 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

2008-2009 ஆம் ஆண்டில் 50 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் 3,143 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ. 1,075.95 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட உள்ளன. இத்திட்டங்களில் சில திட்டங்கள் பின்வருமாறு:

❖ அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், அரியலூர், செந்துறை, திருமானூர், வேப்பூர், ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 525 குடியிருப்புகளுக்கு ரூ. 44.12 கோடி மதிப்பீட்டில் 4.14 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

[2008 ஏப்ரல் 15

- திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்தில் கீழ்கொடுங்கலூர் மற்றும் 76 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 4.60 கோடி மதிப்பீட்டில் 29,296 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியத்திலுள்ள 146 குடியிருப்புகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 5 குடியிருப்புகளுக்கு ரூ. 13.12 கோடி மதிப்பீட்டில் 87,109 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ஈரோடு மாவட்டம், பெருந்துறை, சென்னிமலை, கேசிபாளையம், நசியனூர், சித்தோடு ஆகிய பேரூராட்சிகளுக்கு ரூ.23.04 கோடி மதிப்பீட்டில் 87,857 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு ரூ. 49.93 கோடி மதிப்பீட்டில் 1.45 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கு ரூ. 30.38 கோடி மதிப்பீட்டில் 73,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருநெல்வேலி மாவட்டம், ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் பேரூராட்சிகள், வாசுதேவநல்லூர் மற்றும் பாப்பாக்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 78 குடியிருப்புகளுக்கு ரூ. 43.32 கோடி மதிப்பீட்டில் 1.43 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்:**

1. அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் ஒன்றியத்தைச் சேர்ந்த 281 குடியிருப்புகளுக்கு ரூ. 20 கோடி மதிப்பீட்டில் 81,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



2008 ஏப்ரல் 15]

2. ஈரோடு மாவட்டத்தில் வெள்ளக்கோயில் நகராட்சி மற்றும் காங்கேயம் பேரூராட்சிக்கு ரூ. 33.14 கோடி மதிப்பீட்டில் 70,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.
3. திண்டுக்கல் மாவட்டத்தில் தொப்பம்பட்டி மற்றும் பழனி ஒன்றியங்களைச் சேர்ந்த 175 குடியிருப்புகளுக்கு ரூ. 17.02 கோடி மதிப்பீட்டில் 1.32 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
4. ஈரோடு மாவட்டத்தில் கொல்லன்கோயில் பேரூராட்சிக்கு ரூ. 2.27 கோடி மதிப்பீட்டில், 9,500 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.
5. மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள், எ. வெள்ளாளப்பட்டி, பரவை, விளாங்குடி, திருநகர் பேரூராட்சிகள் மற்றும் கொட்டாம்பட்டி, மேலூர், மதுரை மேற்கு, மதுரை கிழக்கு ஒன்றியங்களைச் சேர்ந்த 142 குடியிருப்புகளுக்கு ரூ. 203 கோடி மதிப்பீட்டில் 3.05 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
6. திண்டுக்கல் மாவட்டத்தில் சின்னாளப்பட்டி பேரூராட்சிக்கு ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் 25,000 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.
7. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர், கருங்கல், கீழ்குளம், கப்பியறை, திங்கள்நகர் மற்றும் வெள்ளிமலை பேரூராட்சிகளுக்கு ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
8. நாமக்கல் மாவட்டத்தில் ஆலம்பாளையம் பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் திருச்செங்கோடு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைச் சார்ந்த வழியோரக் குடியிருப்புகளுக்கான ரூ. 23.83 கோடி மதிப்பீட்டில் 60,689 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

[2008 ஏப்ரல் 15

9. சேலம் மாவட்டத்தில் நரசிங்கபுரம் நகராட்சி, 18 பேரூராட்சிகள் மற்றும் 7 ஒன்றியங்களில் உள்ள 921 குடியிருப்புகளுக்கு ரூ. 176 கோடி மதிப்பீட்டில் 8.03 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

10. நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி மற்றும் கொள்ளிடம் ஒன்றியங்களில் உள்ள குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 184 குடியிருப்புகள் மற்றும் 87 வழியோரக் குடியிருப்புகளுக்கு ரூ. 22.98 கோடி மதிப்பீட்டில் 1.06 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**கர்ப்புறக் குடிநீர்த் திட்டங்கள்**

2007-2008 ஆம் ஆண்டில், 2 நகராட்சிகள் மற்றும் 53 பேரூராட்சிகளை உள்ளடக்கிய 55 நகரங்களில் ரூ. 75.58 கோடி திட்ட திப்பீட்டில் 8.88 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் ட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**ற்போதைய குடிநீர் வசதி நிலை**

மாநிலத்தில் சென்னை நீங்கலாக மொத்தம் 718 நகரங்கள் உள்ளன. ந்த நகரங்களின் தற்போதைய குடிநீர் வசதி நிலை பின்வருமாறு:

| உள்ளாட்சி அமைப்பு | முழு அளவு | பகுதி அளவு | குறைந்த அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 1 | 6 | 0 | 7 |
| நகராட்சிகள் | 37 | 99 | 14 | 150 |
| பேரூராட்சிகள் | 350 | 193 | 18 | 561 |
| மொத்தம் | 388 | 298 | 32 | 718 |



2008 ஏப்ரல் 15]

குடிநீர் வசதி வழங்குவதற்கான வரைமுறையின் அடிப்படையில் தற்போது நகர்ப்புறங்களில் வழங்கப்படும் குடிநீர் அளவு பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | வரைமுறை | முழுமையான அளவு | பகுதி அளவு | குறைந்த அளவு |
|---|---|---|---|---|
| மாநகராட்சி | 110 லிட்டர் | 110 லிட்டரும் அதற்கு மேலும் | 70-109 லிட்டர் | 70 லிட்டருக்கும் குறைவாக |
| நகராட்சிகள் | 90 லிட்டர் | 90 லிட்டரும் அதற்கு மேலும் | 50-89 லிட்டர் | 50 லிட்டருக்கும் குறைவாக |
| பேரூராட்சிகள் | 70 லிட்டர் | 70 லிட்டரும் அதற்கு மேலும் | 40-69 லிட்டர் | 40 லிட்டருக்கும் குறைவாக |

**2008-2009 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

2008-2009 ஆம் நிதியாண்டில், 25 நகராட்சிகள் மற்றும் 59 பேரூராட்சிகள் அடங்கிய 84 நகரங்களில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2008-2009 ஆம் நிதியாண்டில் 60 நகரங்களில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை நிறைவேற்றி, மக்கள் பயனுக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டம் (JNNURM) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (TNUDP) மற்றும் மாநில அரசின் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்பட உள்ளன.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் தாம்பரம், ஆனையூர், திருப்பரங்குன்றம் நகராட்சிகள் மற்றும் ஆர்.வி.பட்டி பேரூராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர, சிறிய மற்றும்

[2008 ஏப்ரல் 15

நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் (UIDSSMT) 17 நகராட்சிகள் மற்றும் 21 பேரூராட்சிகளில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நகர்ப்புறக் குடிநீர் திட்டங்களுக்கான நிதி ஆதாரம்**

பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் நிதிப் பகிர்ந்தளிப்பு குறித்து கீழ்க்காணுமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது:

மொத்த மதிப்பீட்டில் 80 சதவீதம் - அரசு மானியம்

மொத்த மதிப்பீட்டில் 20 சதவீதம் - பேரூராட்சி / மக்களின் பங்கு

2005 ஆம் ஆண்டு மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையினால் விரைவுபடுத்தப்பட்ட நகர்ப்புறக் குடிநீர்த் திட்டத்திற்குப் பதிலாக சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) துவக்கப்பட்டது. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படாத மாநகரங்கள் / நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் பெருநகரங்கள் உட்பட அவற்றின் அருகில் உள்ள நகர்ப்புறப் பகுதிகள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்**

- ❖ தஞ்சாவூர் நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ. 70 கோடி மதிப்பீட்டில் 2.16 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ❖ மயிலாடுதுறை நகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ. 42 கோடி மதிப்பீட்டில் 84,290 மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.
- ❖ திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ. 116.67 கோடி மதிப்பீட்டில் 7.46 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

**மாவட்டத் தலைநகரங்களுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்:**

15 மாவட்ட தலைநகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ரூ.405.95 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

அரியலூர், நாகர்கோவில், தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 4 மாவட்டத் தலைநகரங்களுக்கு ரூ. 220.76 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மறைமலைநகர், சின்னமனூர் மற்றும் மாமல்லபுரம் ஆகிய 3 நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் ரூ. 19.99 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பரமக்குடி, சங்கரன்கோவில், தென்காசி, கொமாரபாளையம், மேட்டூர், இராசிபுரம், சத்தியமங்கலம் மற்றும் கோபிசெட்டிபாளையம் ஆகிய 8 நகராட்சிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், ரூ. 171 கோடி மொத்த மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இறுதிசெய்யப்பட்டு வருகின்றன.

72 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 42 நகராட்சிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் ரூ. 1222.48 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். எஞ்சியுள்ள 30 நகராட்சிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்ட மதிப்பீடுகள் ரூ. 788.59 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**சிறப்புத் திட்டங்கள்**

**இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 3,163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ. 616 கோடி திட்ட மதிப்பீட்டில் மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் துவக்கப்பட்டு, திட்டப் பணிகள் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பணிகளை ஏப்ரல் 2009-க்குள் முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

[2008 ஏப்ரல் 15

## ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முழுவதும் பயன்பெறும் வகையில் மாபெரும் ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைசிஸ் நீக்கும் திட்டம் ஜப்பான் நாட்டு பன்னாட்டு நிதியத்தின் (JBIC) நிதியுதவியுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அரசு 25-2-2008-ல் ரூ. 1334 கோடி மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

## நிலத்தடி நீர் செறிவூட்டுதல்மூலம் குடிநீர் ஆதாரங்களின் நிலைத் தன்மையை மேம்படுத்துதல்

## 2007-2008 ஆம் ஆண்டில் செயலாக்கம்

1. ஊரக குடிநீர்த் திட்டத்தின் நீராதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு 400 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ரூ. 10.59 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டன.

2. மேலும், 80 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ரூ. 3.98 கோடி மதிப்பீட்டில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டன.

3. தொலை உணர்வு மற்றும் புவியியல் தகவல் தொழில்நுட்பம்மூலம் ஒன்றியங்களுக்கான வரைபடம் தயாரித்து அளிக்கப்பட்டது.

தமிழகத்தின் அனைத்து 385 ஒன்றியங்களுக்கும் தொலை உணர்வு மற்றும் நிலவியல் தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஒன்றிய அமைப்பு மற்றும் குடியிருப்புகளின் விவரம், நிலத்தடி நீர்வளம், புவி மேற்பரப்பியியல் மற்றும் புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டிய நீராதாரங்கள் மற்றும் நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் குறித்த விவரங்கள் அடங்கிய ஒன்றிய அளவிலான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த வரைபடங்கள் ஒன்றியந்தோறும் செயலாக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் புதிய நீராதாரங்கள் மற்றும் நிலத்தடி நீர் வளத்தின் நீடித்த தன்மைக்கு அமைக்கப்பட வேண்டிய நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் ஆகிய திட்டங்களுக்குப் பயன்படும்.



2008 ஏப்ரல் 15]

## 2008-2009 ஆம் ஆண்டிற்கான திட்டம்

1. நபார்டு வங்கி (RIDF-XIII) நிதி உதவியுடன் ரூ. 25.47 கோடி மதிப்பீட்டில் 487 ஊருணிகளை (இராமநாதபுரம் மாவட்டத்தில் 314 ஊருணிகள், சிவகங்கை மாவட்டத்தில் 173 ஊருணிகள்) புனரமைத்து மேம்படுத்த 01-02-2008-ல் அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

2. மேலும், மத்திய அரசின் துரிதப்படுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டில் குடிநீர் ஆதாரங்களை வலுப்படுத்தும்பொருட்டு 400 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் ரூ. 10 கோடி செலவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

## சுனாமி நிவாரணப் பணிகள்

## ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடு நிறைவேற்றப்படும் குடிநீர்த் திட்டங்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு, தொலைதூர நீராதாரங்களைக் கொண்டு நிரந்தர, நிலையான குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிட, ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி அளித்துள்ளது. இந்நிதியைக் கொண்டு சுனாமி அவசர உதவி திட்டத்தின்கீழ் 10 கடலோர மாவட்டங்களில் 36 குடிநீர்த் திட்டங்களையும், 5 நீர் செறிவூட்டு கட்டுமானத் திட்டங்களையும் நிறைவேற்ற ரூ. 82.18 கோடி மதிப்பீட்டில் 41 திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது.

41 திட்டங்களில் இதுவரை 30 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் மீதமுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயனுக்குக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

**உலக வங்கியின் நிதியுதவியோடு நிறைவேற்றப்படவுள்ள சுகாதார திட்டங்கள்**

சுனாமி அவசர மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட 6 கடலோர மாவட்டங்களில் உள்ள பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 73 சுனாமி நிரந்தரக் குடியிருப்புகளுக்கு (16 தொகுப்புகள்) சுகாதார வசதி அளித்திட ரூ. 29.37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த 16 தொகுப்புகளில் 4 தொகுப்புகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள தொகுப்புகளில் பணிகள் துவக்கப்பட்டு, மார்ச் 2009-க்குள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்புப் பணிகள்**

அரசின் கொள்கை முடிவின்படி, ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சிகள் பயன்பெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட வேண்டும். இதன்படி, தற்போது 4 மாநகராட்சிகள், 52 நகராட்சிகள், 262 பேரூராட்சிகள், 17,776 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 290 நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அடங்கிய 432 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 1.78 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இவ்விதத் திட்டங்கள் முடிக்கப்பட்டவுடன், வாரியப் பராமரிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களில் பயன்பெறும் பயனாளிகளிடமிருந்து, அரசு நிர்ணயித்துள்ள விலை விகிதப்படி வசூலிக்கப்படும் குடிநீர்க் கட்டணத்திலிருந்து, திட்டங்களின் பராமரிப்புச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்கள் அனைத்தும் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் நேரடி நிருவாகத்தின்கீழும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தொழில்நுட்பக் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.



2008 ஏப்ரல் 15]

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் சீரமைக்கும் பணிகள்**

பல ஆண்டுகளுக்கு முன் முடிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், மாசுபடுதல் மற்றும் நீர் ஆதாரம் பொய்த்து விடுதல் மின் நீரிறைப்பு இயந்திரங்களின் திறன் குறைந்து விடுதல், குழாய்களில் அடிக்கடி ஏற்படும் நீர்க் கசிவு மற்றும் குழாய் உடைப்பு மற்றும் பொதுவாக திட்ட கட்டமைப்புகளின் திறன் / வலு குறைதல் ஆகிய காரணங்களால், இத்திட்டங்கள் குறைந்த பராமரிப்புச் செலவுடன் வடிவமைக்கப்பட்டபடி, குடிநீர் வழங்கத்தக்க வகையில் முழுத் திறனுடன் இயங்க சீரமைப்புப் பணிகள் அவசியமாகிறது. 2007-2008 ஆம் ஆண்டில், 120 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ. 15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும். 2008-2009 ஆம் ஆண்டில், ரூ. 12 கோடி நிதி ஒதுக்கீட்டில் 70 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தனி மின்பாதை அமைக்கும் பணிகள்**

12 மணி நேரத்திற்கு மேல் நீரிறைப்பு நடைபெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் நீரேற்று நிலையங்களில், தடையின்றி மின் வசதி பெறுவதற்காக ரூ. 45 கோடி மதிப்பீட்டில் 114 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், தனி மின் பாதைகள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, 2006-2007 ஆம் நிதியாண்டில், 46 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களிலும், 2007-2008 ஆம் நிதியாண்டில் 68 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களிலும் தனி மின்பாதை அமைக்கும் பணிகள் தமிழ்நாடு மின் வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை தனி மின்பாதை பணிகள் 54 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் அமைக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டது. எஞ்சிய 60 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் மின் சிக்கன நடவடிக்கை**

மின் சிக்கன நடவடிக்கையாக வாரியப் பராமரிப்பிலுள்ள 50 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 50 குதிரை திறன் மற்றும் அதற்கு மிகைப்பட்ட நீர் இறைப்பான்களுக்கு 2008-2009 ஆம் நிதியாண்டில் ரூ. 11.52 கோடி மதிப்பீட்டில் 419 மாற்றத்தகுந்த மின் அலை மாற்றிகள் (Variable Frequency Drive) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

**நீரின் தரப் பரிசோதனையும், கண்காணிப்பும்**

பொதுமக்களுக்கு தூய்மையான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கும் பொருட்டு ஒரு மாநில அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடமும், 28 மாவட்ட அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மாநில அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடத்திற்கு I.S.O. 9001:2000 தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நீர்ப் பரிசோதனைக் கூடம், தமிழ்நாட்டின் **"மாதிரி நீர்ப் பரிசோதனைக் கூடமாக"**, இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் துவக்கப்பட்டுள்ள "தேசிய ஊரகக் குடிநீர் தர மேலாண்மை மற்றும் கண்காணிப்புத் திட்டம்", தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்காக, அனைத்து ஊராட்சிகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வடிவமைக்கப்பட்டு எளிதில் கையாளக்கூடிய களநீர்ப் பரிசோதனைப் பெட்டிகள் வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் மொத்தம் 1,891 ஊராட்சிகளுக்கு களநீர்ப் பரிசோதனைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் மீதமுள்ள 10,728 ஊராட்சிகளுக்கும் களப் பரிசோதனைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் மத்திய அரசினால் வழங்கப்பட்ட ரூ. 587.74 இலட்சம் மானியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

**கணினி மேலாண்மை திட்டம்**

மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஒளிவு மறைவற்ற நிலையை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மின் ஒப்பந்த முறையின் முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இம்மின் ஒப்பந்தமுறை ரூ. 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட அனைத்துப் பணிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட மின்-ஆளுகை திட்டத்தின் (TWADNEST) முதற்கட்டப் பணிகள் 2007-2008-ல் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு மாநில பரந்த வலைத் திட்டத்தின்கீழ் அனைத்து வாரிய அலுவலகங்களையும் இணைக்கும் பணி மற்றும் மென்பொருள் உருவாக்கும் பணி ஆகிய இரண்டாம் கட்ட பணிகள் நடப்பு நிதியாண்டில் நிறைவேற்றப்படும்.



2008 ஏப்ரல் 15]

**மாற்று மேலாண்மை திறன் வளர்த்தலை விரிவுபடுத்துதல்**

மாற்று மேலாண்மை திறன் வளர்த்தல் பயிற்சிமூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை, மக்களை மையப்படுத்தி செயல்படும் பொறுப்புமிகுந்த நிறுவனமாக இயங்கச் செய்து அரசின் கொள்கையான சமுதாய சுய மேலாண்மைமூலம் நிலையான குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்த பயிற்சிகள் 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து 'யுனிசெப்' உதவியுடன் நடைபெற்று வருகிறது.

இதனடிப்படையில், முதற்கட்டமாக வாரியப் பொறியாளர்கள் ஊரக மக்களோடு இணைந்து சுமார் 400 கிராமங்களில் குறைந்த பராமரிப்புச் செலவு மற்றும் உறுதி செய்யப்பட்ட சமச்சீர் குடிநீர்ப் பகிர்மானம், குறைந்த அளவு நிலத்தடி நீர் எடுத்துப் பயன்படுத்துதல் ஆகியவற்றை முழு சமுதாயக் குடிநீர் மேலாண்மையின்மூலம் செய்து பலனும் வெற்றியும் கண்டுள்ளனர்.

மேலும் 2007-ல் இருந்து புது முயற்சியாக இம்மாற்று மேலாண்மை முறைகளை நேரடியாக கிராம மக்களிடம் எடுத்துச் சென்று, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10 ஊராட்சிகளிலுள்ள மக்களுக்குப் பயிற்சி அளித்து "சமுதாய மாற்று மேலாண்மை செயல்முறை குழுக்கள்" என்ற தன்னார்வக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2008-2009-ல் இன்னும் அதிக ஊராட்சிகளுக்கு நீர் மற்றும் சுகாதாரம் பற்றிய அதிகபட்ச விழிப்புணர்வை ஏற்படுத்தி குடிநீர்க் கட்டமைப்புகள் மற்றும் நீர் ஆதாரங்களை, சுய மேலாண்மை செய்ய முன்வரும் சமுதாயத்தினை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் மாற்று மேலாண்மை முயற்சிகள், பயிற்சிகளுக்கு 'யுனிசெப்' நிறுவனம் நிதியுதவி அளிக்க இசைந்துள்ளது.

**தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு**

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டங்களில் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தக் கொள்கைகளை ஊக்குவிக்கும் முகமாக ஒவ்வொரு மாநிலத்திலும் தகவல் தொடர்பு மற்றும் திறன்

[2008 ஏப்ரல் 15

மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

❖ துறை சீர்திருத்தக் கொள்கைகளை வலியுறுத்த மாநிலத்திற்கென தகவல், கல்வி, மற்றும் செய்தி தொடர்பு குறித்த கொள்கைகளை உருவாக்குதல்.

❖ அனைத்து நிலை அலுவலர்களின் திறனை மேம்படுத்துதல்.

**தகவல், கல்வி மற்றும் செய்தி தொடர்புப் பணிகள்**

1. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், ஆரம்ப சுகாதார நிலைய வளாகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலக வளாகங்கள் மற்றும் முக்கிய இரயில் நிலையங்களில் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டன.

2. ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் அரசுப் பள்ளி வளாகச் சுவர்களில் விளம்பர வாசகங்கள் எழுதப்பட்டன.

3. அஞ்சலக அட்டைகள், பல் வண்ண சுவரொட்டிகள் மற்றும் அரசு விரைவுப் பேருந்துகள், மாநகரப் பேருந்துகள், அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டன.

4. முக்கியத் திருவிழாக்கள் மற்றும் அரசுக் கண்காட்சிகளில் துண்டுப் பிரசுரங்களின்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

5. கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களில், நகரும் மின்னணு விளம்பரப் பலகைகள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

6. வீடு வீடாகச் சென்று தனி நபர் விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

7. கிராம சபைக் கூட்டங்களில் கிராமக் குடிநீர் மற்றும் சுகாதார குழு உறுப்பினர்கள் மற்றும் ஊரக மக்களிடையே விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



2008 ஏப்ரல் 15]

8. முக்கிய நாளிதழ்கள் மற்றும் அகில இந்திய வானொலி மூலம் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

9. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்படும் புற நோயாளி சீட்டுகளில், விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. மேலும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்குச் செய்யத்தக்கவை, செய்யத்தகாதவை குறித்த கையேடுகள், மழை நீர் சேகரிப்பு மற்றும் நீர் செறிவூட்டும் கட்டமைப்புப் பராமரிப்புகள் குறித்த கையேடுகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

10. பள்ளி மாணவ, மாணவிகளின் பேரணிமூலம் விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

11. உலக தண்ணீர் தினம் அனுசரிக்கப்பட்டது.

12. அரசு சாரா நிறுவனங்கள்மூலம் சுவஜல்தாரா திட்டத்தின்கீழ் முடிக்கப்பட்ட 397 ஊராட்சிகளில் இயக்கம், பராமரிப்பு மற்றும் நிதி மேலாண்மை குறித்த விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**மனித வள மேம்பாட்டுப் பணிகள்**

2007-2008 ஆம் ஆண்டில் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மனித வள மேம்பாட்டுப் பணிகள் பின்வருமாறு:

1. சமுதாயப் பங்கேற்புடன் ஊரக குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தும் நெறிமுறைகள் குறித்து மாவட்ட அளவிலான துறை அலுவலர்களுக்கு வட்டாரக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

2. பயிற்றுவிப்பவர்களுக்கான பயிற்சி முகாம்கள் பல்வேறு துறை அலுவலர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன.

3. நில நீர் வளம் குறித்த பயிலரங்கம் நடத்தப்பட்டது.

4. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பு மற்றும் நீரின் தர மேலாண்மை குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

[2008 ஏப்ரல் 15

5. கிராமக் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு உறுப்பினர்களுக்கு ஊரக குடிநீர்த் திட்டங்களின் இயக்கம், பராமரிப்பு மற்றும் நிதி மேலாண்மை குறித்து மேலாண்மை பயிற்சிகள் நடத்தப்பட்டன.

6. தேசிய ஊரகக் குடிநீர் தர நிருவாகம் மற்றும் கண்காணிப்புத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் குறித்து மாநில, மாவட்ட, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம அலுவலர்களுக்குக் களநீர் பரிசோதனைப் பெட்டிமூலம் குடிநீரின் தரம் அறியும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

7. கிராமக் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள் மற்றும் வாரியப் பொறியாளர்களுக்கு முழு சமுதாய நீர் மேலாண்மை குறித்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

8. அரசுப் பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளுக்குக் களநீர் பரிசோதனைப் பெட்டிமூலம் நீரின் தரத்தைப் பரிசோதித்தல் மற்றும் குடிநீரின் தர முக்கியத்துவம் குறித்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

9. சுகாதாரத் துறை ஒன்றிய அலுவலர்களுக்குக் குடிநீரின் தர முக்கியத்துவம் மற்றும் களநீர் பரிசோதனைப் பெட்டிமூலம் நீரின் தரத்தைப் பரிசோதித்தல் குறித்த பயிற்சி வகுப்புகள் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டன.

மேற்கண்ட தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வுப் பணிகள், மனித வள மேம்பாட்டுப் பணிகளுக்காக இதுவரை ரூ. 1096.68 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2008-2009 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது :

**தகவல், கல்வி மற்றும் செய்தித் தொடர்புப் பணிகள்**

1. பயிற்சி வகுப்புகளில் பயன்படுத்துவதற்கான மடக்கு அட்டைகள் (Flip charts) தயாரித்தல்.



2008 ஏப்ரல் 15]

2. கிராம சபைக் கூட்டங்கள்மூலம் கிராமக் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு உறுப்பினர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

3. அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சிமூலம் வெகுஜன விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

4. தெருக் கூத்து மற்றும் கிராமியக் கலைகள்மூலம் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல்.

5. 385 ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்களில் முக்கிய இடங்களில் சிறிய விளம்பரப் பலகைகள் வைத்தல்.

6. சுய உதவிக் குழுக்கள்மூலம் வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வுத் தகவல்கள் அளிப்பது.

**மனித வள மேம்பாட்டுப் பணிகள்**

1. அரசுப் பள்ளிகளுக்குக் குடிநீர் களப் பரிசோதனைப் பெட்டிகளை இலவசமாக வழங்கி ஆசிரியர், மாணவர்களுக்குக் குடிநீரின் தரம் மற்றும் கண்காணிப்பு குறித்த பயிற்சிகளை அளித்தல்.

2. கிராமப்புறப் பெண்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு, கிராமக் குடிநீர்த் திட்டங்களின் இயக்கம், பராமரிப்பு மற்றும் நீரின் தரம் குறித்த ஆற்றல் பயிற்சிகள் அளித்தல்.

3. வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்களைப் பார்வையிடல்.

4. தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் தொடர்புடைய பிற மாநிலங்கள் / நிறுவனங்களுக்கு சென்று பயனுள்ள தகவல்கள் பெறுதல் மற்றும் பயிற்சிகளில் பங்கேற்றல்.

இவை தவிர, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் பயன்பெற உள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பணிகள் ரூ. 327 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**பணியாளர் நலன்**

- 86 உதவிப் பொறியாளர்கள் 23-7-2007 அன்று பணி நியமனம் பெற்றார்கள்.

[2008 ஏப்ரல் 15

- 173 தினக் கூலிப் பணியாளர்கள் வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதியைத் தளர்த்தி தொகுப்பூதியப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர்.
- 20 ஆண்டுக் காலம் பணியில் விபத்து ஏதும் ஏற்படாமல் பணி புரிந்த 54 ஓட்டுநர்களுக்கு அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.
- வாரியத்தில் பணியிலிருந்தபோது அகால மரணமடைந்த 33 பணியாளர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களுக்கு வாரியத்தில் பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது.

**பகுதி II திட்டங்கள் - 2008-2009**

2008-2009 ஆம் நிதியாண்டில், தொலை அளவை (Telemetry System) தகவல் அறிதல் மற்றும் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் (SCADA) கீழ்க்காணும் திட்டங்களில் செயல்படுத்தப்படும்:

(அ) ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் திருச்சி மாவட்டத்தில் 674 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(ஆ) ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த கடையநல்லூர்-புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், குடிநீர் ஆதாரங்களைப் பெருக்கவும், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் ஏற்பாட்டு முறையை மேம்படுத்தவும் சென்னை மாநகர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளின் வளர்ந்துவரும் தேவைகளுக்கேற்ப கூடுதல் கட்டமைப்புகளை உருவாக்கவும், 1997 ஆம் ஆண்டு வரையில் மேம்படுத்தப்பட்ட பெருந்திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தற்பொழுதுள்ள மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்களை மட்டும் சார்ந்திராமல், நிரந்தரத் தீர்வாகக் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்றினை, இந்த அரசு நடப்பாண்டில் பணி முடித்து செயல்படுத்தும். கடல்நீரைக் குடிநீராக்கும் மேலும் ஒரு திட்டம் விரைவுபடுத்தப்படும். கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தின்கீழ், சென்னை மாநகருக்குத் தேவைப்படும் நீரைப் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.



2008 ஏப்ரல் 15]

நியாயமான கட்டணத்தில், பாதுகாப்பான மற்றும் நல்ல தரமான குடிநீரை, தேவையான அளவு வழங்குவதன்மூலமாகவும், கழிவுநீர் / அசுத்த நீர் இவற்றை முறையான வகைகளில் அகற்றுவதன்மூலமாகவும், சென்னை மாநகர மக்களின் உடல் நலம் மற்றும் தரமான வாழ்க்கையை நிலைநிறுத்துவதே வாரியத்தின் கொள்கையாகும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், அது தொடங்கப்பட்ட 1978 ஆம் ஆண்டு முதல் கடந்த 30 ஆண்டுகளில் சென்னை மாநகரின் அதிகரித்து வரும் குடிநீர்த் தேவைக்கேற்ப தனது திறனையும், திறமைகளையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்த்து வந்துள்ளது. இவ்வாரியம், தற்போது 184 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள சென்னை மாநகர் மற்றும் அம்பத்தூரின் ஒரு பகுதி, மணலி புதுநகர் போன்று அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சுமார் 54 இலட்சம் மக்களுக்குப் பணியாற்றி வருகிறது. இவ்வாரியம், நாளடைவில் தனது சேவையின் எல்லையினை, சென்னைப் பெருநகர் பகுதி முழுமைக்கும் விரிவுபடுத்துவதற்காக, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் கட்டமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டு சென்னைப் பெருநகரப் பகுதிக்கு உட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுகிறது.

**குடிநீர் வழங்கல் மேலாண்மை**

**I. குடிநீர் ஆதாரங்கள்**

சென்னை மாநகருக்கு, நீர் வழங்கும் முதன்மை ஆதாரம், நில மேற்பரப்பு நீராகும். சென்னை நகருக்கு, குடிநீர் வழங்கும் சென்னையைச் சுற்றியுள்ள பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம், போரூர் ஏரிகளும் மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரி, கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின்கீழ், ஆந்திர மாநிலத்தில் உள்ள கண்டலேறு நீர்த்தேக்கம் ஆகியவை முக்கியமான நில மேற்பரப்பு நீர் ஆதாரங்களாகும். இந்த ஏரிகளிலும், நீர்த்தேக்கங்களிலும் தற்போதைய நீரின் இருப்பு போதுமானதாக உள்ளது. 27-3-2008 ஆம் நாளன்றுள்ள நீர் இருப்பு கீழே அளிக்கப்பட்டுள்ளது:

| ஏரியின் பெயர் | மொத்த கொள்ளளவு (மி.கன அடியில்) | தற்போதைய நீர் இருப்பு (மி.கன அடி யில்) | கடந்த ஆண்டு இதே நாளில் நீர் இருப்பு (மி.கன அடியில்) |
|---|---|---|---|
| பூண்டி | 3,231 | 2,501 | 2,074 |
| சோழவரம் | 881 | 767 | 384 |
| செங்குன்றம் | 3,300 | 2,970 | 2,477 |
| செம்பரம்பாக்கம் | 3,645 | 2,496 | 1,643 |
| **மொத்தம்** | **11,057** | **8,734** | **6,578** |
| வீராணம் | 1,465 | 1,344 | 1,137 |
| கண்டலேறு | 68,000 | 42,490 | 27,830 |

இவை தவிர, ஆரணியாறு, கொசஸ்தலையாறு ஆகிய ஆற்றுப் படுகைகளில் அமைந்துள்ள 6 கிணற்றுத் தளங்களிலிருந்தும், தெற்கு கடற்கரை நீர்ப் படுகைகளிலிருந்தும் பெறப்படுகிற நிலத்தடி நீர், ஏனைய குடிநீர் ஆதாரமாகும். இந்தக் கிணற்றுத் தளங்களிலிருந்து நாளொன்றுக்கு 100 முதல் 120 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் பெற இயலும். இருப்பினும் தற்போது மேற்பரப்பு ஆதாரங்களில் போதிய நீர் இருப்பதால், வருங்கால தேவைக்காக நிலத்தடி நீரைச் சேமித்து வைப்பதற்காக, குறைந்த அளவு நிலத்தடி நீர் மட்டுமே எடுக்கப்படுகிறது. இக்கிணற்றுத் தளங்களைப் பராமரித்தல் பொருட்டு நாளொன்றுக்கு மிகக் குறைந்த அளவாக 20 முதல் 25 மில்லியன் லிட்டர் வரை நீர் பெறப்படுகிறது.

## II. குடிநீர் விநியோகம்

மேற்சொன்ன ஏரிகளிலிருந்து பெறப்படும் குடிநீர், கீழ்ப்பாக்கம், செங்குன்றம், செம்பரம்பாக்கம், வடக்குத்து ஆகிய இடங்களில் அமைந்துள்[illegible]திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, கிணற்றுத் தளங்களிலிருந்து பெறப்படும் குடிநீருடன் சேர்த்து மாநகரிலுள்ள 16 குடிநீர் விநியோக நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து குழாய்கள்மூலம் வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.





தற்போது, நாள்தோறும் 645 மில்லியன் லிட்டர் முதல் 650 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் வழங்கப்படுகிறது. அதில் சென்னை மாநகர மக்களுக்கு, நாள்தோறும் வழங்கப்படும் குடிநீரின் அளவு 585 மில்லியன் லிட்டராகும், இதுதவிர தொழிற்சாலை, பெருமளவு பயன்படுத்துவோர் மற்றும் சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட 10 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள், 2 ஊராட்சிகள் மற்றும் 1 கன்டோன்மென்ட் ஆகியவற்றுக்கு நாள்தோறும் 60 முதல் 65 மில்லியன் லிட்டர் வரை நீர் வழங்கப்படுகிறது. வாரியம் இவ்வாண்டும் தொடர்ந்து இதேபோல் போதிய அளவு குடிநீர் வழங்கும்.

2007 மார்ச்சில், 4,35,755 ஆக இருந்த குடிநீர் இணைப்புப் பெற்ற நுகர்வோரின் எண்ணிக்கை, 2008 மார்ச்சில் 4,79,850 ஆக உயர்ந்துள்ளது. சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயல்பாட்டு எல்லைக்குட்பட்ட தற்போதைய தெருக்களின் மொத்த எண்ணிக்கை 15,460 ஆகும். இத்தெருக்கள் அனைத்திலும், மொத்தம் 2,924 கிலோ மீட்டர் நீளத்திற்கு குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இத்தெருக்களில், 114 தெருக்களில் போதுமான அளவு நீர் அழுத்தம் இல்லாததால், குழாய்கள்மூலம் நீர் கிடைக்கப்பெறவில்லை. தற்போது, இத்தெருக்களுக்கு லாரிகள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேற்சொன்ன தெருக்களிலும், குழாய்கள்மூலம் குடிநீர் வழங்குவதற்குத் தேவையான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இப்பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## III. குடிநீரின் தரம் உறுதி செய்தல்

சென்னை மாநகர மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரம், இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் தரத்தின்படி நிர்ணயிக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை உறுதி செய்ய கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநகரம் முழுவதிலும் நீரின் தரத்தைக் கண்காணிப்பதற்காக, ஒரு தனி தர உறுதிப் பிரிவு, வாரியத்தில் செயல்பட்டு வருகிறது. நீர் ஆதாரங்களான ஏரிகளிலும், நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் மற்றும் குடிநீர் விநியோக நிலையங்களிலும், சென்னைக் குடிநீர் வாரியத்தின் தர உறுதிப் பிரிவினால் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, செய்யப்பட்டு, பலவகையான இயற்பியல், வேதியியல் மற்றும் நுண்கிருமி சோதனைகள் செய்யப்பட்டு, குடிநீரின் தரம் உறுதி செய்யப்படுகிறது. இவை தவிர, நாள்தோறும் 100 நுகர்வோர் இடங்களில் குடிநீரில் உள்ள குளோரின் அளவு பரிசோதனை செய்யப்பட்டு தரம் உறுதி செய்யப்படுகிறது.

[2008 ஏப்ரல் 15

மத்திய பொது சுகாதார சுற்றுச்சூழல் பொறியியல் நிறுவனத்தின் (CPHEEO) வழிகாட்டிக் குறிப்புகளின்படி சென்னை நகருக்கு நுண் கிருமி பரிசோதனைக்காக, மாதம் ஒன்றிற்கு 600 மாதிரிகள் சேகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், வழங்கப்படுகிற நீர்த் தூய்மைக் கேடு அடையவில்லை என்பதை உறுதி செய்வதற்காக, மாதந்தோறும் 750 முதல் 900 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தர உறுதிப் பிரிவினால் பரிசோதிக்கப்படுகின்றன.

இது தவிர, நீரின் தரத்தை உறுதி செய்வதற்காக, குடிநீரில் குளோரின் அளவை பரிசோதிக்கும் பொருட்டு, பகுதிப் பொறியாளர்கள், துணை பகுதிப் பொறியாளர்கள், மற்றும் பணிமனை பொறியாளர்கள் நாள்தோறும் 5 முதல் 10 நீர் மாதிரிகளை எடுக்கின்றனர். இதேபோல் சென்னை மாநகராட்சியும் குடிநீரிலுள்ள குளோரின் அளவினைப் பரிசோதனை செய்து, குடிநீரின் தரம் பற்றிய விவரத்தை வாரியத்திற்கு தெரிவிக்கிறது.

இவை மட்டுமல்லாமல், நீரின் தரத்தைக் கண்காணிப்பதற்காக, பொதுச் சுகாதாரத் துறையின்கீழ் இயங்கும் "கிங் நிறுவனம் மற்றும், அண்ணா பல்கலைக்கழகத்தின் சேவைகளும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு, பல்வேறு முகவர் அமைப்புகள்மூலம் கண்காணிப்பதன் வாயிலாக, பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

### IV. பொதுக் குழாய்கள் பராமரித்தல்

பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவினர் பயன்படுத்துவதற்காக, சென்னை நகரின் குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்காக 9,437 பொதுக் குழாய்கள் நிறுவப்பட்டுள்ளன. பொதுக் குழாய்களைச் சுற்றிலும் உள்ளப் பகுதியைத் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் நல்ல நிலையிலும் வைத்திருப்பதற்காக வாரியம் நடப்பாண்டில் 3,000 பொதுக் குழாய்கள் சுமார் ரூ. 1.50 கோடி செலவில் மேம்படுத்தி புதுப்பிக்க கருதியுள்ளது.

குடிநீர் வழங்குவதற்காக, ஒருசில பகுதிகளிலுள்ள தெருக்களில் பி.வி.சி. குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்குச் சேவை செய்யும் பல்வேறு துறைகள் மற்றும் தனியார் தொலை தொடர்பு நிறுவனங்கள் தங்களது பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது, பி.வி.சி. குழாய்கள் சேதமடைகின்றன. இதன் காரணமாக, அடிக்கடி



2008 ஏப்ரல் 15]

குடிநீர்க் கசிவு ஏற்படுவதோடு குடிநீரும் மாசுப்படுகிறது. மேலும், தூர்ந்துபோன பழைய குழாய்களால் போதுமான அழுத்தத்தில் சில தெருக்களுக்குப் போதிய அளவு குடிநீர் கிடைப்பதில்லை. இதனை சரிசெய்வதற்காக பி.வி.சி. குழாய்கள் மற்றும் தூர்ந்துபோன குழாய்கள் அனைத்தையும் நெகிழிரும்புக் குழாய்களாக மாற்ற வாரியம் முடிவு செய்துள்ளது. இந்த பி.வி.சி குழாய்களையும் தூர்ந்து போன பழைய குழாய்களையும் மாற்றுவதற்காக சுமார் 261 கி.மீ. நீளத்திற்கு நெகிழிரும்புக் குழாய் பதிக்கும் பணிக்காக சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ரூ. 29.70 கோடி மதிப்பீட்டுச் செலவில் விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி உள்ளது. ஒப்புதல் பெற்றவுடன், பணிகள் நடப்பாண்டில் எடுத்துக்கொள்ளப்படும். இதன்மூலம், நீர்க்கசிவு தடுக்கப்பட்டு பொது மக்களுக்குச் சம அளவு குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும்.

## கழிவுநீர் மேலாண்மை

### I. கழிவுநீர் அகற்றுதல்

2007 மார்ச்சுத் திங்களில் 5,15,560 ஆக இருந்த கழிவுநீர் இணைப்புள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 2008 மார்ச்சுத் திங்களில் 5,63,094 ஆக உயர்ந்துள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் வாரியம், 171 தெருக்களில் கழிவுநீர்க் குழாய்கள் அமைத்துள்ளது. இதனால் சென்னை மாநகரிலுள்ள தெருக்களில் 6 தெருக்களைத் தவிர அனைத்து தெருக்களிலும் கழிவு நீர் அகற்றும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மீதமுள்ள 6 தெருக்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இந்தாண்டு முடிவுறும். வீடுகள், அலுவலகங்கள், மற்ற கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் 2,671 கி.மீட்டர் நீளமுள்ள கழிவுநீர்க் குழாய்கள்மூலம் 185 கழிவுநீர் அகற்றும் நிலையங்களில் சேகரிக்கப்பட்டு, நாளொன்றுக்கு 486 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட 5 வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தேவையான அளவு சுத்திகரிக்கப்பட்ட பின்னரே வெளியேற்றப்படுகிறது.

## II. பாதாளச் சாக்கடையின் ஆள்நுழைவாயில்களைப் பராமரித்தல்

சென்னை நகரில் 2,671 கி.மீட்டர் நீளமுள்ள கழிவுநீர்க் குழாய்களில் தேங்கும் வண்டல், மண் ஆகியவை குறித்த காலத்திற்கொருமுறை, ஜெட் ராடிங் மற்றும் தூர் வாரும் இயந்திரங்கள் மூலமாக அகற்றப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் கழிவுநீரகற்றும் பராமரிப்புப் பணியில் தூர் வாரும் பணியை இயந்திர மயமாக்குதலுக்குத் தேவையான இயந்திரங்கள், அதில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்புச் சாதனங்கள் ஆகியவற்றை ரூ. 3 கோடி மதிப்பீட்டுச் செலவில் வாங்குவதற்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது, பணியாளர்களுக்குப் பாதுகாப்பான சூழலை அமைத்துத் தருவதை உறுதி செய்யும். சென்னை மாநகரின் தெருக்களில் / சாலைகளிலுள்ள கழிவுநீர்ப் பாதையில் 77,081 பாதாளச் சாக்கடை ஆள்நுழைவாயில்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. சாலைகள் மற்றும் தெருக்களில் தார் போடப்படுகிறபோது, ஆள்நுழைவாயில்களின் மட்டத்தைச் சாலையின் மேற்பரப்புக்கு இணையாக உயர்த்த வேண்டும். நடப்பாண்டில் இவ்வாறு சாலையின் மட்டத்தைவிடத் தாழ்வாகவுள்ள 14,500 பாதாளச் சாக்கடையின் ஆள்நுழைவாயில்கள் கண்டறியப்பட்டு, அவற்றைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### பெருந்திட்டங்கள்

### I. கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

### 1. மீஞ்சூரிலுள்ள காட்டுப்பள்ளியில் அமைக்கப்பட்டு வரும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் நீண்ட கால குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யவும், வறட்சி காலங்களில் குடிநீர்ப் பிரச்சனையைச் சமாளிக்கவும் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் தண்ணீரைத் தயாரிப்பதற்காக, சென்னை நகருக்கு வடக்கே மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காட்டுப்பள்ளி கிராமத்தில் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

திருவாளர்கள் சென்னை வாட்டர் டீசலைனேசன் லிமிடெட் நிறுவனத்துடன் (C.W.D.L.) மொத்தக் குடிநீர்க் கொள்முதல் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின்படி 2008 மே மாதத்திலிருந்து





நாளொன்றுக்கு 15 மில்லியன் லிட்டர் குடிநீரும், 2008 ஆகஸ்ட் மாதத்திலிருந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீரும் நிறுவனம் வழங்க வேண்டி உள்ளது. தனியார் கலந்தறிதற்குரியர் திருவாளர் ஐ.எல்.எப். மான்டெக் நிறுவனம், பணிகள் கண்காணிப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தின் பணிகள் அனைத்தும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டு கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

### 2. கிழக்குக் கடற்கரை சாலையில் அமைந்துள்ள நெம்மேலியில் அமைக்கப்பட்டு வரும் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம்

விரைவாக வளர்ந்து வரும் சென்னை மாநகரின் பெருகி வரும் குடிநீர்த் தேவையை சமாளிக்க, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் மேலும் ஒரு நிலையத்தைக் கிழக்கு கடற்கரைச் சாலையில் நெம்மேலியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் மற்றும் இந்நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரைச் சென்னை மாநகரக் குடிநீர் விநியோகக் கட்டமைப்புக்குக் கொண்டு செல்ல குழாய் பதித்தல், கீழ்நிலைத் தொட்டி, மேல்நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் அமைத்தல் போன்ற இணை அடிப்படைக் கட்டமைப்பிற்கு ரூ. 993.83 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகை முழுவதும் இந்திய அரசிடமிருந்து மொத்த மானியமாக பெற 05-02-2008 அன்று விரிவான திட்ட அறிக்கை இந்திய அரசின் நகர்ப் பகுதி மேம்பாட்டு அமைச்சகத்திடம் அளிக்கப்பட்டது. மத்திய அரசு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக ரூ. 300 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்கான பணிகள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

### II. செம்பரம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறனுடைய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தண்ணீரைச் சுத்திகரிப்பதற்காக, சென்னைக்கு அருகிலுள்ள செம்பரம்பாக்கத்தில் ரூ. 296 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் குடிநீர் சுத்திகரிக்கும் நிலையம் மற்றும் நீர் கொண்டு செல்லும்

[2008 ஏப்ரல் 15

குழாய்கள் அமைப்பதற்கும் 1996 ஆம் ஆண்டு தமிழக அரசு நிருவாக அனுமதி அளித்தது. தற்பொழுது, இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தில் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டு, 19-7-2007 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த நிலையம் துவக்கப்பட்ட பிறகு, ஏரிகளில் உள்ள நீரின் இருப்பு மற்றும் நகரின் குடிநீர்த் தேவைக்கு ஏற்ப, வாரியத்திற்குச் செம்பரம்பாக்கத்திலிருந்து குடிநீர் எடுக்க ஏதுவாகிறது. தற்போது, இந்நிலையத்திலிருந்து சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 135 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தைத் தொடங்கியதால், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மொத்த குடிநீர் சுத்திகரிப்புத் திறனானது நாளொன்றுக்கு 750 மில்லியன் லிட்டர் என்ற அளவிலிருந்து 1280 மில்லியன் லிட்டருக்கு உயர்ந்துள்ளது. இதன் விவரம் வருமாறு :

*(நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்)*

| | |
|---|---|
| கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | : 270 |
| புழல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | : 300 |
| வடக்குத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (வீராணம் ஏரியிலிருந்து பெறப்படும் நீர்) | : 180 |
| செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | : 530 |
| மொத்தம் | : 1,280 |

**III. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின் நிதி உதவியுடன் நடைபெற்று வரும் பணிகள்**

சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று ஏற்பாட்டு முறையில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் ரூ. 492.16 கோடி மதிப்பீட்டுச் செலவில் கூடுதல் அடிப்படைக் கட்டமைப்பு உருவாக்குவதற்கு 5 திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்றுள்ளது.



2008 ஏப்ரல் 15]

**1. சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் ஏற்பாட்டு முறையில் மேம்பாடுகள்**

சென்னை நகரின் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் போதுமான அழுத்தத்தில் சமமான அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கீழ்ப்பாக்கம், அண்ணா பூங்கா, தென் மண்டல நீரேற்று நிலையம் மற்றும் கலைஞர் கருணாநிதி நகரில் அமைந்துள்ள 4 குடிநீர்ப் பகிர்மான நிலையங்களை மேம்படுத்தும் பணிகளை 2007 அக்டோபர் மாதத்தில் மேற்கொண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கீழ்ப்பாக்கம், கலைஞர் கருணாநிதி நகர் மற்றும் திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள 3 குடிநீர்ப் பகிர்மான அமைப்புகளை மேம்படுத்தும் பணிக்கான பணி ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் அனைத்தும் 2009 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.

இதர பணிகளான அண்ணா பூங்கா, தென் மண்டல நீரேற்று நிலைய குடிநீர்ப் பகிர்மான ஏற்பாட்டு முறைகள், நீர்க்கசிவு ஆய்வு மற்றும் சரிசெய்தல் பணிகள், செங்குன்றத்திலிருந்து கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை சுத்திகரிக்கப்படாத நீரை எடுத்து வரும் மூடுகால்வாய்கள் I மற்றும் III புதுப்பித்தல் மற்றும் மூடுகால்வாய் II பழுதுபார்த்து சீரமைத்தல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் மறு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்த பின்னர், நடப்பாண்டில் பணிகள் துவக்கப்படும். மேற்கூறிய அனைத்துப் பணிகளின் திட்ட மதிப்பீடு ரூ. 337.48 கோடி ஆகும்.

**2. ராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப சாலையில் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகள் அமைத்தல்**

ராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப சாலை நெடுகிலும் (பழைய மகாபலிபுரம் சாலை) குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகள் அமைத்துத்தரும் பணியை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ரூ. 41.77 கோடி மதிப்பீட்டில் மேற்கொண்டுள்ளது.

ராஜீவ் காந்தி தொழில்நுட்ப சாலை நெடுகிலும் உள்ள பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர், தற்போது உபயோகத்தில் இருக்கும் பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் மற்றும் சோழிங்கநல்லூர், நாவலூர் ஆகிய இரு இடங்களில் அமைக்கப்பட இருக்கும் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்படும்.

இந்தப் பணிகள் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. தகவல் தொழில்நுட்ப சாலை அமைக்கும் பணிகளும், மின் வாரியம் சம்மந்தப்பட்ட பணிகளும் தற்போது ஒன்றாக நடைபெற்று வருவதால், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் இந்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகளைச் செயலாற்றி நடப்பு ஆண்டில் முடிக்க திட்டமிட்டுள்ளது.

**3. மீஞ்சூரில் அமைந்து வரும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து குடிநீரை எடுத்துச் செல்லும் கட்டமைப்புப் பணிகள்**

காட்டுப்பள்ளியில் (மீஞ்சூர்) அமைந்துள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மக்களுக்கு மேலும் விநியோகிப்பதற்காக மாதவரம் மற்றும் செங்குன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த நோக்கத்திற்காக சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், காட்டுப்பள்ளியில் கீழ்நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் கட்டுதல் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து மாதவரம் மற்றும் செங்குன்றத்திற்குக் குழாய்கள் அமைத்தல், மாதவரத்தில் கீழ்நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் அமைத்தல் மற்றும் மணலியில் கீழ்நிலைத் தொட்டி அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள், கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையக் கட்டுமானப் பணியுடன் இணைந்து நடப்பு ஆண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 93 கோடி ஆகும்.

**4. பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து புழல் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீரைக் குழாய் மூலமாகக் கொண்டு செல்ல, தேவையான கீழ்நிலைத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் கட்டுதல்**

தனியார் கிணறுகளிலிருந்து நிலத்தடி நீரைக், கொண்டு வருவதற்காக, கடந்த வறட்சி காலத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து புழல் சுத்திகரிப்பு நிலையம் வரை 1000 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் பதிக்கப்பட்டன.





மாநகரின் நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு திருப்திகரமாக இருப்பதால், இந்தக் கிணறுகளிலிருந்து நிலத்தடி நீரை எடுக்கவில்லை. எனவே, பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து செங்குன்றம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு, சுத்திகரிக்கப்படாத நீரின் ஒரு பகுதி நீரேற்றுவதற்காக இந்தக் குழாயைப் பயன்படுத்துவதற்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் உத்தேசித்துள்ளது. இந்த நோக்கத்திற்காக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 9.11 கோடி மதிப்பீட்டுச் செலவில் பூண்டி நீர்த்தேக்கத்தில் ஆர்.சி.சி. கீழ்நிலைத் தொட்டி, நீரேற்று நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இதன் மூலம் சாதாரண நாட்களில் நீர் ஆவியாதல் மற்றும் உறிஞ்சுதல் மூலமாகத் தண்ணீர் வீணாகாமல், நாளொன்றுக்கு சுமார் 34 மில்லியன் லிட்டர் நீர் சேமிக்க ஏதுவாகிறது. மேலும் வறட்சி காலத்தில் ஏரியில் எடுக்க முடியாத அளவு குறைந்த நீர் இருந்தாலும், அதையும் எடுத்து பயன்படுத்த முடியும். இப்பணிகள் தொடங்கப்பட்டு நடப்பாண்டில் முடிவுறும்.

**5. பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்தல்**

தற்போதுள்ள பெருங்குடி சுத்திகரிப்பு நிலையத்தின் திறன் (நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர்) வளரும் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை. எனவே வாரியம், கூடுதலாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைக் கட்ட கருதியது. இதற்கிடையில் அருகிலுள்ள சில உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து இந்த நிலையத்திற்குக் கழிவுநீரை அனுப்புவதற்குத் திட்டமிட்டுள்ளதால், பெருங்குடியில் ஏற்கெனவே திட்டமிட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறனை நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டராக உயர்த்தி ரூ. 55 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் துவக்கப்பட்டு 18 மாதங்களில் முடிக்கப்படும்.

## IV. இதர திட்டங்கள்

### 1. கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் கழிவுநீர் அகற்றுப் பணிகளை மேம்படுத்தல்

சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ரூ. 7.35 கோடி மதிப்பீட்டில் (திருத்திய செலவு) கிண்டியிலுள்ள திரு. வி. க. தொழிற்பேட்டையில் கழிவுநீரகற்று ஏற்பாட்டு முறையை மேம்படுத்தி சீரமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பணி 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் துவக்கப்பட்டு தற்சமயம் 80 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணி இந்தாண்டுக்குள் முடிக்கப்படும். இப்பணி நிறைவடைவதன்மூலம் 610 தொழிற்சாலைகளும் 1,02,300 மக்களும் பயன் பெறுவார்கள்.

### 2. தென்றல் நகருக்குக் கழிவுநீரகற்று வசதிகளுக்கு வகை செய்தல்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கொடுங்கையூர் அடுத்துள்ள தென்றல் நகர் மற்றும் அதனையொட்டிய தெருக்களுக்கு ரூ. 3.15 கோடி மதிப்பீட்டுச் செலவில் கழிவுநீரகற்று அடிப்படைக் கட்டமைப்பை வழங்குவதற்கான பணியை மேற்கொண்டு இருக்கிறது. இப்பணி 2007 ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்டு, சுமார் 85 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் அனைத்தும் இந்த ஆண்டு முடிக்கப்படும். பணிகள் முழுமையுற்ற பின், தென்றல் நகரில் வசிக்கும் சுமார் 1,000 குடும்பங்கள் பயன்பெறும்.

### 3. சென்னை மாநகரில் தற்போதுள்ள கழிவுநீரகற்று ஏற்பாட்டு முறையை வலுப்படுத்தி திறனை விரிவுப்படுத்தல்

வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தில் தேவைகளைச் சமாளிப்பதற்கு தற்போதுள்ள கழிவுநீரகற்று ஏற்பாட்டு முறையை வலுப்படுத்தி, திறனை அதிகரிக்க வேண்டியுள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நடப்பாண்டில் செயல்படுத்துவதற்காகப் பின்வரும் திறன் விரிவாக்கல் மற்றும் வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ளது.



(ரூ. கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு |
|---|---|---|
| 1 | ஓட்டேரி கால்வாயில் அயனாவரம் பகுதியில் கழிவுநீரை திசை திருப்பி விடும் பணிகள் | 3.19 |
| 2 | ஓட்டேரி கால்வாயில் வியாசர்பாடி பகுதியில் கழிவுநீரை திசை திருப்பி விடும் பணிகள் | 3.24 |
| 3 | ஓட்டேரி கால்வாயில் நம்மாழ்வார்பேட்டை பகுதியில் கழிவுநீரை திசை திருப்பி விடும் பணிகள் | 2.38 |
| 4 | அடையாறு ஆற்றில் கே.கே.நகர் மற்றும் பத்மநாப நகர் பகுதியில் கழிவுநீரை திசை திருப்பி விடும் பணிகள் | 1.09 |
| 5 | ஓட்டேரி கால்வாயில் திம்மசாமி தர்கா பகுதியில் கழிவுநீரை திசை திருப்பி விடும் பணிகள் மற்றும் வில்லிவாக்கம் நிலை-I கழிவுநீரேற்று நிலையம் | 1.41 |
| 6 | கூவம் ஆற்றில் உள்ள லாங்ஸ் கார்டன் பகுதியில் கழிவுநீரை திசை திருப்பி விடும் பணிகள் | 1.60 |
| 7 | பக்கிங்காம் கால்வாய் பகுதியில் திருவான்மியூர் மற்றும் பெசன்ட் நகர்-II கழிவுநீரேற்று நிலையம் | 3.21 |
| 8 | அடையாறு ஆற்றுப் பகுதியில் சீத்தம்மாள் காலனி மற்றும் பட்டினப்பாக்கம் கழிவுநீரேற்று நிலையம் | 2.42 |
| 9 | கேப்டன் காட்டன் கால்வாய் பகுதியில் உள்ள ஜவஹர்நகர் மற்றும் மேல்பட்டடை கழிவுநீரை திசை திருப்பி விடும் பணிகள் | 1.68 |
| 10 | பகுதி 7-இல் கிரீம்ஸ் சாலையில் இருக்கின்ற கழிவு நீரேற்று நிலையத்தை மேம்படுத்தும் பணிகள் | 2.13 |
| | மொத்தம் | 22.35 |

தேசிய ஆற்று நீர் பாதுகாப்பு இயக்ககம், வியாசர்பாடி பகுதியில் கழிவுநீரை திசை திருப்பி விடும் ஏற்பாட்டு முறையின் கொள்ளளவை விரிவுபடுத்தி வலுப்படுத்தும் பணிக்காக ரூ. 3.20 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. எஞ்சிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையை மேற்சொன்ன இயக்ககம் பரிசீலித்து வருகிறது. ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடப்பாண்டில் துவக்கப்படும்.

### V. அருகிலுள்ள நகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அருகிலுள்ள நகர்ப் பகுதிகளுக்கு நீர் வழங்கல்-பாதாளச் சாக்கடைத் திட்டங்களைப் பிற துறைப் பணிகளாக நிறைவேற்றி வருகிறது.

### 1. அம்பத்தூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள்

அம்பத்தூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, அம்பத்தூர் நகராட்சியில் இரண்டாம் கட்டப் பணியின்கீழ் கழிவுநீரேற்று நிலையம் மற்றும் கழிவுநீர் கொண்டு செல்லும் விசைக் குழாய்கள் அமைக்கும் பணி, ரூ. 7.33 கோடி மதிப்பீட்டுச் செலவில் 2007 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் துவக்கப்பட்டு, தற்போது 40 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் அனைத்தும் இவ்வாண்டிற்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அம்பத்தூர் நகராட்சியிலிருந்து வெளியேறும் கழிவுநீர், கோயம்பேடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும். மேலும், அம்பத்தூரில் விடுபட்ட பகுதிகளுக்குக் கழிவுநீர் அகற்று கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூ. 130.91 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை வாரியத்தால் தயாரிக்கப்பட்டு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 29-02-2008 அன்று ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

### 2. திருவொற்றியூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் திருவொற்றியூர் நகராட்சியில் கழிவுநீரகற்று திட்டத்தை ரூ. 28.55 கோடி மதிப்பீட்டுச் செலவில் பிற துறைப் பணியாக நிறைவேற்ற எடுத்துக்கொண்டுள்ளது. இப்பணி 2007 ஆம் ஆண்டு மே திங்களில் துவக்கப்பட்டது. இப்பணி ஐந்து நிலைகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இம் மூன்று



நிலை தொடர்புடையப் பணிகள் நடப்பாண்டில் முடிவடையுமாறு திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு நிலைகளுக்கு இரு முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் கிடைக்கப்பெறாததால் மதிப்பீடு திருத்தப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. நடப்பாண்டில் பணிகள் துவக்கப்படும். அனைத்துப் பணிகளும் முடிவடைந்த பின், திருவொற்றியூர் நகராட்சியிலுள்ள 3.5 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

### 3. பல்லவபுரம் பாதாளச் சாக்கடைத் திட்டம்

பல்லவபுரம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பிற துறைப் பணியாக நிறைவேற்றி வருகிறது. இப்பணிகள் 2006 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் துவக்கப்பட்டது. இதுவரையில் கழிவுநீர் சேகரிப்புப் பணியில் 70 சதவீதம் நிறைவுற்றுள்ளது. உயர் நீதிமன்ற ஆணைக்கிணங்க, முதன்மைக் கழிவு நீரேற்று நிலையத்திற்கான இடம் கீழ்க்கட்டளை ஏரிப் பகுதிக்கு வெளியே மாற்றப்பட்டது. அதன்படி, முதன்மைக் கழிவுநீரேற்று நிலையம் கட்டுவதற்கும் மற்றும் பெருங்குடி வரை விசைக் குழாய் பதிப்பதற்கும் ரூ. 12.50 கோடிக்கு திருத்தியமைக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் சேகரிப்புப் பணிகளும், துணை கழிவுநீரேற்று நிலையப் பணிகளும் நடப்பு ஆண்டில் நிறைவுறும். முதன்மை கழிவுநீரேற்று நிலையக் கட்டுமானப் பணியும், விசைக் குழாய் பதிக்கும் பணியும் நடப்பு ஆண்டில் தொடங்கும். பணி தொடங்கப்பட்டதிலிருந்து 18 மாதங்களில் நிறைவுறும்படி திட்டமிடப்பட்டுள்ளன.

### 4. கத்திவாக்கம் நகராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் கத்திவாக்கம் நகராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டத்தை ரூ. 6.22 கோடி மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்ற எடுத்துக்கொண்டுள்ளது. இப்பணிகள் 2007 ஆம் ஆண்டு மே திங்களில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டு, திட்டத்தின் பயன் நடப்பாண்டிலேயே கிடைக்கும்.

### சென்னைப் பெருநகரில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்குக் குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளை உருவாக்கத் திட்டமிடுதல்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னை நகரைச் சுற்றியுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள்

[2008 ஏப்ரல் 15

மற்றும் ஊராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல், கழிவுநீரகற்றுதல் ஆகிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகளை வகுத்து, வடிவமைத்து வருகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், 2007-08 ஆம் ஆண்டில் ஆறு புறநகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரகற்றல் வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 499.95 கோடி மதிப்பீட்டுச் செலவில் திட்ட அறிக்கைகளைத் தயாரித்து, பிற துறைப் பணியாக நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொண்டுள்ளதுடன், பின்வருமாறு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதலைப் பெறவும் அவற்றிற்கு உதவி செய்துள்ளது.

மேற்சொன்ன திட்டங்கள் அனைத்தும் பிற துறைப் பணிகளாக நிறைவேற்றுவதற்காக இவ்வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | நகர்ப் பகுதி உள்ளாட்சியின் பெயர் | ஏற்பளிக்கப்பட்ட செலவு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| **குடிநீர் வழங்கு திட்டங்கள்** | | |
| 1 | போரூர் | 12.36 |
| 2 | மதுரவாயல் | 23.30 |
| 3 | ஆவடி | 103.84 |
| 4 | உள்ளகரம்-புழுதிவாக்கம் | 24.24 |
| 5 | நெற்குன்றம் | 19.17 |
| | **மொத்தம்** | **182.91** |
| **கழிவுநீரகற்று திட்டங்கள்** | | |
| 1 | உள்ளகரம்-புழுதிவாக்கம் | 28.08 |
| 2 | ஆவடி | 158.05 |
| 3 | அம்பத்தூர் | 130.91 |
| | **மொத்தம்** | **317.04** |
| | **ஒட்டு மொத்தம்** | **499.95** |



2008 ஏப்ரல் 15]

மேற்கூறிய பணிகளில், போரூர் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டப் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பணிகள் நடப்பாண்டில் துவக்கப்பட உள்ளன.

இது தவிர கத்திவாக்கம், மதுரவாயல் நகராட்சிகளுக்கும் மற்றும் போரூர் பேரூராட்சிக்கும் கழிவுநீரகற்று வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

சென்னையைச் சுற்றியுள்ள 5 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், 22 ஊராட்சிகள் மற்றும் 1 கன்டோன்மென்ட் ஆகிய பகுதிகளுக்கு முழுமையான கழிவுநீரகற்று வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு, இவ்வாரியம் தனியார் ஆலோசனை நிறுவனத்தை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி உள்ளது. இது வரை, மணலி நகராட்சி, மீஞ்சூர், சின்னசேக்காடு, நாரவாரிக்குப்பம், புழல், பெருங்குடி மற்றும் நந்தம்பாக்கம் ஆகிய பேரூராட்சிகள் இராமாபுரம், மணப்பாக்கம், மாத்தூர், மடிப்பாக்கம், பாலவாக்கம், கொட்டிவாக்கம் மற்றும் முகலிவாக்கம் ஆகிய ஊராட்சிகள் மற்றும் பரங்கிமலை கன்டோன்மென்ட் ஆகிய பகுதிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில், இவ்விரிவான திட்ட அறிக்கைகளுக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

**மனிதவள மேம்பாடு**

I. ஒவ்வொரு நிறுவனமும் சேவை வழங்கும் முறை மற்றும் திறனை மேம்படுத்துவதற்காகக் கற்றுக்கொள்ளும் முறை, அறிவுத் திறனை வளர்த்தல் மற்றும் நிறுவனம் முழுவதும் அறிவுத் திறனைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றின்மூலம் அவர்களின் திறமைகளை மேம்படுத்துவது குறித்து, தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இதன் அடிப்படையில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தனிப்பட்ட பணியாளர்கள் மற்றும் நிருவாக ரீதியாகவும், அறிவுத் திறன், செயல்திறன் ஆகியவற்றை

மேம்படுத்துவதற்கும் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் பணியில் தனது அறிவுத் திறன் மற்றும் அனுபவங்களைப் பிற நிறுவனங்களுடனும் பகிர்ந்து வருகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பயிற்சி மையம், இவ்வாரியப் பணியாளர்களுக்குக் கீழ்க்காணும் பல துறைகளில் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறது.

- ❖ குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று அமைப்புக் கட்டுமானம்
- ❖ இயக்குதல் மற்றும் பராமரித்தல்
- ❖ குடிநீர்ச் கசிவைக் கட்டுப்படுத்துதல்
- ❖ குடிநீர்த் தரம் பராமரித்தல்
- ❖ கழிவுநீர் அகற்றுதல்
- ❖ திட்ட மேலாண்மை
- ❖ பட்டியல் தயாரித்தல் மற்றும் வசூலித்தல்
- ❖ நிதி மேலாண்மை
- ❖ தகவல் தொழில்நுட்பம்
- ❖ மக்கள் தொடர்பு

*2007-2008 ஆம் ஆண்டு வாரியத்தில் பணிபுரியும் 253* பணியாளர்களுக்கு மேற்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, 2007-2008 ஆம் ஆண்டு மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் (CPHEEO) அமைப்பின் ஆதரவில் 5 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்-III TNUDP-III ஆதரவின்கீழ் நகராட்சி நிருவாக ஆணையர் பரிந்துரை செய்த நகராட்சிப் பொறியாளர்களுக்கு 9 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள நகராட்சிப் பொறியாளர்களுக்கு ஒரு பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டது. இப்பயிற்சித் திட்டங்களினால் பிற நிறுவனங்களிலிருந்து 789 பணியாளர்கள் பயனடைந்தனர்.



**II. வளர்ச்சிப் பாதையில்**

1. தற்பொழுது நடந்து வரும் பயிற்சிகள் தவிர, இவ்வாரியம், கீழ்க்காணும் புதிய பயிற்சிகளையும் இந்த வருடம் நடத்த முடிவு செய்துள்ளது:—

   - ❖ வாரியத்தில் பணிபுரியும் களப் பொறியாளர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் இயந்திரங்கள்மூலம் கழிவுநீரமைப்பினைச் சுத்தம் செய்யும் பயிற்சித் திட்டம்
   - ❖ களப் பொறியாளர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் கழிவுநீரகற்றல் அமைப்பின் இயக்கத்தின்போதும், பராமரித்தலின்போதும் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சித் திட்டம்
   - ❖ பணிமனைப் பொறியாளர்களுக்கும், பணிமனை மேலாளர்களுக்கும் நுகர்வோர் சேவையை மேம்படுத்தும் பயிற்சித் திட்டம்
   - ❖ வாரியப் பொறியாளர்கள், வாரிய ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களின் பணியாளர்கள் ஆகியோருக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் குறித்த கட்டுமானப் பணியின்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைளுக்கான பயிற்சித் திட்டம்

2. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனமும் (JICA) சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் தேசிய நதிநீர் பாதுகாப்பு இயக்ககமும் (NRCD) இணைந்து "இந்திய நாட்டின் கழிவுநீர் அகற்றல் பணிகளுக்கான செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்தை", ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவித் திட்டத்தில், தென் மண்டலத்தைச் சார்ந்த இளநிலை மற்றும் இடைநிலை அதிகாரிகளுக்கு அதன் மையங்களில் பயிற்சி அளிக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தைத் தேர்வு செய்துள்ளது.

   "கழிவுநீரகற்றல் அமைப்புகளையும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் இயக்கம் மற்றும் பராமரிப்பு" குறித்து இரண்டு பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்துடன் சேவை நோக்குடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

3. வாரியப் பணியாளர்களுக்கும் பிற நிறுவனங்களின் பணியாளர்களுக்கும் அளிக்கப்படும் பயிற்சிகளின் தேவை அதிகரித்துள்ளதால், பயிற்சி மையத்தின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மேம்பாடுகள் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி மையத்தில் அனைத்து நவீன வசதிகளும், புதிய படக்காட்சிப் பயிற்சி உபகரணங்களும் ஏனைய வசதிகளுடன் கூடிய, மாதிரி தர சோதனைக் கூடத்தை மேம்படுத்துதல், பயிற்சிக்குத் தேவையான பல மாதிரி வடிவங்களைத் தயாரித்தல், தங்கும் விடுதி மற்றும் பயிற்சி மையத்தின் சுற்றுச்சூழல்களில் மேம்பாடு செய்தல் ஆகிய அனைத்து பணிகளையும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு ஆளுகையின் (e-governance) பயன்பாடுகள்**

இவ்வாரியம், பதிவேட்டு கணக்குகளான சம்பளக் கணக்குகள், ஓய்வூதியம், வைப்பு நிதி, பண்டக சாலை, வரவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகை பற்றிய கணக்குகள் ஆகியவற்றை ஏற்கெனவே கணினிமயமாக்கியுள்ளது. இதனால் இரட்டையான வேலைகளும், பிழைகளும் களையப்படுவதுடன், ஒட்டுமொத்தப் பணிகளின் செயல்திறனும் மேம்பட்டுள்ளது. இக்கணினிமயமாக்கம் அன்றாட வரவு-செலவுக் கணக்குகளை அன்றே முடிக்கவும், அறிக்கைகளை உடனுக்குடன் தயார் செய்யவும் பயன்படுகிறது.

தற்பொழுது வாரியம், தகவல் தொழில்நுட்பத்தின் இரண்டாம் கட்ட பயன்பாட்டை நோக்கி முன்னேறி வருகிறது. இதனால், நுகர்வோருக்கு உடனுக்குடன் சேவையளிப்பதில் முன்னேற்றம் ஏற்படுகிறது.

**I. கணினிமூலம் குடிநீர் வரியையும், கட்டணங்களையும் நேரடியாக வசூல் செய்தல்**

ரூ. 9 கோடி செலவில் தகவல் தொழில்நுட்பத் திட்டம் 2006-07 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 2007 ஏப்ரலில் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், அனைத்து (161) பணிமனைகளிலும், 11 பகுதி அலுவலகங்களிலும், பண்டக சாலைகளிலும் மற்றும் மண்டல அலுவலகங்களிலும் கணினிகள் பொருத்தப்பட்டு, அவை தலைமை அலுவலகத்திலுள்ள மைய கணினியோடு கண்ணாடி இழை கம்பி



2008 ஏப்ரல் 15]

(Optical Fibre Cable) மற்றும் கம்பியில்லாத் தந்தி (Wireless) மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் ஆரக்கிள் மென்பொருள் உதவியோடு நுகர்வோர் தங்கள் இருப்பிடம் / சொத்து, நகரில் எங்கு இருந்தாலும், வாரியத்தின் எந்தப் பணிமனையிலும், எந்தப் பகுதி அலுவலகத்திலும், தலைமை அலுவலகத்திலும் தங்கள் குடிநீர் வரியையும், கட்டணங்களையும் உடனடியாகச் செலுத்தலாம். மேலும், அவர்கள் செலுத்திய தொகை உடனுக்குடன் கணக்கில் பற்று வைக்கப்படும். இதனால், நுகர்வோர் தங்களின் வரியையும், கட்டணங்களையும் தங்களுக்குரிய பணிமனை அல்லது பகுதி அலுவலகத்தில் மட்டுமே செலுத்த வேண்டியிருந்த நிலை தற்போது மாறியுள்ளது.

மேலும், பொதுமக்கள் எந்த வங்கி வரவு அட்டை (Credit Card) மூலமாகவும் தங்களது குடிநீர் வரியையும், கட்டணங்களையும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் இணையதளம் வழியாக எங்கிருந்து வேண்டுமானாலும் வாரியத்திற்குச் செலுத்தலாம். இவ்வசதியின் மூலமாக நுகர்வோர், வெளியூரிலிருந்தும் தங்கள் நிலுவைகளை வாரியத்திற்குச் செலுத்த முடியும்.

**II. கணினிகள்மூலம் குறைகளை நிவர்த்தி செய்தல்**

நுகர்வோர் பதிவு செய்யும் புகார்கள், தகவல் தொழில்நுட்பத் திட்டத்தின்மூலம் உடனுக்குடன் நிவர்த்திக்கும் பொருட்டு, சம்மந்தப்பட்ட பணிமனைகளுக்கு அனுப்பப்படுகின்றன. எந்தப் பகுதி அலுவலகம், பணிமனை அல்லது தலைமை அலுவலகத்தில் புகார்கள் பதிவு செய்யப்பட்டாலும், அவை உரிய பணிமனைக்கு கணினிமூலம் உடனுக்குடன் அனுப்பப்படும். மக்கள் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள கால கெடுவிற்குள் அக்குறைகள் நிவர்த்திக்கப்படாவிடில், கணினியே உயர் அதிகாரிகளின் உடனடி கவனத்திற்குக் கொண்டு சென்றுவிடும்.

மேலும், நுகர்வோர் குடிநீர் வாரியத்தின் இணையதளம் மூலமாகவும், பகுதி பொறியாளர்களுக்குரிய மின்னஞ்சல் மூலமாகவும், தங்கள் புகார்களைப் பதிவு செய்யலாம். இதனால், புகார்கள் உரிய அலுவலர்களின் கவனத்திற்கு, நிவர்த்திக்கும் பொருட்டு, எந்தவிதக் கால தாமதமுமின்றி கொண்டு செல்லப்படுகிறது.

[2008 ஏப்ரல் 15

### III. மின் ஒப்பந்தப் புள்ளிகள்: (e-tendering)

ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மையைக் கொணர, மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகளைப் பதிவு செய்யும் பொருட்டு, அரசு “தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவு மறைவற்ற விதிகளில்”, தகுந்த திருத்தங்களைச் செய்துள்ளது. இதை அடையும் நோக்கில், முதல் கட்டமாக, பல்வேறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளையும், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களையும் ஒப்பந்ததாரர்கள் பதிவிறக்க (download), வாரிய இணையதளத்தில் வெளியிட்டு வருகிறது. விருப்பமுள்ள ஒப்பந்ததாரர்கள், கட்டணம் ஏதுமின்றி, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை, இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொண்டு, வாரிய அலுவலகத்திற்கு வராமலேயே அனுப்பி வைக்கலாம்.

தற்போது, இவ்வாரியம் பணிகளுக்கும், பொருட்களையும் வாங்குவதற்கும், மின் ஒப்பந்தப்புள்ளி கோரும் முறையை நடைமுறைப் படுத்தியுள்ளது. முதல் மின் ஒப்பந்தப்புள்ளி, 29-01-2008 அன்று பெறப்பட்டது. 2008 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை, மின் ஒப்பந்தப் புள்ளி முறை மூலம், 5 ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டுள்ளன. தகுந்த ஒப்பந்ததாரர்களுக்கும், பொருட்கள் வழங்குவோருக்கும், மின் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதை பழக்கப்படுத்தும் வகையில் ஒரு சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

### நுகர்வோர் நலன்

நுகர்வோரின் முக்கியத்துவத்தைக் கருதிப் பார்த்து, அவர்களுக்கு குறித்த காலத்தில் நயமுடன் சேவையளிப்பதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நுகர்வோரின் மனநிறைவை மேம்படுத்தும் பொருட்டு இவ்வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் பின்வருமாறு:

- அனைத்து பகுதி அலுவலகங்களும், பணிமனை அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு நுகர்வோர், அவர்களது குடிநீர் வரி மற்றும் கட்டணங்களைத் தெரிந்துகொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

- அனைத்துப் பகுதி அலுவலகங்களும், தலைமை அலுவலகக் கணினியோடு இணைக்கப்பட்டுள்ளதால், வாரிய பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் என எங்கு வேண்டுமென்றாலும் நுகர்வோர், அவரவர் வசதிக்கேற்ப குடிநீர் வரி மற்றும் கட்டணத்தைச் செலுத்தலாம்.
- பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகிய இவற்றில் ஏதேனும் ஒன்றில் நுகர்வோர் அவர்களது குறைகளைப் பதிவு செய்யலாம்.
- பதிவு செய்யப்படும் குறைபாடுகள் பற்றிய புகார்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட பணிமனை அலுவலருக்குக் கணினி வாயிலாக மேல் நடவடிக்கைக்கு மாற்றப்படுகிறது.
- குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அப்புகார்கள் பற்றிய குறைகள் நிவர்த்தி செய்யப்படவில்லையெனில், அவை அடுத்த உயர் அதிகாரியின் ஆய்விற்குத் தானாகவே சென்றடையும்.
- சேவைக் குறைபாடுகளை நுகர்வோர் இணையதளத்தின் மூலமாக www.chennaimetrowater.tn.nic.in என்ற முகவரியில், பதிவு செய்யலாம்.

இவ்வாரியம் தனது செயல்பாட்டை மேம்படுத்தும் பொருட்டு, நுகர்வோரின் கருத்துக்களை அறிய, மாதந்தோறும் இரண்டாம் சனிக்கிழமையன்று அனைத்துத் தரப்பினரும் கலந்துகொள்ளும் கூட்டங்களை எல்லாப் பகுதி அலுவலகங்களிலும் நடத்தி வருகிறது. இக்கூட்டங்களில் நுகர்வோர்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்கின்றனர். இத்தகையோர் பெருமளவில் அக்கூட்டங்களில் கலந்து கொண்டு வாரியத்தின் சேவைகளை மேம்படுத்தும் கருத்துரைகளைத் தெரிவிக்கும் வகையில் இக்கூட்டங்கள் நடைபெறுவது குறித்து பரவலான விளம்பரம் அளிக்கப்படுகிறது.

### பணியாளர் நலன்

பணியாளர்களின் மனநிலையைப் பொருத்தே அவர்கள் நுகர்வோருக்கு வழங்கும் சேவையின் தரம் அமையும் என்பதால், நுகர்வோருக்கு திட்டமிட்டவாறு சேவை வழங்கும் நிலையை மேம்படுத்த பணியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் சூழலை உருவாக்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் சென்னைக் குடிநீர் வாரியம் மேற்கொள்ளுகிறது.

**I. கருணை அடிப்படையில் பணி நியமனம்**

பணியில் இருக்கும்போது மரணமடைந்த பணியாளர்களின் குடும்பத்தைக் காப்பாற்றும் உணர்வோடு அவர்களின் வாரிசுதாரருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் அரசினால் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, *2007-2008* ஆம் ஆண்டில் சென்னைக் குடிநீர் வாரியத்தால் *55* வாரிசுதாரர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

**II. பணியாளர்களை ஊக்குவித்தல்**

நீண்ட காலமாகப் பணியாற்றியதைக் கருத்தில் கொண்டும் அவர்களது அனுபவத் திறமையை நிறுவனத்தின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும் *21* உயர் அழுத்த மின்னியல் கருவி இயக்குபவர்களை (EO / HT) இளநிலைப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு அளித்து ஆணைகள் வழங்கப்பட்டன. மேலும் *44* பணிமனை மேலாளர்களுக்கும் உயர் நிலை பதவி உயர்வு வழங்கப்பட்டது.

**III. களப் பணியாளர் நலன்**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் குறிக்கோள் வெற்றியடைய, நுகர்வோர்க்குத் தரமான மற்றும் துரிதமான சேவை வழங்கும் களப் பணியாளர்களின் பங்கு இன்றியமையாதது. எனவே வாரியம் அப்பணியாளர்களது நலனுக்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. அதற்காக வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் பின்வருமாறு:

களப் பணியாளர்களது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு பின்வரும் பொருட்கள் சென்னைக் குடிநீர் வாரியத்தால் வழங்கப்படுகின்றன.

1. தையற் கட்டணத்துடன் டெரிகாட்டன் சீருடைகள் (இரண்டு / மூன்று இணை)
2. மழை மேலங்கிகள் / குடைகள்
3. மின்சாரம் தாக்காத பூட்ஸ்கள்
4. காலணிகள், பூட்ஸ்கள், சோப்பு, நல்லெண்ணெய்

மேற்கூறிய பொருட்களை வழங்க சென்னைக் குடிநீர் வாரியம் *2007-2008* ஆம் ஆண்டில் ரூ. *42.61* இலட்சம் செலவு செய்துள்ளது.



மேலும் *2007-2008* ஆம் ஆண்டில் களப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் பல்வேறு படிகளையும், வாரியம், பின்வருமாறு உயர்த்தியது.

| வ. எண் | படியின் விவரங்கள் | பணியாளர் விவரங்கள் | உயர்த்தப்பட்ட படி விவரம் மாதந்தோறும் | |
|---|---|---|---|---|
| | | | உயர்வுக்கு முன் ரூபாய் | உயர்த்திய பின் ரூபாய் |
| 1 | சோப்புப் படி | மின்னாளர், மின் இயக்குபவர், களப் பணியாளர்கள் (கழிவுநீர்) | 12.50 | 15.00 |
| | சோப்புப் படி | துப்புரவுப் பணியாளர்(பராமரிப்பு) | 25.00 | 30.00 |
| 2 | எண்ணெய்ப் படி | களப் பணியாளர் (கழிவுநீர்)<br>துப்புரவு பணியாளர்(சிறப்பு) | 26.25<br>37.00 | 40.00<br>56.00 |
| 3 | சுகாதாரப் படி | களப் பணியாளர் (கழிவுநீர்) செங்கல் அடுக்குபவர் | 30.00 | 75.00 |
| | | துப்புரவுப் பணியாளர் (சிறப்பு) | 75.00 | 150.00 |
| 4 | ஊக்கத் தொகை | துப்புரவுப் பணியாளர் (சிறப்பு) | 300.00 | 400.00 |
| 5 | சலவைப் படி | ஓட்டுநர் | 30.00 | 60.00 |

இதனால் *2,816* பணியாளர்கள் பயன்பெறுகின்றனர்.

**IV. நலவாழ்வு முகாம்கள் :**

சென்னைக் குடிநீர் வாரியத்தில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களின் உடல் நலத்தைக் காக்க தலைமை அலுவலகத்தில் முழு நேர மருத்துவர் ஒருவரையும் மற்றும் மருந்தாளுநர் ஒருவரையும்

[2008 ஏப்ரல் 15

## 2008-2009-ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2008-2009 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 2,206,45,21 | 876,47,28 | 219,80,56 | 3,302,73,05 |
| மொத்த தொகை சாட்டியது | 1 | - | - | 1 |

நிகர செலவு ரூபாய் ஆயிரத்தில்

| கணக்குத் தலைப்பு | | 2006-2007 கணக்குகள் | 2007-2008 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2007-2008 திருத்த மதிப்பீடு | 2008-2009 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2215 | குடிநீர் வழங்கலும் துப்புரவும் | 39,96,57 | 18,07,02 | 20,33,62 | 58,36,16 |
| 2217 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 510,83,36 | 622,66,70 | 653,42,49 | 686,15,91 |
| 2236 | சத்துணவு | 10,47,97 | – | – | – |
| 2251 | தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | 3,30,10 | 3,54,47 | 7,33,15 | 4,82,05 |
| 2515 | ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 21,18,96 | 10,57,87 | 11,52,93 | 13,25,95 |




2008 ஏப்ரல் 15]

| கணக்குத் தலைப்பு | | 2006-2007 கணக்குகள் | 2007-2008 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2007-2008 திருத்த மதிப்பீடு | 2008-2009 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2551 | மலைப் பகுதிகள் | - | - | 18,00 | 1 |
| 3475 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் | 5,34,00 | 6,76,96 | 8,24,66 | 8,71,95 |
| 3604 | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1,001,29,51 | 1,264,75,62 | 1,264,75,62 | 1,434,38,19 |
| 4215 | குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு | 461,66,35 | 479,53,57 | 597,29,42 | 710,47,19 |
| 4217 | நகர்ப் பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 161,03,71 | 72,25,03 | 72,25,10 | 141,00,03 |
| 4515 | ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 72,98,51 | 30,61,69 | 55,73,84 | 25,00,06 |
| 5054 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 24,99,67 | - | - | - |
| 6215 | குடிநீர் வழங்கல் துப்புரவுக்கான கடன்கள் | 124,26,39 | 51,33,50 | 51,31,97 | 48,20,56 |
| 6217 | நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான கடன்கள் | 106,82,00 | 100,00,00 | 100,63,00 | 171,00,00 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | 60,00 | 60,00 | 60,00 | 60,00 |

[2008 ஏப்ரல் 15

## சேலம் மாவட்டத்தில் நரசிங்கபுரம் நகராட்சி, 18 பேரூராட்சிகள் மற்றும் 921 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்




**பயனாளிகள்**

**நகராட்சி :**
1. நரசிங்கபுரம்

**பேரூராட்சிகள் :**

1. ஜலகண்டாபுரம்
2. வனவாசி
3. நங்கவள்ளி
4. தாரமங்கலம்
5. ஓமலூர்
6. கருப்பூர்
7. கன்னாங்குறிச்சி
8. அயோத்தியாபட்டினம்
9. வாழப்பாடி
10. பேளூர்
11. ஏத்தாப்பூர்
12. பெ.நா.பாளையம்
13. செந்தாரப்பட்டி
14. தம்மம்பட்டி
15. தெடாவூர்
16. வீரகனூர்
17. கொங்கவள்ளி
18. கீரிப்பட்டி

**ஊரகக் குடியிருப்புகள் :**

ஒன்றியங்கள் :


| | | |
|---|---|---|
| 1. பனமரத்துப்பட்டி | - | 33 |
| 2. அயோத்தியாபட்டினம் | - | 146 |
| 3. வாழப்பாடி | - | 119 |
| 4. பெ.நா.பாளையம் | - | 158 |
| 5. ஆத்தூர் | - | 130 |
| 6. கொங்கவள்ளி | - | 122 |
| 7. தலைவாசல் | - | 213 |
| மொத்தம் | | 921 |

ரூ.176 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தின்மூலம் 8.03 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்



2008 ஏப்ரல் 15]

## தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம்




**பயனாளிகள்**

**தருமபுரி மாவட்டம்**

| நகராட்சி / பேரூராட்சி | ஒன்றியம் | குடியிருப்புகள் |
|---|---|---|
| **நகராட்சி** | | |
| 1. தருமபுரி | 1. பென்னாகரம் | 363 |
| **பேரூராட்சி** | 2. தருமபுரி | 350 |
| 1. காரிமங்கலம் | 3. நல்லாம்பள்ளி | 409 |
| 2. பி. மல்லாபுரம் | 4. பாப்பிரெட்டிப்பட்டி | 183 |
| 3. அரூர் | 5. மொரப்பூர் | 388 |
| 4. கடத்தூர் | 6. அரூர் | 400 |
| 5. கம்பைநல்லூர் | 7. பாலக்கோடு | 376 |
| 6. பாப்பாரப்பட்டி | 8. காரிமங்கலம் | 421 |
| 7. பாப்பிரெட்டிபட்டி | மொத்தம் | 2890 |
| 8. பென்னாகரம் | | |
| 9. பாலக்கோடு | | |
| 10. மாரண்டஹள்ளி | | |

**கிருஷ்ணகிரி மாவட்டம்**

| நகராட்சி / பேரூராட்சி | ஒன்றியம் | குடியிருப்புகள் |
|---|---|---|
| **நகராட்சி** | 1. மத்தூர் | 316 |
| 1. கிருஷ்ணகிரி | 2. ஊத்தங்கரை | 393 |
| 2. ஒசூர் | 3. காவேரிப்பட்டினம் | 557 |
| **பேரூராட்சி** | 4. கிருஷ்ணகிரி | 368 |
| 1. பர்கூர் | 5. பர்கூர் | 600 |
| 2. காவேரிபட்டினம் | 6. வேப்பனப்பள்ளி | 191 |
| 3. நாகோஜனஹள்ளி | 7. சூலகிரி | 388 |
| 4. ஊத்தங்கரை | 8. ஒசூர் | 193 |
| 5. கெலமங்கலம் | 9. கெலமங்கலம் | 316 |
| 6. மத்தகிரி | 10. தளி | 543 |
| 7. தேன்கனிக்கோட்டை | மொத்தம் | 3865 |

ரூ.1334.00 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தின்மூலம் 29.80 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

[2008 ஏப்ரல் 15

**மதுரை மாவட்டத்தில் மேலூர் மற்றும் 2 நகராட்சிகள், எ. வெள்ளாளபட்டி மற்றும் 3 பேரூராட்சிகள் மற்றும் 142 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்**




**பயனாளிகள்**

**நகராட்சிகள் :**
1. மேலூர் 2. அவனியாபுரம்
3. திருமங்கலம்

**பேரூராட்சிகள் :**
1. பரவை
2. விளாங்குடி
3. திருநகர்
4. எ. வெள்ளாளப்பட்டி

**ஊரகக் குடியிருப்புகள் :**


| | |
|---|---|
| 1. கொட்டாம்பட்டி ஒன்றியம் | - 28 |
| 2. மேலூர் ஒன்றியம் | - 57 |
| 3. மதுரை கிழக்கு ஒன்றியம் | - 19 |
| 4. மதுரை மேற்கு ஒன்றியம் | - 13 |
| 5. அலங்காநல்லூர் ஒன்றியம் | - 12 |
| 6. வாடிப்பட்டி ஒன்றியம் | - 3 |
| 7. திருப்பரங்குன்றம் ஒன்றியம் | - 10 |
| மொத்தம் | 142 |

ரூ.203 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தின்மூலம்
3.05 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்



2008 ஏப்ரல் 15]

**பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர், வேப்பந்தட்டை, ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 306 குடியிருப்புகள் மற்றும் அரும்பாவூர், பூலாம்பாடி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்**




**பயனாளிகள்**

**ஊரகக் குடியிருப்புகள் :**


| | |
|---|---|
| 1. பெரம்பலூர் ஒன்றியம் | - 75 |
| 2. வேப்பந்தட்டை ஒன்றியம் | - 174 |
| 3. ஆலத்தூர் ஒன்றியம் | - 57 |
| மொத்தம் | 306 |

**பேரூராட்சிகள் :**
1. அரும்பாவூர்
2. பூலாம்பாடி

ரூ.61.11 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தின்மூலம்
2.57 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்

[2008 ஏப்ரல் 15

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி மற்றும் கொள்ளிடம் ஒன்றியங்களைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 184 குடியிருப்புகள் மற்றும் 87 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்**




**பயனாளிகள்**

குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் :

| | | |
|---|---|---|
| 1. | சீர்காழி ஒன்றியம் | 90 |
| 2. | கொள்ளிடம் ஒன்றியம் | 94 |
| | மொத்தம் | 184 |


வழியோர குடியிருப்புகள் :


| | | |
|---|---|---|
| 1. | சீர்காழி ஒன்றியம் | 44 |
| 2. | கொள்ளிடம் ஒன்றியம் | 43 |
| | மொத்தம் | 87 |

ரூ.22.98 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தின்மூலம் 1.06 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்




2008 ஏப்ரல் 15]




ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி நிலை
மொத்தமுள்ள ஊரகக் குடியிருப்புகள் : 87010
1-4-2007 நிலவரப்படி
64440
469
22101
1-4-2008 நிலவரப்படி
76755
10255
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்






STORAGE TANK
UF MEMBRANE
100-0.1 MICRON
3600 MEMBRANES
DISC FILTER
UPTO 100 MICRON
SEDIMENTATION TANK
SEA WATER INTAKE CHAMBER
INTAKE FILTER
UF REJECT
CARTRIDGE FILTER
ENERGY RECOVERY SYSTEM
ERI
RO SKID
12 TRAINS
6048 MEMBRANES
CO2 ABSORBER
LIMESTONE FILTERS
POTABLE WATER STORAGE TANK
4300m³/hr TO CITY DISTRIBUTION SYSTEM
RO REJECT

[2008 ஏப்ரல் 15

# இணைப்பு–V

(459 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

### 1. முகவுரை

“எனது எண்ணத்தில் உள்ள கிராம சுயாட்சி என்பது தன்னுடைய தேவைகளுக்கு அருகாமையிலுள்ளவர்களைச் சார்ந்திராமலும், அதே நேரத்தில் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே ஒன்றுக்கொன்று பிணைப்புடன் இருக்கக்கூடிய சுதந்திரமான, கிராமக் குடியரசுகளாகும். அவற்றில், தனது கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலங்களும், பெரியவர்கள் மற்றும் சிறியவர்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு மைதானங்கள் இருக்க வேண்டும்... கிராம அரங்கங்கள், பள்ளிகள் மற்றும் பொது நலக் கூடங்களைக் கிராமங்களே பராமரிக்க வேண்டும். சுத்தமான குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு தனக்குச் சொந்தமான நீர் நிலைகளைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கான ஏரிகள் மற்றும் கிணறுகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.”

—மகாத்மா காந்தி

“கிராம சுயராஜ்யம்” அல்லது கிராம சுயாட்சி தத்துவத்தில் மகாத்மா காந்தி ஆழ்ந்த கொள்கைப் பிடிப்பு கொண்டிருந்தார். அவரது இந்த உந்துதலின் அடிப்படையில்தான் அரசு கிராம ஊராட்சிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், எத்தகைய பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கினால் கிராம ஊராட்சிகள் உள்ளூர் அரசு அங்கங்களாக செயல்பட முடியுமோ அவற்றையெல்லாம் வழங்கவேண்டும் எனவும், அரசமைப்புச் சட்ட வழிகாட்டும் கோட்பாடுகளில் ஒன்றாக இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 40-ல் சேர்க்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களது சீரிய தலைமையில் தன்னிறைவு பெற்ற கிராமம் என்ற காந்தியடிகளின் கனவு உண்மையாக மாறி வருகிறது. மாநில அரசின் ஒரு திருப்புமுனைத் திட்டமான அனைத்துக் கிராம அண்ணா



2008 ஏப்ரல் 15]

மறுமலர்ச்சித் திட்டத்தின் (AGAMT) மூலமாக தமிழ்நாட்டில் ஒவ்வொரு கிராம ஊராட்சியும் தனக்குச் சொந்தமான படிப்பகம், விளையாட்டு மைதானம், சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள், இடுகாடு / சுடுகாடு மற்றும் கிராமக் குளங்கள் என அனைத்து வசதிகளையும் 2011 ஆம் ஆண்டுக்குள் பெறும். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்பொழுது, தமிழ்நாட்டிலுள்ள கிராம ஊராட்சிகள் சிறப்பான வசதிகள் மற்றும் சேவைகளைப் பெற்றிருந்தாலும், அவற்றை மேலும் மேம்படுத்தி, நகர்ப்புறங்களுக்கும் கிராமப்புறங்களுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைப்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கியக் குறிக்கோளாகும்.

இந்தியாவைப் போல, தமிழ்நாட்டின் வளமும் கிராமப்புறங்களின் வளர்ச்சியையே சார்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் ஊரக மக்கள்தொகை 3.62 கோடியாக, தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 58 விழுக்காடு என இருந்தது. அரியலூர் (88.6%), விழுப்புரம் (85.5%), தருமபுரி (84.9%), புதுக்கோட்டை (84.6%), கிருஷ்ணகிரி (84.3%), பெரம்பலூர் (83.9%), திருவண்ணாமலை (82.1%), திருவாரூர் (79.8%), மற்றும் நாகப்பட்டினம் (77.8%) ஆகிய மாவட்டங்கள் பெரும்பாலும் ஊரகத் தன்மையைக் கொண்டுள்ளன. அதே நேரத்தில், கன்னியாகுமரி (34.6%), கோயம்புத்தூர் (38.3%), நீலகிரி (41.8%), தேனி (45.9%) மற்றும் மதுரை (48.3%) ஆகிய மாவட்டங்கள் நகரத் தன்மையைக் கொண்டுள்ளதோடு, அவற்றின் மக்கள்தொகையில் 50 சதவீதத்துக்கும் குறைவான மக்களே ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பை உருவாக்குதல், சுகாதாரம், திறன் மேம்பாடு, மகளிருக்கான சமூக, பொருளாதார மேம்பாடு, சுனாமி மறுவாழ்வு, அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை அளித்தல் போன்ற நோக்கத்திற்காக மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் அயல்நாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றும் பொறுப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்தது ஆகும். இத்துறை பல்வேறு ஊராட்சி அமைப்புகளையும், திறம்பட்ட உள்ளாட்சி அமைப்புகளாக மாற்றும் பொறுப்பையும் கொண்டுள்ளது. இத்துறையின்கீழ் 12,618 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்களுக்கு இணையாக) மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. பயிற்சிப் பிரிவு உள்ளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் சுனாமி திட்ட அமலாக்கப் பிரிவு ஆகியவையும்

இத்துறையின்கீழ் உள்ளன. மாநிலத் தேர்தல் ஆணையத்துக்கும் இத்துறை நிருவாக உதவி புரிகிறது.

## 2. ஊராட்சி அமைப்புகள்

### 2.1 ஊராட்சி அமைப்புகளின் வரலாறு

தமிழக உள்ளாட்சி அமைப்புகள், பாரம்பரியமான பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சீபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்குச் சான்றாகும். அந்தக் காலகட்டங்களில் சமுதாயக் குழுக்கள், தங்கள் பகுதிகளின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு செயல்திட்டங்களை மேற்கொள்ளும் கிராமக் குடியரசுகளைக் கொண்டதாக தமிழ்நாடு விளங்கியது. 10 மற்றும் 11 ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தப் பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டிருந்தன. இந்தக் கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் சிறந்த நிருவாகத் தொடர்பு கொண்டவையாக இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது. சோழர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாடு, கிராம சுயாட்சியின் சரிவையும், அதிகாரத்தை மையப்படுத்தும் நிலப் பிரபுத்துவ நிருவாக முறையின் மேலாண்மையையும் சந்தித்தது. இம்முறை ஆங்கிலேயப் பேரரசின் நிருவாக வசதிக்காக தல சுயாட்சி முறைகளை அறிமுகப்படுத்தும் வரையில் வழக்கில் இருந்தது.

நாடு விடுதலையான பிறகு, மக்களாட்சி அதிகாரப் பரவலாக்கல் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் பஞ்சாயத்து சட்டம், 1950" ஆகும். 1957 ஆம் ஆண்டு "உள்ளாட்சி நிருவாகச் சீரமைப்பு" குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையைத் தொடர்ந்து "மதராஸ் பஞ்சாயத்து சட்டம், 1958" மற்றும் "மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டம், 1958" ஆகியவை பின்வரும் சிறப்பியல்புகளுடன் இயற்றப்பட்டன.

(அ) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய இரண்டு அடுக்கு ஆட்சி முறை.

(ஆ) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களுக்கு இணையான ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்.



(இ) கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தல். இத்துடன் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை நேர்முகமாக / மறைமுகமாகத் தேர்ந்தெடுத்தல்.

(ஈ) மிகுந்த எண்ணிக்கையிலான வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை, கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்தல்.

(உ) மாவட்ட போர்டுகளைக் கலைத்தல்.

(ஊ) மாவட்ட வளர்ச்சிக் குழுவை ஆலோசனை வழங்கும் அமைப்பாக்குதல்.

இந்த இரண்டடுக்கு முறை, 1975 வரை நல்லமுறையில் செயல்பட்டு, அவற்றிற்கு முறையாகத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன் பிறகு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பதவிக்காலம் முறையே 1-2-1977 மற்றும் 12-9-1979 வரை நீட்டிக்கப்பட்டது. அதன் பிறகு 1986 முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுத்த தேர்தல்கள் நடைபெறும் வரை, ஒரு வட்டாரத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலரும், ஒரு கோட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கோட்ட வளர்ச்சி அலுவலரும் தனி அலுவலர்களாக இந்த அமைப்புகளை நிருவகித்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மார்ச், 1991 வரை பதவியிலிருந்தன. மீண்டும் 1996 ஆம் ஆண்டு அக்டோபர் வரை தேர்தல் நடத்தப்படாததால், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மேற்கண்ட தனி அலுவலர்களே நிருவகித்தனர்.

### 2.2 அரசமைப்பு 73-வது திருத்தச் சட்டம், 1992

ஊராட்சி அமைப்புகள் பல மாநிலங்களில், பல வடிவங்களில் செயல்பாட்டில் இருந்தபோதிலும் முறையாகத் தேர்தல்கள் நடத்தப்படாமை, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லாமை, போதுமான அதிகாரங்கள் வழங்கப்படாமை மற்றும் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் இவ்வமைப்புகள் மக்களிடம் நற்பெயரைப் பெற இயலவில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டு அரசமைப்புச் சட்டத்தின்படி ஊராட்சி அமைப்புகள் நிலையானதாகவும், நீடித்ததாகவும், வலுவானதாகவும் விளங்கிட ஏதுவாக, 1992 ஆம் ஆண்டு அரசமைப்பு 73 ஆவது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.

[2008 ஏப்ரல் 15

இச்சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக, ஊராட்சி அமைப்புகளில் பல அடிப்படை மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதனடிப்படையில், 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டு 22-4-1994 முதல் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

அரசமைப்பு (73-வது திருத்த) சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவை ஊராட்சி அமைப்பு முறையில் முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்தன. அவையாவன:

(அ) மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகம் - கிராமம், இடைநிலை (வட்டாரம்) மற்றும் மாவட்ட அளவில். (தமிழ் நாட்டில் 12,618 கிராம ஊராட்சிகள், 385 வட்டார ஊராட்சிகள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.)

(ஆ) ஐந்தாண்டுகளுக்கொரு முறை கட்டாய உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் முடிவதற்கு முன்போ அல்லது உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாகவோ தேர்தல்கள் நடத்தப்படும்.

(இ) ஒவ்வொரு ஊராட்சி அமைப்பின் மக்கள் தொகையில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப, உறுப்பினர் பதவியிடங்கள், தலைமைப் பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

(ஈ) உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்துதல்.

(உ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு, சுய சார்புடைய அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல்.

(ஊ) மாநில அரசின் நிதி ஆதாரங்களை, நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்குப் பரிந்துரை செய்வதற்காக, ஐந்தாண்டுகளுக்கொரு முறை மாநில நிதி ஆணையத்தை அமைத்தல்.



2008 ஏப்ரல் 15]

(எ) மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்குமான ஒட்டுமொத்த மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிக்க, மாவட்ட திட்டக் குழுவை ஏற்படுத்துதல்.

(ஏ) கிராம ஊராட்சியிலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய "கிராம சபை" கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல்.

**2.2.1 அரசமைப்புச் சட்டத்தின் 73-வது திருத்தம் குறித்து தமிழகத்தின் நிலைப்பாடு**

அரசமைப்புச் சட்டத்தின் 73-வது திருத்தத்தின் சில இனங்களில் தமிழக அரசுக்குத் தொடர்ந்து மாறுபட்ட கருத்துக்கள் இருந்து வருகின்றன. இந்தப் புதிய அமைப்புகளின் பன்னிரண்டு ஆண்டுக் கால செயல்பாட்டின்மூலம் அடைந்த அனுபவம், இந்த மாறுபட்ட கருத்துக்களை உறுதிப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958-ன்படி, கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுவின் பதவிவழி உறுப்பினர்களாக இருந்தார்கள். அதனால் இரண்டடுக்கு ஊராட்சி அமைப்புகளிடையே ஒன்றுக்கொன்று இயைந்த நிலை இருந்து வந்தது. எனவே அவை 'ஊராட்சி ஒன்றியம்' என்ற பெயரில், கிராம ஊராட்சிகளின் ஒருங்கிணைந்த ஒன்றியமாக உண்மையில் செயல்பட்டன. கிராம ஊராட்சித் தலைவர்களே ஊராட்சி ஒன்றியக் குழுவின் பதவிவழி உறுப்பினர்களாகவும் இருந்ததால், ஒன்றியக் குழுவிற்குத் தனியாக வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தனியாக வார்டு உறுப்பினர் பதவியிடங்களும் (மாநில அளவில் மொத்தம் 6,570) மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு (656) வார்டு உறுப்பினர் பதவியிடங்களும் உருவாக்கப்பட்டு, உறுப்பினர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கப்பட்டு, மூன்றடுக்கு ஊராட்சிகளிடையே மோதலும், ஒற்றுமையின்மையும் ஏற்பட வழி வகுத்துள்ளது. அரசமைப்புப் பிரிவுக் கூறு 243 சி(3)-ன்படி, ஒரு மாநிலம், சட்டவடிவின்மூலம், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுவில் பிரதிநிதித்துவம் பெறவும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சியில் பிரதிநிதித்துவம் பெறவும் வழிவகை செய்துள்ளது. ஆனால் இந்த முறையினால், ஊராட்சி ஒன்றியக் குழுக்களும், மாவட்ட ஊராட்சிகளும் இயங்க முடியாத அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக்

கொண்டிருப்பதாலும், மற்றும் இரண்டு வேறுபட்ட அதிகார மையங்களாக உருவாகி, ஒற்றுமையின்மை ஏற்பட வாய்ப்புள்ளதாலும், இந்த அமைப்பு திருப்திகரமாக இல்லை. எனவேதான், தமிழ்நாட்டில், அரசமைப்புப் பிரிவுக் கூறு 243 சி(3) பயன்படுத்தப்படவில்லை. மூன்றடுக்கு அமைப்புகளிடையே தொடர்பின்மை காரணமாக ஒவ்வொரு அமைப்பும், இதர இரண்டு அமைப்புகள் செய்யும் பணிகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போகும் நிலை உருவாகி உள்ளது. இந்த நிலை, பணிகளைத் தேர்வு செய்வதில் பல அதிகார மையங்களையும், தேவையற்ற வேலைப் பளுவினையும், காலதாமதம் ஏற்படும் நிலையையும், பெரும்பாலும் உருவாக்குகிறது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958-ன்கீழ், கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் பதவிவழி உறுப்பினர்களாக இருந்த நிலையையே மீண்டும் உருவாக்க வேண்டுமென்பதை அரசு வலியுறுத்தி வருகிறது.

1958 ஆம் ஆண்டு சட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவரை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கலாம். பெரும்பாலான நேரங்களில், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு நேரிடையான தேர்தல்கள் நடந்தன. இந்த முறையில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மிகுந்த நன்மதிப்பைப் பெற்றிருந்ததோடு, உள்நோக்கம் கொண்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வாய்ப்பு இல்லாததாலும், இந்த நடைமுறை நன்றாக செயல்பட்டு வந்தது. ஆனால், 73-வது அரசமைப்புத் திருத்தத்திற்கு பிறகு, ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவரை மறைமுகமாகத் தேர்ந்தெடுக்க அரசமைப்பு சட்டமே வழி வகுக்கிறது. கிராம ஊராட்சித் தலைவர்கள் தேர்தலை பொறுத்தவரை மட்டுமே, நேரிடை அல்லது மறைமுகத் தேர்தல்மூலமாக தேர்ந்தெடுப்பது மாநில அரசின் விருப்பத்திற்குட்பட்டது. இதே போன்று, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, மாநில அரசின் விருப்பத்திற்கே விடப்பட வேண்டும் என மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு திருத்தமும் (73-வது) நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு ஒரு திருத்தமும் (74-வது), ஆக அரசமைப்புச் சட்டத்திற்கு மொத்தம் இரண்டு திருத்தங்களுக்குப் பதிலாக ஊரக மற்றும் நகர்ப்புற





உள்ளாட்சிகளைச் சேர்த்து ஒரே அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும் என்ற கருத்தினை தமிழ்நாடு அரசு நெடுங்காலமாகக் கொண்டுள்ளது. இத்தகைய பிரிவினால் மாவட்ட ஊராட்சி, மாவட்டத்திலுள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளை ஒருங்கிணைக்கும் ஒரு அமைப்பாக இல்லாமல், அதனுடைய எல்லை, ஊரகப் பகுதிகளுக்கு மட்டுமே உள்ளது என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஏறக்குறைய 42% நகர்ப்புற மக்கள் தொகை மற்றும் மிகவும் நகர்ப்புறத் தன்மை கொண்ட கன்னியாகுமரி (66%), கோயம்புத்தூர் (62%), நீலகிரி (58%), தேனி (54%) மற்றும் மதுரை (52%) போன்ற மாவட்டங்களைக் கொண்ட இம்மாநிலத்தில் மாவட்ட ஊராட்சி, மாவட்டம் முழுவதும் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைக்கும் மற்றும் கண்காணிக்கும் அமைப்பாக இருக்க வேண்டும் என்ற வாதம் வலுவற்றதாகும். ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றின் தலைவர்கள் மாவட்ட ஊராட்சிகளில் பதவிவழி உறுப்பினர்களாகவும் மாவட்ட ஊராட்சித் தலைவரை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கும் முறையும் இருந்தால் அது அர்த்தமுள்ளதாகவும், நம்பகத் தன்மை உடையதாகவும் இருந்திருக்கும். ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மாவட்ட திட்டக் குழுமூலமாக இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும், ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சிகளின் உறுப்பினர்களுக்கு மாவட்டத் திட்டக் குழுவில் பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தால், அதன் அமைப்பில் குறைபாடு உள்ளது.

மாவட்ட ஊராட்சிகளை நீக்கவும், இரண்டடுக்குமுறை ஊராட்சிகளை ஏற்படுத்தவும், அரசமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டுவர தமிழ்நாடு அரசு வலியுறுத்தும் என 2006-ல், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாவட்ட போர்டுகளுக்கும், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட அரசியல் வேறுபாடுகள் காரணமாக, 1961 ஆம் ஆண்டு மாவட்ட போர்டுகள் கலைக்கப்படும் வரை தமிழகத்தில் அதிகாரமிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட போர்டுகள் இருந்தன. மாவட்ட போர்டுகளுக்குப் பதிலாக அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியம், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி

[2008 ஏப்ரல் 15

ஆகியவற்றின் தலைவர்களைக் கொண்ட மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற ஒரு ஆலோசனை வழங்கும் மற்றும் திட்டமிடும் அமைப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களே, மக்களுக்கு மிக அருகிலும் மற்றும் சுயாட்சி அமைப்பில் முக்கிய இடத்தினைப் பிரதிபலிக்கும் வகையிலும் 'உள்ளூர்' அமைப்பு என்ற நிலையில் உள்ள இரண்டு அடுக்குகள் ஆகும் எனத் தமிழ்நாடு அரசு உணர்ந்துள்ளது. இந்த இரண்டு அடுக்குகளும் மேலும் வலுவூட்டப்படவும், துடிப்புள்ள அமைப்புகளாக மாற்றப்படவும் அவசியம் உள்ளது. மாவட்ட போர்டுகளைக் கலைத்ததற்கான காரணங்கள் இப்பொழுதும் பொருந்தும் என்பதே இந்த அரசின் கருத்தாகும். ஆலோசனை வழங்கும் மற்றும் திட்டமிடும் அமைப்பாகச் செயல்படும் மூன்றாவது அடுக்கான மாவட்ட ஊராட்சிக்கும் இந்த நிலை பொருந்தும். அதே நேரத்தில், பிற மாநிலங்களும் தங்களின் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் இதுகுறித்து மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கலாம் என்பதை இந்த அரசு நன்கு அறியும். உதாரணமாக, சில மாநிலங்கள், கிராம மற்றும் மாவட்ட ஊராட்சிகளே தேவையென்றும், இடைப்பட்ட அமைப்பு (வட்டார அல்லது தாலுக்கா ஊராட்சி) அவசியமில்லையெனவும் கருதுகின்றன. இருப்பினும், தற்போதைய அமைப்பில் ஓர் அடுக்கு, கூடுதலாகவே உள்ளது என்பதே பொதுவான கருத்தாகும்.

மாநிலங்களைப் பொறுத்தமட்டும், சட்டமன்றம் கட்டாயம் இருக்க வேண்டுமெனவும், சட்ட மேலவை, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் விருப்பப்படி அமைத்துக் கொள்ளவும், அரசமைப்புச் சட்டத்தில் வழி வகையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மாறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கிராம ஊராட்சிகளை அனைத்து மாநிலங்களுக்கும் கட்டாயமாக்குவதுடன், வட்டார அளவில் அல்லது மாவட்ட அளவில் அல்லது இரண்டு அளவிலும் ஏற்புடைய ஊராட்சிகளை மாநில அரசுகள் தங்களின் விருப்பப்படி அமைத்துக் கொள்ள அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டு வரலாம். இந்த அரசு, அரசமைப்புச் சட்டத்தில் இத் திருத்தங்களைக் கொண்டுவர வலியுறுத்தும்.



2008 ஏப்ரல் 15]

## 2.3 உள்ளாட்சித் தேர்தல்கள்

### 2.3.1 2006-ல் நடைபெற்ற ஊராட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஏப்ரல் 1994-ல் இயற்றப்பட்டாலும், 1996-ல் புதிய அரசு பதவியேற்ற பின்புதான், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996-ல் நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2001-ல் நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூன்றாவது சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 2006-ல் நடத்தப்பட்டன.

மூன்றடுக்கு ஊராட்சிகளில் தேர்தல் நடத்தப்பட்ட பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரங்கள் **அட்டவணை 1**-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை – 1**

**ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 40,879 |
| 2 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 |
| 3 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,570 |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 656 |
| 5 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,618 |
| 6 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 |
| 7 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 |

### 2.3.2 பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

இந்திய அரசமைப்புச் சட்டம், சட்டக் கூறு 243D-ல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள்

[2008 ஏப்ரல் 15

மற்றும் பெண்களுக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தொடர்புடையவை, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ல் பிரிவுகள் 11, 20, 32 மற்றும் 57 ஆகியவை ஆகும். இதற்குத் தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995, இணைந்து நிறைவாக்குகிறது. இந்த விதிகளில் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களின் வார்டுகள், இப்பிரிவினரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசையில் அமைத்து அப்பிரிவினரின் மக்கள்தொகை விழுக்காட்டிற்கு ஈடான எண்ணிக்கையில் பதவியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த விதிகளின்கீழ், சுழற்சி முறையின் கால அளவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள், 1995 விதி 7-ஐ, அரசாணை நிலை எண் 105, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி4) துறை, நாள் 1-9-2006 மூலம் அரசு திருத்தம் செய்துள்ளது. அதன்படி, அக்டோபர், 2006 உள்ளாட்சித் தேர்தலில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கான பதவியிடங்கள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்பட்டன. மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் அனைத்தும் பத்தாண்டுகளுக்குப் பிறகு சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்பட்டன. ஆனால், ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் சுழற்சி செய்யப்படவில்லை. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு செய்யப்பட்ட இந்த ஒதுக்கீடு அரசு மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை தொடரும்.

எனினும், பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பின் காரணமாக நீண்ட காலமாகத் தேர்தல்கள் நடைபெறாதிருந்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சிகளின் தலைவர் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீட்டைச் சுழற்சி செய்வதில்லை என அரசு தெளிவாக முடிவு செய்தது. அக்டோபர் 2006-ல் நடைபெற்ற சாதாரண தேர்தல்களின்போது இந்த



2008 ஏப்ரல் 15]

நான்கு ஊராட்சிகளின் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களின் பதவியிடங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டு, தீர்வு காண இயலாது எனத் தோன்றிய இந்தப் பிரச்சனைக்கு இந்த அரசு தீர்வு கண்டது. இந்த ஊராட்சிகளிலுள்ள பல்வேறு வகுப்பினரும் தங்களது கடந்த கால கருத்து வேறுபாடுகளை மறந்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஊராட்சித் தலைவர்களை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டனர் என்பது மன நிறைவளிக்கிறது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம் **அட்டவணை-2**-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை-2

### பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விவரம்

| வ. எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவியிடங்கள்/ தலைமை பதவியிடங்கள் | பெண்களுக்கான இட ஒதுக்கீடு | | ஆதி திராவிடர்களுக்கான இட ஒதுக்கீடு | | பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 | 10 | 34% | 7 | 24% | 0 | 0% |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 | 140 | 36% | 87 | 23% | 4 | 1% |
| 3 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,618 | 4,275 | 34% | 3,143 | 25% | 156 | 1% |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 656 | 226 | 34% | 154 | 23% | 8 | 1% |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | 6,570 | 2,302 | 35% | 1,534 | 23% | 64 | 1% |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 | 32,638 | 33% | 24,630 | 25% | 983 | 1% |

## 2.4 அதிகாரப் பகிர்வு

உள்ளாட்சி நிருவாகம் என்பது, மாநில அரசிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொருள் ஆகும். இது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 7-வது அட்டவணையில் பட்டியல்-2-ல் இனம் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சிகளுக்கான அதிகாரப் பகிர்வு குறித்த அடிப்படைக் கோட்பாடுகள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 243ஜி-யில் வரையறுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவின்படி, அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வரைமுறைகளை மீறாமல், ஒவ்வொரு மாநிலமும், ஊராட்சி அமைப்புகள், சுயாட்சி அமைப்புகளாக விளங்குவதற்கு என்னென்ன பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வழங்க வேண்டுமோ, அவற்றை வழங்குவதற்கு மாநில சட்டப் பேரவையின்மூலம் சட்டம் இயற்றலாம். இவ்வாறு இயற்றப்படும் சட்டத்தில் கூறப்படும் நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஒவ்வொரு நிலையில் உள்ள ஊராட்சி அமைப்புகளும் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வரையறுத்து வழங்குவது குறித்து இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. மேலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியை மேம்படுத்த திட்டம் தயாரிப்பது மற்றும் பதினோராவது அட்டவணையில் குறித்துள்ளபடி ஊராட்சி அமைப்புகளுக்குப் பிரித்து வழங்க வேண்டிய 29 இனங்கள் குறித்த நடவடிக்கைகள், பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக நீதியை உறுதிப்படுத்தும் வகையில் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்புகள் வழங்குவது ஆகியவை குறித்தும் இப்பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அமைப்புகள் செயல்திறன் வாய்ந்த தன்னாட்சி நிருவாக அமைப்புகளாகச் செயல்படவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. 1996-ம் ஆண்டு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குத் தேர்தல்கள் முதன்முறையாக நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, மாநிலத் திட்டக் குழுவின் அப்போதைய முழு நேர உறுப்பினரான திரு. எல்.சி. ஜெயின் அவர்களைத் தலைவராகக் கொண்டு மூன்று அடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக முதல் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசுக்குச் சமர்ப்பித்தது.

எல்.சி. ஜெயின் குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளுக்கு ஏற்ப, ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வண்ணம் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறை மட்டுமல்லாது அரசின் பிற துறைகளான வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, வனம், சமூக





நலம், வருவாய், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற துறைகளும் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அரசாணைகள் வெளியிட்டுள்ளன.

ஊராட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரங்களைப் பரிந்துரைக்கும் பொருட்டு, பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த பதவியிலிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனுபவமிக்கவர்களை உள்ளடக்கிய இரண்டாவது உயர்நிலைக் குழுவை அரசாணை (நிலை) எண் 320, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 11-11-1997-ன்படி அப்போதைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையில் அரசு அமைத்தது. இக்குழு, அரசுக்கு 1,209 பரிந்துரைகளை 11-01-1999 அன்று சமர்ப்பித்தது. இவைகளில் 718 பரிந்துரைகளை ஏற்று அவற்றை நடைமுறைப்படுத்த உரிய ஆணைகளை அரசு வெளியிட்டது.

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்க வேண்டும் என்ற இந்த அரசின் உறுதியினைத் தொடர்ந்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், குறிப்பிட்ட மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் இப்பொருள் குறித்த சில வல்லுனர்களை உள்ளடக்கிய மூன்றாவது உயர்நிலைக் குழு, அரசாணை நிலை எண் 6 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி-1) துறை, நாள் 22-1-2007-ன்படி அமைக்கப்பட்டது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை ஆய்வு செய்து இவ்வமைப்புகள் மேலும் திறம்பட செயலாற்ற ஏதுவாக, கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரைகள் செய்திட இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது.

### 2.4.1 திரு. மு.க. ஸ்டாலின் தலைமையிலான உயர்நிலைக் குழு

மூன்றாவது உயர்நிலைக் குழு, தனது பரிந்துரைகளை இறுதி செய்திடும் முன், தமிழ்நாட்டிலுள்ள சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களையும் அறிய முடிவு செய்தது. இது தொடர்பாகக் கீழ்க்கண்ட உத்திகள் மேற்கொள்ளப்பட்டன:

**(i) மாநில அளவிலான கருத்தரங்கு**

18-3-2007 அன்று சென்னையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் நகர்புற உள்ளாட்சித் தலைவர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 27 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், 363 ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில், உள்ளாட்சி அமைப்புகளில் திறமையான செயல்பாடுகளுக்குத் தேவையான பல அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

**(ii) கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான மண்டலக் கருத்தரங்குகள்**

கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை மிக அதிகமானது (12,618) என்ற போதிலும் மிக அத்தியாவசியமான பொறுப்புகளை நிறைவேற்றும் அமைப்பாக அவை உள்ளபடியால், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பான கருத்துக்களைப் பெறும் பொருட்டு, கிராம ஊராட்சி மன்றத் தலைவர்களின் மண்டலக் கருத்தரங்குகள், ஈரோடு (24-7-2007), திருச்சி (25-07-2007), திருவண்ணாமலை (03-08-2007) மற்றும் விருதுநகர் (23-8-2007) ஆகிய இடங்களில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு ஊராட்சி நிருவாகத்தில் உள்ள இடர்ப்பாடுகள் மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்து கருத்துகள் கேட்கப்பட்டன. இம்மண்டலக் கருத்தரங்குகளில் 11,984 கிராம ஊராட்சித் தலைவர்கள் (தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 12,618 கிராம ஊராட்சித் தலைவர்களில்) பங்கேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம், பொறுப்புகள் மற்றும் கடமைகள் வழங்குவது குறித்து 47,108 பரிந்துரைகளை வழங்கினர்.

**(iii)** பல்வேறு அமைப்புகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான மாநில மற்றும் மண்டலக் கருத்தரங்குகளில் முன்வைக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள் குறித்து குழு, தங்களுக்குள் கலந்தாய்வுகள் மேற்கொண்டது.

**(iv)** மேலும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பாக, பல துறை அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கூட்டமும் உயர்நிலைக் குழுத் தலைவரால் 11-10-2007 மற்றும் 12-10-2007 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது.



இக்குழு, 39 பொருள்களின்கீழ் 99 பரிந்துரைகள் அடங்கிய தனது அறிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் 10-12-2007 அன்று சமர்ப்பித்தது.

### 2.4.2 திரு. மு.க. ஸ்டாலின் குழுவின் பரிந்துரைகள்

மூன்றாவது உயர்நிலைக் குழுவின் முக்கியமான பரிந்துரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

* பல்வேறு துறைகள்மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் சமூக தணிக்கை செய்யும் அமைப்பாக கிராம சபை செயல்பட வேண்டும்.
* தனி நபர் பயன்பெறும் அனைத்துத் திட்டங்களின் பயனாளிகள் பட்டியல் கிராம சபையால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.
* கிராம ஊராட்சிகளிலுள்ள பல உறுப்பினர் வார்டு முறையை நீக்கி ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ளது போலவே ஒரு உறுப்பினர் உள்ள வார்டு முறையைக் கொண்டுவருதல்.
* ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலத்தில் நிலைத்த தன்மையினைக் கொண்டுவரும் நோக்கில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதிலும், நிறைவேற்றுவதிலும் உள்ள விதிமுறைகளைக் கடுமையாக்குதல்.
* ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 1-ஆம் தேதியினை "உள்ளாட்சிகள் தினமாக"க் கொண்டாடுதல்.
* நலிவுற்ற கிராம ஊராட்சிகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றிற்கான தங்களது செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக, மாநில நிதி ஆணைய மானியத்தை உயர்த்துதல் மற்றும் மத்திய நிதி ஆணைய மானியம் முழுவதையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல்.
* ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களான தல வரி, தல மேல்வரி, முத்திரைத்தாள் கட்டணம் மீதான மேல்வரி மற்றும் கேளிக்கை வரிகளை இனி மாநில அளவில் திரட்டி அவற்றை மாவட்டங்களுக்குச் சீராகப் பகிர்ந்தளித்தல்.

* ஊராட்சி அமைப்புகள் செயல்பாட்டில் பெரிய அளவில் சுதந்திரம் அளிக்கும் வண்ணம் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிருவாக அனுமதி வரம்பினை உயர்த்துதல்.
* கிராம ஊராட்சிக் கணக்குகளை ஒழுங்குமுறைப் படுத்துதல்.
* மூன்றடுக்கு ஊராட்சிகளின் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.
* வட்டார வளர்ச்சி அலுவல (கிராம ஊராட்சிகள்)-ரை ஊதியம் வழங்கும் அலுவலராக்குதல்.
* அனைத்துக் கிராம ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதி வழங்குதல்.
* ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி.
* ஊராட்சி அமைப்புகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் முக்கிய அலுவலர்களுக்கு வாகனங்கள்.
* நமக்கு நாமே திட்டத்தை மீண்டும் கொண்டு வருதல்.
* ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்பு குறித்து திட்டமிடுதல்.
* அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும் நூலகங்கள் மற்றும் விளையாட்டு மையங்கள் அமைத்தல்.
* கிராம அளவில் பிற துறைகளுக்கான பயனாளிகளைத் தேர்வு செய்வதிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் கிராம ஊராட்சியே கிராம அளவிலான குழுவாகச் செயல்படுதல்.

உயர்நிலைக் குழுவின் பெரும்பாலான பரிந்துரைகளை அரசு ஏற்கெனவே ஏற்று உரிய ஆணைகளையும் வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



**2.5 உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு வரையறை செய்தல்**

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைப்பு, பிரித்தல் மற்றும் இணைத்தல் குறித்து பல கோரிக்கைகள் அரசால் பெறப்பட்டுள்ளன. இதுபோன்ற கோரிக்கைகள் குறித்து, இறுதிப் பரிந்துரையை அரசுக்கு அனுப்புமுன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/துறைத் தலைவர்கள் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்பதற்குப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து அரசாணை நிலை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி1) துறை, நாள் 16-3-2007-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிலுள்ள எவரும் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்கெனவே, பொது மக்கள் கருத்தறியும் கூட்டங்களை நடத்தியுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிந்துரைகளின் அடிப்படையிலும் தகுதியின் அடிப்படையிலும் தகுந்த ஆணைகளை அரசு வெளியிடும்.

**2.6 கிராம சபை**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடித்தள சனநாயக அமைப்பாக இருப்பது கிராம சபையாகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான, வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிருவாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களைச் செயல் படுத்துதல், பயனாளிகளைத் தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகரிக்கவும் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுப்பதற்கும், செயல்திறன்மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஓர் ஆண்டில் குறைந்தது நான்கு முறையாவது, அதாவது சனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த அரசு ஆணையிட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டம் நடத்தும் முறையினைச் செம்மைப்படுத்தும் நோக்கில், இந்த அரசு, தமிழ்நாடு கிராம சபை (குறைவெண் வரம்பு, கூட்டங்கள் கூட்டுதல், நடத்துதல் மற்றும் வழிமுறை) விதிகள் 1998ல் அரசாணை (நிலை) எண் 130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(சி4)

[2008 ஏப்ரல் 15

துறை, நாள் 25-9-2006 மூலம் தேவையான திருத்தங்கள் செய்து ஒவ்வொரு ஊராட்சியிலுள்ள வார்டுகளிலும், சுழற்சி முறையில் கிராம சபை நடத்திட உத்தரவிட்டுள்ளது. மேலும், பெரிய ஊராட்சிகளில் வாக்காளர்களில் 10 சதவீதத்தினர் கிராம சபையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற குறைவெண் வரம்பினைச் செயல்படுத்த இயலாத நிலை உள்ளதால், கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் குறைவெண் வரம்பினைத் தளர்த்தி, அட்டவணை-3-ல் குறிப்பிட்டபடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை-3**

**கிராம சபைக் கூட்டத்திற்கான திருத்திய குறைவெண் வரம்பு**

| வரிசை எண் | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000-க்கு மேல் | 300 |

கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காவது மகளிர் இடம் பெற வேண்டும். மேலும், கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் மக்கள் தொகை எத்தனை சதவீதம் உள்ளதோ அத்தனை சதவீத தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமெனத் துணைக் குறைவெண் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராம சபைக் கூட்டத்தின் வருகை மற்றும் நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம்மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் சமூகத் தணிக்கை செய்யும் அமைப்பாக கிராம சபையினைக் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

**2.7 கிராம ஊராட்சிகள்**

மாநிலத்தின் 30 மாவட்டங்களில் உள்ள 385 வட்டாரங்களில் 12,618 கிராம ஊராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சராசரியாக 421 கிராம ஊராட்சிகளும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சராசரியாக 32 கிராம ஊராட்சிகளும் உள்ளன. நீலகிரி (35), கன்னியாகுமரி (99), தேனி (130), கரூர் (158) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை குறைவாகவும், விழுப்புரம் (1,104), திருவண்ணாமலை (860), வேலூர் (753), கடலூர் (681), காஞ்சிபுரம் (648) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளன. தமிழகத்தில் கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை மிகப் பெரிய அளவில் மாறுபடுகிறது. சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 500-க்கும் குறைவாகவும், சில ஊராட்சிகளில் 25,000-க்கு அதிகமாகவும் உள்ளன. இதனை அட்டவணை 4-ல் காணலாம்.

**அட்டவணை-4**

**மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு**

**(2001 மக்கள்தொகை கணக்கெடுப்பு)**

| மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 500-க்கு கீழ் | 66 |
| 501 முதல் 1,000 வரை | 1,177 |
| 1,001 முதல் 3,000 வரை | 7,241 |
| 3,001 முதல் 5,000 வரை | 2,569 |
| 5,001 முதல் 10,000 வரை | 1,379 |
| 10,000-க்கு மேல் | 186 |
| **மொத்தம்** | **12,618** |

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 110 மற்றும் 111-ன்படி பல்வேறுபட்ட பொதுநலக் கடமைகள் மற்ற செயல்பாடுகள் கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் கிராம ஊராட்சி, மூன்றடுக்கு

[2008 ஏப்ரல் 15

ஊராட்சிகளில் முதன்மை வகிக்கின்றது. கிராம ஊராட்சிகள் தங்கள் கடமைகளைத் திறம்பட மேற்கொள்ள ஏதுவாக கூடுதல் அதிகாரங்கள் வழங்க, இந்த அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றது. கிராம ஊராட்சியின் நிதி நிலைமையை உயர்த்தவும் இந்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை, 500-க்கும் குறைவானதாகவும் 25,000க்கும் அதிகமானதாகவும் வேறுபட்டு உள்ளதாலும், மாநில நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வு, மக்கள் தொகையோடு தொடர்புடையதாக உள்ளதாலும், சிறிய கிராம ஊராட்சிகளுக்குக் குறைவான மானியமும் பெரிய ஊராட்சிகளுக்கு அதிக மானியமும் கிடைக்கின்றன. பெரிய ஊராட்சிகளின் தேவைகள் அதிகம் இருப்பினும், அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சிகளை நிருவகிப்பதற்கு அவற்றின் பரப்பளவுக்குத் தொடர்பில்லாத சில நிலையான செலவினங்கள் உள்ளன. எனவே, ஒரு கிராம ஊராட்சிக்கு வழங்கப்படும் மாநில நிதி ஆணைய மானியமானது, அந்த ஊராட்சியின் மாறிவரும் செலவினங்களுக்கு இணையாக இல்லாவிடினும், நிலையான செலவினங்களை ஈடுகட்டும் அளிவிற்காவது இருக்க வேண்டும். தங்களது மின்சாரக் கட்டணத்தைக்கூட செலுத்த முடியாத சில கிராம ஊராட்சிகளும் இருந்தன. மேலும், சில கிராம ஊராட்சிகள் தங்களுடைய ஊழியர்களுக்கு ஊதியம் மற்றும் சம்பளம்கூட குறித்த காலத்தில் வழங்க இயலாத நிலையிலும் இருந்தன. இவ்வகையான நலிவுற்ற கிராம ஊராட்சிகளுக்கு உதவிடும் வகையில், மாநில நிதி ஆணைய மானியத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தைச் சமன்பாடு நிதியாக ஒதுக்கீடு செய்ய, மாநில நிதி ஆணையங்கள் பரிந்துரை செய்தன. ஆனால், சமன்பாடு நிதியை ஒதுக்கீடு செய்வது மாவட்ட ஆட்சியர்களின் விருப்புரிமையின் அடிப்படையில் இருந்ததால், நிதியைப் பிரித்து வழங்குவதில் ஒரு ஒழுங்குமுறை இல்லாதது கடந்த காலங்களின் அனுபவமாகக் காண முடிகிறது.

எனவே, அரசு, அரசாணை நிலை எண் 199, நிதி (நிதிக் குழு-IV) துறை, நாள் 25-5-2007-ன்படி மாநில நிதி ஆணைய மானியத்தில் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்சமாக ரூ3 இலட்சத்தினை மக்கள் தொகையைக் கணக்கில் எடுக்காமல் ஒதுக்கீடு செய்தும், மீதம் உள்ள தொகையினை மட்டும் கிராம ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் பிரித்து வழங்கவும் ஆணையிட்டுள்ளது. அரசின் இந்த முடிவின்மூலம், கிராம ஊராட்சிகளின் வருவாயில் உள்ள



2008 ஏப்ரல் 15]

ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், அதே சமயம், நலிவுற்ற கிராம ஊராட்சிகள் தன்னளவில் வலுவான நிலையினை மேம்படுத்திக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண் 119, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி2) துறை, நாள் 26-2-2007-ன்படி, 12வது நிதி ஆணைய மானியம் முழுவதும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அட்டவணை 5-ல் இதன் விவரங்களைக் காணலாம்.

## அட்டவணை-5

### வரவினத்திற்கேற்ப கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு

| வ எண் | வருவாய் அளவு | 2003–04 முதல் 2005–06 வரையிலான 3 ஆண்டுகளுக்கான சராசரி வருமானம் உள்ள ஊராட்சிகள் எண்ணிக்கை | 2007–08–ம் ஆண்டு வருவாய் அடிப்படையிலான ஊராட்சிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ரூ. 50,000 வரை | 10 | 0 |
| 2 | ரூ. 50,000 முதல் ரூ. 1 லட்சம் வரை | 178 | 0 |
| 3 | ரூ. 1 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை | 7,422 | 1,059 |
| 4 | ரூ. 5 லட்சம் முதல் ரூ. 10 லட்சம் வரை | 3,181 | 7,283 |
| 5 | ரூ. 10 லட்சம் முதல் ரூ. 25 லட்சம் வரை | 1,489 | 3,733 |
| 6 | ரூ. 25 லட்சம் முதல் ரூ. 50 லட்சம் வரை | 252 | 442 |
| 7 | ரூ. 50 லட்சம் முதல் ரூ. 1 கோடி வரை | 60 | 78 |
| 8 | ரூ. 1 கோடி முதல் ரூ. 3 கோடி வரை | 24 | 23 |
| 9 | ரூ. 3 கோடிக்கு மேல் | 2 | 0 |
| | மொத்தம் | 12,618 | 12,618 |

[2008 ஏப்ரல் 15

மேற்படி அட்டவணைமூலம், பெரும்பாலான ஊராட்சிகளின் சராசரி வருமானம் உயர்ந்துள்ளது மட்டுமின்றி, பல கிராம ஊராட்சிகளுக்கிடையே இருந்த சமச்சீரற்ற வருவாய் நிலை, இந்த அரசின் நடவடிக்கையால் குறைந்துள்ளது என்பதும் தெரியவருகிறது.

**2.7.1 கடமைகள்**

தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் சட்டம், 1994-ன் பிரிவுகள் 110 மற்றும் 111 கிராம ஊாட்சிகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி விவரித்துள்ளன. கிராம ஊராட்சிகளின் சில முக்கியக் கடமைகளாவன:

அ. ஊராட்சியிலுள்ள அனைத்துக் கிராமச் சாலைகளையும் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

ஆ. வீட்டு மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபடங்களுக்கு அனுமதி வழங்குதல்

இ. கட்டடம் உள்ள பகுதியில் உள்ள பொது இடங்கள் மற்றும் பொதுச் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

ஈ. வடிகால்கள் கட்டுதல்.

உ. கிராமங்களிலுள்ள தெருக்களைச் சுத்தப்படுத்துதல் மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.

ஊ. பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

எ. கிணறுகள், குளங்கள் மற்றும் குட்டைகள் வெட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல். மேலும் குடிநீர் வழங்கும் நீர் நிலைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

ஏ. சுடுகாடு மற்றும் இடுகாடுகளைப் பராமரித்தல்.

ஐ. பூங்கா மற்றும் படிப்பகங்களைப் பராமரித்தல்.

ஒ. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துதல்.

ஓ. அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாக வரையறை செய்யப்படும் பிற கடமைகள்.



2008 ஏப்ரல் 15]

**2.7.2 நிதி ஆதாரங்கள்**

கிராம ஊராட்சியின் முக்கிய வருவாய் ஆதாரங்களாவன:

**(அ) வரி வருவாய்**

மூன்றடுக்கு ஊராட்சிகளில், கிராம ஊராட்சிகளுக்கு மட்டும்தான் வரி விதிக்கும் அதிகாரம் உள்ளது. வீட்டு வரி, தொழில் வரி, விளம்பர வரி ஆகியவை பொதுவாக விதிக்கப்படும் வரிகள்.

**(ஆ) வரி அல்லாத வருவாய்**

கட்டடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம், அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம், குடிநீர்க் கட்டணம், வண்டி நிலையங்களுக்கான கட்டணம், மீன் பாசிக் குத்தகை, 2சி மரப் பட்டா, பொருட்காட்சிகள் மற்றும் சந்தைகளிலிருந்து பெறப்படும் வருமானம், படகுகளிலிருந்து வருமானம், அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை போன்றவை ஆகும்.

**(இ) ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்**

மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு இனங்கள், இவ்வருவாயில் அடங்கும். (தல வரி, தல மேல்வரி, முத்திரைத்தாள் மீதான மிகுவரி, கேளிக்கை வரி). இவ்வருவாய், கிராம ஊராட்சி உட்பட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் விடுவிக்கப்படுகிறது. கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மற்ற வருவாய் இனங்களில் சிறு கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் (100%), குத்தகைத் தொகை (50%), மற்றும் சமூகக் காடுகளில் உள்ள மரங்களுக்கான ஏலத் தொகை ஆகியவை அடங்கும்.

**(ஈ) மானியம்**

மத்திய நிதி ஆணைய மானியம், மாநில நிதி ஆணைய மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கான மானியம் ஆகியவை.

**2.7.3 நிருவாக அதிகாரங்கள்**

கிராம ஊராட்சிக்கு, கிராம ஊராட்சித் தலைவரே, செயல் அலுவலர் ஆவார். தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் இணைந்து காசோலை வழங்குவதற்குக் கையொப்பமிட

வேண்டும். இவர்களுக்கு இடையே சுமூகமான உறவுகள் இல்லையென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் கிராம ஊராட்சியிலுள்ள வேறோர் உறுப்பினரை தலைவருடன் இணைந்து காசோலையில் கையொப்பமிடுவதற்கு நியமிப்பார்.

அரசாணை நிலை எண் 203, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (PRI) துறை, நாள் 20-12-2007-ன்படி தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பணிகளின் வகை மற்றும் நிலை) விதிகள் 2007-ஐ அரசு கொண்டு வந்தது. அதன்படி, கிராம ஊராட்சிகள் பொது நிதியிலிருந்து ஒரு பணியினை ரூ. 2 இலட்சம் வரை மேற்கொள்ள கிராம ஊராட்சியே நிருவாக அனுமதி வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர், ரூ. 1 இலட்சம் வரையிலான பணிகளுக்கு மட்டுமே கிராம ஊராட்சி நிருவாக அனுமதி வழங்க இயலும். ரூ. 2 இலட்சம் முதல் ரூ. 50 இலட்சம் வரையிலான மதிப்புள்ள பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரே நிருவாக அனுமதி வழங்க தகுதி வாய்ந்த அலுவலர் ஆவார். ரூ. 50 இலட்சத்துக்கு மேல் உள்ள பணிகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரே நிருவாக அனுமதி வழங்க தகுதி வாய்ந்த அலுவலர் ஆவார். இருப்பினும், மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி தேவையாகும். ரூ. 2,000/- வரையிலான அவசரப் பணியை ஒரு முறையும், ஒரு ஆண்டில் ரூ. 5.000/-க்கு மிகாமலும், தொழில்நுட்ப அனுமதி பெறாமல் அவசரப் பணிகளை மேற்கொள்ள கிராம ஊராட்சிகளுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சித் தலைவர், தனது காசோலைமூலம் ஊராட்சிகள் சில்லறை செலவினம் மேற்கொள்ள ரூ. 500/- வரை எடுத்துக் கொள்ளலாம்.

கைப் பம்புகள், விசைப் பம்புகள் மற்றும் தெரு விளக்குப் பராமரிப்புப் பணிகளை முறையாக மேற்கொள்ளத் தேவையான அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஓர் ஆண்டில் ஒரு கைப் பம்பு பராமரித்திட ரூ. 600/- மற்றும் ஒரு விசைப் பம்பு பராமரித்திட ரூ. 7,500/-க்கு மிகாமல் மதிப்பீட்டுக்காகவோ, பட்டியலுக்காகவோ பொறியாளரை அணுகாமல் செலவினம் மேற்கொள்ளலாம். தெரு விளக்கு உபகரணங்களைக் குறிப்பிட்ட தரத்துடன் ஊராட்சிகளே வாங்கிக்கொள்ளலாம்.



### 2.7.4 உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது

அரசாணை நிலை எண் 111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி2) துறை, நாள் 5-9-2006-ன்படி உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2006-2007-ம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் சிறந்த பூர்வாங்கப் பணிகள், புதுமையான முயற்சிகள் போன்ற இனங்களில் கடந்த 5 ஆண்டுகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ள ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருது வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வோர் ஊராட்சிக்கும் நற்சான்றிதழ், கேடயம் மற்றும் ரூ. 5 இலட்சத்துக்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களுக்கு நற்சான்றிதழும் பதக்கமும் வழங்கப்படும். ஊராட்சித் தலைவர்களின் மறைவுக்குப் பின்னரும் இந்தப் பரிசுகள் வழங்கப்படும். 2006-2007-ம் ஆண்டிற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட 124 கருத்துருக்களில் 45 கருத்துருக்கள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையிலான குழுவின் தல ஆய்வுக்குத் தேர்வு செய்யப்பட்டன. அதிலிருந்து 15 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10-10-2007 அன்று உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்பட்டது. 2007-2008-ம் ஆண்டிற்கான உத்தமர் காந்தி ஊராட்சி விருதுக்கான கருத்துருக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டு வருகின்றன. இவ்விருதினை வழங்க ரூ. 75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.7.5 கிராம ஊராட்சி கணக்குகளை ஒழுங்கு முறைப் படுத்துதல்

கிராம ஊராட்சிக் கணக்குகளை முறைப்படுத்தவும் மற்றும் கணக்குகளைப் பராமரிப்பதற்கான வழிமுறைகள் நிர்ணயிப்பதற்குமான அரசின் ஆணை, அரசாணை எண் 92, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 26-3-1997-ல் வெளியிடப்பட்டது. இந்த அரசு ஆணை வெளியிட்டது, கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு செய்வதில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய முன்னேற்ற நடவடிக்கையாகும். இதற்கு முன்னர், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிராம ஊராட்சித் தொகுப்பு நிதி என்கிற முறையில் கிராம ஊராட்சிகளின் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வந்தன. இதன்படி ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் கிராம ஊராட்சிகளில் பல்வேறு கணக்குகளை முன் ஆய்வு செய்த பின்னர்தான் நிதி விடுவிக்கப்படும். இந்த முறை மாற்றப்பட்டு, மேற்காணும் ஆணையின்படி கிராம ஊராட்சித் தலைவரும், துணைத் தலைவரும் ஊராட்சிக் கணக்குகளைச் சுதந்திரமாகப் பராமரிக்கும்

அதிகாரம் அளிக்கப்பட்டது. இருப்பினும் கிராம ஊராட்சிக் கணக்குகளைப் பராமரிக்கும் இப்புதிய முறையில், சில பலவீனங்கள் கண்டறியப்பட்டன. மாநில நிதி ஆணையத்தின் மானியம் மற்றும் மத்திய நிதி ஆணையத்தின் மானியம், நிபந்தனைகளுக்குட்பட்ட மானிய செலவினத்திற்காக கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்ட மானியம் பல சந்தர்ப்பங்களில் நிலுவையிலுள்ள மின்சாரம் மற்றும் குடிநீர்க் கட்டணங்களுக்கான தொகையினைச் செலுத்தாமல் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த பணிகளுக்குச் செலவிடப்பட்டது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மின் கட்டணம் மற்றும் குடிநீர்ப் பராமரிப்புச் செலவினத்திற்குப் பதிலாக முக்கியமல்லாத இனங்களுக்குச் செலவு செய்வதைத் தவிர்க்க, கிராம ஊராட்சிகளுக்கு நிதி விடுவிப்பதற்கு முன்னர் மாவட்ட அளவிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கான நிலுவைக் கட்டணத் தொகை முழுமையும் நேரடியாகச் செலுத்திவிட்டு, மீதமுள்ள தொகையினைக் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்க அறிவுறுத்தப்பட்டது. ஆனால் இந்த நடைமுறையில் கீழ்க்காணும் குறைபாடுகள் ஏற்பட்டன:

(அ) மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களின் சரிபார்த்தலின்றி தொகை செலுத்தப்படுவதால் பல சந்தர்ப்பங்களில் தமிழ்நாடு மின்சார வாரியம் அளித்த தவறான/இரட்டிப்பான பட்டியலுக்கும் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கிராம ஊராட்சித் தலைவர்கள் மின்சாரம்/குடிநீர் பட்டியலுக்காகத் தொகையினைத் தாங்களாகவே நேரடியாகச் செலுத்தாத காரணத்தால் ஊராட்சியின் மின் கட்டணங்களைக் குறைத்திடும் வகையில் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் திட்டப் பணிகளுக்கான நிதியையும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான தொகையினையும், பணியினையும் அளவு மற்றும் மேலளவு செய்யாமலும், பட்டியல்களைச் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) அவர்களின் ஒப்புதல் பெறாமலும், காசோலையை விடுவித்தது பல சந்தர்ப்பங்களில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஊராட்சித் தேர்தலுக்கு முன்னர் அதிக அளவில், அனுமதியின்றி பணம் எடுத்த நிகழ்வுகளும் உள்ளன. எனவே கிராம ஊராட்சிக் கணக்குகளை மேலும்



முறைப்படுத்தவும், மற்றும் கணக்குகளைப் பராமரிப்பதற்கான வழிமுறைகளை நெறிப்படுத்துவதற்குமான அரசின் ஆணை, அரசாணை எண் 146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 17-8-2007-ல் வெளியிடப்பட்டது.

இந்த அரசாணையில்,

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய தொகையினை, கிராம ஊராட்சித் தலைவர்கள் தங்களது கட்டுப்பாட்டிலுள்ள நிதியிலிருந்து செலுத்த அதிகாரமளித்தும் மற்றும் அதேசமயத்தில் அதிக முக்கியமல்லாத செலவினத்திற்குச் செலவிடத் தடை விதித்தும்;

(ஆ) சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஒப்புதல் இல்லாமல் திட்ட நிதி/தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதிக் கணக்குத் தொகையினை எடுப்பதைத் தவிர்த்திடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

### 2.7.6 கிராம ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி

வட்டார வளர்ச்சி அலுவலர்களும், கிராம ஊராட்சித் தலைவர்களும் அடிக்கடி தொடர்பு கொள்வது அவசியமாகிறது என்ற சூழ்நிலையில் பெரும்பாலான கிராம ஊராட்சிகளில் தொலைபேசி இணைப்பு இல்லாமல் இருப்பது, திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், ஊராட்சிகளை நிருவாகம் செய்வதிலும் பெரிய தடையாக உள்ளது. எனவே, ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒரு தொலைபேசி இணைப்பு வைத்துக் கொள்ளவும், தொலைபேசி மாதாந்திரக் கட்டணம் ரூ.750/- என வரையறை செய்தும், அரசாணை எண் 118, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 02-07-2007-ல் வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில், இதுவரை 12,572 கிராம ஊராட்சிகளில் தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டவுடன், டயல்-அப் இணைப்புமூலம் கிராம ஊராட்சிகள் இணையதளத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

[2008 ஏப்ரல் 15

### 2.7.7 தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான பிரச்சினைகள்

தெரு விளக்குகள் பராமரிப்பு மற்றும் குடிநீர் வழங்கல் ஆகியவற்றைப் பராமரிக்கும் இரண்டு பெரிய பொறுப்புகளையும் கிராம ஊராட்சிகள் மேற்கொண்டுள்ளன. வருவாயில் ஏறக்குறைய 70 சதவீதத் தொகை மின் கட்டணம் செலுத்துவதற்குச் செலவிடப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் முறையாக மீட்டர் அளவுகள் செய்யாமல் வணிக ரீதியில் மின் கட்டணம் வசூலிக்கிறது என்றும், 45 நாட்களுக்குமேல் கட்டணம் செலுத்தாமல் நிலுவையிலுள்ள தொகைக்கு 12 சதவீத வட்டி வசூலிப்பதாகவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்கான மதிப்பீட்டைத் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களிடமிருந்து பெறுவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதும் கண்டறியப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் கிராம ஊராட்சிகளிடையே நிலவி வந்த நெடுநாள் பிரச்னைகளைத் தீர்வு செய்திட, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

கிராம ஊராட்சிகளால் தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் மின் இணைப்புகளுக்கான மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு ரூ. 3.40/-லிருந்து ரூ. 3/-ஆகக் குறைத்து, அரசாணை எண் 95, எரி சக்தி(டி.2) துறை, நாள் 12-10-2007-ல் அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் புதிய தெரு விளக்குகள் அமைக்க, கம்பம் ஒன்றுக்கு ரூ. 9,500/- என ஒரே வகை கட்டணம் நிர்ணயித்து, அரசாணை எண் 111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 26-6-2007-ல் வெளியிட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கான கால அளவு தற்போதைய கால அளவான 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் 60 நாட்களுக்கு மேல் செலுத்தாமல் நிலுவையிலுள்ள மின் கட்டணத் தொகைக்கு விதிக்கப்படும் வட்டி வீதம் 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 13-3-2007-க்கு முந்தைய காலத்திற்கான அபராதத் தொகை ரூ.18.46 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அரசின் அறிவுறுத்தலின்படி, கிராம ஊராட்சிகளில் இதுவரை மீட்டர் பொ ப்படாத அனைத்து இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்தவும், பழுதடைந்த மீட்டர்களை மாற்றவும் தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஊரகப் பகுதியுள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியம் மீட்டர் அட்டை வழங்கியுள்ளது. ஆரம்ப மற்றும் இறுதியான மீட்டர் அளவின்



2008 ஏப்ரல் 15]

அடிப்படையிலேயே மின்சார வாரியம் மின் கட்டணம் கேட்பு செய்யவேண்டும் எனத் தமிழ்நாடு மின்சார வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மின்சார வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலுவை இல்லை என்பதை உறுதி செய்யும் வகையில், நிலுவை முழுவதும் செலுத்தப்பட்ட நிகழ்வுகளில் "இந்த இணைப்புக்கு............ தேதிய நிலையில் நிலுவைத் தொகை ஏதும் இல்லை." என மீட்டர் அட்டையில் பதிவு செய்யத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2.8 ஊராட்சி ஒன்றியக் குழு

இடைநிலை அளவில் தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்கள்) உள்ளன. ஒரு மாவட்டத்தில் சராசரியாக 13 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டம் 4 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட சிறிய மாவட்டமாகவும், விழுப்புரம் 22 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட பெரிய மாவட்டமாகவும் உள்ளது.

### 2.8.1 பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ல் பிரிவு 112, ஊராட்சி ஒன்றியக் குழுவின் பல்வேறு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை வரையறுத்துள்ளது. முக்கியமான சில பொறுப்புகளாவன:

- அ. ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்
- ஆ குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மற்றும் துணி துவைப்பதற்கும் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல்
- இ. ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்
- ஈ. ஊராட்சி ஒன்றியத்தால் வகைப்படுத்தப்பட்ட பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களை நடத்துதல்
- உ. ஊராட்சி ஒன்றியப் பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்
- ஊ. மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- எ. தொற்று நோய் அல்லது மலேரியா குறித்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

[2008 ஏப்ரல் 15

## 2.8.2 நிதி ஆதாரங்கள்

ஊராட்சி ஒன்றியங்கள் வரிகள் ஏதும் விதிக்க இயலாது. ஊராட்சி ஒன்றியத்திற்கான வருவாய் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

### அ. வரி அல்லாத வருவாய்கள்

உரிமக் கட்டணம், சந்தைக் கட்டணம், வாடகை மற்றும் சொத்துகளில் இருந்து கிடைக்கும் வருமானம், அபராதங்கள் மற்றும் தண்டத் தொகை.

### ஆ. ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்கள்

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்களான, தல வரி, தல மேல்வரி, முத்திரைத் தாள் மீதான வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவை மாநில நிதி ஆணைய மானிய அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிரித்து வழங்கப்படுகின்றன. சுரங்கம் மற்றும் கனிமங்கள் மீதான குத்தகைத் தொகை (50 சதவீத பங்கு) நேரிடையாக ஊராட்சி ஒன்றியத்திற்கு மாவட்ட அளவிலேயே சரி செய்யப்படுகின்றன.

### இ. மானியங்கள்

மாநில நிதி ஆணைய மானியம், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களுக்கான மானியங்கள், மகப்பேறு நிலையங்கள் மற்றும் ஊரக மருந்தகங்களுக்கான மானியம்.

அரசாணை நிலை எண் 203, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள் 20-12-2007-ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பணிகள் வகை மற்றும் நிலை) விதிகள் 2007 நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி உயர் அலுவலர்களின் ஒப்புதலின்றி, ரூ.10 இலட்சத்திற்கு மிகாத பணிகளுக்கு, ஊராட்சி ஒன்றியக் குழுவே பொது நிதியிலிருந்து அனுமதியளிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்குமுன்னர் ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு மட்டுமே நிர்வாக அனுமதியளிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ரூ.10 இலட்சத்திற்குமேலும் ரூ. 50 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரே தகுதியுள்ள அலுவலராவார். ரூ.50 இலட்சத்திற்கு மேலான பணிகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரே நிருவாக அனுமதியளிக்க தகுதியுள்ள அலுவலராவார். இருப்பினும், மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டியது அவசியமாகும்.



2008 ஏப்ரல் 15]

## 2.8.3 ஊராட்சி ஒன்றியங்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி

2007-2008-ம் ஆண்டில் 24 மாவட்டங்களில் உள்ள வாகனங்கள் மற்றும் வட்டார அலுவலகங்களில் கம்பியில்லாத் தகவல் தொடர்புக்கான உபகரணங்கள் அமைக்க அனுமதித்து அரசாணை எண் 134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.தி.4), நாள் 02-08-2007-ல் ஆணை வெளியிட்டு, ரூ.3.76 கோடி நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது. மீதமுள்ள மாவட்டங்களிலும் கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி வருங்காலங்களில் செய்து தரப்படும்.

## 2.9 மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.

## 2.9.1 பொறுப்புகள்

மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்புகள் பெரும்பாலும் ஆலோசனைகள் வழங்குவதாகவே உள்ளன. அவையாவன:

அ. மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல்.

ஆ. கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் நிருவாக அறிக்கையை ஒருங்கிணைத்து மாவட்டத்தின் ஆண்டு அறிக்கையைத் தயாரித்தல்.

இ. விவசாயம், நில மேம்பாடு, கால்நடை, பால் உற்பத்தி, கோழிப் பண்ணை, மீன் வளம் மற்றும் ஊரகத் தொழில்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

ஈ. ஊரகக் குடியிருப்புத் திட்டங்களை, குறிப்பாக ஆதி திராவிடர்/பழங்குடியினர் குடியிருப்புகளுக்கான திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

உ. பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்களைக் கண்டறிதல்.

## 2.9.2 நிதி ஆதாரங்கள்

மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரங்கள் இல்லை. சட்டப்படியான மாநில நிதி ஆணைய மானியம் மற்றும் மத்திய திட்டங்களின்கீழ் வழங்கப்படும் வளர்ச்சி மானியம் மட்டுமே இதன் நிதி ஆதாரமாகும்.

[2008 ஏப்ரல் 15

அரசாணை நிலை எண்203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 20-12-2007-ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், மற்றும் பணிகளின் வகை மற்றும் நிலை) விதிகள், 2007 இயற்றப்பட்டது. அதன்படி ரூ.20 இலட்சம் மதிப்புள்ள ஒவ்வொரு பணிக்கும் உயர் அலுவலர்களின் அனுமதியின்றி, பொது நிதியிலிருந்து மாவட்ட ஊராட்சியே நிருவாக அனுமதி வழங்க மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் ரூ.10 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கே மாவட்ட ஊராட்சி, நிருவாக அனுமதி வழங்க இயலும். ரூ.20 இலட்சத்திற்கு மேலும் ரூ.50 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரே நிருவாக அனுமதி வழங்க தகுதிவாய்ந்த அலுவலராவார். ரூ.50 இலட்சம் மதிப்புக்கு மேற்பட்ட பணிகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரே நிருவாக அனுமதியளிக்க தகுதிவாய்ந்த அலுவலராவார். இருப்பினும், மத்திய மற்றும் மாநிலத் திட்டப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டியது அவசியமாகும்.

## 2.10 ஒப்படைக்கப்பட்ட வருவாய்

உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பெருமளவிலான ஒப்படைக்கப்பட்ட/பகிர்ந்தளிக்கப்படும் வருவாய் தல வரி, தல மேல்வரி, முத்திரைத் தாள் வரி, கேளிக்கை வரி, சுரங்கம் மற்றும் கனிம வளங்களுக்கான குத்தகை வரி, சமூகக் காடுகளிலிருந்து பெறப்படும் வருவாய் ஆகியவை அடங்கும். இவ்வாறு உள்ளாட்சிகளுக்குக் கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆண்டுக்குச் சுமார் ரூ.250 - 300 கோடி ஆகும். தல வரி என்பது நில வரிக்கு ஏற்ப அதன் தொகை 2006-2007 ஆண்டு வரை கிராம ஊராட்சிகளுக்கு வரவு வைக்கப்பட்டு வந்தது. 2006-2007-ம் ஆண்டு வரை வசூலிக்கப்பட்ட நில வரி, வருவாய்க்கேற்ப தல வரியானது கிராம ஊராட்சிகளுக்கு வரவு வைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களுக்கான தல மேல் வரியானது, 2006-2007-ம் ஆண்டு வரை வசூலிக்கப்பட்ட நில வரி வருவாயில் 5 மடங்கு முதல் 10 மடங்கு வரை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரவு வைக்கப்பட்டது. முத்திரைத் தாள் தீர்வை மீதான மிகு வரியானது, ஊராட்சி ஒன்றியங்களில் ஒருங்கிணைக்கப்பட்டு நில வரி வருவாய் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டது. கேளிக்கை வரி கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியங்களுக்கு இடையே 70:30 என்ற விகிதத்தில் பிரிக்கப்பட்டு அத்தொகையில் 10% வசூல் கட்டணம் பிடித்தம் செய்தபின் வழங்கப்பட்டு வந்தது. சுரங்கம் மற்றும் கனிம வளங்களுக்கான உரிமக் கட்டணம் கிராம ஊராட்சிகளுக்கு வரவு



2008 ஏப்ரல் 15]

வைக்கப்படுகிறது. மேலும், குத்தகை தொடர்பான வருவாயில் 50% ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 50% கிராம ஊராட்சிகளுக்கும் ஈடு செய்யப்படுகிறது. சமூகக் காடுகளிலிருந்து பெறப்படும் வருவாயில் 60% கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. வனத் துறை 40%-ஐ தன்வசம் வைத்துக்கொள்கிறது.

ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இனங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரவு வைப்பதில் மிகவும் காலதாமதம் ஆவதாகத் தெரிய வந்ததுடன் தொகையினைப் பிரித்து வழங்குவதில் அதிக வேலைப் பளுவும் இருந்தன. அரசு, வருவாயைப் பிரித்து வழங்குவதில் பெருமளவு ஏற்றத்தாழ்வு இருந்தது.

எனவே, கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் இதுபோன்று பெறப்படும் பெருமளவு வருமானங்களை ஒருங்கிணைத்து சமச் சீராகப் பகிர்ந்தளிக்கவும், வேலைப் பளுவைக் குறைக்கவும் ஏதுவாக அரசாணை எண் 168, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 04-10-2007-ன்படி உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சேர வேண்டிய ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களான தல வரி, தல மேல்வரி, கேளிக்கை வரி, முத்திரைத் தாள் கட்டணம் இவற்றிலிருந்து பெறப்படும் வருவாய் அனைத்தும் மாநில அளவில் ஒருங்கிணைத்து, பின்னர், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதனால், ஒருங்கிணைக்கப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட வருவாயினைச் சமச் சீரான முறையிலும், விரைவாகவும், எளிதாகவும் பகிர்ந்தளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 2.11 மாநில நிதி ஆணைய மானியம்

மாநில நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிட, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு செய்யப்படுகிறது.

மூன்றாவது மாநில நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில், மாநில சொந்த வருவாயில் பெரும்பங்கான 9% ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2007-2008 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. (2006-2007 ஆம் ஆண்டு வரை 8% ஆக இருந்தது) 2007-08 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதி ஆணைய மானியமாக அரசு ரூ. 1583.59 கோடி ஒதுக்கீடு செய்தது. மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் காலம் (2007-2008 முதல்

[2008 ஏப்ரல் 15

2011-2012 ஆம் ஆண்டு வரை) முடிவுறும் முன்பு மாநில நிதியின் உள் பங்கீடு 10% ஆக வளர்ச்சியடையும். இதில் ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்கீடு முன்பு இருந்ததைப்போல் 58:42 என்ற விகிதத்தில் வழங்கப்படும். கிராம ஊராட்சிகள், அடிப்படைப் பணிகளுக்காக ஊரக சாலைகள் பராமரிப்பு, தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம் மற்றும் திடக் கழிவு மேலாண்மை ஆகிய அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், கிராம ஊராட்சிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளதாலும் (12,618) மேற்கண்ட மாநில நிதி ஆணைய மானியம், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 2007-2008 முதல் 60:32:8 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. மேற்படி நிதி ஆதாரங்களைப் பிரித்து வழங்குவதால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் கீழ்மட்ட அளவில் அனைத்து நலப் பணிகளும் மேற்கொள்ள ஏதுவாக உள்ளது.

**2.12 மத்திய நிதி ஆணைய மானியம்**

12-வது நிதி ஆணையப் பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய அரசு 2005-2006 முதல் 2009-2010-ம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.870 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

2007-2008 ஆம் ஆண்டிற்கான 12-வது நிதி ஆணைய நிதியினை முழுமையாக மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு மட்டும் பிரித்தளிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இந்த நிதி, கிராம ஊராட்சிகளில் குடிநீர், தெரு விளக்கு மற்றும் சுகாதார வசதிகளைப் பராமரித்திடப் பயன்படுத்தப்பட வேண்டும். 2008-2009ஆம் ஆண்டிலும், இந்த மானியம், கிராம ஊராட்சிகளுக்கு முழுமையாக வழங்கப்படும்.

2008-2009 ஆம் ஆண்டிற்கு 174 கோடி ரூபாய் 12-வது நிதி ஆணைய மானிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**2.13 ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்குப் படிகளை உயர்த்தி வழங்குதல்**

கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஒன்றியக் குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு நிரந்தர பயணப் படி வழங்க, அரசாணை எண் 262, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20-12-1997-ன்படி அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு மேலும் 10 சதவீதம் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. அதன்பின் நிரந்தரப் பயணப் படி



2008 ஏப்ரல் 15]

திருத்தப்படவில்லை. அரசாணை எண் 569, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, நாள் 28-9-2007-ன்படி ஊரக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கான நிரந்தரப் பயணப் படியினை அரசு உயர்த்தியுள்ளது. முன்னர் வழங்கப்பட்ட நிரந்தரப் பயணப் படி மற்றும் உயர்த்தப்பட்ட நிரந்தரப் பயணப் படி விவரங்கள் கீழே அட்டவணை-6-ல் குறிப்பிடப்பட்டுள்ளது:

**அட்டவணை-6**

**ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான மாதாந்திர நிரந்தரப் பயணப் படி**

| வ. எண் | அலுவலகம்/பதவியின் பெயர் | முன்னர் வழங்கப்பட்ட மாதாந்திர நிரந்தரப் பயணப் படி (ரூ.) | திருத்தப்பட்ட மாதாந்திர நிரந்தரப் பயணப் படி (ரூ.) |
|---|---|---|---|
| 1 | கிராம ஊராட்சித் தலைவர் | 330 | 500 |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | 550 | 750 |
| 3 | ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் | 220 | 400 |
| 4 | மாவட்ட ஊராட்சித் தலைவர் | 1,100 | 1,500 |
| 5 | மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | 330 | 500 |

**2.14 உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்**

ஈரோடு மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ஊராட்சித் தலைவர்களின் மண்டல மாநாட்டில் ஊராட்சித் தலைவர்கள் அளித்த கோரிக்கைகளின் அடிப்படையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 12,618 ஊராட்சித் தலைவர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்படும் என அறிவித்து, பின்னர் உடனடியாக அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

## 2.15 உள்ளாட்சிகள் தினம்

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகள், மக்களுடன் மிக அதிக தொடர்பு கொண்ட அமைப்புகளாகும். இந்தத் தொடர்பினை மேலும் வலுவூட்டி உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் ஒளிவு மறைவற்ற மற்றும் வெளிப்படையான நிலையினை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதேசமயத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகளை மக்கள் அறியச் செய்யவும், திட்டங்கள் செயலாக்கம் மற்றும் உள்ளாட்சி நிருவாகம் குறித்து தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கங்கள் நடத்தவும் வேண்டியுள்ளது. ஓர் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட தினத்தை 'உள்ளாட்சிகள் தினம்' எனக் கடைப்பிடிப்பது, இவ்வகை நடவடிக்கைகளில் ஒன்றாகும். இக்குழுவின் இடைக்காலப் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 632, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் (சி1) துறை, நாள் 26-10-2007-ல், நவம்பர் 1-ஆம் தேதியினை உள்ளாட்சிகள் தினமாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

## 2.16 பிற துறைகள் பயன்படுத்தும் கட்டடங்களுக்கான மின் வசதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பயன்பாட்டிற்கு மட்டுமின்றி பல்வேறு பிற துறைகளின் பயன்பாட்டிற்கும் பல்வேறு வகையான கட்டடங்களைக் கட்டி வருகிறது. 'உபயோகிப்பவரே தொகையைச் செலுத்த வேண்டும்' என்ற அடிப்படையில் இந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தும் துறைகளே மின்சாரக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். ஆனால் இந்தக் கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்குச் சொந்தமாக இருந்ததால் இந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தும் துறைகளால் தங்களது பெயரில் மின்சார இணைப்பு பெற இயலாத நிலை இருந்தது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில், அரசாணை எண் 206, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (எஸ்ஜிஎஸ்-1) துறை, நாள் 31-12-2007-ன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டங்கள் மூலம் பிற துறைகளுக்காகக் கட்டப்பட்ட கட்டடங்களில், அத்துறைகளே மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் விண்ணப்பிக்க வழிவகை செய்தும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எந்தவித நிதிப் பொறுப்புமின்றி மின் கட்டணத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு மின்சார வாரியத்துக்குச் செலுத்தவும் "மறுப்பேதும் இல்லை" சான்றினை அரசு வழங்கியுள்ளது.





## 2.17 உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் நிலையான பதவிக் காலம்

நியாயமற்ற, அற்ப காரணங்களுக்காக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதிராக அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவருவதால், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் திட்டமிடுதலையும், திட்டங்கள் செயலாக்கத்தையும் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் பொது நலனுக்கு ஊறு விளைவிப்பதாகவும் உள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கும், நிறைவேற்றுவதற்குமான வழிமுறைகளைக் கடுமையாக்க ஏதுவாக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தேவையான திருத்தம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி, தொடர்புடைய கிராம ஊராட்சித் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு அல்லது மாவட்ட ஊராட்சித் தலைவர் அல்லது துணைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்குச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதி என்பதைக் குறைந்தபட்சம் ஐந்தில் மூன்று பங்கு எனவும், தீர்மானத்தை நிறைவேற்ற தற்போது மூன்றில் இரண்டு பங்கு என்பதை ஐந்தில் நான்கு பங்கு எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், கிராம ஊராட்சித் துணைத் தலைவர் அல்லது ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர் அல்லது துணைத் தலைவருக்கு எதிராக அவர் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள்ளோ, பதவிக் காலம் முடியும் இறுதி ஆண்டிலோ எந்த ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டு வர இயலாது என வரையறுக்கப்பட்டுள்ளது.

# 3. பணியமைப்பு

## 3.1 தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணியிடங்களை நிரப்புதல்

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (NREGS), தமிழ்நாட்டின் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய 6 மாவட்டங்களில் 02-02-2006 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக 01-04-2007 முதல் தஞ்சாவூர், திருவாரூர், கரூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு

[2008 ஏப்ரல் 15

இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. அத்துடன் 01-04-2008 முதல் எஞ்சியுள்ள 20 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தினை முறையாகச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலும் வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் ஒரு கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு கணினி உதவியாளர் மற்றும் ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் ஒரு துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஒரு உதவியாளர் மற்றும் இரண்டு கணினி உதவியாளர்கள் பணியிடங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக இத்திட்டம் செயல்படும் 10 மாவட்டங்களிலும் ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கும் இரண்டு தொழில்நுட்ப உதவியாளர்கள், ஒவ்வொரு 8 ஊராட்சிகளுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் என்ற வீதத்தில் அரசு நியமித்துள்ளது. தொழில்நுட்ப உதவியாளர்கள் தவிர, முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படும் 10 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களை மூன்றாம் கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ள மாவட்டங்களுக்கும் அரசு அனுமதித்துள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள தொழில்நுட்பப் பிரிவை பலப்படுத்தவும் வேலை செய்யும் பயனாளிகளுக்கான ஊதியத்தை காலத்தில் வழங்கிடவும் ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளை நல்ல முறையில் கண்காணிக்கவும், 32 உதவி செயற் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி), 212 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 673 பணி மேற்பார்வையாளர்கள், பணியிடங்களைக் கூடுதலாகத் தோற்றுவிக்க அரசு முடிவு செய்துள்ளது. புதிதாகத் தோற்றுவிக்கப்படும் உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) பணியிடங்களுடன் ஓர் இளநிலை வரைவு அலுவலர், ஓர் உதவியாளர், ஓர் ஓட்டுநர் மற்றும் ஓர் அலுவலக உதவியாளர் பணியிடமும் சேர்த்துத் தோற்றுவிக்கப்படும். 1-4-2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் செயல்படுத்தப்படும் 30 மாவட்டங்களிலும் அட்டவணை 7-ல் தெரிவித்துள்ள கீழ்க்கண்ட பணியிடங்களில் நியமிக்கப்படுவார்கள்:—



2008 ஏப்ரல் 15]

## அட்டவணை- 7

### தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளைக் கண்காணிக்க அனுமதித்துள்ள பணியிடங்கள்

| வ.எண். | பணியிடங்களின் வகை | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **அ. நிர்வாக பிரிவு** | |
| 1. | வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் கண்காணிப்பாளர்கள் | 30 |
| 2. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | 385 |
| 3. | உதவியாளர்கள் | 415 |
| 4. | கணினி உதவியாளர்கள் | 800 |
| 5. | ஓட்டுநர்கள் | 32 |
| 6. | அலுவலக உதவியாளர்கள் | 32 |
| | **ஆ. தொழில்நுட்பப் பிரிவு** | |
| 1. | உதவி செயற் பொறியாளர்கள் (ஊ.வ) | 32 |
| 2. | உதவிப் பொறியாளர்கள் (ஊ.வ) | 212 |
| 3. | பணி மேற்பார்வையாளர்கள் | 673 |
| 4. | இளநிலை வரைவு அலுவலர்கள் | 32 |
| 5. | தொழில்நுட்ப உதவியாளர்கள் | 961 |

### 3.2 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககப் பணியாளர்களுக்கான கள அனுபவம்

அரசாணை எண் 11, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ4) துறை, நாள் 11-1-2008-ல் ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் உள்ள அலுவலர்கள், களப் பணி அனுபவம் பெறும் பொருட்டு, விரிவாக்க அலுவலர் நிலையில் விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) ஆக

மாவட்டங்களில் ஒரு வருடம் பணிபுரிந்தால்தான் அடுத்த பதவி உயர்வாகிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவிக்குத் தகுதியுடையவராவார்கள் என்றும், மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஆக குறைந்தபட்சம் ஒரு வருடமும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆக குறைந்தபட்சம் ஒரு வருடமும் மாவட்டங்களில் பணிபுரிந்தால்தான் உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு பெற தகுதியுடையவராவார்கள் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும், மாவட்டங்களில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஆக ஒரு வருடமும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆக ஒரு வருடமும் பணிபுரிந்தால்தான் ஊரக வளர்ச்சித் துறையில் உதவி இயக்குநர்களாகப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவராகிறார்கள் என்று விதிகளில் உரிய திருத்தங்கள் செய்ய அரசு உத்தேசித்துள்ளது.

### 3.3 வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.)—ஐ ஊதியம் வழங்கும் தற்சார்பு அலுவலராக ஆக்குதல்

அரசு ஆணை எண் 141, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள் 9-8-2007-ல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சிகள்) தங்களின்கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) போல கருவூலத்திலிருந்து ஊதியம் மற்றும் இதர சில்லறை செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டு ஆணையிட்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சிகள்) செலவினங்களை மேற்கொள்ள அலுவலகத் தலைவராக தனித்தனியே செயல்பட உத்தரவிட்டுள்ளது. வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (கிராம ஊராட்சி) நிதியைக் கையாளும் அதிகாரம் அளித்துள்ளதால், அவர்கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு அலுவலராக சுதந்திரமாகச் செயல்பட வழி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

### 3.4 உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி)—ஐத் தேர்வு செய்தல்

ஊரக வளர்ச்சித் துறையில் தொழில்நுட்பப் பிரிவை வலுவூட்டும் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 223 உதவிப் பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை





214 உதவிப் பொறியாளர்களுக்கு நியமன உத்தரவு வழங்கப்பட்டு 171 உதவிப் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) மாவட்டங்களில் பணியேற்றுள்ளனர். இதர நபர்கள் விரைவில் பணியேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.5 இரண்டாம் நிலை சாலைப் பணியாளர்களைத் தேர்வு செய்தல்

மாநிலம் முழுவதும் 1997 ஆம் ஆண்டிற்கு முன்னர் தினக் கூலிகளாகப் பணிபுரிந்த கல்வித் தகுதியுள்ள தொழில்நுட்ப உதவியாளர்களின் நிலையை ஒரு சிறப்பினமாகப் பரிசீலித்து 255 நபர்களுக்கு சாலை ஆய்வாளர் - நிலை 2 ஆகப் பணியமர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

### 3.6 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பல்வேறு நிலையிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புதல்

இந்த அரசு, மே 2006-ல் பொறுப்பேற்றபோது திட்டங்களைச் செயல்படுத்துவதில் மிகுந்த பாதிப்புகள் ஏற்படக்கூடிய அளவுக்குப் பல்வேறு நிலைகளில் ஏராளமான பணியிடங்கள் காலியாக இருந்தன. உதவி இயக்குநர் நிலையிலிருந்து அதற்குக் கீழுள்ள அனைத்து நிலைப் பணியிடங்களையும் பூர்த்தி செய்திட இந்த அரசு ஆணையிட்டது. மொத்தமுள்ள 17,819 காலியிடங்களில் உதவி இயக்குநர்கள், உதவிப் பொறியாளர்கள், இளநிலை வரைவு அலுவலர்கள், பணிப் பார்வையாளர்கள், சாலை ஆய்வாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள், ஓட்டுநர்கள் என 13 வகையான பணியிடங்களில் 16,347 நபர்கள் பல்வேறு தேர்வு முறைகளில் பணிமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள காலிப் பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும்.

## 4. மத்திய அரசுத் திட்டங்கள்

### 4.1 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஒரு அங்கமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தனித் திட்டமாக 1997-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும், வீடில்லாத ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித்தருதல் இத்திட்டத்தின் முக்கிய

[2008 ஏப்ரல் 15

நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நபர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்கான ஒரு நிதியாண்டின் மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 60 சதவீதம், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்குப் (SC/ST) புதிய வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை மேம்பாடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40% ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற நபர்களுக்கு ஒதுக்கப்படும். மேற்கண்ட இனங்களில் 3%-ஆனது உடல் ஊனமுற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட வீடுகளில் 15 சதவீதம் சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் எனவும் மாநிலங்களை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 75:25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 4.1.1 புதிய வீடுகள்

1-4-2005 முதல் சாதாரண நிலத்தில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ. 25,000/- எனவும், கடினவகை நிலப்பரப்பில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ. 27,500/- எனவும் மத்திய அரசால் அலகுத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பிப்ரவரி, 2008-ல் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மத்திய நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதன் அடிப்படையில் இத்தொகையை ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 10,000/- உயர்த்தி சாதாரண நிலத்தில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ. 35,000/- எனவும், கடினவகை நிலப்பரப்பில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றிற்கு ரூ. 37,500/- எனவும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழக அரசு ஒவ்வொரு வீட்டிற்கும் கான்கிரீட் கூரை அமைப்பதற்குக் கூடுதல் நிதி வழங்குகிறது. 2006-2007 முதல் புதிய வீடு ஒன்றுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்கான மானியத்தினை ரூ. 9,000/-லிருந்து ரூ.12,000/-ஆக உயர்த்தி மாநில அரசு வழங்கியது. வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 20 சதுர மீட்டராகும். புதிய வீடுகள் அனைத்தும் சுகாதாரக் கழிப்பிடம் மற்றும் புகையில்லாச் சூளை அடுப்புகளுடன் கட்டப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள் மூலம் செலவு குறைவான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயனாளிகள் கட்டுமானப் பணியினை மேற்கொள்கின்றனர்.



2008 ஏப்ரல் 15]

இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் புதிய வீடுகளுக்கான கட்டுமானப் பொருள்களின் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டு, மாநில அரசால் வழங்கப்படும் கான்கிரீட் மேற்கூரை மானியம் ரூ.12,000/-லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது மத்திய அரசால் உயர்த்தி அறிவிக்கப்பட்ட அலகுத் தொகையுடன் சேர்த்து உயர்த்தி வழங்கப்படும். இதன்படி கான்கிரீட் மேற்கூரைக்கான மாநில அரசின் கூடுதல் ஒதுக்கீடான ரூ.20,000/-உம் சேர்த்தால் இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான மொத்த மதிப்பீடு ரூ. 37,000/-லிருந்து ரூ. 55,000/-எனவும், கடின தரையில் கட்டப்படும் ஒரு வீட்டிற்கான மொத்த மதிப்பீடு ரூ.39,500/-லிருந்து ரூ.57,500/- எனவும் உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கழிவறை அமைக்க பயனாளிக்கு முழு சுகாதார இயக்க நிதியிலிருந்து ரூ. 1,200/- மானியமாக வழங்கப்படுகிறது.

### 4.1.2. கச்சா வீடுகளை மேம்படுத்துதல்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அதிகபட்சமாக 20% நிதியைக் கச்சா வீடுகளை மேம்படுத்த பயன்படுத்தலாம். கச்சா வீடுகளை மேம்படுத்த ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.12,500/- ஆகும்.

2008-2009 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 69,239 புதிய வீடுகள் கட்டவும், 15,386 கச்சா வீடுகள் மேம்பாடு செய்யவும், ரூ.400.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கு மாநில அரசு வழங்கும் கூடுதல் பங்குத் தொகையான ரூ.138.48 கோடியும் இதில் அடங்கும்.

### 4.2. சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் ஊதிய வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்து, அதன்மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து அளவினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். ஊரகப் பகுதிகளில் நிலைத்திருக்கக்கூடிய சமூக மற்றும் பொருளாதார சொத்துகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் இத்திட்டத்தின் இரண்டாவது நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி, மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு முறையே 20:30:50 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 15

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஏற்கெனவே இணைக்கப்பட்டுவிட்டதால், 2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டம் 19 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. 31-03-2008 உடன் இத்திட்டம் முடிவுறுவதுடன் அனைத்து மாவட்டங்களிலும் 01-04-2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### 4.3. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்—தமிழ்நாடு

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 02-02-2006-ல் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஆறு மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. 2007-2008-ல் இத்திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 01-04-2008 முதல் தமிழகத்தில் மீதமுள்ள 20 மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுடுத்தப்படுகிறது. அவையாவன (1) அரியலூர், (2) தருமபுரி, (3) பெரம்பலூர், (4) புதுக்கோட்டை, (5) இராமநாதபுரம், (6) நாமக்கல், (7) வேலூர், (8) தூத்துக்குடி, (9) விருதுநகர், (10) சேலம், (11) ஈரோடு, (12) திருச்சி, (13) காஞ்சிபுரம், (14) தேனி, (15) திருவள்ளூர், (16) மதுரை, (17) நீலகிரி, (18) கன்னியாகுமரி, (19) கோயம்புத்தூர், (20) கிருஷ்ணகிரி.

### 4.3.1. இத்திட்டத்தின் நோக்கங்கள்

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005, ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்தில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதை உறுதி செய்கிறது. இச்சட்டம் வேலைக்கான உரிமையை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும். இச்சட்டம் ஊரகப் பகுதி மக்களின் சமூக மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் நிரந்தரமான வாழ்வாதாரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 15]

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேலைக்கான அட்டையைக் கிராம ஊராட்சி வழங்கும். சட்டப் பூர்வமான குறைந்தபட்ச ஊதியம், மற்றும் ஆண், பெண் இருபாலருக்கும் சமமான ஊதியம் போன்றவை இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

### 4.3.2. நிதி பங்கீடு

இத்திட்டத்திற்கு ஆகும் செலவினை மத்திய, மாநில அரசுகள் 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. மத்திய அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்:—

அ. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான ஊதியச் செலவு முழுவதும்.

ஆ. கட்டுமானப் பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் ஊதியச் செலவில் 75 விழுக்காடு.

இ. வட்டார திட்ட அலுவலர் மற்றும் அவருக்கான உதவிப் பணியாளர்கள் மற்றும் பணியிட வசதிகள் உள்ளிட்ட நிருவாகச் செலவு.

ஈ. மத்திய வேலை உறுதிக் குழுவின் நிருவாகச் செலவினங்கள்

மாநில அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்:—

அ. கட்டுமானப் பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களுக்கான ஊதியச் செலவில் 25 விழுக்காடு.

ஆ. தொழிலாளர்கள் விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை கொடுக்க இயலவில்லையெனில் வழங்கக்கூடிய வேலையில்லாப் படி முழுவதும்.

இ. மாநில வேலை உறுதிக் குழுவின் நிருவாகச் செலவினங்கள்

**4.3.3. முன்னுரிமைப் பணிகள்**

தமிழக ஊரகச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பின்வரும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:—

அ. புதிய குளங்கள் உருவாக்குதல்.

ஆ. பாரம்பரிய நீர் ஆதார அமைப்புகளாக விளங்கும் குளங்கள், குட்டைகள், ஊருணிகள், கோவில் குளங்கள் மற்றும் பாசனக் குளங்களைப் புனரமைத்தல்.

இ. பாசனக் கால்வாய்களைத் தூர் வாருதல்.

ஈ. பாசனக் குளங்களைத் தூர் வாருதல் மற்றும் கரையினைப் பலப்படுத்துதல்.

உ. புதிய சாலைகள் அமைத்தல்.

ஊ. இதர நீர் வளப் பாதுகாப்பு, மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் / வெள்ளத் தடுப்புப் பணிகள்.

**4.3.4. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள்**

மே 2006-ல் பதவி ஏற்றவுடன், இந்த அரசு இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம், உரிய அளவில் இல்லை எனக் கண்டறிந்தது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினம், ரூ.3.00 கோடி மட்டுமே என்பதிலிருந்தும், மேலும் 6 மாவட்டங்களில் உள்ள 3,830 கிராம ஊராட்சிகளில் 924 கிராம ஊராட்சிகளில் மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதிலிருந்தும், இது தெரிய வந்தது.

இத்திட்டத்தின் குறைவான சாதனைக்குக் காரணங்களாக இருந்த பிரச்சினைகளையும் தடைகளையும் அடையாளம் கண்டு இந்த அரசு அவற்றைக் களைய தொடர் முயற்சிகளை மேற்கொண்டது.

இத்திட்டத்தினைச் செம்மைப்படுத்தவும், விரைவாகச் செயல்படுத்தவும் கீழ்க்கண்ட சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—



1. அரசாணை நிலை எண் 77, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-1) துறை, நாள் 14-07-2006 மூலம் இத்திட்டத்திற்கெனத் தனியான ஊரக விலைப் பட்டியல் ஒப்புதலளிக்கப்பட்டு, ஒரு நாளில் 7 மணி நேரம் வேலை செய்த பின்னரும் சட்டபூர்வமாக குறைந்த பட்ச தினக் கூலியாக நிர்ணயிக்கப்பட்ட ரூ.80/-ஐப் பெற பணி அளவு தொடர்பாக இருந்த முக்கியத் தடையை நீக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் அதிக அளவில் சரளைக் கல் பகுதிகள் உள்ளதால் இப்பகுதிகளுக்கெனத் தனி விலைப் பட்டியல், அரசாணை நிலை எண் 35, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12-03-2007 மூலம் வெளியிடப்பட்டது. இத்திட்டத்திற்கான 2007-2008 ஆம் ஆண்டிற்கான ஊரக விலை விகிதப் பட்டியல் அரசாணை எண். 101, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி-1)த் துறை, நாள் 13-06-2007 மூலம் வெளியிடப்பட்டது.

2. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்த அளவு 30 சதவீதம் பதிவுகள் மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டது. முதற்கட்ட மாவட்டங்களில் சராசரிப் பதிவுகள் 65 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. இரண்டாம் கட்ட மாவட்டங்களில் சராசரிப் பதிவுகள் 50 சதவீதத்தைக் கடந்துள்ளது. இது இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு அதிக அளவில் உள்ளதை எடுத்துக்காட்டுகிறது.

3. பணியாளர்களுக்கு இத்திட்டத்தின் அதிகமான தகவல்களைத் தரும் வகையிலும், வெளிப்படையானதாகவும், திட்டத்தைச் செயல்படுத்தும்போது தவறான நோக்கத்துடன் எளிதில் திருத்த இயலாத வகையிலும், ஏற்கெனவே இருந்த தனி நபர் வேலைக்கான இலவச அட்டை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

4. இத்திட்டச் செயல்பாட்டினை ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் முனைப்போடு கண்காணிக்க ஊராட்சி ஒன்றியங்களின் வாகனம் ஒவ்வொன்றுக்கும் மாதம் 50 லிட்டர் கூடுதலாக எரிபொருள் வழங்கி அரசு ஒப்புதல் அளித்துள்ளது. உதவி செயற் பொறியாளர்களுக்கு 75 லிட்டர் கூடுதல் எரிபொருள் அனுமதித்து அரசாணை நிலை எண் 27, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி-1)த் துறை, நாள் 20-02-2008 மூலம் வெளியிட்டுள்ளது.

5. கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் முறையாகச் செயல்படுத்துவதற்கு மக்கள் நலப் பணியாளர்களும் பொறுப்பாக்கப்பட்டுள்ளனர்.

6. திட்டத்தினை முறையாகச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும், மாவட்ட, கோட்ட, வட்டார மற்றும் ஊராட்சிகள் அளவில் அமைச்சுப் பணியாளர்கள் தொழில்நுட்ப மற்றும் கணினிப் பணியாளர்களைக் கூடுதலாக நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7. ஒப்பந்தக்காரர்களைப் பயன்படுத்துவது தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளதால், இத்திட்டப் பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் மறைமுகமாக நுழைவதைத் தவிர்க்க 100 சதவீதம் முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

8. இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் பணிகள் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிற்குக் குறையாமல் இருக்க வேண்டுமென பின்வரும் காரணங்களுக்காக வலியுறுத்தப்படுகிறது. (அ) ஒரே பணியிடத்தில் தொடர்ந்து 30 நாட்களுக்கு வேலைவாய்ப்பு (ஆ) உருவாக்கப்படும் சொத்துக்கள் நிலைத்திருக்கக் கூடியதாகவும், சமுதாயத்திற்குப் பயன்தரத் தக்கதாகவும் இருத்தல் (இ) அதிக அளவிலான சிறிய பணிகளுக்கு நிதி ஆதாரங்கள் பரவலாக சென்றடைவதைத் தவிர்த்தல் (ஈ) பணிகளைத் தீவிரமாகக் கண்காணித்தல் மற்றும் முறைகேடான செலவினங்களை பெருமளவில் குறைத்தல்.

9. இத்திட்டத்தின்கீழ் பணிகளில் ஈடுபடும் வேலையாட்களுக்கு தினக் கூலி வெளிப்படையாகவும், நியாயமாகவும் வழங்க குழுவில் இடம் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபர்களில் குறைந்தபட்சம் 4 நபர்களின் முன்னிலையில் தினக் கூலியானது வழங்கப்படல் வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது:—

அ. ஊராட்சி மன்றத் தலைவர் - குழுத் தலைவர்

ஆ. ஊராட்சித் துணைத் தலைவர்

இ. வேலை நடைபெறும் பகுதியின் வார்டு உறுப்பினர்

ஈ. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த வார்டு உறுப்பினர் (வரிசை எண் 1, 2 மற்றும் 3-ல் குறிப்பிட்டுள்ள நபர்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த நபர் இல்லாதிருப்பின்)

உ. தரம் பிரிக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களிலிருந்து இரண்டு ஊக்குநர்கள்

ஊ. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி





10. இத்திட்டத்தினைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும், அரசாணை நிலை எண் 117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சிஜிஎஸ்-1) துறை, நாள் 14-09-2006-ன்படி 25 நபர்கள் கொண்ட தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது கூட்டங்கள் முறையே 25-11-2006, 11-06-2007 மற்றும் 03-03-2008-ல் நடைபெற்றன.

11. மேலாண்மை தகவல் திட்டத்தின் (MIS) மூலம் திட்டச் செயல்பாடுகள் திறமையாகக் கண்காணிக்கப்படுவதை உறுதி செய்ய ஏதுவாக முதல் மற்றும் இரண்டாம் கட்ட மாவட்டங்களிலுள்ள 141 வட்டாரங்களுக்கும் தலா 3 கணினிகள் மற்றும் 1 பிரிண்டர் அனுமதிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்ட மாவட்டங்களுக்கும் கணினி, பிரிண்டர் மற்றும் கணினி அறை வசதிகள் 2008-2009-ம் ஆண்டில் செய்து கொடுக்கப்படும்.

12. இத்திட்டச் செயல்பாடுகளில் வெளிப்படையான நிருவாகத்தை உறுதி செய்ய சமூக தணிக்கை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. அனைத்து ஊராட்சிகளிலும் 2007-2008 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 மற்றும் சனவரி 26 ஆகிய தினங்களில் நடைபெற்ற கிராம சபையில், ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளையும் சமூகத் தணிக்கை செய்யப்பட்டது. இதே போன்று 2008-2009-ம் ஆண்டில் நடைபெறும் கிராம சபை கூட்டங்களுடன் சமூகத் தணிக்கையும் மேற்கொள்ளப்படும்.

இந்த அரசு எடுத்து வரும் சீரிய முயற்சிகளால், 31-3-2008 வரை ரூ.619 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டதுடன், 800 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பயனடைந்தவர்களில் 82 சதவீதம் பெண்களும், 56 சதவீதம் ஆதி திராவிடர்களும் ஆவர். இத்திட்டம், கிராமப்புற ஊதியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### 4.4. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், 1999-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வறுமைத் துயர் போக்கிடும் பொருட்டு செயல்படுத்தப்பட்டுவரும் முக்கியத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் வறுமைகோட்டிற்குக் கீழ் உள்ள மக்களைக் கொண்டு பல்வேறு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தச் சுய உதவிக்

குழுக்களுக்கு திறன் வளர் பயிற்சி அளிப்பதுடன் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றுத் தரப்படுகிறது. மேலும் அடிப்படைக் கட்டுமான வசதிகளையும், இந்த சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவான இதர உதவிகளையும் இத்திட்டம் வழங்குகிறது. இத்திட்டத்தின் செலவினத்தை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் ஏற்கின்றன.

இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு, சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி மற்றும் பொருளாதார உதவி அளிப்பதற்கான மானியம் வழங்க பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதி நிதி, சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்கும், அவற்றுக்கு அடிப்படை மற்றும் திறன் வளர் பயிற்சி அவற்றுக்கும் பயன்படுத்தப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள், பொருட்கள் உற்பத்தி செய்வதை மேம்படுத்த தேவையான அடிப்படைக் கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதற்கு மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதம் வரை செலவிடலாம். சுய உதவிக் குழுக்கள் முதல்முறை தரம் பிரிக்கப்பட்ட பிறகு சுழல் நிதியாக ரூ. 25,000/- (வங்கிக் கடன் ரூ.15,000/- மற்றும் மானியம் ரூ. 10,000/-) வழங்கப்படுகிறது. இரண்டாவது முறை தரம் பிரிக்கப்பட்ட பிறகு தகுதி வாய்ந்த குழுக்களுக்கு அதிகபட்சமாக திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது ரூ. 1.25 இலட்சத்துக்கு மிகாத மானியத்துடன் பொருளாதாரக் கடன் வழங்கப்படுகிறது.

2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூ.174.69 கோடி கடன் இலக்குடன், ரூ.105.87 கோடி நிதி ஒதுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை மேலும் பயனுள்ள வகையில் 2008-09 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காகக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன:—

(i) இத்திட்டத்தின் பெரும்பகுதி நிதி, மகளிர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தகுதியுள்ள சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

(ii) சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்டங்களில் பொருட்காட்சி காலண்டர் தயாரிக்கப்பட்டு வருகிறது. காலண்டரில் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி பொருட்காட்சிகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.



(iii) தற்போது, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டச் செயலாக்கம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை இயக்குநரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அதேசமயம், கிராமப்புறப் பெண்கள் ஆற்றல் பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் மகளிர் திட்டம் மற்றும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் திட்டம் மற்றும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**4.5. முழு சுகாதார இயக்கம்**

மத்திய அரசு 1-4-1999 முதல் ஒருங்கிணைந்த ஊரக சுகாதாரத் திட்டத்தை மாற்றியமைத்து, முழு சுகாதார இயக்கமாகத் துவக்கியது. தீவிரப் பிரச்சாரத்தின்மூலம் முழு சுகாதாரத்தின் அவசியத்தை உணர்த்தி, தேவையை ஏற்படுத்தி, மாற்று வழிமுறைகள்மூலமாக அத்தேவையை நிறைவு செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1-4-2006 முதல் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பின் விவரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது:—

(அ) தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், நிருவாகச் செலவினங்கள் மற்றும் ஊரக சுகாதார விற்பனை அங்காடிகள் 80:20.

(ஆ) தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை மற்றும் சமுதாய சுகாதார வளாகங்கள், 20 சதவீதம் பயனாளிகள் ஊராட்சிகளின் 60:20:20.

(இ) பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிக் கழிப்பறைகள் - 70:30.

[2008 ஏப்ரல் 15

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 110-(ஈ)-ன்படி, ஊராட்சிகளில் சுகாதாரம் மற்றும் தூய்மையினைப் பராமரிப்பது ஊராட்சிகளின் கட்டாயக் கடமையாகும். திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்றுவது என்பது, அனைத்து ஊராட்சிகளுக்கும் குறிப்பாக, மாநகராட்சி மற்றும் பெரிய நகராட்சிகளுக்கு அருகில் உள்ள ஊராட்சிகளுக்கு ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. ஒரு தனிப்பட்ட ஊராட்சியால் திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்ற ஏற்பாடு செய்வது என்பது சாத்தியமில்லை. எனவே, நகர்ப்புறங்களுக்கு அருகில் உள்ள பல ஊராட்சிகளை ஒரு தொகுப்பாக அமைத்தோ, அல்லது கிராம ஊராட்சிகளை அதன் அருகில் உள்ள மாநகராட்சிகள் அல்லது நகராட்சிகளுடன் இணைந்து திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பழக்கவழக்கங்களின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த, பல் ஊடக மக்கள் தொடர்பு சாதனங்கள் (Multi Media Campaign) மூலம் இந்த ஆண்டு மாநில அளவில் ஒரு விழிப்புணர்வு இயக்கம் நடத்தவும், அதன்மூலம் தனிநபர் கழிவறை கட்டுவதை ஊக்கப்படுத்தவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### 4.5.1. நிர்மல் கிராம புரஸ்கார்

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் 'நிர்மல் கிராம புரஸ்கார்' என்ற விருதினை 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசு அறிவித்தது. இத்திட்டத்திற்கான ஊக்கத் தொகை அட்டவணை எண் 8-ல் உள்ளவாறு வழங்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 15]

## அட்டவணை-8

### நிர்மல் கிராம புரஸ்கார் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் ஊக்கத் தொகை விவரம்

(ரூ. இலட்சத்தில்)

| விபரம் | மக்கள் தொகை | ஊக்கத்தொகை |
|---|---|---|
| கிராம ஊராட்சி | 1,000-க்கு கீழ் | 0.5 |
| | 1,000 - 1,999 | 1 |
| | 2,000 - 4,999 | 2 |
| | 5,000 - 9,999 | 4 |
| | 10,000 மற்றும் அதற்கு மேல் | 5 |
| வட்டாரம் | 50,000 வரை | 10 |
| | 50,001 மற்றும் அதற்கு மேல் | 20 |
| மாவட்டம் | 10 இலட்சம் வரை | 30 |
| | 10 இலட்சத்திற்கு மேல் | 50 |

இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 296 கிராம ஊராட்சிகளுக்கு நிர்மல் கிராம புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டு இவ்விருதுக்காக 1960 கிராம ஊராட்சிகள் மற்றும் 11 வட்டார ஊராட்சிகளிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டு மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

### 4.6. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

மத்திய மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகள்மூலம் உருவாக்கப்படும் உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்படும் இடைவெளிகளைப் பூர்த்தி செய்து அதன்மூலம் முழுமையான வளர்ச்சிக்கு வித்திடுவது, இத்திட்டத்தின் நோக்கமாகும். நாடாளுமன்ற உறுப்பினரால் தேர்வு செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை, மாநிலங்களவை) தலா ரூ.2.00 கோடி,

ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மக்களவை உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில், அவரவர் தொகுதிக்குட்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாநிலங்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்திற்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளைப் பரிந்துரைக்கலாம். நியமன உறுப்பினர்களைப் பொறுத்தவரை, இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பணிகளைச் செயல்படுத்த பரிந்துரைக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர், பணிகளுக்கு நிருவாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலும் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் அனைத்து வகையான பராமரிப்புப் பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. குட்டை, ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் போன்றவற்றைத் தூர்வாரும் பணிகளும் பராமரிப்புப் பணிகளாகக் கருதப்படுவதால் இத்திட்டத்தின்கீழ் இப்பணிகளை மேற்கொள்ள இயலாது.

2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள ரூ. 114 கோடி நிதி ஒதுக்கப்படும்.

## 4.7 பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

2000 ஆம் ஆண்டு மத்திய அரசால் பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம், 25-12-2000 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி அனைத்துப் பருவ காலத்திற்கு ஏற்ற சாலை வசதியினை 1,000 குடும்பங்கள் கொண்ட குடியிருப்புகளுக்கு 2003 ஆம் ஆண்டுக்குள் 500 முதல் 1000 வரை குடும்பங்களைக் கொண்ட குடியிருப்புப் பகுதிகளுக்கு 2007 ஆம் ஆண்டுக்குள் ஏற்படுத்தித் தருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 100 சதம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுவதாகும். ஒன்று முதல் மூன்றாவது கட்டம் வரையில் ரூ.434.10 கோடி மதிப்பீட்டில் 3364.62 கி.மீ. நீளமுள்ள சாலை எடுத்துக்கொள்ளப்பட்டு இந்நாள் வரை ரூ.385.12 கோடி செலவில் 3274.60 கி.மீ. நீள சாலைப் பணிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் முடிக்கப்பட்டுள்ளது. நான்காவது கட்டத்தில் (2004-2005) ரூ.117.27 கோடி மதிப்பீட்டில் 820.48 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் கட்டத்தின்கீழ் ரூ.182.05 கோடி மதிப்பீட்டில் 849.13 கி.மீ. நீள சாலைப்



பணிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்நாள்வரை ரூ.67.81 கோடி செலவில் 296.48 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தற்போது, பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்ட நிதியைப் பயன்படுத்தி ஊரக சாலையைக் குறிப்பிட்ட கால வரையறைக்குள் மேம்பாடு செய்ய மத்திய அரசால் பாரத் நிர்மாண் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டுக்குள், அனைத்துப் பருவ காலத்திற்கும் ஏற்ற சாலை வசதியினை 1,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்கும் மற்றும் 500-க்கும் மேற்பட்ட மலைவாழ் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களைக் கொண்ட குடியிருப்புப் பகுதிகளுக்கும் செய்து தருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாரத் நிர்மாண் திட்டத்தில் ஊரகச் சாலைகள் கூறின்கீழ், 6,669 கி.மீ. நீளமுள்ள சாலைகளை வேளாண் பொருட்கள் உற்பத்தியாகும் இடங்களைச் சந்தைகளுடன் இணைக்கப்படுவதை உறுதி செய்ய 2008-2009 ஆம் ஆண்டில் இரண்டு கட்டங்களாக மேம்பாடு செய்யப்படவுள்ளது. முதல் கட்டமாக 801 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் ரூ.196 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு ஒப்புதல் பெறப்பட்டவுடன், இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தின் 2-வது கட்டமாக 2500 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்து 1,000 மற்றும் 1,000-ற்கும் மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட கருத்துருக்களுக்கு மாநில அளவிலான நிலைக் குழுவின் அனுமதி பெற்று விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, மத்திய அரசின் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 4.8. தேசிய கரிம வாயுத் திட்டம்

தேசிய கரிம வாயுத் திட்டம், 100 சதவீதம் மத்திய அரசு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பொதுப் பிரிவினருக்கு ரூ. 2,100/- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் சிறு விவசாயிகளுக்கு ரூ. 2800/- மற்றும் மலைப் பகுதியில் ரூ.3500/- மானியமாக வழங்கப்படுகிறது. 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.62 இலட்சம் உத்தேச ஒதுக்கீடு ஆகும்.

## 5. மாநிலத் திட்டங்கள்

### 5.1. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஐந்து ஆண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் ஒரு திருப்பு முனைத் திட்டமாக அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எனும் புதிய திட்டத்தை அரசாணை எண் 115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-2)த் துறை, நாள் 11-09-2006 மற்றும் அரசாணை எண் 189, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி-2)த் துறை, நாள் 27-12-2006-ல் அறிவித்துள்ளது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில் தற்போது, செயலாக்கத்தில் உள்ள அனைத்து மத்திய, மாநிலத் திட்டங்களிலேயே இதுதான் மிகப் பெரிய திட்டமாகும். இந்தத் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால், 21-01-2007 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள திருமாதலம்பாக்கம் ஊராட்சியில் துவக்கி வைக்கப்பட்டது.

அநேக கிராம ஊராட்சிகள் மிகவும் குறைந்த வருவாய் உள்ளவையாக இருப்பதாலும், சட்டப்பூர்வ கடமைகள் ஆற்றுவதற்கு அல்லது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குச் சிரமப்படுகின்ற காரணத்தாலும், இத்திட்டத்தின்கீழ் தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளை ஒவ்வொரு வருடமும் தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தி, அதனடிப்படையில் ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளும் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். 1997 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த முந்தைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள் ஐந்தாம் ஆண்டில் (2010-2011) எடுத்துக்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டு ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.20 இலட்சம் வீதம் 2,540 கிராம ஊராட்சிகளுக்கு ரூ. 508 கோடியும், 2007-2008 ஆம் ஆண்டுக்கு 2,534 கிராம ஊராட்சிகளுக்கு ரூ. 511.86 கோடியும் அரசு ஒதுக்கீடு செய்தது. 2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.509.64 கோடியில் 2,521 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.



மத்திய அரசுத் திட்டங்களின் வழிகாட்டும் நெறிமுறைகள், வழக்கமாக எவ்விதத் தளர்வும் இல்லாத விதிமுறைகளைக் கொண்டுள்ளன. மேலும், மக்கள் விரும்புகின்ற பணிகளை எடுத்துச் செய்வதற்கான நெகிழ்வுத் தன்மையற்றதாகவும் உள்ளன. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன்படி சட்டப் பூர்வமான கடமைகளை நிறைவேற்றிட கிராம ஊராட்சிகளுக்குப் போதிய நிதி வசதியும் அளிக்கப்படவில்லை. மத்திய அரசின் திட்டங்களில் உள்ள இந்த இரண்டு இடைவெளிகளையும் நிறைவு செய்யும் வகையில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மொத்த நிதியான ரூ.20 இலட்சத்தில் ரூ.5 இலட்சம் வரையறுக்கப்படாத நிதியாகவும் எஞ்சியுள்ள நிதி வரையறுக்கப்பட்ட இனங்களுக்காகவும் செலவு செய்யலாம். மேலும், இதர துறைகளின், குறிப்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை, சமூக நலத் துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை திட்டங்களின் நிதி ஆதாரங்களை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் இதர திட்டங்களுடனும் இயன்ற அளவு ஒருங்கிணைத்து ஒவ்வோர் ஆண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கிராம ஊராட்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திற்கும் குறைந்தபட்சம் ரூ.1 கோடி நிதியை அனைத்து அரசுத் திட்டங்களின்மூலம் ஒருமுகப்படுத்துவதை உறுதி செய்வது அரசின் நோக்கமாகும்.

இத்திட்ட முக்கியமான வழிகாட்டும் நெறிமுறைகளில் சில பின்வருமாறு:—

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), தொடர்புடைய வட்டாரத்தின் உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) / வட்டாரப் பொறியாளர், தொடர்புடைய கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் கிராம நிருவாக அலுவலர் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நிதிகளின்கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் தேர்வு செய்யும்.

2. தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்குக் கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

[2008 ஏப்ரல் 15

3. ஒவ்வொரு கிராமத்திற்கும் சிமென்ட் கான்கிரீட் சாலைகள் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து எடுக்கலாம்.

4. கிராமத்திற்கு ஒரு குளம் / ஊருணி, ரூ.3.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் செலவில் வரையறுக்கப்பட்ட நிதிப் பிரிவிலிருந்து ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். படித் துறை அமைத்தல், குளத்திற்குள் சிறு குளம் அமைத்தல் மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகியவை இதன்கீழ் உள்ள பணிகளாகும். கிராமத்தில் குளம் அல்லது ஊருணி ஏதும் இல்லாத நிலையில், கோயில் குளங்கள் மற்றும் சிறு பாசனக் குளம் தூர் வாரும் பணி எடுத்துச் செய்யலாம். குளம் தூர் எடுத்தலில் தற்போதுள்ள மட்டத்திற்குக்கீழ் குறைந்தபட்சம் 2 மீ. ஆழமும், குளத்தின் மையப் பகுதியில் சிறு குளம் தூர் எடுத்தலில் மேலும் 1 மீ. ஆழமும் தூர் எடுத்தல் வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5. வாய்ப்புள்ள இடங்களில் மீன் வளர்ப்புக் குளங்கள், சுய உதவிக் குழுக்களிடம் மீன்பிடி உரிமையுடன் ஒப்படைக்கப்பட வேண்டும்.

6. ஒவ்வொரு அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திலும் சுடுகாடு / இடுகாடு மேம்படுத்தப்பட்டு இணைப்புச் சாலைகள், சுற்றுச் சுவர், சுடுகாட்டுக் கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதி அமைக்கப்பட வேண்டும்.

7. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்தில் ரூ.1.5 இலட்சம் ஒதுக்கீட்டில் பள்ளி விளையாட்டு மையம் அல்லது ரூ.1 இலட்சம் ஒதுக்கீட்டில் சமுதாய விளையாட்டு மையம் அமைக்கப்பட வேண்டும்.

8. இக்கிராமங்களில் நூலகக் கட்டடம் கட்டப்படும் அல்லது ஏற்கெனவே உள்ள கட்டடம் நூலகமாக மாற்றியமைக்கப்பட்டு பயன்படுத்தப்படும். இந்நூலகத்திற்கு ரூ.50,000/-க்குக் குறையாமல் புத்தகங்கள் வாங்கப்படும்; மற்றும் ரூ.50,000/- மதிப்பிற்கு நூலகத்திற்குத் தளவாடங்கள் வாங்கப்படும். ஒவ்வொரு நூலகத்திற்கும் மதிப்புறு நூலகர் நியமிக்கப்படுவார்.

9. சாத்தியம் உள்ள இடங்களில் கிராமச் சந்தைகள் அமைக்கப்பட வேண்டும்.



2008 ஏப்ரல் 15]

10. மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1 சதவீதம் தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), விளையாட்டுப் பொருள்கள், நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் அறைகலன்கள் தவிர, அனைத்துப் பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் ஆவார். அரசாணை (நிலை) எண். 186, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.2), நாள் 16-11-2007-ன்படி ரூ.5 இலட்சத்திற்குக் குறைவாக உள்ள பணிகளில் மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத நிலையிலோ அல்லது ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட தொகை மிக அதிகமாக இருப்பதாலோ அல்லது ஒப்பந்ததாரரால் பணிகள் பாதியில் கைவிடப்பட்டாலோ, கிராம ஊராட்சிகள் இப்பணிகளைத் துறை மூலம் மேற்கொள்ளவும் ரூ.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணிகளாக இருப்பின் ஒப்பந்தப்புள்ளிமூலம் கிராம ஊராட்சிகளே பணிகளை மேற்கொள்ள அரசு வழி வகுத்துள்ளது.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட விளையாட்டு மையங்களில் விளையாட்டுப் பொருள்களைப் புதுப்பிக்க ரூ 10,000/- வரை செலவு செய்ய கிராம ஊராட்சிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## 5.2. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். சட்டமன்றத் தொகுதிக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தனது தொகுதியில் செய்யப்பட வேண்டிய மேம்பாட்டுப் பணிகளைத் தேர்ந்தெடுத்து பரிந்துரைப்பார். பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர், நிருவாக அனுமதி வழங்குவார். அரசாணை நிலை எண் 134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மாஅதி-2), நாள் 29-9-2006-ல் 2006-2007-ம் ஆண்டுக்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கான ஒதுக்கீட்டை தலா ரூ1.00 கோடியிலிருந்து ரூ1.20 கோடியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 50 சதவீதம் (ரூ.60 லட்சம்) நிதி அரசு குறிப்பிட்டுள்ள முன்னுரிமைப் பணிகளை எடுத்துச் செய்வதற்கும்

மீதமுள்ள 50 சதவீதம் (ரூ.60 லட்சம்) தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம்பெறும் பணிகளைத் தவிர்த்து சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரின் விருப்பப் பணிகளை நிறைவேற்றவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட ரூ.60 இலட்சம் தலைப்பில் கீழ்க்கண்ட பணிகள் முன்னுரிமைப் பணிகளாக அறிவிக்கப்பட்டிருந்தன: 1. கப்பிச் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல் / தார்ச் சாலைகளைப் புதுப்பித்தல் 2. ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் மேற்கண்ட பணிகளுடன் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் 3. மழைநீர் வடிகால் வசதிகளுடன்கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

ஊரகப் பகுதிகளில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்படும் தொகுப்பு வீடுகள்போல், கிராம ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குகீழ் வசிக்கும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்காக தனி வீடுகள் மற்றும் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், 1997 வரை அரசுத் திட்டங்களின்கீழ் கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழுதுநீக்கம் செய்யவும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.

வரையறுக்கப்படாத நிதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளலாம்:

1. அனைத்து வகையான அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசுக் கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றுக்குக் கட்டடம் கட்டிக் கொடுத்தல், சுற்றுச் சுவர் அமைத்தல், தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

2. ஊராட்சி ஒன்றிய/அரசு பள்ளிகள் மற்றும் அரசுக் கல்லூரிகள் ஆகியவற்றுக்குக் கட்டடம் கட்டுதல், சுற்றுச் சுவர் அமைத்தல், தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.





3. பொது விநியோகக் கடைகள், நேரடிக் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையக் கட்டடம் கட்டுதல்.

4. நகர்ப்புறப் பகுதிகளில் 1997 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனங்களால் கட்டப்பட்டுப் பழுதடைந்துள்ள வீடுகளைச் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையுடன், ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ.10,000/- வரை பழுதுநீக்கும் பணிகள் மேற்கொள்ளலாம்.

2008-2009 ஆம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட நிதியான ரூ.60.00 இலட்சத்தில் ரூ.10.00 இலட்சத்தினை ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அங்கன்வாடிக் கட்டடங்கள் மற்றும் சமையலறைக் கட்டடங்கள் கட்டவும், மீதம் உள்ள ரூ.50.00 இலட்சத்தில் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் தார்ச் சாலைகள், சிமெண்ட் கான்கீரிட் சாலைகள், இடுகாடு/சுடுகாடு வசதிகள் மற்றும் நகர்ப்புறங்களில் தேவைக்கேற்ப மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் அமைக்கவும் ஒதுக்கீடு செய்யப்படும். சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, 2008-2009 ஆம் ஆண்டில் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் வசதிகள் ஏற்படுத்தும் பணிகளையும் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் போன்று, குளங்கள், ஆறுகள், ஊருணிகள் மற்றும் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகளைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

2008-2009 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு சுமார் ரூ.282 கோடியாகும்.

### 5.3 ஊராட்சி ஒன்றிப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்களைப் படிப்படியாகப் பழுதுபார்த்துச் சீரமைப்பதற்கு இத்திட்டம் வழி செய்கிறது. தமிழ்நாட்டில் சுமார் 22,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளும்,

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன. உரிய பராமரிப்பில்லாததால், 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் உள்ள 10,248 ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2008-2009 ஆம் ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களிலுள்ள சுமார் 5,500 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள், பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு ரூ. 60 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 5.4 'நமக்கு நாமே' திட்டம்

'நமக்கு நாமே' திட்டம், மாநில அரசுத் திட்டமாகும். குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு பொது மக்கள் பங்களிப்பாகவும், இரண்டு பங்குத் தொகை அரசு மானியமாகவும் கொண்டு, ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் அவசியமான பணிகளைப் பொது மக்களே தேர்வு செய்து திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்படுத்தலாம்.

'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளிக் கட்டடங்கள் (சுற்றுச் சுவர் உட்பட) நூலகங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், கால்நடை மருந்தகங்கள், மதிய சத்துணவுக் கூடங்கள், விடுதிகள், குடிநீர் ஆதாரப்பணிகள், அரசு நியாய விலைக் கடைகள், பாலங்கள் மற்றும் சிறிய பாலங்கள் கட்டுதல், சாலைகள் மற்றும் தெருக்களைத் தரம் உயர்த்துதல், சிமெண்ட் கான்கீரிட் சாலைகள் அமைத்தல், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலைத் திட்டுக்கள், நீரூற்று, தெரு விளக்குகள், அறைகலன்கள் (பர்னிச்சர்), அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளிகள் மற்றும் நூலகங்களுக்குக் கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குதல், அரசு நிதி உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் கட்டுதல் ஆகிய பணிகளை எடுத்துச் செய்யலாம்.

இத்திட்டத்திற்காக 2007-2008ஆம் ஆண்டில், அரசு ரூ. 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.



2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென ரூ. 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 5.5 பெரியார் நினைவு சமத்துவபுரம்

சமூக நீதியை மேம்படுத்தவும், தந்தை பெரியார் அவர்களின் சமூக, சமத்துவச் செய்தியைப் பரப்பவும், இந்த அரசு 1997-1998 ஆம் ஆண்டு முதல் அனைத்துச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழும் வகையில் 145 சமத்துவபுரங்களை மாவட்டங்களில் அமைத்துள்ளது.

23-1-2008 அன்று சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் "பெரியார் பெயரால் மேலும் 95 சமத்துவபுரங்களை அமைப்பதால், அவருடைய தலையாயக் கொள்கையான சமுதாயச் சமத்துவக் கொள்கை பரவுவதற்கு மேலும் சிறப்பான வழி ஏற்படும் என்பதற்காக அந்தப் பணியை இந்த அரசு தொடங்க முடிவு செய்துள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மீண்டும் தொடர்ந்து 95 சமத்துவபுரங்களை அமைக்கவும், முதற்கட்டமாக 2008-2009 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் (நீலகிரி மாவட்டம் தவிர) தலா ஒன்று வீதம், 29 சமத்துவபுரங்கள் அமைப்பதற்கும் அரசு முடிவு செய்துள்ளது. ஒரு சமத்துவபுரத்தில் 100 வீடுகள் இருக்கும். ஒவ்வொரு வீடும் சுமார் ரூ.1.20 இலட்சம் செலவில் அமைக்கப்படும். சாலை, தெரு விளக்குகள், குடிநீர் வசதிகள் மற்றும் பொது விநியோகக் கடை ஆகிய வசதிகள் ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ஏற்படுத்தப்படும்.

சமத்துவபுரங்கள் அமைப்பதற்கான மொத்த செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்கும். மாநிலத்தில் 29 சமத்துவபுரங்களை அமைப்பதற்கு 2008-2009-ஆம் ஆண்டில் ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 5.6 நபார்டு – ஊரக உள்கட்டமைப்பு நிதி XIII - 2007–2008

2006-2007 ஆம் ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் 3,989 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகளை மேம்பாடு செய்வதற்கான தமிழ்நாடு அரசின் கருத்துரு அடிப்படையில் நபார்டு வங்கி ரூ.410 கோடி அனுமதித்துள்ளது.

ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ.120 கோடி நிதி அனைத்து மாவட்டங்களுக்கும் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை விரைவில் விடுவிக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் 2008-2009-ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்படும்.

**5.7 12-வது நிதிக் குழு மானியம் 2007-2008**

அரசாணை எண் 222 (எச்.வி.2), நெடுஞ்சாலைத் துறை, நாள் 01-11-2006-ல், 2006-2007 ஆம் ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில், ரூ.103.60 கோடி மதிப்பீட்டில் 1897.05 கி.மீ. நீளத்திற்கான ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பழுதடைந்த தார்ச் சாலைகளைப் பராமரிக்கவும், மேம்படுத்தவும் ஆணையிடப்பட்டது. அதன்படி அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 103.60 கோடி மதிப்பீட்டில் 1,821.25 கி.மீ. நீளமுள்ள சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 1,554.96 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.66.71 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

2008-2009 ஆம் ஆண்டிற்கும் ரூ.103.60 கோடி நிதி, சாலைகள் மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்படும்.

**5.8 தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்**

பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நக்சலைட்டுகள் தலையெடுப்பதைத் தடுக்க சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் 2003-04 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 2007-08 ஆம் ஆண்டிற்கு ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதிய வீடுகள் கட்டுதல், பல்வேறு அடிப்படை வசதிகள் உருவாக்குதல், இளைஞர்களுக்குத் தேவையான பயிற்சிகள் அளித்தல் ஆகிய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டிற்கும் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



**6. பகுதி – 2 திட்டங்கள்**

2008-2009 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் பகுதி-2 திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளன:—

**6.1 உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) அலுவலகங்களுக்கு நிகரி இயந்திரம் வழங்குதல்**

29 உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) அலுவலகங்களுக்கு ரூ.4.64 இலட்சம் மதிப்பீட்டில் நிகரி இயந்திரங்கள் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

**6.2 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் மற்றும் மாவட்டங்களில் உள்ள வளர்ச்சிப் பிரிவு அலுவலகங்களுக்குக் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்**

மாவட்டங்களில் உள்ள வளர்ச்சிப் பிரிவுக்குக் கூடுதலாகத் தலா 3 கணினிகள் (Desk Top Computer) மற்றும் உபகரணங்கள் வழங்க அரசு அனுமதித்துள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.43.50 இலட்சம் ஆகும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள 9 அலுவலர்களுக்கு பிரிண்டர் ரூ.1.98 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

**6.3 வாகனங்கள்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மற்றும் வட்டார அலுவலகங்களுக்குப் பழைய வாகனங்களுக்குப் பதிலாக 25 புதிய வாகனங்கள் வழங்க ரூ. 112.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.4 பயிற்சி நிறுவனங்கள்**

மண்டல ஊரகப் பயிற்சி நிறுவனங்களின் விடுதிகள் மற்றும் பயிற்சிக்கான உபகரணங்கள் வழங்க ரூ. 25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.5 தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்**

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்குக் கணினி உபகரணங்கள், படம் காட்டி (LCD Projector) மற்றும் இதர வசதிகளை ரூ.8.20 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

## 7. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983 ஆம் ஆண்டு பெண்கள் சமூகப் பொருளாதார வளர்ச்சியுடன் ஆற்றலும் பெற வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் மகளிர் திட்டத்தினைப் பிரதானமாகச் செயல்படுத்தி வருவதுடன் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சிறிய அளவில் தொடங்கப்பட்டு, படிப்படியாக வளர்ச்சியடைந்து 1997-1998 ஆம் ஆண்டு மகளிர் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது இத்திட்டம், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மகளிரை இணைத்து ஒரு மாபெரும் சக்தி வாய்ந்த இயக்கமாக இயங்கி வருகிறது.

இத்திட்டம், பெண்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தினை ஊக்கப்படுத்துவது மட்டுமல்லாமல், வருவாய் ஈட்டும் தொழில்கள் செய்யக்கூடிய அளவிற்கு அனைத்து நிலையிலும் அவர்களின் திறன்களை வளர்க்கிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், படிப்படியாக பல்வேறு நிலையான நலத் திட்டங்கள் வாயிலாக மகளிர் வாழ்வில் ஒரு சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### 7.1 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் தொலைநோக்குத் திட்டம்

ஏறத்தாழ 59 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள சுய உதவிக் குழு இயக்கம், காலப்போக்கில் சிறப்பான வளர்ச்சி பெற்று வியக்கத்தக்க சமூக மாற்றத்திற்கு வித்திட்டுள்ளது. இதுவரை, சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படாத பகுதிகளில் குழுக்கள் அமைப்பதும், சுய உதவிக் குழுவில் இதுவரை இணைக்கப்படாத மகளிரைக் குழுக்களில் இணைப்பதும் இந்நிறுவனத்தின் தலையாய குறிக்கோளாக இருக்கும். வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் அனைத்து பெண்களையும் குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோரை, அடுத்த மூன்றாண்டிற்குள் சுய உதவிக் குழுவில் சேர்ப்பதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.



மகளிர் திட்டத்தின்மூலம் மகளிரிடையே உருவாகியுள்ள சமூக ரீதியிலான ஆற்றலளிப்பு, பொருளாதார ரீதியாக எய்தப்படவில்லை. ஆதலால், இந்நிறுவனம் மகளிர் திட்டம் மற்றும் பொன்விழா கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தை ஒருங்கிணைத்து, சுய உதவிக் குழு மகளிரிடையே அதிக அளவில் தொழில்களை ஊக்குவிக்க முயற்சிக்கும்.

சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம்தான், குழுக்கள் நாளடைவில் நிலைத்த தன்மையினை அடைய இயலும். வலுவான தற்சார்புள்ள குழுக் கூட்டமைப்புகளைக் கிராம ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் மாநிலம் முழுவதிலும் அமைப்பது, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் தொலைநோக்குத் திட்டமாகும்.

### 7.2 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினை மறு சீரமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல்

மாவட்டத் தலைமையிடம் தவிர, களப் பணி மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ள பணியாளர்கள் இல்லாததால், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகளை முனைப்பாகச் செயல்படுத்த இயலாத நிலை காணப்பட்டது. இந்நிலையை மாற்றிட, அரசு தனது ஆணை நிலை எண் 106, நாள் 20-06-2007-ல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்கள் (ஆதி திராவிடர் நலம்) மற்றும் கிராம ஊர் நல அலுவலர்கள் ஆகியோரை மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் ஆணை பிறப்பித்தது. இந்த ஏற்பாடு 1-10-2007-லிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

மாவட்ட திட்ட அலுவலகத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், கூடுதலாக 30 உதவி திட்ட அலுவலர் பணியிடங்கள் அரசாணை நிலை எண் 177, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (CGS-II) நாள் 5-12-2006 மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திட்டங்களை முனைப்பாகச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக மாவட்ட அலகில் ஒப்பந்த அடிப்படையில் உதவி திட்ட அலுவலர்களை நியமனம் செய்வதற்கு அரசாணை நிலை எண் 30, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (CGS-II) நாள் 08-03-2007-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, 60 உதவி திட்ட அலுவலர்கள்,

பயிற்சிக்குப் பின் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், அரசாணை நிலை எண் 108, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (CGS-II), நாள் 21-06-2007-ன் அடிப்படையில் தலைமை அலுவலகத்தில் கண்காணிப்பை வலுப்படுத்த மூன்று கூடுதல் இயக்குநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 7.3 மகளிர் திட்டம்

மகளிர் திட்டம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் மக்கள் அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள 9,999 சுய உதவிக் குழுக்கள் உட்பட 2007-2008-ல் 25,484 புதிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்த்து மகளிர் திட்டத்தின்கீழ் மார்ச் 2008 ஆம் ஆண்டு வரை 58,80,875 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட 3,65,709 சுய உதவிக் குழுக்கள் இயங்குகின்றன. இவற்றின் மொத்த சேமிப்புத் தொகை ரூ.1,737.81 கோடிகளாகும்.

குழு உறுப்பினர்கள் மற்றும் ஊக்குநர் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் முறையான பயிற்சியே, மகளிர் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சுய உதவிக் குழுக்களின் தனிச் சிறப்பாகும். இப்பயிற்சிகள் மகளிரின் மனப்பாங்கில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் ஒற்றுமையுடன் குழுவாக, சிறப்பாகச் செயல்பட வழிவகுக்கிறது.

சுய உதவிக் குழுவின் கோட்பாட்டை அறிமுகப்படுத்த, அனைத்துக் குழு உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் பயிற்சி 4 பாடத் திட்டங்களாக 4 நாட்களில் அளிக்கப்படுகிறது. சுய உதவிக் குழு நிருவாகிகளான ஊக்குநர் மற்றும் பிரதிநிதி ஆகியோருக்கு 3 பாடத் திட்டங்கள் 6 நாட்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகள், குழுவை வழி நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு, குழுவாகச் செயல்படும் திறன் மற்றும் பதிவேடுகளைப் பராமரிக்கும் திறன் ஆகியவற்றை மேம்படுத்த உதவுகிறது. இவை நீங்கலாக ஆர்வமுள்ள உறுப்பினர்கள் தொழில் தொடங்குவதர் அல்லது சுய வேலைவாய்ப்புப் பெறுவதற்குத் தேவையான தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியுடன் 5 நாட்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சியும் இணைத்து அளிக்கப்படுகிறது.



### 7.3.1 குழு தர மதிப்பீடு மற்றும் கடன் உதவி

தர மதிப்பீடு என்பது குழுக்களின் தரத்தையும் அவை கடன் பெறுவதற்கான தகுதியினை நிர்ணயிக்க உதவும் அளவுகோலாகும். சுய உதவிக் குழுக்களின் நிதிப் பராமரிப்புப் பாங்கு மற்றும் செயல்பாடுகளைப் பிரதிபலிக்கும் பல்வேறு காரணிகளைக் கருத்தில் கொண்டு தர மதிப்பீடு செய்யப்படுகிறது. மகளிர் திட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, அரசு சாரா தொண்டு நிறுவனம் மற்றும் வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு, மேற்கூறப்பட்ட தர மதிப்பீட்டைச் செய்கிறது. குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்களுக்குப் பின் மேற்கொள்ளப்படும் முதல் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் குழுக்கள், சுழல் நிதி மற்றும் நேரடி வங்கிக் கடன் பெற தகுதியடைகின்றன. 6 மாதங்களுக்குப் பின்னர் பொருளாதாரக் கடன் பெற விரும்பும் குழுக்கள், தொழில் தொடங்குவதற்குத் தகுதி உடையவைகளா என்பதை உறுதி செய்யும் பொருட்டு இரண்டாவது தர மதிப்பீடு செய்யப்படுகிறது. மார்ச் 2008 ஆம் ஆண்டு வரை 3,31,782 சுய உதவிக் குழுக்கள் தர மதிப்பீட்டில் தேர்வு பெற்று அவற்றில் 3,11,798 சுய உதவிக் குழுக்கள் வங்கிகளின்மூலம் கடனுதவி பெற்றுள்ளன. இதுவரை, குழுக்களுக்கு வங்கிகள் வழங்கியுள்ள மொத்த கடன் தொகை ரூ.2,673.40 கோடியாகும்.

### 7.3.2 நகர்ப்புற குழுக்களுக்கு சுழல் நிதி

முதல் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் ஊரகப் பகுதிகளிலுள்ள சுய உதவிக் குழுக்கள், வங்கிகளிடமிருந்து கடன் வசதி பெற ஏதுவாக பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.10,000/- சுழல் நிதி மானியமாக வழங்கப்படுகிறது. அரசு வழங்கும் மானியம் தவிர, ஒவ்வொரு குழுவும் ரூ.30,000/- வரை வங்கியிடம் கடன் பெறலாம். இந்தச் சுழல் நிதி மானியம், நகர்ப்புறக் குழுக்களுக்குக் கிடைக்கப் பெறாததால் அவை வங்கிகளிலிருந்து கடன் பெறுவதில் சிரமங்கள் இருந்தன. எனவே, அரசு 2006-2007 ஆம் ஆண்டு முதல் நகர்ப்புறக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் திட்டத்தினை அறிவித்தது. இதற்கென ஏற்கனவே, ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 30,000 நகர்ப்புறக் குழுக்கள் சுழல் நிதி மானியம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள சுழல்நிதி பெற தகுதி பெற்ற 1,50,000 சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி

[2008 ஏப்ரல் 15

மானியம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென நடப்பாண்டில் ரூ.150 கோடி நிதி அரசு ஒதுக்கியுள்ளது.

### 7.3.3 தொண்டு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்

குழு அமைத்தல், குழுக்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் குழுக்களைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை, மகளிர் திட்டம் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்துகிறது. இப்பணிகளை மேற்கொள்ள தொண்டு நிறுவனங்களுக்கு நிதி அளிக்கப்படுகிறது. விருப்பமுள்ள தொண்டு நிறுவனங்கள் விதிமுறைகளின்படி தகுதி பெற்று இருப்பின், மகளிர் திட்டத்துடன் இணைந்து செயல்பட அங்கீகாரம் வழங்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்களுக்கான அங்கீகார விதிமுறைகள் மற்றும் ஒப்பந்தம், அரசாணை எண் 155, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 5-9-2007-ன்படி திருத்தப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

* தரமாகச் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை.
* வங்கிக் கடன் மற்றும் தொழில் நடவடிக்கைகளுக்கு வழிவகை செய்யும் தொண்டு நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை.
* தொண்டு நிறுவனங்களின் உடனான ஒப்பந்தம் மற்றும் அளிக்கப்படும் சேவைக் கட்டணம், அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் அமையும்.
* ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்ற மக்கள் அமைப்புகளின் வளர்ச்சிக்குக் கூடுதல் வாய்ப்பு அளிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் இருக்கும்.

தொண்டு நிறுவனங்களை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருத்திய ஒப்பந்தம், 2008-2009 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும்.

### 7.3.4 மணிமேகலை விருதுகள்

சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில்



2008 ஏப்ரல் 15]

மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை அரசு அறிவித்துள்ளது. மாநில அளவில் 5 சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில், ஒரு சிறந்த சுய உதவிக் குழுக் கூட்டமைப்பு மற்றும் மூன்று சிறந்த சுய உதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாகச் செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கான விருதுகள், செப்டம்பர் 2007-ல் வழங்கப்பட்டன. இவ்விருதுகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மேலும் சிறப்பாகச் செயல்பட ஊக்குவித்துள்ளன.

### 7.3.5 சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும் என அறிவித்தார்கள். சுய உதவிக் குழு மகளிர், சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகி பயன்பெறவும், இந்த அடையாள அட்டைகள் உதவும். இந்த அடையாள அட்டையில், சேமிப்பு, தர மதிப்பீட்டின் நிலை, பெற்ற கடன் மற்றும் குழு உறுப்பினர்களின் விவரங்கள் இருக்கும். அடையாள அட்டை வழங்கும் பணி, தற்போது 4 வட்டாரங்களில் முன்னோடியாக சோதனை முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2008-2009 ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படும்.

### 7.3.6 ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு

மகளிர் திட்டத்தின்கீழ், கிராம ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களை இணைத்து ‘ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு’ என்ற பெயரில் கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. உறுப்பினர்களின் ஆற்றல் மற்றும் வளங்களை ஒன்றுசேர்த்து, சாதகமான முறையில் பொருட்கள் கொள்முதல் மற்றும் விற்பனைக்கு ஏற்பாடு செய்வதன்மூலம் உறுப்பினர் குழுக்கள் பலனடைய கூட்டமைப்புகள் உதவுகின்றன. வலுவான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் நிலைத்த தன்மை மற்றும் தற்சார்பு பெறுவதை உறுதி செய்யும்.

[2008 ஏப்ரல் 15

2006-2007 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்த, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

* சிறப்பாகச் செயல்படும் 6,367 கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூ.10,000/- வழங்கப்பட்டுள்ளது.

* கூட்டமைப்பின் ஒற்றுமையை வலுப்படுத்தவும், திறமைகளை வெளிக் கொணரவும், வட்டார மற்றும் மாவட்ட அளவில் குழுக் கூட்டமைப்புகளுக்கிடையே கலைப் போட்டிகள் நடத்தப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டிற்கு இச்செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ.1.60 கோடி நிதியைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட போட்டிகளில், சுய உதவிக் குழுக்கள் பெருவாரியாகப் பங்கேற்று, தங்கள் பேரார்வத்தினை வெளிப்படுத்தின.

* கூட்டமைப்புகள் சிறப்பாகச் செயல்படுவதை ஊக்குவிக்கும் வகையில், மாநில மற்றும் மாவட்ட அளவில் மணிமேகலை விருதுகள் வழங்கப்படுகின்றன.

* கூட்டமைப்புப் பிரதிநிதி, தர மதிப்பீடு செய்யும் குழுவில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

* கூட்டமைப்பிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஊதியம் பட்டுவாடா செய்யும் குழுவில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

* கூட்டமைப்பின் ஒரு பிரதிநிதியைச் சமத்துவபுரம் பயனாளிகளைத் தெரிவு செய்யும் குழுவில் உறுப்பினராகச் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

* தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் குழு அமைப்பு நிதி, கண்காணிப்பு மற்றும் பயிற்சித் தொகை பெறுவதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சான்று அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 15]

* சிறப்பாகச் செயல்படும் கூட்டமைப்புகள், தொண்டு நிறுவனங்களுக்கு இணையாக மகளிர் திட்டத்தில் இணைந்து புதிய குழு அமைத்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

* தொண்டு நிறுவனங்களுடனான புதிய ஒப்பந்தத்தின் ஒரு பிரிவாக ஊராட்சி அளவில் அமைக்கப்படும் அனைத்துக் குழுக்களும், கூட்டமைப்பில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ளது.

எக்குழுவினரும் விட்டுப்போகாமல் சேர்க்கப்பட்டு, அனைவரும் பங்கேற்றுச் செயல்படத்தக்க வகையில், 2008-2009 ஆம் ஆண்டில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறு சீரமைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கூட்டமைப்புகளை தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975-ன் கீழ் பதிவு செய்வதன்மூலம், அவை சட்ட ரீதியான அங்கீகாரம் பெறவும், வங்கிகள்மூலம் எளிதாகக் கடன் பெறவும் வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.3.7. இளைஞர்களுக்கான தொழில் பயிற்சி

தமிழ்நாடு, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் முதன்மை மாநிலமாகத் திகழ்வதால், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில், தொழில் திறன் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரித்து வருகிறது. தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப, முறையான பயிற்சி அளிப்பதன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் சமுதாயமும், இளைஞர்களும் பயனடைகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சிறந்த நிறுவனங்களான எம்.ஆர்.எப், நோக்கியா, செயின்ட் கோபெயின் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் 11,485 இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சி அளித்துள்ளது.

இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாகச் சமுதாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டத்தினை 2006-2007 ஆம் ஆண்டு அரசு அறிவித்தது. மார்ச் 2008 வரை, 19,698 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2,640 குழுக்களுக்குச் சுழல் நிதியாக தலா ரூ.10,000/- வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.8 2008–2009 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் 2008-2009 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ள பணிகள்:

* மகளிர் திட்டம் மற்றும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் மூலம் மிகவும் ஏழைகள், குறிப்பாக தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபெறும் தொழிலாளர்களைக் கொண்டு, 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும்.
* குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, அங்குப் புதிய குழுக்கள் அமைக்கப்படும்.
* எக்குழுவினரும் விட்டுப்போகாமல் சேர்க்கப்பட்டு, அனைவரும் பங்கேற்றுச் செயல்படத்தக்க வகையில், 2008-2009 ஆம் ஆண்டில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறு சீரமைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
* ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குச் சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்க, இவற்றைத் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன் கீழ் பதிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
* குறைந்தபட்சம் 25,000 இளைஞர்கள் பயனடையும் வகையில் இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சித் திட்டம் விரிவாக்கப்படவுள்ளது.
* தகுதி பெற்ற அனைத்துச் சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி மானியம் வழங்கி, வங்கிகள்மூலம் கடனுதவி பெற்றுத் தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
* அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் படிப்படியாக அடையாள அட்டை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.
* சுய உதவிக் குழுக்களின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றிட குழு உறுப்பினர்களிலிருந்து 2,500 சமுதாயப் பயிற்றுநர்கள் உருவாக்கப்பட உள்ளனர்.



### 7.4 பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தினை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்துகிறது.

கடலோரப் பகுதியிலுள்ள மக்களைத் தற்சார்புடையவர்களாக ஆக்குவதன்மூலம், அவர்களுக்கு நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்குதல் இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். வள மேலாண்மை முறைகள் மற்றும் வருவாய் ஈட்டும் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்துவதன்மூலமாகவும் இக்குறிக்கோள் எய்தப்படும்.

இத்திட்டம் ரூ.298.57 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் 8 வருட காலத்திற்குச் செயல்படுத்தப்பட உள்ளது.

சுமார் 6 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களிலுள்ள கடலோர ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த, சென்னையில் ஒரு திட்ட நிருவாக அலுவலகமும், ஆறு மாவட்டங்களில் திட்டச் செயலாக்க அலுவலகங்களும், அரசாணை எண் 163, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (CGS-2) துறை, நாள் 24-09-2007-க்கு இணங்க உருவாக்கப்பட்டு, தேவையான பணியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

சில ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒவ்வொரு பகுதியிலும் திட்டச் செயலாக்கத்திற்கான அடிப்படை அலகுகளாக, பகுதி வள மையங்கள் செயல்படும். திட்டச் செயலாக்கப் பகுதி, 30 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மக்கள் அமைப்புகளுக்கு, பகுதி வள மையத்திலுள்ள பணியாளர்கள் உதவி செய்வார்கள்.

இத்திட்டம், தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, மக்கள் அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்படவுள்ளது. திட்டத்தில் பணியாற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்களைத் தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2008 ஏப்ரல் 15

இத்திட்டத்தின்கீழ், சமுதாய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், மீன் வியாபார சங்கங்கள் அமைத்தல், சுய உதவிக் குழுக்களைப் பயிற்சிகள்மூலம் வலுப்படுத்துதல், இளைஞர்களுக்கான தொழில் பயிற்சி அளித்தல் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்குச் சிறு கடன்கள் வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

மீனவர்களின் நிலைத்த வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கு, பொறுப்பான மீன்பிடி கொள்கைகளைப் பின்பற்ற, இத்திட்டம் ஊக்குவிக்கும். இத்துறையில் அனுபவமுள்ள நிறுவனங்களின் உதவியுடன் கடலோரப் பகுதி மற்றும் மீன் வளத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் இத்திட்டத்தின்கீழ் முன்னோடிச் செயல்பாடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஆரம்பகட்ட செயல்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்ட முதலாமாண்டு செயல்பாட்டிற்காக அரசு ரூ. 10 கோடி நிதி வழங்கியுள்ளது. மேலும், 2008-2009 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 54.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 8. உலக வங்கி உதவி பெறும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம்

வளர்ச்சித் திட்டங்களின் பயன்கள் முழுமையாக ஏழை மக்களைச் சென்றடைவதை உறுதி செய்து, அவர்களின் வறுமையை ஒழிப்பது தமிழக அரசின் தலையாயக் குறிக்கோள்களில் ஒன்றாகும். இக்குறிக்கோளினை அடைவதற்கான ஒரு முக்கியமான முயற்சி, உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் ஆகும். இத்திட்டம், 2000-2001-ல் உருவாக்கப்பட்ட "தமிழ்நாடு வறுமை ஒழிப்புத் திட்டம்" என்ற கருத்துருவின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டதாகும். நவம்பர் 2005-ல் துவக்கப்பட்ட இத்திட்டம், 6 வருட காலத்திற்குச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு 717 கோடி ரூபாயாகும்.

இத்திட்டத்தின் இலக்கு, மக்கள் ஊரகப் பகுதியிலுள்ள ஏழை எளிய குடும்பங்கள், மிகவும் நலிவுற்றோர், ஒதுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் ஊனமுற்றோர் ஆவர். இத்திட்டம் மக்களே செயல்படுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு கட்டத்திலும் மக்களின் பங்கேற்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் இலக்குக்கான மக்கள், மக்கள் பங்கேற்புடன்கூடிய ஆய்வு மூலம் கண்டறியப்படுகின்றனர்.



2008 ஏப்ரல் 15]

### 8.1 திட்டச் செயலாக்கப் பகுதிகள்

இத்திட்டம் 15 மாவட்டங்களில், மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களிலுள்ள 2,480 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

**அட்டவணை-9**

**திட்டச் செயலாக்கப் பகுதிகள் விவரம்**

| வ.எண் | மாவட்டம் | வட்டாரங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 5 | 80 |
| 2 | கடலூர் | 4 | 236 |
| 3 | காஞ்சிபுரம் | 4 | 231 |
| 4 | நாகப்பட்டினம் | 4 | 182 |
| 5 | நாமக்கல் | 6 | 121 |
| 6 | இராமநாதபுரம் | 4 | 164 |
| 7 | சேலம் | 6 | 146 |
| 8 | தேனி | 4 | 81 |
| 9 | திருவள்ளூர் | 5 | 203 |
| 10 | திருவாரூர் | 4 | 159 |
| 11 | திருநெல்வேலி | 6 | 156 |
| 12 | திருவண்ணாமலை | 4 | 160 |
| 13 | தூத்துக்குடி | 4 | 154 |
| 14 | வேலூர் | 5 | 211 |
| 15 | விழுப்புரம் | 5 | 196 |
| | **மொத்தம்** | **70** | **2,480** |

## 8.2 திட்டச் செயலாக்க அமைப்புகள்

திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு, மாநில அளவில் 'வாழ்ந்து காட்டுவோம்' மாநிலச் சங்கத்தினையும், மாவட்ட அளவில், மாவட்ட 'வாழ்ந்து காட்டுவோம்' சங்கங்களையும் சாரும்.

10-15 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய பகுதிக்கு, 5 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு திட்ட ஒருங்கிணைப்பு அணி, திட்டச் செயல்பாட்டிற்குத் துணை புரிகிறது. கிராம ஊராட்சி அளவில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் என்ற மக்கள் அமைப்பு, திட்டச் செயலாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது தவிர, கிராம சபையால் நியமிக்கப்படும் சமூகத் தணிக்கைக் குழு, திட்டத்தின் கோட்பாடுகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்கிறது.

### 8.2.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இலக்கு மக்களின் பெருவாரியான பங்கேற்புடன் உருவாக்கப்படும் ஒரு மக்கள் அமைப்பாகும். இதில் ஊராட்சியிலுள்ள ஒவ்வொரு குடியிருப்பிலிருந்தும் இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து ஒரு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் பிரதிநிதியாக இருப்பார். மேலும் ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக் கூட்டமைப்பின் செயலாளர், ஓர் ஊனமுற்றோர் பிரதிநிதி, கிராம அளவிலுள்ள பிற குழுக்களிலிருந்து 2 பிரதிநிதிகள் ஆகியோர், கிராம சபையின்மூலம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர். கிராம ஊராட்சித் தலைவர், இச்சங்கத்தின் அலுவல்சாரா தலைவராக இருப்பார்.

### 8.2.2 சமூக தணிக்கைக் குழு

கிராம சபையால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்ட சமூகத் தணிக்கைக் குழு, திட்டச் செயல்பாட்டினைக் கண்காணித்து, திட்டத்தின் பயன்கள், திட்டக் கோட்பாடுகளின் வரையறைகளுக்கு இணங்க இலக்கு மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்கிறது. இக்குழு, கிராம சபையின்கீழ் இயங்குவதுடன் அவ்வப்பொழுது கிராம சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்புடையதாகும்.



### 8.2.3 திட்டச் செயல்பாட்டின் நிலைகள்

இத்திட்டத்தில் முதற்கட்டமாக ஏழை, எளிய மக்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் போன்ற மக்களமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் அமைப்புகள் உருவாக்கப்பட்டு, அவர்களின் திறன் வளர்க்கப்பட்ட பின்னர், இலக்கு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் கவனம் செலுத்தப்படுகிறது. இத்திட்டம் கீழ்க்கண்ட நிலைகளாகச் செயல்படுத்தப்படுகிறது:

**அ. தொடக்க நிலை :**

* திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த தகவல் தொடர்பு முகாம்கள் நடத்துதல்.
* பங்கேற்கும் கிராம ஊராட்சிகளுக்குத் தொடக்க நிதி வழங்குதல்.
* மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல்.
* கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூகத் தணிக்கைக் குழுக்களை உருவாக்குதல்.

**ஆ. திறன் வளர்த்தல் நிலை**

* விடுபட்ட ஏழை மக்கள், ஊனமுற்றோர் ஆகியோரைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்.
* கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சமூகத் தணிக்கை குழு மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறன் வளர்த்தல்.
* இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் பயிற்சி வழங்குதல்.
* சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள்மூலம் கடன் வசதிகள் பெற்றுத் தருதல்.

**இ. வாழ்வாதார நிலை :**

* கிராம அளவில் வாழ்வாதார வளங்களை ஆய்ந்து, அவற்றின் அடிப்படையில் வருவாய் ஈட்டக்கூடிய தொழில்களைக் கண்டறிதல்.

* தனி நபர் மற்றும் குழுக்களின் தொழில் திட்டங்களுக்கு உதவி புரிதல்.

**ஈ. வலுப்பெறும் நிலை :**

* தொழில் கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்கி வலுப்படுத்துதல்.

* வணிக நிறுவனங்கள் மற்றும் பிற வள நிறுவனங்களுடன் இணைப்பினை ஏற்படுத்துதல்.

**8.3 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்திற்கும் மகளிர் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகள்**

* மகளிர் திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம், திட்ட அலுவலர்களின் வழிகாட்டுதலுடன், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் போன்ற மக்கள் அமைப்புகள்மூலமாகச் செயல்படுத்தப்படுகிறது.

* 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தில் ஏழை மகளிர் மட்டுமல்லாது, உடல் ஊனமுற்றோர், நலிவுற்றோர், பழங்குடியினர் ஆகியோர்மீதும் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

* மகளிர் திட்டச் செயலாக்கத்தில், கிராம ஊராட்சிகளுக்கு நேரடித் தொடர்பு இல்லை. இதற்கு மாறாக, 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தில், கிராம ஊராட்சிகளுக்கு முக்கியப் பங்கு உள்ளது.

* 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தில், வாழ்வாதார மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பெருவாரியான திட்ட நிதி இதற்கென ஒதுக்கப்படுகிறது.

**8.4 திட்டச் செயலாக்கத்தில் முன்னேற்றம்**

இத்திட்டம், அக்டோபர் 2006 முதல் 15 வட்டாரங்களில் முதற்கட்டமாகவும், ஏப்ரல் 2007 முதல் மேலும் 15 வட்டாரங்களில் இரண்டாம் கட்டமாகவும், 1,177 கிராம ஊராட்சிகளில்



செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டச் செயலாக்கப் பகுதிகளில் பின்வரும் பணிகள் நிறைவடைந்துள்ளன:

* மாவட்ட அளவிலும், பகுதி அளவிலும் பணியாளர்கள், அறிமுகப் பயிற்சி அளிக்கப்பட்டுப் பணியிலுள்ளனர்.

* தற்போது திட்டம் செயல்படுத்தப்படும் 1,177 கிராம ஊராட்சிகளுக்கும் ஊராட்சித் தொடக்க நிதி, தலா ரூ.35,000/- வழங்கப்பட்டுள்ளது.

* மக்கள் பங்கேற்போடு பயனடையும் மக்களைக் கண்டறியும் பணி, 1,162 கிராம ஊராட்சிகளில் முடிவடைந்து, கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

* 1,147 கிராம ஊராட்சிகளில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூகத் தணிக்கைக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பழங்குடியினர் குடியிருப்புகளில் 42 சிறப்புக் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

* முதல் தவணையாக 696 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு 20.15 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

* விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு, 2,629 புதிய சுய உதவிக் குழுக்களும், ஊனமுற்றோரைக் கொண்டு 1,619 புதிய சுய உதவிக் குழுக்களும் தொடங்கப்பட்டுள்ளன.

* இத்திட்டத்தின்மூலமாக, 14,294 ஊனமுற்றோருக்கு தேசிய அடையாள அட்டைகள் பெற்றுத் தரப்பட்டுள்ளன.

* மகளிர் திட்டத்துடன் இணைந்து, 2,694 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், மூன்றாம் கட்டமாக 19 வட்டாரங்களில் உள்ள 591 கிராம ஊராட்சிகளில், பிப்ரவரி 2008 முதல் தொடங்கப்பட்டுள்ளது. திட்டச் செயலாக்கத்தின் இறுதி கட்டமான நான்காம் கட்டம், ஜூலை 2008 முதல் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டத் தொடக்கம் முதல் 31-03-2008 வரை இத்திட்டத்தின் செலவினம் ரூ.51.13 கோடியாகும். வரும் நிதியாண்டில் (2008-2009) இத்திட்டச் செயல்பாட்டிற்காக, வரவு-செலவுத் மதிப்பீட்டில், ரூ.114.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.5 மகளிர் திட்டம் மற்றும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் ஒருங்கிணைந்து செயல்படுதல்

'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில், மகளிர் திட்டத்தினை 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டப் பணியாளர்கள்மூலமும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் போன்ற மக்களைமைப்புகள்மூலமும் செயல்படுத்தப்படுகிறது. இதனால் ஒத்த பணியினை இரு வேறு அமைப்புகள் மேற்கொள்ளுதல் தவிர்க்கப்பட்டு, நல்ல ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு இணையாக, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களும் புதிய சுய உதவிக் குழுக்களை அமைத்து அவற்றிற்கான பயிற்சி மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்ள மகளிர் திட்டத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

## 9. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

### 9.1 முகவுரை

கடந்த 26.12.2004-ல் தமிழக கடற்கரைப் பகுதிகளை, சுனாமி தாக்கியதால் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மனித உயிர்கள், வாழ்வாதாரம் மற்றும் உடைமைகளுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டது. இது கடலோரப் பகுதிகளிலுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால், கடலோர மாவட்டங்களில், கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 3000 மீட்டர் வரை உள்ள பகுதிகள் மூழ்கடிக்கப்பட்டன.

தமிழக அரசு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து வள ஆதாரங்களையும் ஒருமுகப்படுத்தியது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பலநோக்கு நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசுடன் இணைந்து பாதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களை முந்தைய நிலைக்குக் கொண்டுவரவும், பாதுகாப்பான குடியிருப்புகளை மீண்டும் உருவாக்கிக் கொடுக்கவும், சேதமடைந்த பொதுச்



சொத்துக்கள் மற்றும் உள் கட்டமைப்புகளைப் புனரமைத்திடவும், தமிழக அரசு கீழ்கண்ட திட்டங்கள்மூலம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

(i) 307 கோடி ரூபாய் நிதியில் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் மற்றும் மானியத்துடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம். (Tsunami Emergency Assistance Project)

(ii) சுமார் 740 கோடி ரூபாய் மத்திய அரசின் மானியத்துடன் செயல்படுத்தப்படும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம். (Rajiv Gandhi Rehabilitation Package)

(iii) சுமார் 672 கோடி ரூபாய் நிதியில் உலக வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம். ((Emergency Tsunami Reconstruction Project)

சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உட்பட தமிழக அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்தி வருகின்றன. இதனை வருவாய்த் துறையில் உள்ள திட்ட மேலாண்மை அலகு ஒருங்கிணைப்பு செய்து வருகின்றது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதனால், இத்திட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிட ஒரு திட்டச் செயலாக்க அலகு தனியே ஏற்படுத்தப்பட்டு, 01-8-2005 முதல் செயல்பட்டு வருகின்றது.

### 9.2 சுனாமி மறுவாழ்வுத் திட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்

சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின்கீழ், 13-5-2006 வரை 4.95 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின்கீழ் எந்தச் செலவும் செய்யப்படவில்லை. 2006-2007 ஆம் ஆண்டில் திட்டச் செயலாக்கத்தினை விரைவுபடுத்திடவும், வாழ்வாதார மேம்பாடு மற்றும் உள் கட்டமைப்புகளைப் புனரமைப்பதற்கும் மிகவும் தேவையான உந்துதல் தரும் விதமாக தமிழக அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த உந்துதல் நல்ல பலனைத் தந்ததினால் 31-3-2008 முடிய இவ்விரு திட்டங்களின்கீழ் 263.41 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 15

சுனாமி திட்டங்களின் செயலாக்கத்தினை விரைவுபடுத்தும் பொருட்டு, சுனாமி திட்டச் செயலாக்க அலகு மற்றும் மாவட்டச் செயலாக்க அலகுகளுக்கென 237 பணியிடங்கள் இத்துறையில் தோற்றுவிக்கப்பட்டன. எனினும், 13-5-2006 வரை 61 பணியிடங்கள் மட்டும் நிரப்பப்பட்டிருந்தன. 13-05-2006-க்குப் பிறகு சுனாமி அவசரகால உதவித் திட்டம் மற்றும் சுனாமி மறுகட்டமைப்புத் திட்டங்களின்கீழ் மேலும் 442 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, இதுநாள் வரை 436 பணியிடங்கள் நிரப்பப்பட்டு திட்ட நடவடிக்கைகள் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**9.3 ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP)**

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களை முந்தைய நிலைக்குக் கொண்டுவரவும், குறிப்பாக ஏழை மக்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும், சேதமடைந்த பொது சொத்துக்கள் மற்றும் உள் கட்டமைப்புகளைப் புனரமைத்திடவும் அரசு எடுக்கும் நடவடிக்கைகள்மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் வறுமை நிலையை அகற்றுதல் ஆகியவற்றிற்கு மாநில அரசுக்கு உதவுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டம், 307 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 06-4-2005 முதல் மூன்று ஆண்டுகள் வரையிலான காலத்திற்குச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினால் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்கள் பயன்பெறும். வாழ்வாதாரம், சுகாதாரம் மற்றும் நிருவாகச் செலவு ஆகியவற்றிற்கான நிதியை ஆசிய வளர்ச்சி வங்கி 100 சதவீதம் மானியமாகவும், மற்றும் உள்கட்டமைப்புகளான ஊரகச் சாலைகள் மற்றும் பொது கட்டடங்களுக்கான நிதியை எளிதான கடனாகவும் அனுமதித்துள்ளது.

13-5-2006 வரை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவு 4.95 கோடி ரூபாய் மட்டும் ஆகும். கடந்த 22 மாதங்களில் இந்த அரசு, இத்திட்டத்தில் 251.54 கோடி ரூபாய் செலவினம் மேற்கொண்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்புப் பணிகளின் செயலாக்கத்தினைச் சிறப்பான அளவில் விரைவுபடுத்தியுள்ளது. சுனாமி அவசரகால உதவித் திட்டம் செயல்படுத்தும் அனைத்து



2008 ஏப்ரல் 15]

துறைகளின் மொத்தச் செலவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பங்கு மட்டும் 62 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் உட்கூறுகளில், 31-3-2008 வரையிலான நிதி நிலை முன்னேற்றம் கீழ்க்கண்டவாறு:-

**அட்டவணை – 10**

**சுனாமி அவசர கால உதவித் திட்டக் கூறுகள்**

*(ரூபாய் கோடியில்)*

| வ. எண் | திட்ட உட்கூறுகள் | ஒதுக்கப்பட்ட நிதி | 6-4-05 முதல் 13-5-06 முடிய செலவு | 14-5-06 முதல் 31-3-07 முடிய செலவு | 01-4-07 முதல் 31-3-08 முடிய செலவு | 31-3-08 முடிய மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வாழ்வாதாரம் | 190.10 | 2.88 | 112.07 | 53.09 | 168.04 |
| 2. | சுகாதாரம் | 5.86 | 0.92 | 0.01 | 0.00 | 0.93 |
| 3. | நிருவாகச் செலவு | 12.08 | 0.00 | 3.99 | 6.16 | 10.15 |
| 4. | ஊரக உள்கட்டமைப்பு | | | | | |
| | அ. சாலைகள் மற்றும் வடிகால்கள் | 93.63 | 1.15 | 26.26 | 43.81 | 71.22 |
| | ஆ. பொதுக் கட்டடங்கள் | 5.62 | 0.00 | 0.02 | 1.18 | 1.20 |
| | மொத்தம் | 307.29 | 4.95 | 142.35 | 104.24 | 251.54 |

**9.3.1 வாழ்வாதார உட்கூறு**

கடலோரப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக 190.10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வாழ்வாதாரத்திற்கான சுழல் நிதி மற்றும் பொருளாதார உதவி வழங்குதல், உடல் ஊனமுற்றோருக்குச் சிறப்பு உதவி மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய நடவடிக்கைகளில் நூறு சதவீதம் இலக்கு எய்தப்பட்டுள்ளது.

### அ. சுழல் நிதி

33,547 சுய உதவிக் குழுக்களுக்கு உதவும்பொருட்டு 88.82 கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சுழல் நிதி பெற்றிடாத ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் சுழல் நிதியாக 30,000/- ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான சுய உதவிக் குழுக்கள் மானியத்துடன் கூடிய கடனுதவி, வங்கிமூலம் பெற்றுள்ளனர்.

இந்த எளிய, நம்பகமான மற்றும் உடனே கிடைக்கக்கூடிய சிறுகடன் உதவியை அன்றாடப் பயன்பாட்டிற்கும், தேவையான தொழில் முதலீட்டிற்கும் ஏழைப் பெண்கள் பயன்படுத்துவதால், அவர்களின் வாழ்க்கை நிலை மாறியுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள, வருவாய் தரக்கூடிய சொத்துக்களை உருவாக்கவும் அல்லது ஏற்கெனவே உள்ள வருவாய் ஈட்டக்கூடிய சொத்துக்களை மேம்படுத்திக் கொள்ளவும் இந்நிதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

### ஆ. பொருளாதார உதவி

சிறு தொழில்களைத் திறம்பட நடத்திடக்கூடிய, நிலைத்துச் செயல்படும் சுய உதவி குழுக்களுக்குப் பொருளாதார உதவி மானியமாக 50 சதவீதமும், எஞ்சிய 50 சதவீதம் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்த்தல், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், மீன் ஊறுகாய் தயாரித்தல், செங்கல் உற்பத்தி செய்தல் போன்ற பல்வேறு தொழில்களை மேற்கொள்ளும் வகையில் 2,472 சுய உதவிக் குழுக்களுக்கு 31.55 கோடி ரூபாய் பொருளாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வுதவி மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள ஏதுவாகிறது.

இத்திட்டம் முடியும் காலம் அல்லது கடன் திருப்பி செலுத்தும் காலம் ஆகியவற்றில் எது முந்தையதோ அக்காலத்திற்கு வட்டிக்கான தொகையில் 4 சதவீதம் வட்டி மானியமாக வழங்கப்படும்.

### இ. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு உதவிகள்

பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் உடல் ஊனமுற்றோர், விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் ஆகியோர்



சமுதாயத்தில் மிகவும் பாதிப்புக்குள்ளானவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களின் சமுதாய உடைமைகள் மிகவும் குறைவாக உள்ளதால், பொது மக்களுக்கென உள்ள திட்டங்களின் பயன்களை இவர்கள் பெறுவது கடினமாக உள்ளது. மேலும் இப்பிரிவினர் வங்கிக் கடன் பெறுவதும் கடினமாக உள்ளது. இந்த அரசு உடல் ஊனமுற்றோர் வாழ்வாதார மேம்பாட்டிற்கெனப் பெருந்திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இதன்மூலம் 34,632 ஊனமுற்ற நபர்களுக்கு மானியமாக தலா 10,000/- ரூபாய் வீதம் 34.63 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பான்மையினர் வங்கியிலிருந்து 5,000/- ரூபாய் வீதம் கடன் பெற்றுள்ளனர். இவர்களுக்கும் இத்திட்டம் முடியும் காலம் அல்லது கடன் திருப்பிச் செலுத்தும் காலம் ஆகியவற்றில் எது முந்தையதோ அக்காலத்திற்கு வட்டிக்கான தொகையில் 4 சதவீதம் வட்டி மானியமாக வழங்கப்படவுள்ளது.

இவ்வுதவி, கடலோர ஊராட்சி ஒன்றிய/கிராம ஊராட்சிகளுக்கு மட்டுமென வரையறுக்கப்படாமல், கடலோர மாவட்டம் முழுவதும் உள்ள தகுதி வாய்ந்த உடல் ஊனமுற்றோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுதவியைப் பெற்ற பின்னர் தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கைத் தரம் பெருமளவில் உயர்ந்துள்ளது. இது உடல் ஊனமுற்றோர் நலனுக்காக இந்த அரசால் எடுக்கப்பட்ட முன் முயற்சிகளில் மிகப் பெரிய ஒன்றாகும்.

### ஈ. சமுதாய உள்கட்டமைப்பு சிறப்புத் திட்டங்கள்

இச்சிறப்புத் திட்டம்மூலம் பயிற்சி மற்றும் வாழ்வாதாரத் தோற்றுவிப்பு சம்பந்தமான கீழ்க்கண்ட சமுதாய உள்கட்டமைப்புகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

* 2005-2006 ஆம் ஆண்டு மாநில அளவில் மகளிர் சுய உதவி குழுக்கள் வளாகம் 5.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்பொழுது அவ்வளாகத்திற்கான வடிவமைப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான திருத்திய நிருவாக ஒப்புதல் 10.72 கோடி ரூபாய்க்கு அரசிடம் பெறப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்துவதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 15

* கடலோரப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலை கிடைக்கும் வகையில் 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு அவற்றில் 2 நிலையங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை மே 2008-க்கு முன்னர் கட்டி முடிக்கப்படும்.

* இந்திய அரசின் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்திக் குழுமம், மாநிலக் கைத்தறித் துறை மற்றும் ஆடை ஏற்றுமதி தொழில் அமைப்புகளுடன் கலந்து ஆலோசித்து, ஏற்றுமதி உற்பத்தியை மேம்படுத்தும் வகையில், 61.09 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவிலில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் தொகுதியின் தரத்தை உயர்த்த திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் நெசவாளர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டும் மற்றும் 250 தறிகள் மேம்படுத்தப்பட்டும் உள்ளன. நெசவாளர்களின் பயன்பாட்டிற்காக 5 தொழில் கூடங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

* கடலோரப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பால் பொருள் தொழில்கள்மூலம் வாழ்வாதாரத்தை உயர்த்திட, மொத்தம் 9 பால் குளிரூட்டும் பெரிய கலன்கள் நிறுவவும், 37 பாலகங்கள் ஆரம்பிக்கவும் மற்றும் 160 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும் 4.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்பாலகங்களை நடத்திட அவை சுய உதவிக் குழுக்களிடமே ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. சுத்தமான பால் பொருட்கள் தயாரித்தல், கால்நடைகளைப் பராமரித்தல், பால் விற்பனை போன்றவற்றில் சுய உதவி குழுக்களிலுள்ள உறுப்பினர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

* பாரம்பரியமிக்க நமது பண்பாட்டின் சின்னமாக விளங்கும் கிராம கைவினைஞர்கள் தொழில் மேம்பாட்டிற்காக, 51



2008 ஏப்ரல் 15]

இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு விதமான பாரம்பரியம் அல்லாத கைத் தொழில்களான மணம் வீசும் மெழுகுவர்த்தி செய்தல், களிமண் பொம்மைகள், விளக்கு நிழல் கோப்பைகள், செயற்கைக் கல் நகைகள், கயிற்றினால் வேயப்பட்ட ஊஞ்சல், ஊதுபத்திகள் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள சுமார் 1,000 ஊரகக் கைவினைஞர்கள் இதன்மூலம் பயன்பெறுவர்.

* காஞ்சிபுரம் மாவட்டம் மாமல்லபுரத்திலுள்ள பூஞ்சேரியில் 10.58 கோடி ரூபாய் செலவில் சிற்பப் பூங்கா அமைப்பதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட 125 முதல்நிலை சிற்பிகள் மற்றும் 1,000 சிற்பக் கைவினைஞர்கள் பயனடையவும், தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும் உள்கட்டமைப்பு வசதி அளிக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

* கன்னியாகுரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் செயல்பட்டுவரும் 93 மீனவச் சங்கக் கூட்டமைப்புகளுக்கு நடைமுறை மூலதனமாக 2.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்புகள் இதற்கு இணையான தொகையை வங்கிக் கடனாகப் பெற்றுள்ளன. 5,100 மீனவர்கள் இத்திட்டத்தின்மூலம் நேரடியாகவும் மற்றும் அவர்களது குடும்பங்களைச் சார்ந்த 20,000 பேர்களும் பயனடைந்துள்ளனர்.

* கடல் பாதுகாப்புப் பயிற்சித் திட்டத்தின்கீழ், சுமார் 25,000 மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குக் கடல் பாதுகாப்பு முறைகளில் 112.87 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படுவதன்மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**உ. திறனாக்க மேம்பாடு**

சுய உதவிக் குழுக்கள், செயல்திறன் மிக்க குழுக்களாக இயங்கும் வண்ணம், குழுக்களின் உறுப்பினர்களுக்கு, அடிப்படைப் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சிகளுக்காக 4.39 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதற்காக, பணியமர்த்தலில் பெயர் பெற்ற நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:-

**அட்டவணை - 11**

**நிறுவனங்கள் மூலம் திறனாக்க மேம்பாடு**

| வ எண். | நிறுவனம் | திறன் | பயிற்சி யாளர்கள் எண்ணிக்கை | பயிற்சிக்கான செலவினம் (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு திறந்தவெளி பயிற்சி பல்கலைக்கழகம் மற்றும் டாலி இந்தியா நிறுவனம் | கணக்கிடுதல் | 684 | 37.62 |
| 2. | தேசிய தகவல் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம் | கணினி | 830 | 49.80 |

பயிற்சி பெற்ற நபர்கள் தகுந்த வேலைவாய்ப்புப் பெற்றிட இந்நிறுவனங்கள் உதவி செய்யும்.

**9.3.2 சாலைப் பணிகள்**

திட்ட உட்கூறான ஊரக உள்கட்டமைப்பின்கீழ், கடலோர ஊராட்சிகளில் 700 கி.மீ நீளத்திற்கு 611 சாலைப் பணிகள் 94.31 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு 500 சாலைப் பணிகள் 71.22 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் மே 2008-க்குள் முடிக்கப்படும்..





**9.3.3 பொதுக் கட்டடங்கள்**

பொதுக் கட்டடங்கள் என்ற உட்கூறின்கீழ், கடலோர ஊராட்சிகளின் பழைய அலுவலகக் கட்டடங்களை மீளக் கட்டுதல், புனரமைத்தல் மற்றும் தரம் உயர்த்தும் 208 பணிகள், 6.43 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, 15 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் செயல்பாட்டில் உள்ளன. அனைத்துப் பணிகளும் மே 2008-க்குள் முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும் ஊராட்சிக் கூட்டங்கள் நடத்த இருக்கைகளுடன்கூடிய தனிக் கூட்டமன்றக் கூடம் கொண்டதாக அமையும்.

**9.3.4 சுகாதாரம்**

இத்திட்ட உட்கூறின்கீழ் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களிடையே பாதுகாப்பான சுகாதாரப் பழக்கவழக்கங்களை மேம்படுத்துவதற்காக, குறும்படக் காட்சிகள்மூலம் முனைப்பான சுகாதார இயக்கம் நடத்த 5.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை - 12**

**சுனாமி அவசர உதவி திட்டம் (TEAP)**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | திட்டக் கூறுகள் | நிதி | | செயல் | | சாதனை |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்த ஒதுக்கீடு | செலவு | இலக்கு எண்ணிக்கை | சாதனை எண்ணிக்கை | விழுக்காடு |
| I. | மானியம் | | | | | |
| (i) | வாழ்வாதாரம் | | | | | |
| 1. | சுழல்நிதி பெற்ற குழுக்கள் | 8882.00 | 8882.00 | 33547 | 33547 | 100 |
| 2. | பொருளாதார உதவி பெற்ற குழுக்கள் | 3154.84 | 3154.84 | 2472 | 2472 | 100 |

| வ. எண் | திட்டக் கூறுகள் | நிதி | | செயல் | | சாதனை |
|---|---|---|---|---|---|---|
| | | மொத்த ஒதுக்கீடு | செலவு | இலக்கு எண்ணிக்கை | சாதனை எண்ணிக்கை | விழுக்காடு |
| 3. | உடல் ஊனமுற்றோர் உதவி பெற்ற நபர்கள் | 3463.20 | 3463.20 | 34632 | 34632 | 100 |
| 4. | தனிநபர் மானியம், குழு அமைப்பதற்கான செலவு மற்றும் முந்தைய செலவு– நபர்கள் | 395.36 | 395.36 | 8844 | 8844 | 100 |
| 5. | பயிற்சி தனி நபர்கள் | 439.69 | 439.69 | சுமார் 1,10,000 | சுமார் 1,10,000 | 100 |
| 6. | சமுதாய உள் கட்டமைப்புகள் | 2674.91 | 468.80 | பணிகள் நடைபெற்று வருகின்றன. | | |
| | மொத்தம் | 19010.00 | 16803.89 | | | |
| | நிருவாக மற்றும் இதர செலவினம் | 1794.00 | 1108.00 | முன்னேற்றத்தில் உள்ளது | | |
| | மொத்த மானியம் | 20804.00 | 17911.89 | | | |
| II | கடன் | | | | | |
| (i) | சாலைப் பணிகள் | 9363.00 | 7122.00 | 700 கி.மீ | 545 கி.மீ | 78 |
| (ii) | பொதுக் கட்டடங்கள் | 562.00 | 120.30 | 223 | 15 | 7 |
| | மொத்தம் | 9925.00 | 7242.30 | | | |
| | பெரு மொத்தம் | 30729.00 | 25154.19 | | | |





### 9.4 மத்திய அரசின் நிதி உதவியுடன் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)

26-12-2004-ல் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட உடைமைகள் மற்றும் சமூக உள்கட்டமைப்புகளின் மறு கட்டமைப்பிற்காக மத்திய அரசின் சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு அங்கமாக, ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட சொத்துக்களை மீளக் கட்டித்தருதல் மற்றும் அவற்றின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் வாயிலாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலை இத்திட்டம் வலியுறுத்துகிறது.

#### 9.4.1 செயல்படுத்தப்படும் திட்டங்கள்

(அ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் வீடுகள் கட்டப்பட்ட இடங்களில், அந்நிறுவனங்களால் செய்யாமல் விடப்பட்ட அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கழிப்பறைகள் ஏற்படுத்துதல், நிலங்களைச் சமன் செய்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முதலில் ஒப்புக்கொண்டு, பின்னர் கட்டாமல் விலகிய வீடுகள் இத்திட்டத்தின்கீழ் தேவையான அடிப்படை வசதிகளுடன் கட்டப்படுகின்றன.

(இ) கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டருக்குள் அமைந்த எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் மற்றும் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 1000 மீட்டருக்குள் அமைந்து 01-01-2006 ஆம் தேதியில் 10 ஆண்டுகள் பழமையான அரசால் கட்டப்பட்ட வீடுகள் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் மீளக் கட்டப்பட்டு, தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன.

[2008 ஏப்ரல் 15

**9.4.2 தொண்டு நிறுவனங்களால் வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்**

(i) 128 இடங்களில் 138 கி.மீ நீளமுள்ள சிமெண்ட் சாலைகள் அமைத்திட, 40.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் சுமார் 90 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் 22.18 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள சாலைப் பணிகளை 2008 ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) 266.31 இலட்ச ரூபாய் செலவில் நிறுவப்படவுள்ள 3,019 தெரு விளக்குகளில் 2,696 தெரு விளக்குகள் 251.10 இலட்ச ரூபாய் செலவில் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன.

(iii) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் சுகாதார வசதியின்றி கட்டப்பட்ட 4,262 வீடுகளுக்குச் சுகாதார வசதிகளான கழிவு நீர்த் தொட்டிகள் கட்டுதல், உறிஞ்சு குழிகள் அமைத்தல் மற்றும் 495 தனிக் கழிப்பறைகள் கட்டுதல் ஆகியவை 4.54 கோடி ரூபாய் செலவில் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் 2,725 வீடுகளுக்கு 1.48 கோடி ரூபாய் செலவில் சுகாதார வசதிகள் தற்போது செய்து தரப்பட்டுள்ளன.

(iv) நாகப்பட்டினம் மாவட்டத்தில் 9 இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்ட வீடுகள் தாழ்வான நிலப்பகுதியில் அமைந்துள்ளதால், அவ்வீடுகளில் நீர் புகா வண்ணம் 2.76 கோடி ரூபாய் செலவில் மண் நிரப்பி நிலம் சமன்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 92 சதவீதம் நிலம் சமன்படுத்தும் பணி 1.92 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

**9.4.3 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டாமல் விடப்பட்ட வீடுகளைக் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்**

சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முதலில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு, சுனாமி ஏற்பட்டு இரண்டாண்டுகள் கழித்து வீடுகள் கட்டிக் கொடுப்பதிலிருந்து விலகிக் கொண்டன. இப்பகுதிகளில் இத்துறை வீடுகளை கட்டிக் கொடுக்கும் பணியையும், அவற்றிற்கு அடிப்படை



2008 ஏப்ரல் 15]

வசதிகளைச் செய்து கொடுக்கும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கான கீழ்க்கண்ட வரையறைகள் பின்பற்றப்படுகின்றன:-

(I) கட்டப்பட இருக்கும் ஒவ்வொரு வீடும் 325 சதுர அடி பரப்பளவைக் கொண்டதாக இருக்கும்.

(II) இவ்வீடுகள் இயற்கை இடர்ப்பாடுகளைத் தாங்கக்கூடிய பல்வேறு அம்சங்களுடன் கூடிய வீடுகளாகக் கட்டப்படும்.

(III) இப்பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், தேவையான பொதுக் கட்டடங்கள் ஆகியவை செய்து தரப்படும்.

இதன் மூலம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 20 இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டாமல் விடப்பட்ட 2,630 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இவற்றில் பெரும்பான்மையான வீடுகளை ஜூலை மாதம் 2008-ல் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

10.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், சமுதாயக் கூடங்கள், குழந்தைகள் நல மையங்கள், மழைநீர் வடிகால் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. இவற்றை ஜூன் மாதம் 2008-க்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**9.4.4 பாதிப்புக்குள்ளாகக் கூடிய வீடுகளை மீளக் கட்டுதல்**

கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 1,000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள பகுதிகளில் எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு, பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளைத் தாங்கக் கூடிய வகையில் வீடுகளை மீளக் கட்டித் தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். முதற்கட்டமாக, கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள பாதிப்புக்குள்ளாகக் கூடிய வீடுகள் மற்றும் இந்திரா குடியிருப்புத் திட்டம், சிங்காரவேலர் மீனவர் குடியிருப்புத் திட்டம் போன்றவற்றின்கீழ் கட்டப்பட்ட கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 1,000 மீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள, ஆனால் 01-01-2006-ல் 10 ஆண்டுகள் பழமையான வீடுகள்

[2008 ஏப்ரல் 15

இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கடலோர மாவட்டங்களில் சுமார் 20,000 வீடுகள் இத்திட்டத்தின்கீழ் மீண்டும் கட்டப்படுகின்றன.

அனைத்து கட்டுமானப் பணிகளும் 2008-2009 நிதியாண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கடலோர கிராம ஊராட்சிகளில் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 1,000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள அனைத்துக் கடலோர பகுதிகளிலும் ஒரு வீட்டிற்கு 40,000 ரூபாய் வீதம் அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், இடுகாடு மற்றும் எரி மேடை, கிராமக் குளம், தேவையான பொதுக் கட்டடங்கள் போன்றவை அமைத்துத் தர திட்டமிடப்பட்டுள்ளது. 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கண்ட வேலைகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

## 9.5 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர கால சுனாமி மறு கட்டமைப்புத் திட்டம் (ETRP)

தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மீளப் பெறவும், பாதிப்படைந்த வீடுகளை மீளக் கட்டிடவும் தமிழ்நாடு அரசு உலக வங்கியின் தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தொண்டு நிறுவனங்கள் சுனாமியால் நேரடியாக பாதிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டித் தர தாங்களாகவே முன்வந்ததால், உலக வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் தொகையில் கணிசமான சேமிப்பு ஏற்பட்டது.

அரசு இத்திட்டத்தின்கீழ் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1,000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிக்கக்கூடியவையாக அறியப்பட்ட வீடுகளை எதிர்காலத்தில் சுனாமி போன்ற பேரிடர்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் மீண்டும் கட்டித் தர முடிவு செய்துள்ளது.

உலக வங்கி நிதி உதவியுடன் அவசரகால சுனாமி மறு கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் இத்துறை கீழ்க்கண்ட கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது:-



2008 ஏப்ரல் 15]

(I) கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரையிலுள்ள கடலோரப் பகுதிகளில் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட சுமார் 22,000 வீடுகளை மீளக் கட்டித் தருதல்.

(II) அவசர காலத்தில் எளிதாக வெளியேறி தப்பித்துச் செல்லத் தேவையான சுமார் 150 கி.மீ. நீளமுள்ள வெளியேறும் சாலைகளை அமைத்தல். மேலும் வெளியேறும் சாலைகளில் பாதுகாப்பான பகுதியினைச் சென்றடைய ஏதுவாக வழிகாட்டுப் பலகைகள் அமைத்துத் தருதல்.

உலக வங்கியுடன் அரசின் வருவாய்த் துறை அலுவலர்கள் நடத்தி வரும் பேச்சுவார்த்தை முன்னேற்றமடைந்த நிலையில் உள்ளது. மேலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் இறுதி செய்யும் நிலையில் உள்ளன.

## 10. வரவு–செலவுத் திட்டம் 2008–2009

2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4598.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்பார்க்கப்படும் வருவாய்ச் செலவினம் ரூ.3551.63 கோடி மற்றும் மூலதனச் செலவினம் ரூ.1047.18 கோடி ஆகும்.

## 11. முடிவுரை

இந்த அரசு, கடந்த ஓராண்டில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்பான ஊராட்சி நிருவாகம், திட்டங்கள் செயலாக்கம் மற்றும் பணியமைப்பு போன்றவற்றில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளும், அமைப்பு ரீதியான மேம்பாடுகளும் கொண்டு வந்துள்ளது. மூன்றாவது உயர்நிலைக் குழு அரசுக்குச் சமர்ப்பித்த தனது அறிக்கையில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது. இந்தப் பரிந்துரைகளில் பெரும்பாலானவை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த அரசு ஊரக உள்ளாட்சிகளுக்கு, குறிப்பாக கிராம ஊராட்சிகளுக்கு நிதிப் பகிர்வு அளவினை அதிகரித்துள்ளது. தல வரி, தல மேல்வரி, முத்திரைத் தாள் மேல்வரி, கேளிக்கை வரி போன்ற ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள்

மாநில அளவில் ஒருமுகப்படுத்தப்பட்டு, எளிதாகவும், விரைவாகவும், சமச் சீரான முறையிலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் பகிர்ந்தளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்திற்கும் ஊராட்சிகளுக்கும் இடையே நீண்ட காலமாகத் தீர்வு காணப்படாமல் இருந்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இதன் விளைவாகத் தற்போது மின் இணைப்பு வாரியாக மின் அளவீட்டின்படி மின் கட்டணங்கள் ஊராட்சிகளால் நேரடியாக மின் வாரியத்திற்குச் செலுத்தப்படுகிறது. மேலும் ஊராட்சிக் கணக்குகள் பராமரிப்பு முறை ஒழுங்குபடுத்தப்பட்டு நிதி இழப்புகள் குறைய வழிவகுக்கப்பட்டுள்ளது. பணிகளின் நிருவாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, அளவீடு, மேல் அளவீடு, ஒப்பந்தப்புள்ளி கோருதல், ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் மற்றும் அவர்களது அதிகாரங்கள் போன்றவை முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு அனைத்து நிலைகளிலும் துரித முடிவுகள் மேற்கொள்ள ஏதுவாக ஒப்பந்த விதிமுறைகளில் இருந்த முரண்பாடுகள் களையப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய மகத்தான திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்தியதற்காகப் பல்வேறு தரப்புகளிலிருந்தும் பாராட்டுகளைத் தமிழக அரசு பெற்றுள்ளது. இவை தவிர, இந்த அரசு அனைத்து ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளையும், 2007-2008 முதல் 2010-2011 வரையிலான நான்கு ஆண்டுகளில் சீரமைப்பதற்காக ரூ.300 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. சுமார் 20,000 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகளை ஐந்தாண்டுகளில் மேம்பாடு செய்திட ரூ.2,000 கோடி நிதியை நபார்டு வங்கியிடமிருந்து பெற இந்த அரசு திட்டமிட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.410 கோடி நிதி நபார்டு வங்கியால் முதல் தவணையாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுபோல அடுத்துவரும் நான்கு ஆண்டுகளிலும் நிதி, அனுமதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் நமக்கு நாமே திட்டமும், 2008-2009 ஆம் ஆண்டில் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டமும் மீண்டும் புத்துயிர் ஊட்டப்பட்டு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தை நெறிப்படுத்தி வலுப்படுத்த பல்வேறு புதுமையான, ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நகர்ப்புற மகளிர் சுய உதவிக்



குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்குதல், ஊராட்சி அளவிலான மகளிர் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்குதல், சிறந்த மகளிர் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதி, சிறந்த மகளிர் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள், குழுக்களுக்கு இடையே கலைப் போட்டிகள் நடத்துதல் போன்ற செயல்பாடுகளால் மகளிர் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் புத்துயிர் பெற்றுள்ளன. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தொழில் பயிற்சித் திட்டம் இளைஞர்கள் மற்றும் தொழில் துறை நிறுவனங்களிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம், சிறப்பான முன்னேற்றம் கண்டு வருவதுடன் உலக வங்கியாலும் பாராட்டப்பட்டுள்ளது.


ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சுனாமி அவசரகால உதவித் திட்டப் பணிகளில் பெரிய அளவிலான சமுதாய உள்கட்டமைப்புத் திட்டப் பணிகள் தவிர, இதர திட்டப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. கடலோர வட்டாரங்களில் *32,547* சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெற்றுள்ளன. *2,467* சுய உதவிக் குழுக்கள் பொருளாதாரக் கடனுதவி பெற்றுள்ளன. *34,640* உடல் ஊனமுற்றோர் வாழ்வாதார நிதி மானியமாக தலா ரூ.*10,000* பெற்றுள்ளனர். ஏறத்தாழ *5,000* மீனவர்களுக்கு நடைமுதல் மானியம் வழங்கப்பட்டுள்ளதோடு, கடல் பாதுகாப்புப் பயிற்சியும் சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ளது. ரூ.*562* கோடி மதிப்பீட்டில் ஏறத்தாழ *22,500* புதிய கான்கிரீட் வீடுகளும் ரூ.*140* கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளும் மாநிலத்தின் அனைத்துக் கடலோரப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளின் ஒட்டு மொத்த தோற்றம் முற்றிலுமாக மாறி வருகின்றது.


பணியமைப்பில் எடுக்கப்பட்டுள்ள பல்வேறு புதிய நடவடிக்கைகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககக் கட்டுப்பாட்டில் உள்ள தொழில்நுட்பப் பிரிவை மறு சீரமைப்பு செய்து, அதிக எண்ணிக்கையில் உதவி செயற் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இது பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தை விரைவுபடுத்த வழிவகுத்துள்ளது.

சுமார் *1,20,000* உள்ளாட்சிப் பிரதிநிதிகளையும், *70,000*க்கும் மேலான பணியாளர்களையும், ஆண்டுக்கு ரூ.*6,000* கோடி அளவில் (மத்திய அரசால் நிதி அளிக்கப்படும் திட்டங்கள் மற்றும் அயல் நிதி


நிறுவனங்களிடமிருந்து நிதி பெறும் திட்டங்களை உள்ளடக்கி) நிதி ஒதுக்கீடு மற்றும் 3.60 கோடி ஊரக மக்களின் வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடைய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையை நிருவகிப்பது என்பது மிகப்பெரிய சவாலாக இருந்தாலும், மிகுந்த மனநிறைவு அளிப்பதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் பெருமளவில் பணிகள் முடிக்கப்பட்டு இருந்தாலும், ஊரக வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புப் பணிகளை இடைவிடாது தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் அறிவோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஊக்கமூட்டும் தலைமையில் ஊரகப் பகுதிகளில் நகர்ப்புற வசதிகளை உருவாக்கி, ஏழை எளிய மக்களின் வாழ்வை ஒளிமயமாக்க நமது முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுவோம்.







பிற்சேர்க்கை - II
0
200
400
600
800
1000
1200




பிற்சேர்க்கை - III
(2003–04 – 2005–06)
2007–08
7,422
7,283
3,181
3,733
1,490
442
0
1000
2000
3000
4000
5000
6000
7000
8000

## பிற்சேர்க்கை – IV

## தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – மொத்த செலவின விவரம்






## பிற்சேர்க்கை – V

## தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்–தமிழ்நாடு – சில குறிப்பிடத்தக்க பணிகள்



சாலை அமைத்தல்
[illegible] ஊராட்சி, கடலூர் மாவட்டம்



குளம் தூர்வாருதல்
[illegible] ஊராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்




சாலை அமைத்தல்
[illegible]கோம்பை ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்




குளம் தூர்வாருதல்
[illegible] ஊராட்சி, விழுப்புரம் மாவட்டம்

பிற்சேர்க்கை – V (தொடர்ச்சி...)

## தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – தமிழ்நாடு – சில குறிப்பிடத்தக்க பணிகள் (தொடர்ச்சி...)



நடைபெறும்பொழுது



பின்

அனுமந்தபுரம் வாய்க்கால் தூர்வாருதல் – ஆணைக்காரன்சத்திரம் ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்



நடைபெறும்பொழுது




பின்

போச்சன்குளம் வாத்துக்கால்வாய் ஆழப்படுத்துதல் – தேவரப்பன்பட்டி ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்



பிற்சேர்க்கை – VI

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – சில குறிப்பிடத்தக்க பணிகள்



குளம் / ஊரணி

எல்லைக்குடி ஊராட்சி – திருச்சி மாவட்டம்



பள்ளி விளையாட்டு மைதானம்

வாழ்வார்மங்கலம் ஊராட்சி – கரூர் மாவட்டம்



சுடுகாடு / இடுகாடு

[illegible] ஊராட்சி – காஞ்சிபுரம் மாவட்டம்



நூலகம்

விளார் ஊராட்சி – தஞ்சாவூர் மாவட்டம்

பிற்சேர்க்கை - VI (தொடர்ச்சி)

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – சில குறிப்பிடத்தக்க பணிகள் (தொடர்ச்சி)



கதிர் அடிக்கும் களம்
[illegible] ஊராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்



சிமெண்ட் காங்கிரீட் சாலை
முகாசி அனுமன்பள்ளி ஊராட்சி, [illegible]



கிராம சந்தை
[illegible] ஊராட்சி, ஈரோடு மாவட்டம்



மீன் வளர்க்கும் [illegible]
[illegible] ஊராட்சி, [illegible]




பிற்சேர்க்கை - VII

## ஊராட்சி ஒன்றிய பள்ளிச் சீரமைப்புத் திட்டம்



முன்



பின்

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பாகாநத்தம் ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்



முன்




பின்

ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, வீரக்கல் ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்

[2008 ஏப்ரல் 15

### பிற்சேர்க்கை - VIII

## மாவட்ட வாரியாக மகளிர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் விவரம் (31-03-08 வரை)




228409
சென்னை-600 008